# ஏழு நூற்ரெு ததி

(உரையுடன்)



அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி
திருக்கோயில் சித்த மருத்துவநூல்
வெளியீட்டுக் குழு

1975

668/பி.நு.
196 / ஏழு.

வெளியீட்டுத் தொடர் எண் 26.

# ஏழு நூற்றொகுதி

## (உரையுடன்)

**கோரக்கர் - போகர்**

அருளியவை



அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவினருக்காக
கௌரவத் தலைவர்
டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்.
அவர்களால் பதிப்பிக்கப்பட்டு தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

கி பி. 1975 விலை ரூ.

முதற் பதிப்பு—1975.

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்
சென்னை-600 029.

அச்சிட்டோர் :

ஜுபிடர் பிரிண்டிங் & பேக்கேஜிங் கம்பெனி, விருதுநகர்—'75.

தமிழக அரசு

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு

## பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ. அவர்கள்

வழங்கிய

## அணிந்துரை.

அலைமோதும் கடல்சூழும் ஞாலத்தில் கலைமேவும் முதுமொழியாய்த்தோன்றிக் காலவெள்ளம் பாய்ந்தும் கன்னித்தன்மை குன்றாத தமிழுடன் பிறந்த தென்னாட்டுக்கலை சித்த மருத்துவம். சித்தமருத்துவ நுணுக்கங்களும், உண்மைகளும் (மறைந்தவை போக) மறையாது வழங்கும் பலநூறு ஏடுகளில் இன்னும் ஒளிர்ந்து கொண்டுள்ளன. இவற்றை இன்று அறிவார் சிலர். அவர்களுள்ளும் அவற்றில் காணப்படும் உண்மைகளை அறிந்து உலகிற்கு உரைப்பார் மிகச்சிலரே. எனவே — அறிந்துரைக்கும் ஆற்றலுடைய அந்தச் சிலரின் துணைகொண்டு இன்றே அவற்றை அச்சேற்றி வெளியிடுவதன் மூலம் மீதமுள்ள நூல்களையும் நூலறிவையுமாவது இழவாது காத்திடல் நம் கடனாகின்றது.

அவ்வாறு பழைய சித்தமருத்துவ ஏடுகளை வெளியிடும் முயற்சிக்குத் துணையாவாரை நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க என் நண்பர் விருதைத்தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சேதுரகுநாதன் அவர்கள் — கடமையாற்ற முன்வந்தார்கள். அதன் பயனே ஏழுநூல் தொகுதியாகிய கோரக்கர் சிறப்பு நூற்றிரட்டும் போகர் கற்பசூத்திரமும் ஆகிய இந்நூல்களாகும்.

சித்த மருத்துவக்கலைகளின் அடிப்படையாகும் விஞ்ஞானத் துறைகளுள் ஒன்று வகாரவித்தை எனப்படும் இரசவாதம். இந்த மருத்துவத்தின் அடிப்படைப் பொருள்கள் எனப்படும் தாது—தாவர— உயிர்ப் பொருள்களுள் சிறந்தபயன் நல்குவது 'இரசம்' ஆகும்.

ஆயுள்வேத மருத்துவமுறையின் முதலாசிரியர்கள் எனப் போற்றப்படும் சரகர், சுசுருதர் ஆகியோர் நூல்களில் 'இரசம்' பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்பதையறிவோர் சித்தமருத்துவத்தின் தனித்தன்மையை ஒப்புவர்.

''தொன்னுள் முதலே இரசவாதம், காயசித்தி, யோக நெறிமுறைகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டதைக் காணுங்கால் சித்தர்களே எல்லாக்கலைகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்ற கலை வல்லுநர்களாக இருந்தனர்'' என்று மேலை நாட்டவர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளது கொண்டு தெளியலாம்.

சித்தமருத்துவ நூல்களிலிருந்து வாதம், வைத்தியம் 'யோகம்' மாந்திரீகம் ஆகியவற்றிற்கு இரசத்தை — சித்தர்கள் பயன்படுத்தினர் என்று தெரிகிறது.

உடல்நலம் பெருகவும், தாதுகட்டுப்படவும், களைப்பின்றி நெடுந்தொலைவு நடக்கும் வலிவு பெறவும் நெருப்பினுல் அழியாத இரசமணியை உடலில் அணிந்து கொண்டனர் எனவும்; நீண்டநாள் நோயின்றி வாழ்வதற்குத் துணையாம் கற்பங்களையும் உணவுப்பண்டங்களையும் உண்ணலாகும் இரசக்கிண்ணிசெய்து பயன்படுத்தினர் எனவும்;

கொடிய நோய்களைக் குணப்படுத்தவல்ல பற்பல பற்பம், செந்தூரம், கட்டு, களங்கு, குரு முதலான வகைப்பட்ட மருந்துகளைச் செய்து கொள்ளவும் இரசத்தைப் பக்குவப்படுத்திப் பயன்கண்டுள்ளனர் எனவும் ஏடுகளால் அறிகின்ருேம். ஆனுல்- இரசவாதம்- எளிதில் செம்பொன் செய்யும் ஒருவழியாக உதவுதலின், தீய நோக்குடையார் பயன்படுத்தலஞ்சி— அத்-தகைய நூல்கள் மிகவும் மறைபொருளாகவே (இரகசியமாக) வைக்கப்பட்டு வந்து அருகிய நிலைக்கு ஆளாகியுள்ளன. ஆயினும் மருத்துவ நோக்கினிலும் சாவா வாழ்வுக்கு உரிய மருந்து உதவும் நோக்கினிலும் இன்றியமையாத நுட்பங்கள் யாவும் மறைபொருட் கூறும் எடுத்துரைக்கும் இந்நூற்கள்— அருகிவிட்ட இக்கலையை உருப்பெறச் செய்யும் பெருந்துணை-யாகும்.

பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள், சிவயோகி மா. இரத்தினசபாபதி பிள்ளையவர்களால் எழுதிவைக்கப்பெற்று ஐம்பது ஆண்டுக்காலம் கழிந்தபின்பு அவற்றை அவர்களிடமி-ருந்து பெற்றுப் பெயர்த்து எழுதி மருத்துவப்பகுதிகட்குத் தெளி-வுரை வரைந்து தக்கதொரு முகவுரையும் எழுதி வெளியிட்டுள்-ளார்.

நிறைந்த தமிழ்நூலறிவும்—சித்தமருத்துவத் திறனும் ஒருங்கே வாய்ந்த பேராசிரியர் டாக்டர், சேதுரகுநாதன் அவர்-களால்—இக்கலைக்குரிய நூல்களை நாம் இழந்துவிடாது பெற்றிருக்-கிறோம் என்பதை எண்ணுமிடத்து நமது நன்றி அவருக்கு உரித்-தாகின்றது.

கைமாறு கருதாத பெருந்தகை—சிவயோகி மா. இரத்தின சபாபதி பிள்ளையவர்கள் எழுதிப் பேணிவைத்திருந்து தந்து உதவி செய்யாவிட்டால் மிகச்சிறந்த சாவாமருந்தாகிய ஆயுள் வளர்ச்சிக் குளிகையும், அதற்குரிய பதினாறு வகைச்சுண்ணமும் செயநீரும் காயகற்பமும் கூறும் இந்த அரும்பெறல் அமிழ்தமன்ன ஒப்பற்ற நூல்கள்—மறைபொருட் கூறுகளைத் தெரிவிக்கும் நூல்கள்-உலகுக்குக்கிட்டாமல் போயிருக்கும். இவற்றைத் தந்துதவிய அவர்களுக்கு மிக்கநன்றி செலுத்துகின்றோம்.

பதினெண் சித்தர்களும் சாவா நெறியில் வாழ உதவிய மருந்துவகைகளின் மறைபொருட் கூறுகளையெல்லாம் தெளிவுற வழங்கிய இந்நூல்கள் பயன்வழங்கும் ஒப்பற்ற நூல்களாகும்.

இதன் வெளியீட்டு ஆசிரியரவர்களும், அவரனைய தகுதி-யுடையோரும்—தத்தம் வாய்ப்புகளுக்கேற்ப—இத்தகைய சித்த மருத்துவக்கலை விளக்கும் பழைய ஏடுகளைப் பழுதிலாது வெளி-யிட்டுப் பழமை மிகுந்த தமிழ் மருத்துவம் மறையாது நிலைக்க ஆவன செய்ய முன்வர வேண்டும் என்பதே என்பேரவா. இம்-முயற்சி தழைத்தோங்கும் நாள் தமிழின்மாட்சி உலகெங்கும் முழங்கும் நாளாகும்.

அருள்மிகு பழனித் தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சித்தர்நூல் வெளியீட்டுக் குழுவினர் முயற்சியாலும்-நிதியுதவியா-லுமே-வேறுபல நூல்களுடன் இந்தநூல்களும் வெளிவந்துள்ளமை கண்டு-மகிழ்ச்சியுடன் எனது உளமார்ந்த பாராட்டை வழங்கு-கின்றேன்.

அன்பன்,

க. அன்பழகன்

## அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழு


திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி, பி. எஸ்ஸி.
அறங்காவலர்.

திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ. ,,

திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ. ,,

திரு. ஏ. பச்சையப்பக் கவுண்டர், ,,

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி. பி. எல்.
துணையாசிரியர் — நிர்வாக அதிகாரி


☆

## அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு


டாக்டர் இரா. தியாகராசன், எல், ஐ, எம்.
பொறுப்பு அலுவலர்,
சித்தமருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்
சென்னை — 600010. — தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி. ஸி. ஐ. எம்.
தலைவர், தமிழ்நாடு அரசு
இந்திய மருத்துவ மத்தியக்கழகம்,
சென்னை — 600005. — பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர்,
அறங்காவலர் குழு
அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோவில் —உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக்கழகம் — உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி, பி. எஸ்ஸி; பி எல்
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழனித்
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் — உறுப்பினர்

டாக்டர் பு. மூ. வேணுகோபால், எச். பி. ஐ. எம்;
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை
சென்னை — 600029. — சிறப்பு அழைப்பினர்

★

## சித்தமருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன், எல். ஐ. எம்;
பொறுப்பலுவலர்;
சித்தமருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை 600010 —தலைவர்

2. டாக்டர் பு. மூ. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.
இயக்குநர், இந்திய மருத்துவத் துறை,
சென்னை 600029 — செயலர், உறுப்பினர்.

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன், எச். பி. ஐ. எம்;
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை 600005 — உறுப்பினர்.

4. டாக்டர் எம். சண்முகவேலு, எச். பி. ஐ. எம்;
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். ,,

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன், எல். ஐ. எம்,
காவேரிப்பாக்கம், வடஆற்காடு ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி, எல். ஐ. எம்;
ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தக்குமார், ஜி. சி. ஐ. எம்;
தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ
மத்தியக்கழகம்,
சென்னை 600005 — உறுப்பினர்

8. டாக்டர் ப. சிற்சபை, ஆர். ஐ. எம். பி
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை 600005. ,,

9. பண்டிட் பெ. முத்துக்கருப்பபிள்ளை, ஆர். ஐ.,எம். பி.
தலைவர், சித்தமருத்துவ சங்கம்,
மதுரை. — உறுப்பினர்

10. டாக்டர் டி. வி. கலியாணசுந்தரம், ஆர். ஐ. எம். பி;
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை 600012. — உறுப்பினர்

11. டாக்டர் ந. சேதுரகுநாதன், தமிழ்ப் பேராசிரியர்
வி. இ. நா. செ. நா. கல்லூரி, விருதுநகர் ,,

12. திரு. நீ. கந்தசாமிபிள்ளை, முன்னாள் செயலர்,
சரசுவதிமகால் நூலகம்,
தஞ்சை ,,

★

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி. ஏ. ஜி. சி. ஐ. எம்;
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எல். ஐ. எம்;
பேராசிரியர், மேல்பட்டப்படிப்பு;
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் டி. வி. இரத்தினவேலு சுப்பிரமணியம்,
பி. எஸ்ஸி; எம். டி, எம். ஆர். சி. பி. (லண்டன்)
சென்னை 600010.

அணிந்துரைவழங்கிய
தமிழக அரசுமக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர், பேராசிரியர், மாண்புமிகு
**க. அன்பழகன் எம். ஏ. அவர்கள்**



சித்த மருத்துவத் துறை நூல்களின்
வழியாக உலகுக்குச் செய்யும்
மாபெருந் தொண்டு குறித்துப் போற்றி
என்றும் உலகம் போற்ற அமைச்சராக
இலங்க வாழ்த்துகின்றோம்.

இந்த நூல்கள் ஏழும் அழிந்து போக விடாமல்
பேணி எழுதிவைத்திருந்து காத்து
அச்சிடத் தந்தருளிய



சிவயோகி மா. இரத்தினசபாபதி பிள்ளை
அவர்கள் உயர் பெருந்தொண்டு செய்வது குறித்துப்
போற்றுகின்றோம். பாராட்டுகின்றோம். என்றும்
உலகம் போற்றும் அருள் நெறி மெய்யுணர்வு ஆசிரியப்
பெருந்தகையவர்களின் புகழ் இலங்க வாழ்த்துகின்றோம்.

கோரக்கரருளிச் செய்த

1. சந்திரரேகை 200 2. நமனுசத்திறவுகோல் 100

3. இரவிமேகலை 75 4. முத்தாரம் 91

5. நாதபேதம் 25ல் 20 6. தனித்தொகுப்பு 9

7. போகரருளிய கற்பசூத்திரம் 18

# ஆகிய ஏழுநூல்களின் முகவுரை

பாடல் விளக்கொரு பல்லாயி ரங்கோடி பல்லூழி காலமா ஏந்தி நின்றே
ஊடல் மனத்திருள் போக்குந் தமிழே நீ ஊழிபல்லாயிரம் வாழிவே.
(ந. சே.)

திசையனைத்தின் பெருமை யெலாம் தென்றிசையே வென்றேற
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல் வழங்குந் துறை வெல்ல
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல

அருள்மிகு கோரக்கர் அருளிய நூல்களில் ஆறும் போகர் அருளிய கற்பசூத்திரம் 18-ம் ஆகிய ஏழுநூல்கள் இந்தயாண்டு வெளி வருகின்றன.

"சரணமிட் டெனதுகுரு நந்தி பாதம்
சாந்ததுதி பாடிதினம் சிரமேற் கொண்டு
சிரமணி வீசிடப்பொன் மாலை சூட்டிக்
கேசரத்தில் லலாடப்பூட்டுக எம்மா திறந்து
திரம்பெருகத் தேவசித்தர் தாளைப் போற்றித்
*தீமையறச் செந்தமிழரல் உலகினர்க்கே*
*முரணகல முச்சுடரும் சுருள நாட்டி*
முத்தாரம் தனிற்களங்கம் தீரச் சொல்வேன்."

"சொல்லரிய நமனுசத் திறவு கோலில்
சூட்சமா வெளியாகச் சாற்றி வைத்தேன்
நல்லனவாய் அவையடக்கம் நலனுற் றேங்க
நானிலத்தில் முத்தாரம் தனிற்சுருக்கி
*வெல்லுதற்காய்ச்* சித்தர்களும் சூழ்ச்ச மாக
விணையமுடன் ஓதினதை *விளங்கக் காட்டிக்*
*கல்பவகை முப்புசெய நீரின் மார்க்கம்*
*கிளத்திடுவேன்* தேவியுமை யருள்பெற் றேங்கி."

என முத்தாரம் 2, 3- ஆம் பாடல் கூறுகின்றன. உலகம் எல்லாம் உய்யச் சாக்காடாகிய தீமை நீங்க உரைக்கத் தொடங்கிய அருள்மிகு கோரக்கநாதர் "தீமையறச் செந்தமிழால் உலகினர்க்கே முரணகல......... களங்கம் தீரச் சொல்வேன் என்ற குறிப்பு உணரத்தக்கது. சாகாக்கலை தென்றமிழ் நாட்டில் முந்து தோன்றிய தென்பதுவும் அதனை உலகினர்க்கெல்லாம் முரணகலக் களங்கம் தீர உரைப்பேன் என்பதுவும் உலகினர்க் கெல்லாம் உய்தி செந்தமிழால் உண்டாகும் என்பதுவும் கருதி உரைத்தார் எனல் சிறந்ததாகும். மேலும், "வெல்லுதற்காய் ......... விளங்கக் காட்டி கல்பவகை முப்பு செயநீரின் மார்க்கம் கிளத்திடுவேன்" என்பதுவும் இந்நூல் வெற்றித் திருநூலாக ஆக்கப்பெற்றது என உணர்த்தா நிற்கும். சூதமுனிசூத்திர முகவுரையில், தமிழகஅரசு மக்கள் நல்வாழ்வுத்துறையமைச்சர், பேராசிரியர், மாண்புமிகு. க. அன்பழகன் எம்.ஏ. அவர்கள் "இதன் வெளியிட்டு ஆசிரியரவர்களும், அவரனைய தகுதியுடை யோரும்-தத்தம் வாய்ப்புகளுக் கேற்ப-இத்தகைய சித்த மருத்து-வக்கலை விளங்கும் பழைய ஏடுகளை-பழுதிலாது வெளியிட்டு-பழமைமிகுந்த தமிழ் மருத்துவம் மறையாது நிலைக்க ஆவன செய்ய முன்வர வேண்டும் என்பதே என்பேரவா. *இம் முயற்சி தழைத்தோங்கும் நாள் தமிழின் மாட்சி உலகெங்கும் முழங்கும் நாளாகும்.*" என்று எழுதியிருக்கின்றார்கள். அத் தகைய நன்னாள் இந்த ஆண்டிலேயே இந்த நூல்களாலேயே இவ்வளவு விரைவிலே வரப்பெற்றது கழிபேருவகைக்குரிய சிறப் பாகும். இந்த ஆண்டு உலகிற்கே சிறந்த ஒரு நல்ல ஆண்டு. அதனிலும் தமிழுலகிற்கு மிகச்சிறந்த மாண்பும் புகழும் நிரம்பிய ஓர் ஒப்பற்ற நல்ல ஆண்டாகும் என்பது முற்றிலும் உண்மை.

செல்வத்துட்செல்வம் நூற்செல்வமே. அதுவே என்றும் குறையாத செல்வம். ஒருமொழியில் எழுந்த நூல் உலகுக் கெல்லாம் பொதுவுடைமையாய்த் தங்கு தடையில்லாத உவட்டாத செல்வமாகும். அதற்குமேற் செல்வம் இல்லை. அத்தகைய செல்வநூல்களுள்ளும் பிரிகின்ற நிலையிலுள்ள உயிரைப் பிரியாமற் பேணிக்காக்கும் மருந்து கூறும் மருத்துவ நூல் மிகவுயர்ந்த செல்வம். அவற்றுள்ளும், "இருந்தேனிக் காயத்தில் எண்ணிலி கோடி" என்று திருமூலர் கூறிய வண்ணம் என்றும் சாவாமல் இருக்கச் செய்யும் "ஆயுள்வளர்ச்சிகுளிகை" கூறும் நூலே மிகமிக வுயர்ந்த ஒப்பற்ற பெருஞ்செல்வம். இத்தகைய பெருஞ்செல்வத்தை நமக்கு அருள்மிகு கோரக்கர் அருளியிருக்கின்றார்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று."

என்ற திருவள்ளுவர் அறிந்த சாவா மருந்தாகிய ஆயுள் வளர்ச்சிக் குளிகை (மிருத்யுவிஞ்சுக்குளிகை) செய்யும்முறை நமக்குக் கிடைத்திருக்கின்றதே.

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு."

என்று திருக்குறள் கூறிய வண்ணம் கூற்றுவனை வென்று குதித்து ஆடலும் நமக்கு இயலுவதேயாகும்.

"காப்பதற்குக் காருண்யம் தாயே யல்லால்
*காசினியி லெவர்க்குண்டு கவலை தீர்க்க*
மூப்புபிணி சாக்காடு துன்பம் நீங்க
முறையுடனே ஞானசித்து யோக மார்க்கம்
*ஏய்ப்பின்றிக் காயகற்பம் இகத்துள் ளோர்க்கு
எடுத்துரைப் பேன் நீடூழி காலம் ஓங்க*"

என்று சந்திரரேகை 2—ஆம்பாடலில் பாடிவைத்தார். ஆகவே சாகாக்கலையின்வண்ணம் வாழ விரும்புவோர் நீடுழிகாலம் வாழவும் மற்றையோர் வாழ் நாளெல்லாம் நோய்த் துன்பமின்றி வாழவும் நூல்வழி வகுத்துள்ளன. கொடு நோய்க்கெல்லாம் மருந்து கூறுகின்றூர்

சந்திரரேகை 128-ல்,

"காலமதில் கடியரவின் விடமு மேரு
கடுந்தீயின் சூடேரு சலமுங் கொல்லா
ஞாலமதில் சமாதிபெற மண்ணுந் தின்னு
நடுவனவன் உனதருகே வரவே மாட்டான்
வேலனைய கத்திவாள் வெட்டு மேரு.......
ஈரெட்டாம் வயது எப்போதும் இருந்து வாழ்வாய்"

என்பது அவர்களின் கைகண்டவுண்மை.

கோரக்கர் செய்து வைத்திருந்த நூல்களில் ஒரு பதினுறு நூல்களைச் சித்தர்கள் வந்து தருக்கமிட்டு வாங்கிச் சென்றுவிட்-டனர். அவர்களுக்குக் கஞ்சாவினை அரிசியுடன் சேர்த்து அடை-தட்டிச் சுட்டுக் கொடுத்து மயக்கி உறங்கச் செய்து எழுந்தபின்

போகச் செய்தார். அவர் போனபின் செய்த நூல்கள் இருபத்திரண்டு. நமனுசத் திறவுகோலைப் பறித்துக் கொண்டு போக வந்து தருக்கம் செய்தனர். குளிகையை வாயில் ஒதுக்கி விண்ணிற் சென்று, "மதியோடு கலந்துமதியாக நின்றேன்' புறம்பாகி ஏகிவிட்டார் சித்தனுர்கள், புவியிறங்கிப் பொய்கைநல்லூர் அடங்கி நின்றேன்" என்கிருர்.

1) காளமேகம் 1000. 2) கபாடப்பூட்டு 800. 3) கமலாஞ்சனி 400. 4) பிரமபோதம் 800. 5) திலதரவி 500. 6) சுரபிவிந்து 300. 7) லலாடப்பூட்டு 680. 8) பஞ்சவர்த்தம் 58. 9) மறலிவாதம் 80. 10) சென்மசித்து 100. 11) ஆன்மசித்து 208. 12) வகாரகந்தம் 805. 13) ஞானசோதி 1000. 14) சோடரசம் 507. 15) கல்பபோதம் 507. 16) நிலையொடுக்கம் 507. இந்தப் பதினுறு நூல்களையும் மறித்து வாதமிட்டுச் சித்தர்கள் கொண்டு போயினர். பின்னர் இயற்றிய நூல்கள்:- 1) சந்திரரேகை 200. 2) ரவிமேகலை 75. 3) நமனுசத்திறவுகோல் 100. 4) நாதபேதம் 25. 5) கனகபிந்து 85. 6) கரிசல் 201. 7) ஞானம் 1101. 8) சிவரத்தினம் 95. 9) மூலிமர்மம் 800. 10) முச்சோதிநாதம் 86. 11) வாதகாண்டம் 200. 12) கன்மகாண்டம் 300. 13) முத்தாரம் 91. 14) முப்புக்காண்டநிகண்டு 300. 15) சித்தர்வாதம் 66. 16) அம்சதீபம் 67. 17) மெய்ஞ்ஞானம் 1100. 18) சித்தர்மறைப்புண்மை 100. 19) சித்தர்சம்வாதம் 100. 20) கூடுவிட்டுக்கூடுபாய்தல் 200. 21) மறைப்புச்சூட்சம் 55. 22) மந்திரலீலை 35. இவை இருபத்திரண்டுமேயன்றிக் கோரக்கர் மலைவாகடம் ஒன்று. கோரக்கர் மாந்திரீகம் 105 ஒன்று ஆகியனவும் உள. ஆகவே நூல்கள் 40 இவர் செய்தவை. இவற்றுள் நாம் இப்போது அச்சிட்டவை ஆறு.

*காலம்.* போகரும் இவரும் சமாதியுற்றதாகக் காட்டிப் பின்னர்ச் சீனதேசத்தில் சென்று ஐந்நூறியாண்டிருந்ததாகவும் பின்பு பொதிகையில் வந்து நானூறியாண்டு இருந்தாகவும் இந்நூல் கூறுகின்றது. பொய்கையூரிற் சமாதியுற்ற இவர் சீனதேசம் போய் வந்தபின் காவிரிநதியின் பாங்குற்றுச் சோழநாட்டின் கொள்ளிடத்தின் பகுதியில் முத்தரநதிதீரத்தில் பரூர்ப்பட்டிச் சிற்றூரில் சமாதியடைந்ததாகக் கூறுகின்ருர். பின்பு பழைய பொய்கையூருக்கு வந்தவுடன் சடையப்பக்கவுண்டன் என்னை வாழ்த்தி நின்ருன் என்கிருர்.

பரிவிருத்தி நானூற்றெட்டு ஐப்பசி தசமிதிதி பரணிநட்சத்திரம் திங்கட்கிழமை யடைந்தேன் என்கிறார். இதனைக் கொல்லம் யாண்டென்று கொண்டால் கி. பி. 1233-ஆவது அண்டாக ஆகின்றது. அதற்குமுன் 900 ஆண்டுக்காலம் இருந்திருக்கின்றார். பின்னர் நூல் செய்திருக்கின்றார். பட்டினத்தார் பாடிய, "வெட்டாத சக்கரம்" என்றபாட்டுக்கு நுண் பொருள் விளக்கியிருப்பதனால் பட்டினத்தடிகள் காலத்திற்குப் பின்னும் இருந்திருக்கின்றார். இவர்காலத்திலேயே பதினெண்பேரும் இருந்ததாகக் குறிப்பும் உளது. ஆகவே கி. பி. மூன்றிலிருந்து பின்னர் ஆயிரம் ஆண்டுக்கு மேல் இருந்தனர் என விளங்குகின்றது. இதுஇன்னும் ஆராய்வோருக்கு வழியாகும்.

"பரிவிருத்தி யாயிரத்துத்திகழ் நூற்றிருபது ஆறதாண்டில்
பாமேவு சித்தர்களும் வெளியாய் வந்து
பட்சமுடன் மனுக்களையும் ஆள்வார் மண்ணில்"

என்பதனைக் கொல்லம் ஆண்டென்று கொள்ளும் போது 1951-ஆம் ஆண்டாகின்றது. மகாத்மாக்காந்தியடிகளின் கூட்டம் அரசு மேற்கொண்டதைக் குறிக்கும் எனலாம்.

தொல்காப்பியர் காலத்தில், "மூவகைக்காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" என்றபகுதியால் அக்காலத்து முனிவோர்க்கு "அறிவன்" என்று பெயர் வழங்கியிருக்கின்றது. பிற்காலத்து முனிவர்கட்குச் சித்தர் என்ற பெயர் ஏற்பட்டது என்பது தெளிவாகின்றது.

மாற்று என்ற சொல் நாடெங்கும் வழங்கும் சொல். செம்பு முதலியன செம்பொன்னாக மாற்றப்பட்டது. அதனாலேதான் அதற்கு மாற்று என்று பெயர் ஏற்பட்டது. ஆதலால் செயற்கைத் தங்கம் நெடுங்காலமாக இருந்து வந்தது என்பது உறுதியாகின்றது.

கலைக்கோட்டுத்தண்டு என்ற நிகண்டு தமிழிற்செய்தவர் கலைக்கோட்டார். திருவள்ளுவர் காலத்தில் "சொற்றொகை" என்ற சொல்லின் தொகுதி இருந்தது. "சொல்லின்றொகை அறிந்த தூய்மையவர்" என்பது குறள். சொற்றொகையை நன்கு செய்த கலைக்கோட்டுமுனிவர்,

ககனவித்தை (கனமாகப்) (18008) பதினெண்ணுயிரத்து எட்டும்

ரசாயனமும் சிற்பமும் லெட்சமும் செய்ததாகவும்

அவற்றைப் போகர் அறிந்து நூலாக விரித்ததாகவும் சந்திரரேகை 189-ஆம்பாடல் கூறுகின்றது. ஆனுல் இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நிகழ்ந்தபோது செர்மன் நாட்டு அறிஞரொருவர் டாக்டர் பட்டம் பெற்றவர் "கலைக்கோட்டுமுனிவரால் இந்தத் தமிழ் நாட்டுக்குப்பல கலைச்செல்வம் செய்துதரப்பெற்றன" என்று கூறியபோது எல்லோருக்கும் நகைப்பாக இருந்தது. ஆனுல் அத்தகைய நூல்கள் செர்மன் நாட்டுக்குப் போய்விட்டன என நினைக்கத் தோன்றவில்லை.

மேலை நாட்டினர் சிலையை வாங்கிக் கொண்டு போனசிலைத் திருட்டு நமக்குத் தெரிகின்றதேயன்றிக் கலைதிருட்டுப் (ஏட்டுச் சுவடிகள்) போனது தெரியவில்லை. தன்னுட்சி போனபின் தமிழர் கலையாட்சியும் மறைந்தது. இது போது தன்னுட்சி நிகழ்கின்ற காலத்தில் பழைய கலையார்வம் ஏற்பட்டுள்ளது.

நமனுசத் திறவுகோல்—நமனுகிய கூற்றுவனை நாசப்படுத்த முனிவர் கபாடமிட்டு வைத்த நூல்களைத் திறக்கும் திறவுகோல் என்று பொருள்படும், இந்நூல் குருநூல். மறைப்பினையெல்லாம் வெளியாக்கிய நூல். சித்தர்சங்கம் 4500 நூல் வெளியிட்டது. அவற்றின் தெளிபொருளாகப் பதினெண்மரும் "பூரணபொக்கிஷம்,, என்ரெரு நூல் செய்தனர். அந்நூலை அகத்தியர் மறைத்தார், கோரக்கர் கட்சியினர் அவருக்குச் சாபமிட்டனர். அகத்தியர் தமது நூலில் பிறர் மறைத்த மறைப்பினையெல்லாம் வெளியிட்ட பகுதியும் உண்டு.

இலக்க சௌமிய சாகரத்தில் முதற்காண்டத்தில் உண்மை கூறினுர் அகத்தியர் என்று கோரக்கர் கூறுகின்ருர்,

44 ஆம் பாடலில் அகத்தியர் பஞ்சகாவிய நிகண்டு 800 லும் புண்ணுக்கர் முத்திக்காண்டம் 500லும் சட்டநாதர் சம்வாதக் கொத்திலும், காலாங்கி நாதர் கௌன முப்பு நீர் 500லும் போகர் நிகண்டு 1200லும் நந்தி சூத்திரம் 32லும் பல உண்மைக்குறிப்புக் கூறினர் என்கிருர்,

பஞ்சகாவிய நிகண்டில் முதற்காண்டத்தில், பேரண்டச்
சுண்ணம் என்பதற்குச் சீரகம் என்றும் சிவமுப்புச்
சுண்ணம் என்பதற்குக் கற்கண்டு என்றும் சத்தியுப்புச்
சுண்ணம் என்பதற்குப் பனைவெல்லம் என்றும் மறைத்து
உரைத்தமை கூறிவெளிப்படுத்துகின்றார் (திறவுகோல் 49)

"தென்னாதி பதியெமன் திக்குமுக்குக் கொண்டிட
தேசோமய மாகத் தேகம் எந்தநாளும் நின்றிட,,
............கன்மநோய்கள் அண்டவந்துள் அணுகிடாமல்
அரண்டிட மிருத்துவிஞ்சுக் குளிகை தனைவிண்டிட,,

என்கிறார். பதினாறு வகைச் சுண்ணம் செய்து ஆயுள்வளர்ச்சிக் குளிகை செய்யக் கூறுகின்றார். சந்திரரேகை, முத்தாரம், ரவி மேகலை ஆகிய நூல்களிலும் சுண்ணவகை கூறப்பெறுகின்றன. நூல்கள் ஐந்தும் படித்தாலன்றித் தெளிவு பெற இயலாது. இதிற் கூறிய நவதசாமிர்தமெழுகு அரைக்க முத்தாரத்தில் செயநீர் கூறியுள்ளார்.

மந்திர தந்திரங்களுக்கும் யோக நெறிக்கும் உரை வரையாமல் மருத்துவத்துக்கு உதவும் மருந்துப்பகுதிகட்கெல்லாம் உரை வரைந்துளேன்.

*சந்திரரேகையில் வரும்* குரு மூலி, முதார்சிங்கிச் சுண்ணம், தாமிரச்சுண்ணம், சீனச்சுண்ணம், வெங்காரச்சுண்ணம், இலிங்கமெழுகு, துருசுப் பற்பம், கெந்தகச் சுண்ணம், இரசகெந்திச் சுண்ணம், சிகைபற்பம், இரசமணி, விரோசனத் துக்த மூலிவேர், செயராசபூபதி, கௌரிராசசிந்தாமணி, கருவங்கச்செந்தூரம், அரிதாரச் செந்தூரம், வெடியுப்புச்செந்தூரம், சீனக்காரசெந்தூரம், நவச்சாரசெந்தூரம், *மூப்பூ*, தாளகச் சுண்ணம், ஆகிய இவற்றின் உண்மையும் பெருமையும் அளவிடற்கு அரியன. எல்லா நோய்களையும் நீக்கும் வன்மையுடையன. பொன் செய்ய உதவும் நன்மையும் உடையன. மேலும் இல்வாழ்வோர்க்குக் கூறிய விந்துத்தம்பனம் மிகவும் சிறப்பு உள்ளது. கைகண்ட உண்மையுமாகும்.

*நமனைசத்திறவுகோலில் கூறியுள்ள* மறைப்பின் வெளியுண்மை, பதினெண்மர் முடிவு, சிவஉப்பு, சத்தியுப்பு, பேரண்டச் சுண்ணம், சங்குச்சுண்ணம், பிரமகற்பம், செயநீர் கலக்கும் முறை, *ஆயுள்வளர்ச்சிக்குளிகை* (இறந்தவன் மேல் சிறு

நீரில் உரைத்துப்போட உயிர்வரும் உண்மை) ஐங்கோலத்துறுதி, ஐங்கோலத்தைலம், *கௌரிச்சுண்ணம், நவபரஷாணச் சுண்ணம், வகாரகுருச்சுண்ணம்,* கெந்தகச்செம்பு, தங்க பற்பம், *பஞ்சபூத வகாரகுருச்சுண்ணம்,* சகலசரக்கும் *திற்கச்செயநீர்,* பஞ்சபூதக்குருச் செந்தூரம், சிவப்புக்கல்செந் தூரம், *நவதசாமிர்தமெழுகு* ஆகிவற்றுக்கு ஒப்பு எப்புவியி லுமில்லை. எல்லா வகை மருத்துவத்துக்கும் செம்பொன்செய்யவும் சாவாமலிருப்பதற்கும் உதவும் மேன்மை மிக்கன.

*இரவிமேகலை கூறுவன* ஐங்கோலக் கருவின்மார்க்கம், ஐங்கோலப்பூ செய்முறை, சரக்குகள் கட்டும்முறை, வெண்காரச் சுண்ணம், செயதேவிச்சுண்ணம், துருசுச்சுண்ணம், கற்பூரச் சுண்ணம், கருவங்கச்சுண்ணம், *முப்புச்சுண்ணம்,* தாம்பூரச் சுண்ணம், கோரக்கர்குருமெழுகு, ஈடுவசிய மருந்து, வெடியுப்புச் சுண்ணம், பதினொருசரக்குக் கட்டுத்திராவகம், வீரமுப்பு, மறைவுமை, அப்பிரேகச்சுண்ணம், வெடியுப்பு மெழுகு, கண் பூவிற்குமருந்து, அட்டகுன்மத்திற்கு, இளைப்பிருமல் காசத்திற்கு, சோடசச்செயநீர் கூறியுள்ளார்.

"திடம் பெறஎன்னூலைவிட வழிவேறில்லை."

"இல்லையென்றது சொன்னேன் உலகத் தோர்க்கு
இகபரத்தில் இருந்துதினம் வாழ்வதற்குத்
தொல்லையில்லா ரவிமேகலை எழுபத் தைந்தில்
தொகுத்திட்டேன் பின்னமற்ற பேதமேக"

என்கின்றார். இந்நூலுக்கும் ஒப்பு உண்டோ?

*முத்தாரம் கூறுவன:-* பூச்செயநீர், செயநீரின் வகை, செயநீரின் முறை, *முப்புக்குருமுடிப்பு,* புகையும் சரக்குகள் செந்தூரம், வெள்ளியநாகவறுப்பு, தாம்பரச் சுண்ணம், துரிசுச் சுண்ணம், மேகசஞ்சீவிமெழுகு, நாகச்சுண்ணபற்பம், இரச மணியும் பற்பமும், அரிதாரக் கட்டும் சுண்ணமும், *அமிர்த சஞ்சீவிக்குழம்பு* (அகத்தியர் சொல்பச்சையின் விளக்கம்) செம்புசுத்தி, *சகலநோய்களுக்கும் எண்ணெய்,* முப்பூரம், உப்புச் செந்தூரம், தாமிரச்சுண்ணம், தங்கச்சுண்ணம், துரிசுச் சுண்ணம், இரசச்சுண்ணம், அமுர்தசஞ்சீவிச்செந்தூரம் இவற்றை உணர்வோர் மதிக்கும் மதிப்புக்கு எல்லையுண்டோ?

"நன்னயஞ்சேர் நாதமணி முத்தாரத்தில்.........
......கன்னலறக் கழறிவைத்தேன்"

என்கின்றூர். இதனை,"மதி முத்தாரம், என்றன்றே கூறுகின்றூர். தமிழ்த்தாய்க்கு முத்தாரமும், இரவிமேகலையும் அணிந்து பார்க்கின்றூர். திறவுகோல் கையில் வழங்குகின்றூர். வெண்ணிலவு முடிசூட்டிச் சந்திரரேகை காண்கின்றூர். இவற்றையொரு சேர எல்லாம் பலமுறை கற்றல் வேண்டும். ஊன்றிக் கற்றல் வேண்டும். மனப்பாடம் செய்வதற்குத் துணையாக அந்தாதியாகன்றே பாடியுள்ளார். பொருளடக்கத்தையும் முகவுரையோடு சார்த்திப் படியுங்கள். விரிப்பிற்பெருகும்.

நன்றுகக் கற்றுச் செய்வன திருந்தச் செய்து நீடுவாழ்வாராக. அருள்மிகு பழனியாண்டவர் நூல்வெளியீட்டுக் குழுவுக்கு என் அன்பு மிக்க நன்றி. ஒப்பில்லாத இந்த அரும்பெறல் நூல்கள் வெளிவருவதற்கு "வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான் கருணை" அண்ணல், தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையமைச்சர் பேராசிரியர், மாண்புமிகு. க. அன்பழகன் எம், எல். ஏ. அவர்கள் உள்ளம்போல் ஊக்கம்போல் உயர்வுபோல் அள்ளக் குறையாத அன்புபோல் இந்நூல்கள் வர்ய்த்துள்ளன. நம் மாண்பு மிகு அமைச்சரவர்கள் எல்லா நலனும் நிரம்ப நீடுவாழவும் இந்த நாட்டின் அமைச்சராக என்றும் இலங்கவும் வணங்கி வாயார வாழ்த்துகின்றேன். மனமாரப் போற்றுகின்றேன். வாழிய நீடூழி என்று வாழ்த்தி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலுக்கும் முன்போல் அணிந்துரை வழங்கிய அமைச்சரவர்கட்கு என்றும் நன்றிக் கடப்பாடு உடையேன்.

இந்த நூல்களை அழிந்து போக விடாமற் பேணி எழுதி வைத்திருந்து காத்து என்னையும் ஒரு பொருட்படுத்தி என்கைத் தந்து வெளியிட அருள் புரிந்த சிவயோகி. மா. இரத்தினசபாபதி பிள்ளையவர்களாகிய அருட்குருவின் திருவடிகளில் "உடையாய் அடியேன் உன் அடைக்கலமே" என்று நெக்குருகி நெடுஞ் சாண் கிடையாய் விழுந்து வணங்கி வாழ்த்தி என் பணிவுள்ள நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அளப்பரும் கல்விக் கடலாகிய சிவயோகி ஐயா அவர்களின் கல்வியும் பேரருளும் உலகெலாம் உய்வதற்கு உரிய அரும் பெறல் நூல்களை உலகுக்கு வழங்கின. என்றென்றும் உலகம் பெருங்களி கூர்ந்து, சாவாவரம் வழங்கிய அவர்களுக்கு நல்விழா நடத்திப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

வாழிய சிவயோகி மா. இரத்தினசபாபதி பிள்ளையவர்கள். வாழிய செந்தமிழ். வாழிய கோரக்கர் திருவடிகள்.

வாழிய உலகம் நீடுழி!

இங்ஙனம்,
ந. சேதுரகுநாதன்.

இந்நூல்கள் வெளிவரப் பேரார்வத்துடன் விரைவாக உழைத்து அச்சிட்டு வழங்கிய விருதுநகர் ஜுபிடர் அச்சகத்து உரிமையாளராகிய உயர்திரு. ப. மன்சூர் அலி அவர்களுக்கும் உயர்திரு. பீ. பாலசுப்பிரமணியன் பி. எஸ்ஸி. அவர்களுக்கும் உளமார்ந்த நன்றி கூறி, அவர்களுக்கு நலனெலாம் ஓங்குக என்று வாழ்த்துகின்றேன்.

# பொருளடக்கம்

## நூல் 1. சந்திரரேகை

பாட்டு 1. காப்பு. 2—7 யோகநெறி. 8—10 கபடங்கொண்ட கள்ளர்நிலை. 11— இருள்நீங்கி இன்பம்பயக்க மருள் நீக்கும் மாசறு காட்சிப்பயிற்சி. 12—16 வளிநிலை. காற்றுப்பயிற்சி. தான்பெற்ற தீட்சைநெறி. 17 அகத்தியர் கூறுவது போன்றபாட்டு. ஒளிநிலையில்நின்று உறங்கல். 18 கற்பநிலையில் கோரக்கரின் சடம்வலுத்து எலும்பு தோல் நரம்பாய்க்காணச் சித்தர் சிலர் வேடிக்கைபார்க்கப் போகர்கண்டு மகிழ்தல். 19 போகர் அழைப்புக்கிணங்கிச் சித்தாடப் போகுதல். காசி, சிதம்பரம் பார்த்து வந்துபழனியிலிருந்து சித்தாடல். 20—21 போகரும் கோரக்கரும் சீன தேசம் சென்று ஐந்நூருண்டு தங்கிப்பின்னர் பொதிகைக்கு வந்து நானூருண்டு தங்கல்.

22—23 போகர்பழனியில் அடங்கும் முன் தன்வரலாறு ஆகிய செனன சாகரம் என்ற நூலியற்றல், கோரக்கரையழைத்து நாகபட்டினத்துக்குச் செல்லச் சொல்லல். கோரக்கர் போகரை அடக்கம் செய்துவிட்டு நாகபட்டினத்துக்கு ஏகுதல். போகர் சமாதியிலிருப்பது போல் நடித்து அங்கே உள்ளவரை ஏய்த்துவிட்டு நாகையிற்சென்று கோரக்கரைக் கண்டு அவரைப் பொய்கைநல்லூர்ப் பூங்காவில் அடக்கம் பண்ணினூர். அவரும் அங்கிருந்து புறப்பட இருவரும் சீனத்துக்குச் சென்றமை.

24—28 அரசுநிலை. கெடுகுறிகள். வானிலைமாற்றம். பிரளயம் போன்றநிலை.

29—44 வளிநிலை. (காற்றுப்பயிற்சி) திங்கள் ஆறுபழகினுல் கிளைவழி திறக்கும். குண்டலிதுடிப்பு நீங்கும்.

45—47 மெய்யுணர்வுப் பயிற்சியால் அழியாத நிலைபெறல். ஈரேழு உலகமும் சுற்றல். 'போசனமும் குறைந்து உடல் பொன்போல் மின்னும்'

48—51 ஒளிநிலை வளிநிலைப்பயிற்சியால் ஒளிநிலைமிக்கு மேன்மை பெறல்.

52 துறவுக்குத் தூதுவிட்டுத் தோகையரைப் புல்லுவோர் பேயர் அவர் முத்திக்கு ஏகார்.

53 உண்மை உணராத-சித்தமதையடக்காத-சிதடர் நாய்போல் சள்ளென்று விழுந்து கௌவுவார் எனல்.

54 வீணர்கள் காவிகட்டிக் காவியம் புராணம் சாத்திரம் பூசை நிவேதனம் செப்பிச் சூதாகப் பிரட்டித்தார். தீட்சையறியார் இல்லறமே இகபர நலம்தரும் மோட்சவீடெனல்.

55—56 அரனும் அயனும் அரியும் தலையிலும் நாவிலும் நெஞ்சிலும் பெண்ணை நயந்துவைத்தமை அறியாது வாது பேசாதீர். உத்தமியாள் தன்னுடன் புணரும் போது இந்திரியம்விட்டேங்காதே. மதனமிட்டுக் கொண்டிடுவார். (போகர் கற்பசூத்திரம் 18—ல்விளக்கம் காண்க)

57 விந்திறங்காமல் போகம் செய்யும்முறை கூறல். 117—ஆம் பாடலும் காண்க. இரண்டணையும் உணர்ந்து பயின்று புணர்வேர்க்கு விந்திறங்கா.

58 உலகோருக்கு இயல்பைக் காட்ட மூவரும் பெண்ணை எடுத்தணைத்தார். ஆர்உலகில் அரிவையரையாகா தென்றூர்.

59 பேரொளியாய் இயங்கும் விந்துஎனல்

60 'வெட்டாத சக்கரம்' என்று தொடங்கும் பாடலுக்குப் பொருள் விளக்கம் கூறல். சக்கரம்—கோசம், இறைக்காத தீர்த்தம்—நாதம். பேசாத மந்திரம்—சேர்க்கை. எட்டாத புட்பம்—வாசி. கட்டாதலிங்கம்—சுக்கிலம் இதுகுருபகர் பூசனை.

61 ஆண்பெண் சேர்க்கையால் அகாரவெளி திறந்து குண்டலி அச்சம் நீங்குமெனல். சடமாயை நீங்குமெனல்.

62 மங்கைதன்னால் பேரின்பமெனல். மாயாமல் இருப்பதற்கே ஆண்பெண்ணுகச் சாயை கொண்டு ஐயன்படைத்தமை.

63 வாசிப்பழக்கத்தால் வலுப்பெறல். வாரணனுர் காட்சி காணல்.

64,65 வழிபாட்டு முறையும் மந்திரசெபமும் கூறல்.

66 நரைதிரை நீங்க யோகபானம்.

67 தூங்காமல் தூங்கிச் சுழிமுனையை நாடிப்பெருவெளிகாணல்

68 தன்மனத்தால் தன்னையுன்னிப் பதருமலுணர்ந்து பாலை யுண்ணு. ஈரேழு உலகுகாணலாமெனல்.

69 காயம்தகர்ந்திடாவழி. மயிர்ப்பாலம்நெருப்பாறு கூறல்.

70 தீமை நீங்கத் திங்களினைச் சிரமீதிலேத்திப் பூட்டெனல்.

71 துவாதசாந்தப் பெருவெளியில் நின்று நடனம் காண் எனல்

72 இடகலைபிங்கலை பிறழாமல் வெளிநிலையைச் சமநிலையாய் ஓடவிட உடல் வலுக்குமெனல்.

73 பயிற்சியால் தொண்டையில் இனிப்புக் கண்டால் வயதுமிக வளர்ந்தோங்கும். பெண்மாயைக் கொட்டம் (கொற்றம்) அடங்குமெனல்.

74 உடல் மலர்மணம் உண்டாக, மின்னல் காட்ட ஓம் என்ற நிலையில் எப்போதும் நிலைக்க மனத்தால் ஓம் என்று செப்பு எனல்.

75 மகரலக்கினம் உடையவனுகிச் சனிகுருவோடு சேர கேது எதனேடேனும் சேர்ந்து ஐந்து ஆறு பதினொன்றில் நிற்க புதன் ஒருகோளொடு சேர்ந்து எங்கேனும் நிற்கில்பார்க்கில் ஞானமணிச் சித்தனுகி உலகில் வாழ்வான் எனல்.

76. மதிமேடத்திலிருக்கில் அமிதப்பால் பெருக்கம் உண்டுஎனல் நற்கோள் சூழ்ந்தால் சொல்லரிய பேரின்ப நிட்டையோகன் குருவாம் எனல்.

77. அவன் கூற்றுவனை வென்றும் என்றும் வாழ்வான் 78. அந்த மகரத்தோனுக்கு மதியும் சனியும் கலந்து நிற்கில் ஆயுள் ஓங்கும்.

79. மகரத்தோன் மேற்கூறிய நிலையிலிருக்கில் ஊழ்வினையைப் போக்கி இந்தவுலகில் வாழ்வான் எனல்.

80,81. மகரத்துக்கு ஒன்பதில் மதிதனித்து நிற்க ஐந்தில் வியாழனுடன் செவ்வாய் கூடி நிற்கப் பிறகோள்கள் தாழ்மையின்றி நிற்கில் அட்டாங்க யோக ஞானியாவான், பிறப் பிறப்பில்லை. அவன் இராசயோகி எனல்.

82முதல்87. கலிகாலத்தின் கோலம் கூறல்

88. மறையோர் கட்டிவைத்த வேதத்தின் புரட்டுக் காதை வெளிப்பட்டுக் கொடிய பெரும் புழுகனைத்தும் ஒழியுமெனல்

89முதல்100. மறையவர் குலமாற்றம். சாம்புவந்தர்குலம் ஓங்குமெனல்

101முதல103. சூரியகாயத்திரி 104முதல் 106 அம்பாள்மந்திரம் 107—வளிநிலை

108 காய கற்பம் இது வெனல். 109 வளிநிலை ஞானஒளி.

110 பதினெண் சித்தர் கற்பம் மதனையது குடத்துநீர்ச்சிறப்பு

111 குடநீர்க்குப் பலபெயர் 112 காயகற்பம் உண்ண உலகறி யினும் உனக்கு அறிவில்லை எனல் 113 போகர் கற்ப சூத்திரம் 18-ல் தெரியச் சொன்னார் எனல். போகரும் இந்நூல் 17ல் "கோரக்கர் சந்திரரேகை இருநூறு தன்னில் பூரகப் போதித்தார் பொய்யில்லாமல்" என்று பாடி யிருக்கின்றார்.

114,115 பேய், பில்லி சூனியம், ஓட்டவழி 116 பிறர் கண்ணுக்குத் தோன்றாமல் தான் மறையும் வித்தை 117 மரணம் விந்துத்தம்பனம்.

118—120 எட்டுச் சித்து விளையாட வேர் வசியம். மோகனம்

121 மோடிவைப்பவனை எதிர்த்துத் தோல்வியுறச் செய்ய.

122 வளிநிலை பழகி வச்சிரப்பாலுண்ண பரியடங்கும் பா ரொடுங்கும்.

123 ஞாயிற்றின் முன்னின்று கண்சிமிட்டாமல் 4 திங்கள் பழகுக. எட்டுத் திங்கள் சிங்கென்று வளிநிலை பழகப் பரியடங்கும் பயன்கோடி.

124 மேற்கூறிய பயிற்சியால் உச்சி வெளி திறந்து காட்டுமெனல். உன்னுருவை உன்மனத்தில் மகிழ்ந்து கண்டுபயிற்சி செய்ய மண்ணூழிகாலம் மட்டும் வாழ்வாய்

125 நெருப்பாறு வெய்யோன். மயிர்ப்பாலம்—மதிதான்விந்தே.

123 நெருப்பாறு மயிர்ப்பாலம் இடபிங்கலைய வென்றல்.

127 கஞ்சாவும் கள்ளுமுண்போர்காணார் எனல். வச்சிரப்பா லுண்ணல் உடல்நிலைக்கச் செய்யுமெனல்.

128 பயின்றோர்க்கு விடமேறா சூடேறா மண்தின்னா கூற்று இல்லை கத்திவாள் வெட்டேறா எனல். வயது என்றும் ஈரெட்டெனல்.

129 மந்திரம் ஓதும் முறையும் சிறுநீரருந்தும் ஒழுங்கும் கூறல்.

130,131,132 உறங்கும் போது உடல் பிரிந்து கிடக்கும்படி தோன்றல். குரல் கேட்டவுடன் பொருந்தல். இது கரண யோகம். கால்வேறு கைவேறு கிடத்தல்போல்தோனறும். இதனைச் சித்தர் மறைத்தார். போகர் கடைக்காண்டத்தில் கூறினார். சட்ட முனியும் பிரமமுனியும் மாந்தர் மயங்கும் வண்ணம் மந்திர காண்டம் புகன்றார்.

133,134,135 தத்துவங்களடங்க மந்திரம். கையாந்த கரையும் மிளகும் உண்டு. சுரபியேற்றுப்பின் துவர்கூட்டியரிசி பொங்கி யெருவேலை யுண்டு வளிநிலைபயின்று பிலகல்லி யில் இறங்கி ஏமப்பாலுண்டு எமனை வெல்லாம் எனல்.

136—140 ஐந்தெழுத்தின் நிலை கூறல். அதனை மூவகையாகப் பிரித்து ஓதும் நிலை கூறல்.

141 இல்லறத்தில் யோக முத்தி. போகநாதர் கற்பசூத்திரத்தில் நிகழ்த்தினர். நான் விரிவாய்ச் சொல்வேன்.

142 பேய்க்குறிஞ்சா வேரின் சிறப்பு. விந்திறங்கா நுட்பம்.

143 பசுபதியைக் காணமந்திரம். ஆறுதிங்கட் பயிற்சி

144,145 குருமூலி கூறல். அதனுல் சுண்ணம் செய்யலாகுமெனல்

146—148 *முதார்சிங்கிச்சுண்ணம்* உடல் கற்றூண் போலாக ஒளி உண்டாக. வாதம் எண்பது நீங்க. எட்டு மாற்று ஆக.

149,150 *தாமிரச்சுண்ணம்*, (சீனச்சுண்ணம், வெங்காரச் சுண்ணம்) குட்டநோய், குறைநோய் தீரும். அரிசிஎடை நெய்யில் 40நாள் கொடுத்தல் வேண்டும். கண்ட நோயெல்லாம் நீங்கும். இம் மருந்துக்கு *இராசவர்த்தம்* என்பது பெயர்.

151,152 கோரக்கர் அருளிச்செய்த நூல்கள் 16இன் பெயர்.

153 இடைக்காடர், அகப்பைமுனி, நந்திதேவர், மச்சமுனி சட்டைநாதர், பிரமமுனி, அழுகண்ணர் ஆகிய எழுவரும் கோரக்கர் நூலைக்கேட்டல்.

154 கோரக்கர் கஞ்சாவை அரிசியுடன் சேர்த்து அரைத்து அடைதட்டிச்சுட்டு மேற்கூறிய ஏழு முனிவரையும் உண்ணச் செய்தேன். மதிமயங்கித் தலைசாய்த்துச் திட மற்று வீழ்ந்தார். சந்திரரேகை இருநூற்றில் உண்மையைக் கூறினேன். உலக மக்கள் பயன்பெற எனல்.

155 மயக்கம் தெளிந்த பின்னர் மேற்கூறிய 16நூல்களையும் வாங்கிச்சென்றுர். பின்னர் யான் பழிகாரச் சித்தர்களின் பகடியெல்லாம் காணப்பாங்குடனே பாபம் நீங்கச் சந்திர ரேகையில் பதித்துவைத்தேன்.

156,157 இலிங்கமெழுகு, துருசுபற்பம் இரண்டும் சேர்ந்த குரு. எல்லாத்தொழிலுக்கும்.

158,159 *கெந்தகச்சுண்ணம்* மேகம் குட்டம் நீங்கும். கோடி வித்தை செய்யலாம்.

160,161 *ரசகெந்திச்சுண்ணம்* சென்மநோய், பிணிகள் தீரும், சித்தர் மறைத்த இரசவாத சூழ்ச்சம், இதனுல் கவன மணியும் மிகும்.

162 *சிகைபற்பம்* 163 ரசமணி

164---166 சித்தரிடம் கொடுத்த 16 நூல் தொகுப்பின் பெயரும் சந்திரரேகையின் சிறப்பும்.

167,168 *கருங்கசக்கணவேர்* ஆவின் பாலிலரைத்துச் சிறு புன்னைக்காயளவு கொடுக்க யலங்கழியும். நஞ்சு, பாண்டு, எலிகடி, காசர், வாதம், குட்டம் நீங்கும். மருத்துவம் செய்யும் முன்னர் மூன்றுநாள் இம் மருந்து வழங்குக.

169 *செயரரசபூபதி* பல நோய் போம். பத்தியமில்லை.

170—174 *கௌரி ரசசிந்தூரமணிச் சுண்ணம்* மூன்றுநாள் ஆறுவேளை அரிசியெடையளவாகக் கொடுக்கக் குறை நோய் குட்டம் முதலிய எல்லா நோயும் போகும்.

175 *கருவங்கச் செந்தூரம்* நோய்க்கும் பொன் செய்யவும்

176,177 *அரிதாரச் செந்தூரம்* நோய்பல நீங்கவும் பொன் செய்யவும்.

178—180 *வெடியுப்புச் செந்தூரம்* ஆச்சரியம் இதனுலே கோடி வித்தை 16 மாற்று.

181 *சீனக்காரச் செந்தூரம்* உலோகமெல்லாம் பசும்பொன் மாற்று,

182 நவச்சாரச் செந்தூரம் 16 மாற்று.

183—188 முப்பூ சித்தர் மறைப்பு நீக்கித் தெளிவித்தல். மீறிய நோய்க்கெல்லாம் அரை அரிசிஎடை. சரக்கெல்லாம் சுண்ணமாகும்.

189 கலைக்கோட்டார் ககனவித்தை 18008. ரசாயனமும் சிற்பமும் 100000; போகர் இந்நூலறிந்து விரித்தார். கலைக் கோட்டுத்தண்டு என்ற தமிழ் நிகண்டுநூல் செய்த முனி வரிவர்,

190,191 *தாளகச்சுண்ணம்* காசம் எட்டும் குட்டமும் போகும்

192 *கடவுள் உண்மை* கடவுளென்பது காற்று காற்று. கேடான கோடி தெய்வம் காற்றுக்கேதான் கூறி வைத்தார். அது அகன்ருல் அகிலம் அழியும்.

193—200 கலியுதிப்பின் நிலை, அரசுமுறைக்காலவரிசை. போகர் வருவதாகக்கூறியது.

## நூல் உ. நமனுசத்திறவுகோல்.

1—3 வாழ்த்தும் வரமும், 4-ஊழ்வினை நீங்க உயிர்நீங்காது உய்யப் பதினெண் சித்தர்களின் சூழ்ச்சம் மாற்றம் சூ(ழ்)து எல்லாம் உரைத்து வெளியாக்கினேன் எனல்.

5—6 அகத்தியர் மறைப்பினை வெளிப்படுத்தல் இலக்க சௌமியத்தில் உரைத்தார். ஆனால் ஒன்றை மறைத்தாரெனல்

7—9 குடநீரின் மறுபெயர்கள். 10. குருநூலிந்நூல். 11. பதினெண் சித்தர் சதுரகிரிச்சங்கம்கூடி நாலாயிரத்து ஐந்நூறு நூல் நாட்டினர். பதினெண்மர் பூரண பொக்கிஷம், என்று பேர் பூட்டியந்நூலில் உண்மை கூறினோம். அதனை வெளியிடலாகாதென அகத்தியர் பொதிகையில் மறைத்தல் 12, 13, 14 —மறைத்த அகத்தியருக்குக் கோரக்கர்கட்சியைச் சேர்ந்தவர்கள் சாபம் ஈதல். நூல்பாறையைப் போல் திரளுதல். இரவிமேகலையிற் சொன்னமந்திரம் சொன்னவர்க்கு முனிவர்வந்து நூல்காட்டுவார். பார்த்துப் பின் வைக்களனல்.

15—20 நூலுள்ள இடம் சித்தர்பருவதம் எனல். அதற்கு அடையாளம் கூறல். திருநீற்றுப் பூண்டிற்கு அருகுபத சிவமூலி என்று பெயர்கூறி மறைத்தார்எனல்.

21—23 சித்தர்களின் குடும்பவாழ்க்கை. அவரொடுசேரவழி. 23க்குமேல் 24க்குஇடையில் 19பாடல்களில் 16சித்தர்களின் கொள்கைமுடிவு.

24 தாயின்தாள் போற்றிஉண்மை கூறினேனெனல்.

25—28 *சிவஉப்பு.* சிவஉப்புச் சுண்ணம். இதற்குப்பேர் ரவிபீசம், மதிபீசம், அரன்விந்து.

29—36 *சத்தியுப்பு.* மதிபீசம், முப்பு, அண்டக்கல். அகத்தியர் கூறிய குருநூல்விளக்கம் பார்எனல். உரோமரி சூத்திரம் நூறும் சட்டமுனி இருநூறும் கூறினர். யான்திறப்புச் சொன்னேன். குருஉப்புச் சுண்ணம். மாற்றுப் பதினறு. காலனை விரட்டும். காயம்கற்றூண். உருவான உடலை அனல் மண் தின்னு.

37,38 *பேரண்டச் சுண்ணம்.* பதினறுமாற்று. பெரும்பிணியும் கொடுநோயும் நீங்கும்.

39—41 *சங்குச் சுண்ணம்.* சங்குமுப்புச் சுண்ணம். பதினறு மாற்று. கோடிவித்தை. சரக்கெல்லாம்கட்டும்.

42—47 அண்டபிண்டம் இன்னதென்பது. அகத்தியரின் ஏமத் தாரையாகிய பஞ்சகாவிய நிகண்டு எண்ணூறு பார்எனல். புண்ணுக்கர் முத்திக்காண்டம் 500. சட்டநாதர் சம்வாதக் கொத்து 100. காலாங்கிநாதர் முப்புநீர் 500. போகர் நிகண்டு 1200. நந்திசூத்திரம் 32 ஆகியநூல் பார்க்கஎனல்

48 சத்திசிவக்கிணறு. கிணறு இருக்குமிடம் கோரக்கர் பாறை முதலியன காண்க.

49 பிரமகற்பம். செயநீர் கலக்கும்முறை. அகத்தியர் பஞ்ச காவிய நிகண்டில் கற்கண்டு பனைவெல்லம் சீரகம் என்று மறைத்துக் கூறிய பொருள் முறையே பேரண்டச்சுண்ணம் சிவமுப்புச்சுண்ணம் சத்திமுப்புச்சுண்ணம் ஆகிய இம் மூன்றுமே எனல்.

பக்கம் 24 ஆதிநீர் வளப்பமும் குடநீர் உதிப்பும். தொடங்கு கின்றது.

,, 25 சிப்பிநீரின் தன்மை *பக்கம்* 26. மூவகை நீர்க் கற்பம். மும்மூர்த்தியுண்டகற்பம்.

பக்கம் 27. போகர் சூத்திரசித்து 800 சொன்னமை. ககனசித்து 80 சொன்னமை. என்னூலைக்காத்துக்கொள். என்சொற்படி நடந்தவர் சாகார். மேலும் கற்பமும் மந்திரமும்.

பக்கம் 28. மிருத்யுஞ்செய மந்திரத்துதி. மந்திரத்தியான விதிப்பு

,, 29. முக்கியாம்ச மந்திரம். அம்ஸபீஜாட்சரத்திறப்பு.

,, 30. ஆயுள் விருத்திக்கு மூலமந்திரம். சித்துக்கருமூல மந்திரம். சர்வ அபமிருத்து நாசனத்துக்கு மூல மந்திரம்.

,, 31. சமாதிநிலையடைய மூலமந்திரம். மும்மூர்த்திதெரிசன மூலமந்திரம். சூட்சமமூலமந்திரம்.

,, 32. மூலமந்திரங்களின் பயனும் விவரமும் 'இ' என்ற எழுத்தின் சிறப்பு.

,, 33. நந்தி சட்டைமுனி அகத்தியர் மந்திர தீட்சையோதி மறைத்தமை. வேலன் ஞானம் எண்ணூற்றில் சொன்ன சாகா நுட்பம். மந்திரவழி.

,, 34. திறவுகோலிருக்கும் சித்தர் வரவும் மூர்த்திகள் உறவும். சித்தர்களோடு தருக்கம். சங்கிலிதாண்டச் சொல்லல் வெள்ளப் பெருக்கு. நூல்மிதத்தல்

,, 35. நந்தி வந்து வாழ்த்திய நூல்

,, 36முதல்40 ஆயுள்வளர்ச்சிக் குளிகை (மிருத்யுவிஞ்சுக் குளிகை) 16 வகைச் சுண்ணமும் மூலிகையும் சேர்த்து செய்தல்.

பாடல்50முதல்56 ஐங்கோலத்துறுதி கூறல். அகத்தியர் மந்திர காண்டம் கூறி வைத்தார். அவர்கபாடமிட்ட மறைப் பிணை நீக்கல்.

57முதல்60 கௌரிச் சுண்ணம். பாதகங்கள் வாராது பல நோய்க்கு ஈ'யே.

61 நவபாடாணச் சுண்ணம்.

62,63 உப்புப்புளி நாதவிந்துச் சரக்கு

64முதல்68 வகாரகுருச்சுண்ணம். 10½மாற்று. அறம் செய்து உண்க.

69,70 கௌரிச் செம்பு. 71 கெந்தகச் செம்பு

72 தங்கபற்பம். 73,75-பஞ்சபூதச் சரக்கு.

75,76,77 பஞ்சபூதவகாரகுருச் சுண்ணம். ஈரெட்டுவயது கோடி நோய் போகும்' இதுகற்பம்.

78,79. சகலசரக்கும் நிற்கச் செயநீர்

80 பஞ்சபூதக்குருச் செந்தூரம் 16-மாற்று.

81,82 சிவப்புக்கல் செந்தூரம்.

83‘84 நவதசாமிர்தமெழுகு. ஈளை, காசம்8. குன்மம்8. தீராதபாண்டு, குட்டம்21. வாதம்80. காமாலை, சோகை, மூத்திரக் கிரிச்சனம், வெட்டை, கிரந்தி, சூலை, மகோதரம், பித்தமயக்கம், அட்டநாகம், சில்விசாடி, சோகம், சுரம், பெரும்பாடு, வலிப்பு, நீர்ரோகம் முதலிய பல நீங்கும்.

பக்கம் 54. அனுமாரின் உண்மை விதிப்பு 55 அனுமானின் ஆன்மநியாசம். அனுமானின் அங்கநியாசம்.

,, 56, கவசம். 57. மந்திரம் பாடல் 86,87 அனுமானின் மை

பாட்டு88முதல்92 செயநீர் எடுக்கும் காலம் 93 பராபரியின் தெரிசன மந்திரம் பக்கம் 60,61 அனுட்டானவிதி.

பாடல்97,98,99 கௌனமணி 100 நூற்சிறப்பு.

பக்கம் 63 சித்தர் துதி.

## 3—ரவிமேகலை 75

1. காப்பு 2. வாதம் யோகம் வைத்தியம் ஞானசூட்சம் அவற்றின் மறைப்பினை உரைப்பேனெனல்.

3 ஒழித்துவைத்த முறைகளை ஒழுங்காகச்சொல்வேன் எனல்

4,5. மறைத்த பொருளின் பலபெயர்கள்.

6,7 ஐங்கோலக் கருவின் மார்க்கம்

8,9 ஐங்கோலப்பூ செய்முறை 10,11 சரக்குகள் கட்டும் வகை

12,13 *வெண்காரச்சுண்ணம்* குரு. செம்பு பழுக்கும்.

14—17 *செயதேவிச்சுண்ணம்* குட்டம் குறைநோய் வாதம் தீர அரிசிஎடை ஆவின்நெய்யில் ஈக 10½காணும்.

18. பித்தமுடன் வாத ஐய பேதம் நீங்கப் பேதி மருந்து.

19,20,21 *துருசுச்சுண்ணம்*. பத்தரையாகும். பல கோடி நோய் நீங்கும்.

22,23 *கற்பூரச் சுண்ணம்*

24,25 *கருவங்கச் சுண்ணம்* 21 மேகம் தீரும்.

26முதல்30 *முப்புச் சுண்ணம்* எல்லாச் சரக்கும் கட்டும் மேலும் ஒரு *முப்புச் சுண்ணம்*

31,32,33 *தாம்பூரச் சுண்ணம்* பெருநோய், குட்டம், குறை நோய், வாதம்80 முதலியன 15 நாளில் நெய்யிலுண்ண நீங்கும். நிறைமாற்று அறம் செய்து உண்க.

34முதல்38 கோரச்கர்குருமெழுகு, விப்புருதி, மேகம், பாண்டு, சன்னி, சுரம், புற்று, காமாலை, ஏறுகின்ற விரைவாதம் குட்டம், குன்மம் ஏழுகடல் தாண்டியப்பால் ஓடும் மருத்துவரும் வாதியரும் வாழ்வுற்றேங்க இக்குரு மெழுகு கூறினேனெனல்

39முதல்41 ஈடுவசியமருந்து

42,43 *வெடியுப்புச் சுண்ணம்* கோடி நோய் போம் சரக்கெல்லாம் தட்டும்.

44—45 பதினொருசரக்குக்கட்டுத் திராவகம்.

46—47—48 வீரமுப்பு. இதுகாசினைப் பற்பமாக்கும். 3வேளையில் பொல்லாத மாநோய்களெல்லாம் நீங்கும்.

49—50 மறைவுமை. 51—52 அதற்குப்பூசை.

53—57 *அப்பிரேகச்சுண்ணம்*— நீர்ரோகம், காசம், ஊளை, சுரம், மாந்தம், கிரிச்சனம்போம்.

58 *வெடியுப்புமெழுகு.* —வயிற்றுக்கட்டி, நீராம்பல், மகோதரம் நீங்கும்.

59 கண்பூவிற்கு— கோவைச்சாறு.

60—61 அட்டகுன் மத்திற்கும் வயிற்றுக்கட்டிக்கும் மருந்து.

62 இளைப்பு, இருமல், காசத்திற்கு.

63—67 சித்தர் தெரிசனவிதி.

68—69—70 சோடகச் செயநீர். கோடிவித்தை. மாற்றுயரும்.

71—72 வெள்வங்கச் சுண்ணம். மேகம் 21 தீரும். மாற்றுயரும்.

73 சித்தரைக்காண வழிகூறல் 74. கனகபிந்து 85ல் உண்மை தோன்றுமெனல்.

75 இயற்றிய நூல் கூறல்.

## 4— முத்தாரம் 91.

1 காப்பு. 2 குருநந்திபாதம் போற்றித் தீமையறச் செந்தமிழால் உலகினர்க்கே முரணகல முச்சுடரும் சுருளநாட்டி முத்தாரம்தனில் களங்கம் தீரச்சொல்வேன் எனல்.

3 நானிலத்தில் வெல்லுதற்காய்க் கல்பவகை முப்பு செயநீரின் மார்க்கம் கிளத்திடுவேனெனல்.

4—8 பூநீர் என்றும் பௌர்ணமி நாள்என்றும் பலவகையாக மறைத்தமார்க்கம் கூறுவேனெனல். அகத்தியர் கொங்கணவர் தன்வந்திரி புகன்ருர். வான்மீகர் செயநீர்ச் சூத்திரத்திலும் போகநாதர் கருக்கடை நிகண்டிலும் கூறினுர்எனல். நமனுசத்திறவுகோல் என்பது 8-ல் நவநாதத்திறவுகோல் என்று கூறப்பெற்றுள்ளது.

9—21 சத்திசிவநீர். "கோவானூர்ப் பொட்டலிலே" என்ற பாடலின் பொருள். சித்தர்களின் நூல்களின் குறிப்பு.

22—23 செயநீர் உதிப்பின்வளமை. 24—33 பூச்செயநீர் இன்னதெனலும் எடுக்கும் முறையும் வகைவிளக்கமும்.

34—43 முப்புக்குருமுடிப்பு. நமனுசத்திறவுகோலிற் சொன்ன நவதசாமிர்தமெழுகு அரைக்கச் செயநீர் கூறல்.

16—17 ஆம் பக்கங்களில் அனுப்பானமும் நோய்கட்கு வழங்கும் முறையும்.

44—50 இரசமிட்ட உப்புச் செந்தூரம். 16 மாற்று. உடல் கற்றூண். ஊழ்வினைமாற்றி வாழ்வாய்.

51,52 *புகையும் சரக்குகள் செந்தூரம்.* இதுவேமுப்பு. மேலும் ஒருமுப்பு. வித்தைபலகோடி. பாதகநோய்கள் எழுகடல் தாண்டும்.

53 *வெள்ளீய நாகவழுப்பு.* 54 தாம்பரச்சுண்ணம்.

55 *துரிசுச்சுண்ணம்.* 56 மேகசஞ்சீவிமெழுகு.

57,58,59 *நாகச்சுண்ண பற்பம்.* 60,61 இரசமணியும் பற்பமும். நோய்பல நீங்கும். மணியைவாயிலிட விந்திருகும் உடல் ஒளிபெறும்.

62—67 *அரிதாரக் கட்டும் சுண்ணமும்.* 67 அமிர்த சஞ்சீவிக் குழம்பு. 4448 நோய் நீங்கும்.

68 *செம்புசுத்தி.* சகலநோய்க்கும் எண்ணெய்.

69 *முப்பூர பற்பம்.* முடங்கிய கால்கைநிமிர, வில்வாதம்தீர, கண்டமாலை, எட்டுக்குன்மம், நாலு வகை அண்டசுரம், நளிர் சுரம், சன்னி இவைகள் நீங்க.

70 உப்புச்செந்தூரம். வறுமைபோகும். அருளுண்டாகும்.

71—75 தாமிரச்சுண்ணம். கொடுநோய்கள் நீங்கும்.

76,77 தங்கச்சுண்ணம். 78,79,80—துரிசுச்சுண்ணம்.

81 இரசச்சுண்ணம். 82—85 அமுர்தசஞ்சீவிச் செந்தூரம். கொடிய நோய்கள் எல்லாம் நீங்கும். 86—90 சித்தர்கள் குடும்பவாழ்க்கை. 91 சித்தர்கள் தாள்போற்றி அரனுமை வேல் தாள்போற்றி முடித்தல்.

## 5 நாதபேதம்.

1 சுழிமுனையில் நின்றால் நினைத்தவண்ணம் முடிக்கலாம். உடல்தேவரூபம்.

2 உடல் வாலையாகக்கற்பம். 3 காமப்பால் கானற்பால் கொள்ளக்கைலாசதேகம்.

4 ஐந்தெழுத்தோதச்சித்தி.

5—6 வால்மிளகுக்கற்பம். 7—8 சாதிக்காய்க்கற்பம். 9 பூசை யால்முத்தி.

10—11—12 சாதிக்காய்க்குளிகை. 13 வளிநிலை. 14 ஓதாண்டுக் கற்பம்.

15 வாசி, சுழினை. 16 வெளியேசெல்லும் காற்றுச்சிவம். உள்ளே செல்லும்காற்றுசத்தி. அங்கென்று கழுத்திலூன்றச் சத்திசிவம் ஒன்றும். அங்கிருந்து அழியாத பேரின்பச்சிகார வீட்டிற்குச்செல். அதுவேசுழிமுனை. 17 முச்சுடர் இயம்பல். 18—19—20 இரசமணிக்கோவை. இந்நூலில் 5 பாடல் கிடைக்கவில்லை.

## 6 தனித்தொகுப்பு

1—2—3 22 நூற்பெயர். 4 கொள்ளிடப்பக்கம் முத்தரநதிதீரப் பரூர்ப்பட்டிச்சிற்றூர் ஏகிச்சமாதியடைதல். பின்முன்பு சமாதியடைந்த பொய்கையூருக்கு வருதல்.

5 சமாதிவிட்டு வந்தவுடன் சடையப்பக்கவுண்டன் கண்டு வாழ்த்துதல், காலஆராய்ச்சி பரிவிருத்தி 1408-ல் (கி. பி. 1233) சமாதியுற்றது.

6 பரிவிருத்தி 1120ல் 1952ல் சித்தர்வெளிப்பட்டு வந்து உலகினையாள்வார் எனல். (காந்தியடிகள் முதலிய பலர் முயற்சியால் பலர் நாடாளத் தொடங்கியமை காண்க)

7, 8 சித்தர்களின் ஒளிப்பைத் திறவுகோலால் வெல்ல நாட்டினேனெனல்.

9 திறவுகோலுக்கு அநுமை வாழ்த்து. சித்தர்கள்மறித்து வாதமிடக் குளிகைபூண்டு வான்சென்று மதியோடு கலந்து மதியாக நிற்றல். சித்தர்கள் ஏகல். பொய்கை நல்லூரில் அடங்கல்.

## 7—போகநாதரருளிச் செய்த கற்பசூத்திரம் 18

1—8 யோக நெறி, நிருவிகற்பசமாதி 9 சத்தியும் சங்கரனும் சாற்றிய சாவாக்கற்பம் கூறல்.

10 தான் கொண்டமை கூறல் 11 பிறவி நீங்க மற்றொருகற்பம்.

12 மூப்புப்போகும். 13,14,15 பயிற்சிக்காலத்திலுண்டாகும் இன்னல் கூறல் 16 சூதாகச்சூதர் கூடி மறைந்தாரெனல்.

17 கோரக்கர் சந்திரரேகை 200 தன்னில் பூராகப் பொய்யில்லாமல் போரத்தாரெனல்.

18 அருட்பெருக்கக் கற்பம் முற்றேளனல்.

# கோரக்கர் அருளிச்செய்த
# சந்திரரேகை 200

## காப்பு.

(1) சதாநந்தி பார்வதிஓம் சதுட்கோணத் தாய்
சகலவுயிர் நிறைந்தோங்கும் சாமள ரூபி
இதாஇதங்கள் இலங்கிவளர் இதிகா சஞ்சொல்
இகபரத்தி லூடாடும் சூலி வீரி
பதாதிபத பாஸ்கரி பஞ்சாட்சர தேவி
பரிபுரைபங் கசவேணி கபாலி மாலி
சுதாகிரண கசானனிநற் சந்திர ரேகை
கருத்துடனே கழறவுமை அருட்டாள் காப்பே.

(2) காப்பதற்குக் காருண்யந் தாயே யல்லால்
காசினியி லெவர்க்குண்டு கவலை தீர்க்க
மூப்புபிணி சாக்காடு துன்பம் நீங்க
முறையுடனே ஞானசித்து யோக மார்க்கம்
ஏய்ப்பின்றிக் காயகற்பம் இகத்து ளோர்க்கு
எடுத்துரைப்பேன் நீடூழி காலம் ஓங்க
வாய்ப்புடனே வாசிபரி யமுத சூட்சம்
வண்மையுடன் விந்துநிலை வளமே சந்திரன்.

(3) சந்திரனும் விந்துவும் ரவியோ டெய்தி
சருவாமல் மகாரமேல் வட்ட மாச்சு
மந்திரஞ்சொல் பிரணவமாய் மயங்கா மல்ஓம்
மணியார பேரிசுர மறைமுன் னுக்கும்
சுந்திரம்சேர் சிவன் மாலும் ருத்திரன் சத்தி
சுழிமுனைதா னமுதபீட சுரபி விந்து
அந்தமதாய் அகரவுயிர் அனைத்துள் ளாகி
அருபவெளி சோதி யகண்டா காரமாச்சே.

---

(1) நல்ல சந்திர ரேகை என்ற நூலைக் கருத்துடன் இயற்ற உமையம்மையின் அருட்டிருவடிகள் காப்பு என்கின்றார். சதுட்கோணத்தாய் — மூலாதாரத்திலுள்ள நாற்கோணத்திலுள்ள தாய்.

(2) வாசி பரி — காற்றாகிய குதிரை.

(3) அகண்டாகாரம் — பெருவெளியான வடிவம்.

(4) காரணமாம் பரம் பொருளே கனகவாசல்
கால்மேலாங் கீழாகும் ஆன்ம சோதி
வாரணனூர் கொலுவிருக்கும் வழிநீர் கோணம்
வலமிடமாய்ச் சுழன்றுநிற்கும் வட்டம் மத்தி
ஊரலது ஊரியெங்கும் உச்சி மையம்
உண்ணுக்கு மத்தியந்தான் உமையாள் நாட்டம்
தாரகத்தின் தடைபூட்டு நந்தி மேரு
தனஞ்சயனு ரிருக்குமிடந் திறமாந் தத்வம்

(5) தத்துவங்கள் தொண்ணூற் ருறுங் கோச
தாரணையுள் தானுன அவத்தை கும்பம்
வெத்திதரும் புருவ மய்யம் உதிப்பே உந்தி
விளங்கிவரும் ஈராறும் இருக்கும் இல்லம்
வித்திருந்த இடஞ்சக்க ரஞ்சு மூத்தி
இருகோணம் மூவரிடை சயனம் மேடே
ஒத்திருந் தாடுமைவர் சிறந்த கொம்பு
ஓராம லாதிவட்டம் பரமு மாமே.

(6) அம்பரமோ டாறுதல மரன்பா லம்மை
அமைந்தகரு ஊராகு அந்தரத்து ஊசல்
கும்பரச பூரகமே குபேர பிர்மன்
குறையாத பாலமையங் குலவும் நாடு
மும்முதலாம் முச்சந்தி முனையே லிங்கம்
முயங்காத வட்டமயன் பீடம் லிங்கம்
தம்பவொளி யோரெழுத்து நாத மாச்சு
தங்கிநின்ற சதாசிவன் தடஞ்சூழ் வெளியே.

(7) வெளியிலிரு வாசல்நவ கோணத் தாடு
மிடங்கோவில் இரக்கமிலாக் கூற்றன் காவல்
சுழிமாறல் மறலியுட புரட்டே யாகும்
சோராத ஆன்மவொளி சுழுத்தி சூட்சம்

---

(4) கால்—காற்று. தனஞ்சயன்—பத்துவகைக்காற்றி லொன்று.

(5) சுழுத்தி—உறக்கம். (6) கும்பரசம்—கும்பக ரேசகம் என்பதன் மரூஉ. ரேசகம்—காற்றை வெளியேவிடுதல். பூரகம்—காற்றை உள்ளே இழுத்தல். கும்பகம்—காற்றை உள்ளே அமுத்திநிறுத்தல்.

தெளிவான வமுதரசஞ் சூலி மாலி
திரைகடலும் மலைவாரித் தீரா நெஞ்சம்
அழிவில்லா மனமாயை அரியின் தூண்டல்
அவனெனவு நீயெனவு மமைந்த துள்ளே.

(8) உள்மூலம் அறியமல் ஓடி யோடி
உழன்றுகெட்ட மாந்தர்களும் கோடா கோடி
பள்ளமீதென் றுணராது பார்த்து ஏங்கிப்
பாருலகில் பலவிதமாய்ப் பாபம் செய்து
நல்லிருளை விலக்குதற்கு வழிதான் பாரார்
நதிகளெலாம் நீராடி நயந்து சென்று
கள்ளமுடை மனத்தவராய்க் கதைகள் பேசிக்
காரணமாம் பூரணத்தைக் காணுர் மட்டே.

(9) மட்டிலடங் காதநன்னூல் மறைகள் மற்றும்
மனந்தேற வுணர்ந்தாலும் மதிதான் காணுர்
அட்டியிறை மதியதனை அறிந்திட் டாலும்
அலைமனத்தை அகத்தடக்கார் ஆண்மை கொள்வார்
எட்டிரண்டு மின்னதென்று மியம்ப மாட்டார்
எவர்கட்கு மியாங்கள்குரு வென்றே செல்வார்
திட்டமுடன் பொருள்கோட்டால் சிவன்தான் விட்ணு
திறமையென்று ஓதுவார் தீவிரமாய்த் தானே.

(10) தீவிரமாய்க் காவியங்க ளுணர்ந்தா லென்ன
திறமையுடன் தினகரனைத் திருத்திக் கூட்டார்
கோவிலென்றும் குளங்களென்றும் குதர்க்கம் பேசிக்
குருவிருக்கும் இடங்காணுர் குளத்தைக் காணுர்
ஆவியது அடங்கிநிற்குந் தலத்தைக் காணுர்
ஆண்பெண்தான் இன்னதென்றும் அறியான் மட்டே
காவிகட்டிச் சாம்பல்பூசிக் கபடங் கொண்டு
காசுபணம் பறிப்பரவர் கள்ளர் பாரே.

---

(8) நள்ளிருளை விலக்குதல்—தவப்பயிற்சியினுல் ஒளியுண்டாக்கி இருளை விலகச்செய்தல், "இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி, மாசறுகாட்சி யவர்க்கு" என்பது திருக்குறள். மாசறுகாட்சியாகிய மெய்யுணர்வுப் பயிற்சியைத் தொடர்ந்து கூறுகின்ருர்.

(10) தினகரன்—சூரியகலை

(11) பாரிலுள்ளோர் குறிப்பதனை யறிய வேண்டில்
பட்சமுடன் பரஞ்சோதி நடனங் காண்பர்
வீரியமாய் மதியதனைத் தூக்கி யூணி
வெய்யவனி லிறக்கிடவே விசனம் போச்சு
காரிருளுந் துலங்கிப்பெருங் களங்க மேகி
கனியொடுநற் றேனமுதங் கலந்துள் ளாடக்
கோரியென்றன் குருபரனும் உமையும் சொன்ன
கொள்கையறி குவலயத்திற் காணிப் பொன்னே.

(12) ஆணிப்பொன் னம்பலத்தில் ஐயன் கொண்ட
ஆட்டமதை யறிந்திட்டா விரவி நீங்கா
வேணியென்ற என்தாயாம் விமலி நீலி
விளங்கிடவே அமுதப்பால் ஈந்து காப்பாள்
கோணிடாது குருவிருக்கும் இடந்தான் தோற்றும்
கொண்டலொளி திறந்துமலர்க் குமுதம் வீசும்
நாணியது நழுவாமல் நயந்தூ டாடும்
நாதாந்தப் பேரருளால் அச்சம் போமே.

(13) அச்சமின்றி யடியேன்கொள் அநுட்டா னத்தை
அறைந்திடுவேன் தீட்சைபெற்ற மார்க்கந் தானும்
இச்சையுடன் இலங்கிடவே இனமாய்க் கோரி
இடகலையும் பின்கலையும் இழுத்து மாறிப்
பச்சமுடன் பவந்தொலையப் பரனை யுன்னப்
பராபரனும் பார்வதியும் பக்கல் எய்தி
நிச்சயமாய் எனக்குரைத்தா ரோமென் றோர்சொல்
நிலைபிசகா திருந்துதினம் துதித்திட் டேனே.

---

(11) மதியாகிய சந்திரகலையைத் தூக்கிச் சூரிய கலையிலூணி அழுத்தி வெளி நோக்கத்துடன் மூலாதாரக் குண்டலி யாற்றலை மேலேற்றிப் பயில இருள் நீங்கும்- விசனம் போகும். இது சாகாக்கலையின் உயர் நுட்பம். குவலயத் திற்கு ஆணிப் பொன் என்று பிரிக்க.

(12) பயிற்சி செய்வோர்க்குக் கொண்டலொளியாகிய நீல நிறம் தோன்றும். செங்குமுதப்பூவின் நிறமான ஒளியும் காணப் பெறும்.

(14) இட்டமுடன் தலைகழுத்துத் திரேகங் கைகால்
இடுப்பதுவும் துவளாமல் இருத்தி ஊணித்
திட்டமுடன் வடமுகமா யிருந்து தியானம்
தியக்கமற வோர்மனதாய்ப் பூசை கொண்டேன்
சட்டமுடன் பஞ்சகர்த்தாள் கொட்ட மெல்லாம்
சரிந்துடனே நீங்குதுயர் வினைகள் போச்சு
வட்டமறி யரனவரும் அம்மை தானும்
வரமளித்தார் இன்னமொன்று விள்வே னன்பாய்.

(15) அன்புடனே என்மகனே யறையக் கேளு
அநேகநாள் இருந்துலகில் வாழ்வாய் நீதான்
பின்னமின்றிப் பேரின்ப யோக நிட்டை
பிறழாமற் செய்திடுவாய் பேதம் போகும்
இன்பாக அம்-உம்-நம் என்றே யேத்தி
இருவாசல் பிசகாது இழுத்து ஊது
நன்னயமாய்ப் பூரணந்தான் நாடிக் கூடும்
நாரணியாள் அமுதமீந்து செப்பு வாளே.

(16) செப்பியதோர் மொழிகேட்டுச் சிதரு மற்ருன்
செகமாயை தான்நீத்துச் சிதாகா யத்தில்
ஒப்புடனே மனம்வைத்து அம்-உம்-நம் என்
றுணர்ந்துணர்ந்து ஓதிடவே உமை யாள்தானும்
இப்புவியில் விளங்குதற்காய் எளியேன் பக்கல்
எய்திநவ ரசவமுதம் ஈந்தாள் தேவி
அப்படியான் உண்டங்கம் வற்றி நின்று
ஆனந்தம் கொண்டேனிவ் விதமாய்த் தானே.

(17) இவ்விதமாய் இருந்துஇரு கால்கள் நீட்டி
இதமாகப் படுத்திடக்கை முடிமேல் வைத்து
ஒவ்விதமாய் வாசிதனைப் பிறழா மல்தான்
ஒவியம் போல் சமரசமாயிழுத்துக் கொண்டு

---

(14) கொட்டம்—கொற்றம் என்பதன் போலி.

(15) அம்-உம்-நம் என்ற ஒலியுடன் காற்றுப் பயிற்சி செய்தால் அந்த ஒலியுடன் ஒளியுண்டாகும்.

(16) அம்-உம்-நம் முந்திய பாடலில் காற்றுப் பயிற்சிக்கும் இங்கு மந்திரமாக ஓதவும் கூறினர்.

பவ்வமறக் கேசரத்தில் மனத்தை வைத்துப்
பக்குவமாய்ப் பரமன்றன்னைப் பார்த்து மேவி
செவ்வையுட னமுதமதை யிறக்கி யுண்டு
செகமதனில் சந்ததமும் ஞானம் கொண்டேன்.

(18) சந்ததமும் சாம்பவியாள் அமுதம் ஈயச்
சடம்வலுத்து எலும்புதோல் நரம்பாய்க் காண
விந்தையிது வென்ன வென்று என்போல் சித்தர்
வேடிக்கை பார்க்கவந்தார் விரைவா கத்தான்
சிந்தைகொண்டு போகரவர் சிணுங்கி டாமல்
சிவயோகம் செய்துசித்தி முன்ன மேதான்
மந்தமறத் தீட்சைபெற்று ரருள தாலே
மனதார எனைக்கண்டா னந்தித் தாரே.

(19) ஆனந்தித் துடனேயருள் ஞானம் பெற்று
அம்பிகையின் கடாட்சத்தா லவனி மீதே
போனகங்க ளுண்டுபுகழ் பொருந்தி நின்றேன்
போகரவர் சித்தாடப் போவோ மென்றார்
கானகத்தை விட்டுவிட்டக் கணமே நாடிக்
காசிநகர் சிதம்பரமுங் கடந்து பின்பு
தானமுற்றுப் பழனிதனில் தங்கிச் சின்னாள்
தந்திரமாய்ச் சித்தாடப் பெற்றேன் பின்பாய்.

(20) பின்பாக அவ்வழியைப் பேத மின்றிப்
பேசிடுவேன் தழைத்து உயிர் ஓங்கி வாழ
நன்மையுடன் கற்பவகை நானும் போகர்
நாடியுண்ட விபரமதை நவில்வே னுண்மை
அன்புடனே போகரவர் அநேக சித்து
ஆடியதோர் அதிசயங்கள் அநேகம் உண்டு
தென்பாகப் பழனிவிட்டுச் சீன தேசம்
தீவிரமாய்ச் சென்றோம் பாருலகில் யாமே.

---

(17) இதில் யோகநித்திரை கூறுகின்றார். அகத்தியர் பரிபாஷை யிலும், சூத்திரத்திலும் இங்ஙனம் கூறப்பெற்றிருத்தல் காணலாம். கேசரம்—ஆயிரத்தெட்டிதழ்த் தாமரையுள்ள தலையின் உச்சிவெளி.

(21) பாருலகில் மாந்தர் களுக் காயு ளோங்கப்
பாவையர்கள் தங்களை யாம் கலவி செய்தோம்
சீருடனே வருடமைஞ்நூறு சீனத் துற்றுச்
சிறப்புடனே ஆண்டு நானூறு பொதிகை நின்றேம்
காருலவும் பழனிநகர் கடுகி வந்து
கந்தருட கடாட்சங்கள் அடைந்தோம் பின்னர்
பேருறையுஞ் சித்தரெலாமெங்களைத் தான்
பிடித்தறிய வெண்ணினுர் புகல்வே னன்றே.

(22) புகன்றிடுவேன் போகரவர் பெருமை தன்னைப்
பூவுலகில் யாவர்களும் பொருந்தி மேவ
அகம் மகிழப் போகநாதர் பழனி தன்னில்
அடங்கிடுமுன் பாகத்தான் வரலாறு முற்றும்
இகம் அறியச் செனனசா கரமுஞ் செப்பி
எனையழைத்து உரகை எனும் பதிக்கே கென்றுர்
தகைமையுறச் சித்தரையான் அடக்கம் செய்து
தட்டாமல் உரகையுற்றுப் பார்த்திட் டேனே.

(23) பார்த்திருந்த சித்தர்களைப் பார்க்க வைத்தே
பக்குவமாய்ப் போகரவர் தயங்கி டாமல்
சீர்நிறையென் போலவரை ஏய்த்துப் போட்டுச்
சிதருமல் உரகையினில் என்னைக் கண்டார்
போர்விளங்கப் புதுமையுடன் எனைய ழைத்துப்
பொய்கைநல் லூரென்றிடப் பூங்கா சென்றுர்
நேர்மையுடன் எனக்கடக்கம் நிலைமை காட்டி
நெடியகடல் தாண்டிமறு தேசம் போனுர்.

(24) போகும்போ துண்மைவெளி யுரைத்தார் போகர்
பொய்யல்ல மறுதேசம் சென்ற பின்பு
வாகுடனே சூத்திரசித்தின் மார்க்க மாக
வலுவுடனே வெள்ளைநிற மாந்த ருலகில்

---

(21) யோக நெறியில் போகஞ் செய்வோர்க்குத் தவநெறி வாய்த்தலும் வாழ்நாள் மிகுதலும் உண்மை என்பது கருத்து.

(22) செனன சாகரம்—போகர் இயற்றியநூல்.
உரகை—நாகபட்டினம். (உரகம்—நாகம்)

பாருகனி பலவிதமாய்ப் பாசை கொண்டு
பகருலகில் நடிப்பதாய்ப் பகர்ந்து பேசி
சாகுதலும் இல்லாமல் சமர்த்தாய்த் தானும்
சஞ்சரித்தே விளைப்பேனங்கு சமரென் ருரே.

(25) சமராடுங் காலமுன்னு ளரச ஞகிச்
சமர்த்தாகப் பிறந்து சகந் தழைத்து ஓங்கத்
தமதாக ஏகசக்கிரப் பார்வேந் தென்ன
தார் முழுதும் ஓர்வாருய்த் தகித்து வேண்ட
அமைதியின்றி யரசரெல்லாம் அயிர்கொண் டென்மேல்
ஆர்ப்பரித்துப் போர்புரிவார் அவரை யெல்லாம்
நமனுலகிற் கேற்றிநலம் பெருகி வாழ
நம்மவர்கள் சிறக்க உய்வேன் நன்று ளென்ருர்.

(26) அந்தநாள் அக்காலம் நமது நாட்டில்
அநேகவிதப் பஞ்சங்கள் அவத்தை மெத்த
சந்தேக மில்லாமல் சாட்சி யப்போ
சாற்றிடுவே ஞகாயந் தனிற்க ளங்கம்
விந்தையுடன் நட்சேத்திரம் ஒன்று தோன்றி
வெட்டவெளி பிரகாசம் வெகுவாஞ் சோதி
மந்தமின்றி வால்நீண்டு மதிமேல் நிற்கும்
மானிடர்கள் பிணிபலவால் மாள்வார் கதிரே.

(27) கதிரவனுங் கடும்பனியுங் காருங் கோடைக்
கற்பனைகள் மெத்தவுண்டு ஆகா யத்தில்
மதிதாழ்ந்து கரியினுட மண்டை போல
மகாருப ரூபவெளி மதிமேற் காணும்
துதியாக நாழிஇரு இருபத் தைந்தில்
தோற்றிடுமே மாத்திரைதான் மூன்று மட்டும்
சதியாக வடதேசம் தன்னி லோர்பால்
கடல்பொங்கி நெருப்புரத்த மழையுண் டங்கே.

(28) எங்கெங்கும் சாதுக்கள் ஏகக் கூட்டம்
ஏழைகளுக் குதவியாய் எய்தி நிற்பார்
பங்கமுடன் பாவிவெள்ளைப் பாத கன்ருன்
பக்தர்களைச் சிறைகொள்வன் பட்ச மின்றி

---

(24) இங்கே கூறப் பெற்ற வெள்ளைநிறமாந்தர் சீனர்.
26, 27—ல் வானத்தில் தோன்றிய கெடுகுறிகள் கூறும்.

மங்கிசெக தீசனையே பஜிப்பார் கூவி
மாநிலந்தான் பிரளயம்போல் மயங்கிக் காணும்
சங்கையுடன் சண்டாளர் சமரை நீத்துச்
சடுதியினில் வருவேனென் றறைந்து போனர்.

(29) போனகமாய் யோகமுடன் தீட்சை மார்க்கம்
பொருத்தமுடன் சரியையொடு கிரியை யோர்க்கு
ஞானவருள் நாட்டமுற நாதாந் தத்தின்
நற்பயனை நவின்றிடுவே னரனே டம்மை
ஈனமற வெனக்குரைத்த தெல்லாம் ஓங்கி
என்றென்றும் அழியாது இணையாய் நிற்கத்
தானமுடன் தட்டழியா மந்திர எந்திரம்
தாக்கிடுவேன் தரணியிலோர் மொழியுமாமே.

(30) ஓர்மொழியே ஓமென்னும் ஓங்கா ரந்தான்
உபதேச முன்னமுதல் முதலே முத்தி
சீர்கொண்டோம் சிவயநம வென்று செப்பிச்
சிதருமல் சிந்தையினில் செபங்க ளேற்றிப்
பார்விளங்கப் பராபரனைப் பணிந்து போற்றப்
பக்குவமாய்ப் பார்வதியோ டரனு மெய்தி
நேர்மையுடன் தரிசனங்கள் ஈவா ருண்மை
நிச்சயங்கண் டிருப்பாய்வட முகமாய் முன்னே.

(31) வடமுகமா யாதனமேல் அமர்ந்து கால்கை
வலுவாகத் திரேகந்தலை யசைந்தி டாமல்
திடமாக இருந்துஇரு வாசல் பூட்டித்
திங்களொடு தினகரனைப்பிறழா தேற்றி
நடம்பெரிய மதியதனில் நயந்து வாங்கி
நாட்டமுடன் ரவியதனில் மாறித் தள்ள
சடம்வலுத்துக் குண்டலியும் சரிந்தி டாது
சந்திரனிலேறி யூதச் சகடு போமே.

(32) போகுமே வாசியென்ற புரவி மட்டம்
பூரித்தால் வெகுவேகம் புகலப் போகா
ஏகுதற் கிடம்பார்க்கும் எகிறி யோடும்
ஏங்காம லுன்மனத்தை யுன்னு லுன்னை

வாகுடனே வலம்புரியின் சங்கை மெல்ல
வழுவாது இழுத்துநடுத் தம்பம் ஏற்று
சாகுபடிக் காரரைவர் சடுத்தம் செய்வார்
சமர்த்தாகக் கேசரம்சேர் கடினம் போமே

(33) கடினமெனத் தோன்றிவிடு மப்பியா சிக்குக்
கவனமுடன் திங்களாறு பழகி வந்தால்
கெடியுடனே ரேசகபூரக கும்பஞ் செய்யக்
கிளைவழியுந் திறந்து குண்டல்துடிப்பு நீங்கும்
படிமிசையில் பலம்பெறவே பக்கு வங்கேள்
பட்சமுடன் கும்பித்துப் பதறி டாமல்
குடியிருந்த வீட்டுக்குள் மூச்சைத் தாக்கிக்
குறிப்பாகப் பூரணத்தின் மையம் ஏற்றே.

(34) ஏற்றியே மாத்திரையு மூன்று வைத்து
எகிராமல் ரேசகத்தி விதமாய்த் தட்டி
மாற்றியே மறுபடியு மயக்க நீங்க
மாறி மாறிப் பழக்கமது மகிழ்வாய்ச்செய்வாய்
போற்றியே சரமென்ற கணக்கின் போதம்
இருபத்தோ ராயிரத்து அறுநூ ற்ரூர் நாள்
தேற்றியே குறையாமல் இரட்டிப் பாகித்
திடம்பெறவே நாட்குநா ளாதரவுண் டாமே.

(35) ஆதரவாய் வாசிநிலை வலுக்க வேண்டும்
அப்பவல்லோ உடலாவி வசம தாச்சு
பாதகங்க ளில்லாமற் படிமேற் பாலம்
பரஞ்சுடரும் பக்குவமாய்ப் பதிந்து நிற்கும்
சாதகமாய்க் கொலுமேடை மாட கூடம்
சார்வாக ஆயிரத்தெட் டிதழே சட்டம்
பேதமின்றி யோர்நிலையால் பிரிந்தி டாமல்
பெரியதொரு செகசோதி இனிய மேரே.

---

(31) சகடு—கசடு என்பதன்போலி.

(32) கேசரம்—உச்சிவெளி.

(36) இனியதொரு வட்டமீ ராறே யாகும்
இடகலையும் பின்கலையும் சுழிணைத் தீயாம்
கனிவாகக் கலந்தமதிக் கருவே யாகும்
காரமுடன் சாரந்தா னதுவே யாச்சு
தனியாகுந் தாரணையுந் தத்துவ கோட்டம்
தானடங்கும் மார்க்கமதைத் தவருமல் தான்
இனிவாக வெடுத்துரைப்பேன் இகத்திற் காண
இகபரமு மொன்றுக இலங்கு மிட்டம்.

(37) இட்டமுடன் சடமதனி லெழுந்த வாசி
யிழுத்தடக்கத் தந்திரந்தா னிதமாய்ச் சொல்வேன்
நிட்டையுற விருவாசல் வடமே ருச்சி
நிலைபெருகக் கும்பகத்தில் வசமாய்த் தாக்கி
நட்டமின்றிப் பூரகத்தில் சருவி டாமல்
நயமாக மாத்திரைதான் நாலு கூட்டிக்
கட்டமற ரேசகத்திற் கலங்கா தேற்றக்
காலென்ற ரவிமதியுங் கருவே நாதம்.

(38) நாதமதி விறக்காமல் நண்ணித் தீட்டி
நடுவணையி லணையாது மாவைப் பூட்ட
வேதமெனும் பொருளான பொக்கி ஷந்தான்
விந்துதித்த விடமதனிற் புதுமை தோணும்
வாதகல வட்டமதை மறந்தி டாமல்
வழுவாது வாசியென்ற பரியி லேறி
சாதனைகள் செய்துவரச் சடந்தான் நிற்கும்
சந்தேக மில்லைசரம் வலுவாம் அச்சே.

(39) அச்சுமட்டந் தானடங்கி யதிகம் போகா
ஐந்தெழுத்தை யோதிவர அருள்தா னுண்டு
பட்சமுடன் இருபத்தோ ராயி ரத்து
அறுநூறும் அப்புறமே யகன்றி டாது
இச்சையுடன் இரட்டிக்கும் இரட்டி யாகி
இருவாச விதமாக இலங்கிப் பூக்கும்
தச்சனுலை திறந்துதடத் தங்கி யாகும்
தவருது பூரணந்தா னகத்திற் கொஞ்சும்.

(40) கொஞ்சிடுமே ரவிமதியுங் குமுகு மென்று
குறையாமல் சயனித்து இருகால் நீட்டித்
துஞ்சாமல் இடக்கையை முடிமேல் வைத்துத்
துலங்குசுழிப் பிரணவத்தைத் தொகுத்து நாட்டி
அஞ்சாமல் கேசரத்தில் மனத்தை வைத்து
அமைதியுடன் வாசிதனைச் சமமாய்த் தாக்கி
வஞ்சமறப் பராபரனைத் தரிசித் தேதான்
வாதையின்றித் தூங்காமல் தூங்கிக் காணே.

(41) காணவே கமலவொளி கலந்தா டாடும்
காரணியாள் நாரணியாள் கருத்தோ டெய்தி
ஆணவமாம் காமியங்கள் அடங்கிப் போக
அருகிருந்து அமுதப்பால் அன்னை யிவாள்
பேணவே பொன்மேரு நேராய்த் தோற்றும்
புகலுதற்கு அதன்பெருமை புத்தேன் மொய்க்கும்
நாணவே நவகோணம் நடுவாய்க் காணும்
நாரணனார் பீடம்எழு மாடம் உண்டே.

(42) உண்டான உச்சிவெளி யுயரத் தோணும்
ஊத ஊத உடல்வலுத்து உரியும்சட்டை
அண்டரண்டம் ஒன்றாக அமைந்தா டாடும்
ஆச்சரியம் வயிரவுயர் தம்பம் உண்டு
கண்டுநிறை கத்தூரி வாசம் தேகம்
கம்பமேல் காலற்ற காலோ மெத்த
சென்டுமலர் ஆயிரத்தெட் டிதழாங் கோட்டம்
சிறந்தமணி முச்சுடரா னந்த வீடே.

(43) ஆனந்தம் பெருகிவளர் ஆத்ம சோதி
ஐம்பூதம் ஒன்றாக வமைந்தா டாடும்
தானந்த மாதியெனத் தகர்ந்தி டாது
தண்டவிடி முழக்கமது தானாய்க் கேட்கும்
போனகத்தி னூறல்கொட்டிப் பொங்குஞ் சாயல்
புத்தேனும் மொய்த்தொழுகும் புருவ மய்யம்.
ஈனமற இருவாசல் பெருந்தீ யாச்சு
இகபரமு மொன்றாம்நற் பூர ணத்தே.

(44) பூரணந்தான் உண்டுநடை பொருந்திற் ருனல்
புகலரிய பிரமத்தின் மூல மாச்சு
காரணத்தின் கணக்கறிந்த கணக்க ஞவன்
கலக்கமில்லை யவன்பெருமை கழறப் போகா
தாரணியில் தங்கிமிகத் தகத்தாய் வாழ்வன்
தாழ்வில்லா அரனென்றுஞ் சாற்ற லாமே
ஆரணிமணி மாலைகொண்டு அன்னை யாளும்
அன்ருட மமுதீவாள் மயத்தோ டாமே

## மறலி நீக்கும்

(45) மயத்தோடு மயமாகி மறலி தன்னை
மயங்கிடவே மருட்டியழி வில்லா மற்ருன்
இயமொடு நியமங்கள் மெத்தச் செய்து
ஈரேழு உலகமெல்லாஞ் சுற்றி நிற்பான்
அயன்மாலும் பிரமனையும் ஆத்தாள் தன்னை
அழைத்துஉடன் அறிந்திடுவான் அருட்பா
லுண்பான்
நயன்பெரிய நாயகனுய்ப் பவங்கள் நீத்து
நாட்டிடுவேன் பூரணம்பிரி வில்லா தின்பே.

(46) பிரிவில்லாப் பூரணந்தான் பிறழா நின்ருேன்
பெருமையினைக் கொஞ்சமிங்குப் புகலக் கேண்மோ
நெறிபிசகா வெகுளியென விரியா தாகும்
உலகைஇடம் அழைத்துநிலை நிற்க வைப்பன்
அரியனைத் தன்னனையிற் றிடமாய்க் கூவி
அறிந்திடவே நேசித்துப் பூசை கொள்வான்
துரியமொடு துரியா தீதங் கண்டு
தூணைச்சிறுதுரும் பாக்கி வாசம் செய்வான்.

(47) வாசமுடன் பூரணந்தான் வந்துய்த்த தானல்
வண்மையென்ற ஞானவில் லழியா தாகும்
போசனமுங் குறைந்துஉடல் பொன்போல் மின்னும்
பொங்கரவம் பூண்டவனும் பூத நாதன்
ஈசனுடன் எப்போதும் கலந்தே உய்வான்
இறப்பினெடு பிறப்பினையும் நீக்கி நின்று
மாசற்ற மனமுடைய மன்னனுகி
மாநிலத்தில் மாய்கையற்று வாழ்வா ராமே.

## சோதிமயம்

(48) சோதியுடன் சோதியது சொலிக்கு மாபோல்
சூக்குமமாய் இழுத்தகத்தி லிடமேற் றுக்கி
பூதிகொண்டு புரிவட்டம் புனைவார் கொம்பு
புன்னகையாள் ஒருபாங்கு புகல லாகும்
கோதிலன் கொம்பிருந்து கொங்கைப் பாலும்
குமுகுமென ஒழுகிவரும் குறைவி லாது
பேதிக்கா துண்டுஇளைப் பாறித் தூங்கிப்
பேருலகில் நடித்தய்ய மறவே வாழ்வன்.

(49) அய்யமற அம்பரமேல் அமைந்த கோடு
அண்ணுக்கு உச்சிமய்யம் மந்திர தூபி
துய்யநதி நவகோண நதி துறைநீர்ப் பாய்ச்சல்
தொந்தமெனும் லலாடப்பூட் டுளேமே லுச்சி
உய்யுமுயி ரோங்காரக் கோட்டை விந்து
உருண்டுபரு மணியாகத் திரண்டுள் ளெய்தும்
செய்வதணைத்தும் சிதருது சீவன் றன்னை
சிக்கிடுவன் பூரணந்தான் ஈரெட் டென்னே.

(50) ஈரெட்டு வயதாக என்றுங் காண்பான்
எண்மூன்றும் ஈரெட்டும் இடையே கூட்டி
ஓரெட்டா ஒன்பதுவும் உயரத் தூக்கி
ஓங்காரக் கோட்டையதி னுள்ளே பாய்ந்து
நேரெட்டாம் நீடூழி நெடிய காலம்
நியமமுடன் வடிவுகொண்டு மூசற் றாவி
பேரெட்டாந் தானென்று ஈரா றுகப்
பிறழாதான் கலந்திடுவான் சிவயோ கம்மே.

(51) யோகமெனும் படிக்குவடு இடவாட் குய்யம்
ஈரைந்து ஓராறு எண்ணைந் தெட்டு
போகமதி யாறுறு ஆறு பத்துப்
பொங்கிவளர் ஆயிரத்தெட் டிதழாம் விட்டம்
சோகமா சூத்திரஞ்சேர் சுவானு பூதி
சுத்தவருட் சைதன்ய சோதி நாதம்
பாகமுடன் கண்டுபரம் பொருளாய் நின்று
பதிந்திடுதல் பூரணந்தோற் றுறவி மெய்யே.

## இல்லறவியல்பு

(52) துறவுபுக்கித் துரிதமுடன் தூது வைத்துத்
தோகையரைப் புல்லுதற்காய்த் தூளி தங்கள்
பரப்பியந்திர மேலிட்டுத் தபசி யைப்போல்
பாசாங்கு செய்துபக்கம் பார்த்து நின்று
புறங்காட்டிப் பூவையரைப் புல்வோர் பேயர்
பூரணத்தி னியல்பென்ன வென்று கேட்டால்
மறம்பூண்டு வாயில்வந்த படியாய்ப் பேசி
மாந்தர்களை மயக்கிடுவர் முத்திக்கே காரே.

(53) முத்திக்கு வித்தாக முதலாய்த் தோன்றும்
முதலெழுத்து என்னவென்று முடிவு கேட்டால்
சத்தமிட்டுத் சடசடத்து நாயைப் போல
சள்ளென்று மேல்விழுந்து கௌவு வார்கள்
சித்தமதை யடக்காத சிதடி யாகிச்
செகத்தினையே மயக்கிடுவார் இவர்தா மெல்லாம்
கத்திக்கத்தி வாயலுத்துக் காலன் தன்கைப்
பாசத்தால் கட்டுண்டு அறியார் வித்தே.

(54) வித்தென்ற மரமின்ன தென்று காணு
வீணர்களும் காவி கட்டி விருதாவாகப்
புத்தகமாங் காவியங்கள் புராண சாத்திரம்
புதுப்புதுப் பூசைவழி நிவே தனங்கள்
சுத்தமுடன் நியமவகை செப்பி டாமல்
சூதாகப் பிரட்டித்துச் சூட்ச மென்றே
இத்தரையில் மறைத்துவைத்தார் தீட்சை காணுர்.
இல்லறந்தான் இகபரத்தின் மோட்ச வீடே.

(55) வீடென்ற வீடகத்தி னுண்மை காண
விளம்பிடுவேன் வெட்டவெளி யாகத் தானே
ஆடென்ற அரனவருஞ் சடாபா ரத்தில்
அம்பிகையைச் சுமந்தவகை யறிந்து கொள்வீர்
நாடென்ற பிரமாவும் நாவிற் பெண்ணை
நயந்துவைத்தும் நானிலத்தில் நயமுற் றெய்தார்
சேடனென்ற விட்ணுவுந்தன் னெஞ்சிற் றுனே
சித்தமுடன் ஓர்மாதை வைத்திட் டாரே.

(56) வைத்தவகை யறியாமல் வாது பேசி
வேதாந்த சித்தாந்த முனைதான் காணுப்
பித்தர்களே பேசிடுவேன் பெருமை கேளீர்
பேய்போல திரியாதீர் பிதற்றல் வேண்டாம்
உத்தமியாள் தன்னுடனே புணரும் போது
உன்னுடைய இந்திரியம் விட்டேங் காதே
பத்தினியாள் இச்சைகாமம் பருகத் தாக்கி
மதனமிட்டுக் கொண்டிடுவாய் பாழ்போ காதே.

(57) போகத்தில் இந்திரியம் பொங்கா துய்யப்
புத்தியுடன் புகன்றிடுவேன் அறிந்து கொள்வீர்
பாகமுடன் பரிஎன்ற வாசி பூட்டிப்
பக்குவமாய் ஓம்சிவய வசி என்றே
ஏகமனம் பேசாது நூறு செப்பி
எகராமல் கும்பித்துப் புணர்வா யானல்
தாகமுறும் மாமயில் ஆசை நீங்கும்
தங்கிவிடும் உன்விந்திந்த விதமு மாமே.

(58) இந்தவித முலகோருக் கியல்பைக் காட்ட
எடுத்தணைந்தார் மூவர்களும் பெண்ணைத் தானே
விந்து நிலையாத மூட மாந்தர்
விபரிதமாய் வீண்பேச்சுப் பேசிக் கெட்டார்
அந்தரங்க மர்மமிதை யறியா மற்ருன்
ஆருலகில் அரிவையரை ஆகா தென்ருர்
சிந்தையினை அடக்குதற்கு அம்–உம்–நம் மென்
திருகண்ணை மூடினுத உலையா தோங்கும்.

(59) உலையாத முத்திக்கு வித்தே தென்ருல்
ஓதரிய சிவன்சத்தி முதலே யாச்சு
அலையாத அரிக்குமுதல் அமைந்த அட்சரம்
அரனு மைதான் ஆதிக்க மாகும்
நிலையாக அகாரமது பூமி யாச்சு
நிலவரமாய்ப் பதினெட்டு எழுத்துக் கெல்லாம்
கலையாது கலந்துபரப் பிரம மாகிக்
கனிந்துவரும் பேரொளியாய் இயங்கும் விந்தே.

## விந்து நிலை

(60) விந்துநிலை விமலையவள் பீடம் உச்சி
வெட்டாத சக்கரம்தான் கோசம் கோசம்
அந்தமுடன் இறைக்காத சலமே நாதம்
அன்புடனே பேசாத மந்திரம் சேர்க்கை
சுந்தரமாய் எட்டாத புட்பம் வாசி
சுகமுடனே கட்டாத லிங்கம் சுக்கிலம்
பந்தமறும் பரமனைய ஆன்ம சோதி
பகர்குருவப் பூசையுற்ரு னுவங்கள் போமே.

(61) ஆனுடனே பெண்ணதுவும் அணைந்தா லல்லோ
அகாரவெளி திறந்துகுண்டல் அச்சம் நீங்கும்
ஊனுறக்கம் இல்லாத ஊமை சங்கு
உற்றமையம் இருவிந்திரு கண்சேர் நாசி
பூணுமடித் தட்டவழல் புத்தேன் தாரை
பூரிக்கும் படிகமலத் தம்பம் மேரு
சாணுமது எட்டாகச் சாக்கிரங் குய்யம்
சத்துசித்தாய் நிறைந்துசட மாயை யாச்சே.

(62) மாயைநிறை பேரின்பம் மங்கை தன்ருல்
மாயாமல் இருப்பதற்கே யாண்பெண் ணுகச்
சாயைகொண்டு அமைத்திட்டார் ஐயன் தானும்
சடம்விட்டுப் போவதற்காய்ப் படைக்க வில்லை
வாயைமூடி வலுவாக வாசி பூட்டி
வண்மையுற ஓம் வங்–யங்–சிங் கென்ருேத
பூயைஎன்ற இடந்தோன்றும் பொருள்நின் ருடும்
பிறப்பிறப்பற் றிடம்பிங்க விடாட்ட வாரே.

(63) ஆட்டமென்ற அடக்கமது அறிய வேண்டும்
அப்பவல்லோ அண்டரண்ட மனுவாய்க் காணும்
பூட்டென்ற பூட்டதனைத் திறப்ப தற்குப்
புத்தியுடன் வாசியைமுன் பழக வேண்டும்
நாட்டமுடன் மதியேற்றி ரவியிற் றள்ளி
நயமுடனே ஓம்–நம்–உம்– அம்மென் றேதான்
வாட்டமறச் செபித்திடவே வலுவ தாச்சு
வாரணனுர் தரிசனமுந் தருவார் கண்டே.

(64) கண்டங்கே மயங்காமல் கரத்தைக் கூப்பிப்
கணேசாஓம் காருண்யா காப்பா யென்று
தெண்டனிட்டே தான் பணிந்து திங்க ளேற்றி
ஓம்ஐயுங் கிலிசவ்வும் இம்நம் னாசா
உண்டுண்டு ரீரீரீ உம்அம் என்று
ஓர்மனதாய்ச் செபித்துவர முருக வேலன்
அண்டிமயி லேறிவந்து அன்பாய் நிற்பன்
அருள்தாவென் றடிபணிந்து மயக்கம் தீரே.

(65) தீரமுடன் ஓம்-லம்-சிம் சிவய வென்றே
தீவிரமாய்ப் போற்றிடவே உமையோ டம்மை
ஆரவார ஆகுவின்பேரி லமர்ந்து முன்பாய்
அண்டமது கிடுகிடென் வருவா ரப்போ
தீரமுடன் வாசிதனை யிழுத்து ஓதி
வேண்டிடுவாய் அநேகவரம் விசனம் தீர்த்துப்
பாரமுறப் பாய்ச்சலது பாயுங் காலை
பவ்வென்று பணிந்துபக் குவமாய் நில்லே.

## யோகபானம்

(66) பக்குவமாய்ப் பழகிவரப் பானஞ் சொல்வேன்
பருத்திவிதை பாகைவித்து மாவின் பட்டை
மிக்கதொரு மிளகரணை பேய்க்கு மிஞ்சா
இணையில்லாச் சிறுதுத்தி நிலையா வாரை
தக்கபடி இவைகளையோர் நிறையாகக் கொண்டு
நசுக்கிச்சா றெடுத்துஅன லேற்றிக் காய்ச்சிச்
சக்கரைதா னிட்டுக் காலை மாலை
சாப்பிட்டா லுட்டிணமாறி நன்றா னீங்கும்.

(67) நீங்காமல் இருந்திப்பார் நிலைதான் தோணும்
நிரஞ்சனமாய்ச் சிதாகாய வடிவே வட்டம்
பாங்காகப் பருதிமதி பாய்ந்தோ டாது
பம்பரம்போல் சுழன்று உடற்குள்ளே நிற்கும்
மாங்காயின் பாலூறல் உண்டு மைந்தா
மலைமீதி லேறிமனம் மயங்கி டாமல்
தூங்காமல் தூங்கிச்சுழி முனையை நாடித்
தூபமெனும் பெருவெளியைக் கண்டு தேரே.

(68) தேரேதூய வட்டமொன்று மேலே நிற்கும்
திறந்துமடை பொழிவதுபோல் அமுதம் பொங்கும்.
பாரேஉன் மனத்தாலே உன்னு லுன்னைப்
பற்றும லுணர்ந்து பாலை உண்ணு
ஈரேழு உலகமெல்லாம் எதிரே காட்டும்
இன்பங்கள் என் னென்று சொல்வேனங்கு
சீரேதான் மெத்தவுண்டு சிறந்து ஓங்கும்
சிதறுமல் ஞானவீ டடைய லாமே.

(69) அடைவாகப் பருவதம்போல் வளர்ந்தா டாடும்
அண்டபிண்ட சிருட்டிவிதி தானுய்த் தோன்றும்
கடைதிறந்து பொக்கிசமாய்ப் போத மாகும்
கலைமகளும் நாமணக்கு மமுத மீவாள்
நடையுறுந்தங் காயமது தகர்ந்தி டாது
தத்துவங்கள் தான்கெட்டுத் தாழா தப்பா
மடைபெருகு நவரத்தின கசித காந்தி
மயிர்ப்பாலம் நெருப்பாறு இமைக்குள் ளாமே.

(70) ஆமையது வடிவம் போல் வட்டம் காணும்
அந்தரத்தி லுன்மனத்தைத் திருத்தி நாட்டுத்
தீமையது நீங்கிடவே தீக்கொண் டுதித்
திங்களினைச் சிரமீதி லேத்திப் பூட்டு
ஊமைஎன்ற இடமுச்சி யெழுத்தே கொம்பு
உண்மைவெளி யாகும்பரி வாசி கொண்டு
சீமைமிகச் சிறந்திடவே இழுத்துத் தாக்கு
சிவம்சத்தி உருக்காணும் வசமாம் வாசி.

(71) வாசியென்ற புரவியது சுழிதான் மட்டம்
வாலையவள் பதினறு வயதே யாகும்
ஊசிமுனைத் துவாரமது உயர உண்டு
ஒழுகிவரும் அமுதமது உண்பாய் மைந்தா
சூசியென்ற படர்மாயை சொல்லா தோடும்
சுந்தரியாள் நடனமிட்டு உன்னைச் சூழ்வாள்
நாசிவழி எகிராது நாட்டங் கொண்டு
நாதாந்தப் பெருவழியாம் நடனம் காரே.

(72) காரிமனங் கலந்தவிடங் கடிவா ளந்தான்
கண்ணேறு காந்தரசம் கனிவாம் பாந்தள்
மாரிவரும் வாசிதனை மடக்கி யொன்றாய்
மருவாமல் சமரசமாய் ஓடத் தாக்கு
வாரிகொண்டு வலுவாக உடல்தான் நிற்கும்
வருகும்வழி போகும்வழி நன்றாய்த் தோணும்
சூரியரும் சந்திரரும் பிறழா தெய்தால்
சொல்லரிய பூரணந்தான் நிலைமை யாச்சே.

(73) ஆச்சென்ற அனல்தாவும் அடிமே லாக
அறிவுகொண்டு உன்மனத்தா லுன்னை லுன்னைப்
பாய்ச்சலறக் கனமதுர மிறக்கி யுண்ணு
பருந்தொண்டை ருசி காணும் கனமாகத்தான்
கூச்சமின்றித் தொண்டைதனி லினிப்புண் டானால்
குறையாது வயதுமிக வளர்ந்து ஓங்கும்
பேச்சில்லை மனமதுவும் பிறண்டி டாது
பெண்மாயைக் கொட்டமெல்லாம் அடங்கிப்
போமே.

(74) போச்சென்ற பொய்மாயை புறத்தே நிற்கும்
பூமணமே வீசிவருந் திரேகங் காந்தி
பாய்ச்சலது பாயாது பரத்தி னூடே
பக்குவமாய்ப் பகபத்தி மின்னல் காட்டும்
ஓய்ச்சலின்றி ஓம் என்றே எப்போ துந்தான்
உணர்ந்துணர்ந்து மறவாமல் மனத்தாற் செப்பு
பேச்சு விடந் தோன்றும்பே ரின்பமெய்ப்பால்
பொங்வழிந் தருட்குருவின் அருளுண்டாமே.

(75) ஆமேகேள் லக்கினமும் மகர மாகி
அவ்வீட்டுக் குடையவனும் குருவோ டெய்தி
தாமே மிக்கேதுமிக எவரோ டேனும்
தயவாக ஐந்தாறு பன்னொன் றூற்றுப்
பூமேவு புந்தியொரு கிரக தோடே
பொருத்த முடனெங்கேனும் இருக்கில் பார்க்கில்
பாமேவு ஞானமணிச் சித்த னாகிப்
பரமனையே பணிந்துலகில் வசிப்பான் கேளே.

(76) கேளேநன் மதியவனும் மேடத் தெய்தக்
கெடுதியிலா அமுதப்பால் பெருக்க முண்டு
நாளேதுங் குறையாது நாதாந் தத்தின்
நாட்டமிகக் கண்டிடுவன் இவ்வா றுகச்
சூளேநற் கிரகங்கள் சூழ்ந்து நின்றால்
சொல்லரிய பேரின்ப நிட்டை யோகன்
கோளேது மில்லாத குணவான் ஞானி
குவலயத்தி லிவனுமொரு குருவாம் பாரே.

(77) பாரிலுயர் இருபரிநற் பரம நாதன்
பதமினிய சோதிஒளி சூட்சம் கண்டு
விரியமாய்ச் செயபேரி முழக்கத் தூடே
விதவிதமாய்ச் சித்தாடி வினைகள் தீர்த்துப்
பேரினிய ஆத்துமத்தின் நிலைகண் டோங்கிப்
பிரபலமாய்ப் பேரின்ப நிட்டை கூடிச்
சீரிவருங் கூற்றுவனைச் செயங்கொண் டோங்கிச்
சிறந்தவுயிர் அழியாது வாழ்வான் மெய்யே.

(78) மெய்யோடு மதிமுடவன் கலந்தா னாயின்
மேதினியி லாயுள்மிக வோங்கி நிற்பான்
பொய்யில்லை பூவுலகில் ஆயுள் ஓங்கப்
பூரணமாய் யோகத்தில் நிட்டை கொள்வான்
அய்யமின்றி இல்லறத்தி லிருந்தே சித்து
அறிந்துமனக் களிப்பாலே அசடு நீக்கி
நொய்வினறிப் பிறப்பிறப் பந்தை நீத்து
நீனிலத்தில் ஞானசித்த னாகி வாழ்வான்.

(79) வாழ்வுடைய மன்னன்ன வணங்கிப் போற்றி
வகுத்துரிய உடலாவி நீங்கா வண்ணம்
தாழ்மையறத் திங்களினைத் தடத்தே கண்டு
தாயினிய பார்வதியின் வரந்தான் பெற்று
ஆழ்மையுறும் மறலியினை யடித்து ஓட்டி
அணைந்துவரும் வாசியினை வசமாய்க் கொண்டு
ஊழ்வினைகள் அகற்றி இந்த உலகிற் றானே
உலாவிடுவன் குணங்கள் கொண்டுமகரத் தோனே.

(80) மகரமென்ற லக்கினத்திற் கோன்பா னில்லில்
மதியவனுந் தனித்துரிய யோக ஞகி
தகமை யுறக்குருவோ டைந்திற் கோளும்
தாழ்மையின்றி மேடத்தோன் கூடி நின்ருல்
அகமினிய அட்டாங்க யோக ஞானி
ஆருலகி லரன்றனையே யறிவான் சித்தன்
இகமகிழ இவன்வயது செப்பொண் ணுது
இறப்பினெடு பிறப்பற்ற வுயிர்தான் காணே.

(81) காணவே கனகமணி கமல வாசல்
கலந்தேறி நாளுக்கு நாளா யோங்கிப்
பூணவே பூதமுதல் ஆதவன் திங்கள்
பொருந்திடவே பூவுலகில் நெறியாய் நின்று
நாணவே நாவிரண்டு நாலாய் நாட்டி
நாதாந்த மேல்வீடு நதிதான் புக்கித்
தோணவே தத்துவங்கள் தொண்ணூற் ருறின்
தொல்லைவினை யகற்றிடுவன் ராச யோகி.

## உலகமாற்றம்

(82) யோகிபர மானந்த கலியின் தோற்றம்
உண்மைநிற சாதிமத பேதம் மெத்த
பாகிதமாய்ப் பிரபலங்கள் பெண்பால் விருத்திப்
பாருலகில் ஆண்மக்கள் குறைவுண் டாகும்
மோகித்தே முன்பின்னும் முறைமை கெட்ட
மூதரிய தாயினையே சேய்தான் சேர்ந்து
போகிதமாய் மதனையது பயில்வார் பங்கில்
பூவுலகிற் கலியினுட பான்மை கேளே.

(83) கேளே நன்மனுக்கள் நூற்றுக் கொன்று
கெடியாகப் பிறத்திருத்தல் அரிதே யாகும்
நாளேமுன் கலியவனும் வளர்ந்து ஓங்க
நருங்கிடுவர் மனிதர்களும் உயரங் கட்டை
வாளேமுன்பின்வயது ஆண்டு நூறு
வயங்கிடுவேன் கலியுதிக்கு மிடத்தைத் தென்பாய்
சூளேமெய்ச் சும்பலப்பட்டன் வைணவ தத்தன்
கொல்லைபுன்னை மரத்தின்கீழ்க் கலிசெ னிப்பே.

(84) கலியான ஆண்டு ஐயா யிரம்பின்
கருத்துடனே சாதிமத பேதம் ஒன்று
நலியாது சந்திரகலை ஐயாயிரம் மட்
டானதப்பால் ரவியோட்ட மதிக மாகிப்
பொலிவாகப் பூலோகந் திரண்டே நிற்கும்
பொய்யான அந்தணரின் கொட்டம் போகும்
வலியுடனே சத்தியத்தான் நிலையே யோங்கி
வழுவாது மனுக்கள் ஞானி யாமே.

(85) ஆமந்தக் காரணமென் ருசான் சொன்னார்
அதுகண்டு யானுரைத்தே னவனி தன்னில்
தாமதங்க ளில்லாது மாந்தர்க் கெல்லாம்
தனியோகத் தாற்பரனு ரருள்தா னுண்டு
காமமென்ற சடுந்தீயுங் கலக்கம் போகும்
கனமாகப் புலிபசுவுங் கலந்தே யுண்ணும்
நேமமுடன் நிருவிகற்ப சமாதி கொண்டு
நெடிதாக வாழ்ந்திடுவன் உலகிற் ருனே.

(86) தானதரும தத்துவயோகம் அதிகம் ஆகும்
தாரணியில் மாந்தர்பல வருண மாவர்
ஈனமின்றி யேகசக்கி ராதி பத்தியம்
இனமுடனே ஆண்டெண் பத்தீ ராயிரம்
மோனமுடன் இருந்தாண்டு வசிப்பார் நாடு
முகமினிய நவரத்தின விளைவுண் டாகும்
போனகமாய்க் குளிகையிட்டுப் பறப்பார் விண்ணில்
பூரணமாய் ஆயுளுற்று வாழ்கு வாரே.

(87) வாரென்ன காலம்ஐ யாயி ரத்து
வயங்குநாற் பத்திரண் டாண்டுக் கும்மேல்
தாரென்ற செய்தியெல்லாந் தவரு தெய்தித்
தலமிசையில் தன்னுயிர்போல் மற்ற வெல்லாம்
பேரென்னச் சிறந்தோங்கிச் செல்வ ராகிச்
சிவனுரைத் தரிசித்தே ஆயு ளுற்றுக்
காரென்ற நிழல்கண்டு கைலை யோனைக்
கருத்துடனே பூசித்துக் காண்பார் நன்றே.

(88) நன்றான அந்தணர்முன் கட்டி வைத்த
நயமில்லா வேதத்தின் புரட்டுக் காதை
குன்றாமல் வெளிவந்து மறையோர் செய்த
கொடியபெரும் புழுகனைத்தும் ஒழிந்து போகும்
மன்றுளர் என்றமறை யோர்கள் பட்டம்
மாநிலத்தில் தலையெடுத்து நீடிக் காது
அன்றாக அவர்குலந்தா னழிந்து போகும்
அறிவான சாம்புவந்தர் குலமுண் டாமே'

(89) ஆமேயக் குலத்தாருக் கடையா ளங்கேள்
அண்டரண்டந் தனையழைக்க வல்லோ ராவர்
பூமேடை யெய்தித்தவ யோகம் செய்வர்
பூரணமாய் மாமதுரம் உண்டே நிற்பர்
தாமேகை இடத்தக்கினி சலந்தான் பொங்குந்
தட்டாம லம்பரத்தி லேறி நிற்பர்
கோமேத கத்தொளிபோல் தேகம் மின்னும்
குவலயத்தில் இவர்கள்குரு குலத்தன ராமே.

(90) குலத்தாரேவந்தவிதம் ஏதென் றாலோ
குணமாகப் பிரமாவின் வலப்பா கத்தில்
நலமாகச் சாம்புவசிட் டர்செ னித்தார்
வசிட்டரு மரக்கர்குல வேந்த னாகித்
தலமறியப் பிரமாவை இகழ்ந்தே பாவி
தாக்கிச்சில புராணக்கோள் புரட்டே செய்து
கலகமிட்டுக் காமத்தீ யத்னில் வீழ்ந்து
கனமாக மறையோனெனப் பட்டம் பெற்றான்.

(91) மறைவான குலம்விளங்கப் பேதம் காட்டி
மாய்க்கையுற்று மூவுலகை மயக்கிப் போட்டான்
நிறைந்துவந்த சாம்புவந்தர் மறைந்து நின்றார்
நியதியுற்ற பிரமாவுஞ் சாந்தத் தெய்தி
குறைவின்றித் தான்வசித்துக் குணமா கப்பின்
கொடுத்தாரே சாபமது குறைகள் போக
அறையவே ஐயாயிரத்து நாற்ப தப்பால்
அகடுகொண்ட மறையோரின் குலம்பா ழென்றார்.

(92) ஆர்ப்பரித்து அப்போது அகன்று நின்ற
அறிவுடைய சாம்புவந்தர் என்ற சாது
சீர்பெரிய கைலேயினை நோக்கிச் சாரல்
சிதருமல் தவம்செய்து அரன்தன் ருலே
கார்நிறைந்த கமலாச்சி என்ற மாதைக்
கருத்துடனே மணம்புரிந்து தவமே யுன்னி
நேர்விளங்கய் யாயிரத்து நாற்ப தப்பால்
நெறியுடனே வளர்ந்தோங்க வரமே பெற்ருர்.

(93) வரமினிய அரனேடு பிரமா வுந்தான்
வாக்களித்தா ரந்நாளில் நிலேமேற் கொண்டு
தரமினிய தராதலங்க ளெல்லா மொன்ருய்த்
தாழாமல் சாதிமத பேதம் நீத்துப்
பரமினிய பரம்பொருளைப் பகர வேண்டிப்
பாரில்சாம் புவந்தகுலம் தழைத்து ஓங்கத்
திரமினிய வரமீந்தார் ஆத லாலே
திட்டமில்லா வந்தணர்கள் பாழென் ருரே.

(94) பாழாக அக்காலம் உலகம் தன்னில்
பதம்பெரிய அந்தணர்கள் பேத மாகித்
தாழாத மனிதரிடம் தாழ்ந்து நின்று
தகைமையிலா ஊன்பொருளை யுணவாய்க்கொண்டு
வாழாது வாழபெருஞ் சாதுக் கள்தான்
வையகத்தில் வாதாடி மறையோர் தம்மை
கீழாகத் தள்ளிடுவார் கீதம் பேசிக்
கொடியதொரு வறுமையால் பிடிப் பாரே.

(95) பிடிதமாய்ப் பெரியதொரு மதுபா னங்கள்
பிரமகுலத் தோர்களுண்டு பிறழ்ந்தே நிற்பர்
கூடியதோர் தங்களினப் பெண்க ளைத்தான்
குணமாக வேற்றுவர்க்கே கூட்டிச் சேர்ப்பர்
சாடிநிறை கள்ளுகஞ்சா சமர்த்தாய்த் தேக்கிச்
சாத்திரங்கள் தனைமறந்து சடரு பேசித்
தேடிநீச மாதர்களைப் புணர்ந்து பிள்ளை
திடமாகப் பெற்றுப்பல தொழிலுஞ் செய்வார்.

---

(93) சாம்புவந்தர் – சாம்பவர், சாம்பார் என வழங்கும் "சாம்பவர் வடகரை" என்ற ஊர்ப் பெயரும் காண்க.

(95) சடரு - சடத்தம், இடக்கர்.

(96) செய்தொழிலு மவர்குலத்தில் அதிகம் உண்டு
சிதருமல் சிறுபெண்கள் முண்டை யாவார்
நொய்வின்றி யன்னியர்தம் குலத்தி லெய்தி
நுட்பமுடன் பிள்ளைகளை யழிப்பார் சூதாய்
அய்யய்யோ அந்தணரின் குலத்தோர் தம்மால்
அனியாயம் மெத்தவுண்டு அவர்கட் கெல்லாம்
உய்வாக மடமையொடு நாணங் கிட்டா
உலகத்தி லிவ்விதமாய் நடக்குங் காலே.

(97) நடந்திவ்விதம் தவருமல் விளங்கும் போது
நன்மையிலாப் பிரமகுலம் பாழென் றேனே
தடம்பெரிய தாரணியிற் கலகம் மெத்த
தட்டாமல் நடந்தேறி நரர்க ளெல்லாம்
இடம்விட்டு இடமேகிப் போரால் மாள்வார்
இயம்பொணுப் பெரும்பஞ்ச மிடருண் டாகும்
திடமிகுத்த தேவபிரம ஆல யங்கள்
தினபூசை குறைந்துஅருள் இன்றிப் போமே.

(98) இன்றியமை யாததொரு இழிகு லத்தோர்
எனவுரைத்த பறையர்களும் பாக்கியம் பெற்று
நன்றெனவே வையகத்தில் நாளும் ஓங்க
நவிலொணுப் புகழுடனே வாழப் போகும்
குன்ருதோர் முட்டையினி லிரண்டு குஞ்சு
செனித்துவிடும் மிருகங்கள் விநோதம் காட்டும்
அன்ருகும் காலம்அந் தணர்கட் காகா
அறிகுறியாம் இவையெல்லாம் சின்ன மாமே.

(99) சின்னமிக வாகிடுமே செகம்பி றழ்ந்து
சீறியதோர் நாகம்போல் மாந்த ரெல்லாம்
பின்னமுற்றுப் பேதமையால் மயக்கம் கொள்வார்
பிரபலமாம் அரசர்கட்கும் ஆனி மெத்த
இன்னிலத்தில் எங்கெங்கும் சங்கம் கோட்டி
இதமுடனே நிலைநாட்டி யீசன் தன்னை
நன்னயமாய் வழிபடுவர் நாட்டி லெங்கும்
நற்சமய வாசிகளும் அனேகம் உண்டே.

(100) உண்டான விதம்என்றன் குருவெ னக்கு
உணர்ந்திடவே ஓதிவைத்தா ருலகிற்
சொன்னேன்
சண்டாள அந்தணரின் சவித்தா ரம்போம்
சார்வாகப் பதினெண்பேர் சித்தொன் றெய்தத்
தெண்டிரையில் வியாபித்துத் திடமாய் எய்தித்
திகழொளி போலுலகம் திரட்டிச் சேர்த்து
மண்டலத்தில் மாய்கையறச் சத்தியம் நாட்டி
மன்னனென ஒருவருல காள்வார் முற்றே.

(101) முற்றிலுந்தாள் அறியவென்ருல் மூச்சை மைந்தா
முறைமையுடன் பழகிமுனை நிற்க வேண்டும்.
நற்றவமே செய்யநா ரணியாள் சொன்ன
நயம்பெரிய மந்திரத்தை நாவா ரத்தான்
குற்றமறக் கூறிடுவேன் குவல யத்தில்
கொள்கைதனை யறிவார்க்கே கூற்ற னில்லை
உற்றவிடம் ஒளிதோன்றும் உண்மை யுண்மை
தினகரனின் காயத்திரி செபம்நீ செய்யே.

(102) செய்திடுவாய் அதிகாலை தினம் எழுந்து
சிறப்புடனே அங்கதந்த சுத்தி யாக்கி
வெய்யவனின் முன்பாக நின்று கொண்டு
விசனமற இருகையைச் சிரமேற் கூப்பி
நொய்விழியும் இருவிழியும் ஏறப் பார்த்து
நிறைந்தசலம் தன்னில்நின்று தியானம் ஓத
உய்யவழி ஓதிடுவேன் உணர்வீர் மக்காள்
உலைந்தமனம் ஒடுங்கிவரும் நாட்கு நாளே.

(103) நாளே ஓம் பாஸ்கரா ய வித்மகே
நலம்பெரிய திவாக ராய தீமகி
சூளே தன்னே சூரியபிரசோதை யாத்
சுகமாகஇம் மந்திரத்தைச் செப்பிச் செப்பிக்
கோளேது மில்லாது கும்பித் தேறிக்
குணமாகத் தியானம்நீ செய்த பின்பு
கேளேமுக் காலுமிடக் கையில் நீரை
ஏந்தி யாசமனீயம் செய்வா யப்பா

## சூரிய காயத்திரி

ஓம் பாஸ்க ராய வுத்மகே
திவாக ராய தீ மகி
ஓ சூரிய பிரசோதை யாத்

(104) அப்பப்பா அதுமுடிந்த பின்பாய்க் கேளு
ஆயிபரா பரியினுட பூசை பூசை
செப்பமுடன் செய்திடுவாய் சிணுங்கி டாமல்
சிவகாமி வாலைபரா பரியாம் ஆத்தாள்
ஒப்பரிய தேவித்தாய் மந்திரம் யெந்திரம்
உரைத்திடுவேன் ஓம்-அம்-நம்-லம் லிங்கு
கப்பிவளர் கங்,டங்,றங்,சிங்,லங் லாலி
கம்,கம் ரிம், கிலீம் சுவாகா.

(105) சொவர்க்காதி லோகமெல்லாம் சத்தி சத்தி
சென்றேதி யடையவேணும் ஞான முத்தி
தவக்கியாதிக் கேற்றதற்குத் தாயே யாதி
தந்திரத்தால் தனிமதுரம் இறக்கி யுண்டு
பவமறவே சக்கரத்தை வரைந்துள் ளட்சரம்
பதித்துவாசி தனையேத்திப் பண்பாய் நீயும்
கவனமுடன் ஆதனமேல் வடக்கா யெய்தி
கருத்தகன்று போகாமல் துதித்துப் போற்றே.

(106) போற்றிடுவாய் தூளிதங்கள் தட்டத் திட்டுப்
பொருத்தமுடன் மந்திரயெந்திரம் வரைந்து நாட்டிச்
சாற்றித்தினந் தூபதீப மிட்டுத் தாயைச்
சாதகமாய் நாளொன்றுக் கெண்ணூ ருரு
ஏற்றி மாதமைந்து செய்து வாழ்த்த
எகிரிடாது வாசிநிலை நிற்கும் நிற்கும்
நாற்றிசையும் நடுங்கிடவே உதய மாகி
நடுக்கமின்றி வரல்கேட்டுப் பரித்தே ரேறே.

## அம்பாள் மந்திரம்

ஓம், அம், உம், நம், லம், லிங், கங், டங், றங், சிங், வங், வா, லீ, கம், கம், ரீம், கிலீம், சுவாகா.



(107) ஏறிநின்று இமயமுடன் நியமம் செய்து
என்மகனே பூரகத்தி லிருந்து ஊது
வாரிகொண்டு வாதசித்தி யோகஞ் சித்தி
வாசிகொண்டு பூரணத்தின் ஞான போதம்
கூறிடுவேன் ரேசபூர கும்ப மார்க்கம்
குறிப்பறிந்து கொள்வீர்கள் மக்காள் மக்காள்
நாரியென்ற மங்கையர்கட் குள்ளே சூட்சம்
நாட்டிடுவேன் மாதாந்த வரிசை கேளே.

(108) கொள்ளுதற்காய்ப் பெண்மாயை கற்ப மாச்சு
குவலயத்தில் தூமையுண்டோர் நாதா வானூர்
தள்ளாமல் மும்மூர்த்தி பெண்ணை யேந்தித்
தந்திரமாய் மாதர்மாதக் குருதி யுண்டு
விள்ளாது மறைத்ததிலே பேதங் காட்டி
வேதாந்த சித்தாந்த சமர சங்கள்
உள்ளுணர்ந்து பார்ப்பதற்காய் உகாரஞ் சத்தி
ஓதரிய அகாரமது சிவம தாச்சே.

(109) ஆச்சரியம் மகாரமது மவுன தீட்சை
ஆனதினல் மகாரம்மேல் சந்திரனின் விந்தே
தாழ்ச்சியின்றிக் கடவுணிறை கடப்பா யுன்னுள்
தந்திரமாய் ஞானத்தை யடைய வேண்டிக்
காட்சியுடன் அம்–உம்-நம் தாக்க லாச்சு
அம்ரேசம் உம்பூரம் நம்மே கும்பம்
சாட்சியமாய்ப் பிரணவமும் பேச லாகிச்
சங்கையற ஞானஒளி நிலைக்கும் பாரே.

(110) பாரறியப் பதினெண்பேர் சித்த ரெல்லாம்
பக்குவமாய் மாதர்பத்து மாதக் கெர்ப்பம்
சீரறிய மதனையது குடத்து நீரைச்
சிதருமல் எடுத்துஊசி முனையின் சொட்டாய்க்
கூரறிய உண்டுபத் தியமே காத்துக்
குணம்பிரிய மாதர்மா தாந்தம் விட்டார்
பேரறிய அம்உம்நம் பெருமை யோகம்
பேணிவரக் காயகற்பம் நிலைத்துப் போமே.

(111) போமந்த மாதர்கருக் குடத்து நீரைப்
பூதலத்தோர் அறியாமல் பேரை மாற்றி
நேமகானக் குறத்திப்பால் சிமிட்டுப் பாலாம்
நிறைசூத நாதவிந்து வச்சிரப்பால் முலைப்பா லாகும்
தாமதங்க ளில்லாது இதுதன் னூலே
தாக்கிப்பார் சரக்கெல்லாம் மாண்டே போகும்
ஏமகாம வாமப்பால் இதுதா னப்பா
ஏகாந்த நிட்டையிலே இருந்து தேரே.

(112) தேருதற்கு வெகுசுளுவு தெளிந்து காணத்
திடம்வேண்டும் சிமிட்டுப்பா லுண்ண வேண்டும்
கூருடைய வைராக்கியம் வேண்டும் வேண்டும்
குணமாய் அம்.உம்.நம் மூன்றில் நாட்டம் வேண்டும்
பேருரிய செகசோதி ஒளியின் மின்னல்
பேசுதற்கு ஆச்சரியம் பெருமை மெத்த
சீருடைய ஞானசித்தன் நீயே யாவாய்
செகமழிந் தாலுமுனக் கழிவே யில்லை.

(113) இல்லையென் றுதுபோகர் கற்பசூத்திரம்
இயல்புடைய பதினெட்டில் தெளியச் சொன்னார்
தொல்லையற இல்லறமாம் மர்ம ஞானம்
செப்பிவைத்தார் ஐம்பதுக்குள் போக நாதர்
அல்லலற அறிந்திட்டால் ஞான சித்தி
ஆடலாம் நீடுழி காலம் மட்டே
சொல்லரிய தெரிசனமும் வாய்க்கும் முத்தி
சுகமுடனே அம்உம்நம் என்று ஓதே.

(114) ஓதிடுவேன் பேய்பில்லிச்சூனி யங்கள்
ஓடுவற்கு மந்திரங்கள் உண்மை யாக
நீதியுடன் ஓம்-உம்-லம்-சிம்-நம்-வம்-வம்-கிலீம்
ரீங்சிரீங் ஹிரீங் ஹரிங்கே
தீதின்றி முக்கோணம் பெரிதாய்க் கீறித்
திட்டமுடன் அ.உ.இ உள்ளே நாட்டிப்
பேதிக்கா வோங்காரம் சுற்றித் தாக்கிப்
பிரபலமாய் செபிக்கச் சூனியங்கள் போமே.




(115) போமேதா னின்னமொன்று புகல்வேன் சூட்சம்
பூரகத்தில் உம்மென்று இழுத்துக் கும்பித்
தாமேதா னதாட்டித்தூ ளிதங்கள் தாக்கத்
தட்டழிந்து போகுமடா பூதப் பேய்கள்
ஓமேதான் உம் மதினல் உலகம் சித்தி
உயர்வாசி கொண்டிழுத்து உம்மென் ரூதி
பூமேவு யோகஞ்சித்தி கெவுன மார்க்கம்
திடம்பெற்று ரிவ்வழியாய்ப் பதினெண் பேரே.

(116) பேரென்ற பூரகத்தின் பிரம கூடம்
பிரபலமாய்த் தோன்றிடும்நீ பிறண்டி டாது
காரென்ற அனல்வீசுங் கலசம் பொங்கும்
கண்டவர்கண் ணெதிரில்முன் மறைந்து போகும்
தாரென்ற மாந்தர்களும் உன்னைக் காணத்
தட்டழிவார் சித்தரைத்தான் காணோம் என்பார்
வாரென்ற வகையுரைத்தேன் உம்மைத் தாக்கி
வாசிகொண்டு இழுத்தடக்கச் சித்தன்
சொல்வேன்.

(117) சொல்லிடுவேன் மாரணத்தின் சூட்சம் தன்னைச்
சுருக்காகப் பூரணமாய் வாசி கூட்டி
நல்லதொரு உம் நம்மென் றிழுத்த டக்கி
நாட்டிலுன்னை எதிர்த்தோர்க்கே சாபம் ஈந்தால்
தொல்லைமிக வடைந்திடுவார் துலங்க மாட்டார்
துரிதமுடன் வல்லரக்கர் எதிர்நில் லார்கள்
மெல்லியரை உம்–யம்–மென் றுரைத்துச் சேர
மேவியே விந்திறங்கா வசிய மாமே.

(118) மாமேவு அட்டசித்து ஆடு தற்காய்
அறைந்திடுவேன் மூலியொடு செபமும் யந்திரம்
ஆமேதான் நரிமிரட்டிப் பேய்க்குறிஞ்சா வேரும்
தானமாம் பவரணைமின் நாளைக் கண்டு
வாமேபார் வடமுகமா யுள்ள வேரை
அம் உம் றீம் ஸ்ரீம் ஐயுங் கிலியென் ரோதித்
தேமேவு திடமுறவே கொண்டு வந்து
திறமையுடன் தூளிதத்தில் சிகாரம் போடே

(119) போட்டந்தச் சிகாரமேல் வேரை வைத்துப்
பொறுமையுடன் தூபதீப நைவேத் தியமிட்டு
நாட்டமுடன் முன்னுரைத்த மந்தி ரத்தை
நலமாக லெச்சமுரு செவித்து மைந்தா
வாட்டமற அமாவாசை நாளின் பக்கல்
வலக்கையில் வைத்துத் தைப்பாய்
குறிஞ்சா வேரை
தேட்டமுடன் மிரட்டிவேர் இடக்கை தைத்தே
உம்மென்று பூரகஞ்செய் தேகு வாயே.

(120) ஏகிடவே பசிதாகம் இல்லா தாகும்
ஏகாந்தச் சித்தனென்று உலகோ ரெல்லாம்
மோகித்தே வணங்கிடுவார் மூர்த்தி யென்பார்
முறைமையாய் நீசொல்வ தெல்லாஞ் சித்தி
பாகிதமாய் இந்தவிதம் பதினெண் பேரும்
பாருலகில் நடித்துப்பல னடைந்தா ராகும்
யோகியென்ற புத்தியுள்ள பிள்ளை நீயும்
உணர்ந்திட்டால் இவ்வேரால் சூட்சா சூட்சம்.

(121) சூட்சமுற்ற மோடிவித்தை சொல்வேன் கொஞ்சம்
சுகமுடனே சிம்–லம்–உம் என்றே யோதித்
தாட்சியின்றிக் கும்பகத்தில் இழுத்துத் தாக்கித்
தயங்காமம் பூரணமாய் ரவிமதியி லூதக்
காட்சிமிக அடைந்திடுவாய் சுழினைத் தியாம்
கனம்பெரிய மோடிவைத்தோ னெகிரிப் போவான்
தாட்சியுற்று வாசிகொண்டு ஓம்–உம் மென்று
அன்புடனே பூரகத்தில் அறிந்து நில்லே.

(122) அறியவென்றல் வெகுசுருக்கு அல்ல அப்பா
அன்புடனே வாசியைமுன் பழகிப் பின்னர்
துரியநிலை ஏத்தமுட னிறக்கங் கண்டு
தினந்தோறும் தியானமது புரிய வேண்டும்
விரிந்திடாது வாசியைத்தான் வசம தாக்கி
விலகாமல் வச்சிரப்பா லுண்ண வேண்டும்
பரியடங்கும் பாரொடுங்கும் உன்னைக் கண்டால்
பார்வதியுஞ் சிவனும் பக்கல் நிற்பார்.

(123) பார்த்திடவே வாசிவச மாக மக்காள்
பக்குவந்தா னுரைத்திடுவேன் பதனஞ் செய்வீர்
மூர்த்தமுடன் காலையிலே யெழுந்து பின்னர்
தினகரன்முன் னின்றுஇருகண் சிமிட்டா மற்றுன்
ஏர்த்திடவே மதிநால் சிகார இங்கென்
றினிமையுடன் திங்களெட் டனுச ரிக்கப்
பார்க்கவனி னருளதனல் பலனே கோடி
பரியடங்கும் பாவிகட் குரைக்கொ ணாதே.

குறிப்பு:— மதிநால்—நாலுமாதம். ஞாயிற்றின் முன் நின்று நாலுதிங்கள் கண் சிமிட்டாமல் நோக்குக.

சிகாரஇங்—சிங். சிங்கென்று வாசியுடன் உரு வேற்றி 8 மாதம் பயில்க.

(124) ஒண்ணான உச்சிவெளி திறந்து காட்டும்
ஓதரிய பிரமநிட்டை உரைப்பே னிங்கு
மண்ணாழி காலம்மட்டும் வாழு தற்காய்
மனத்திலுன்தன் உருவதனை மகிழ்ந்து காணி
விண்ணான வெளியதுவும் வெளிதான் தோணும்
வீணல்ல பேரின்ப ஆசை பொங்கும்
எண்ணாக மனங்குவிந்து அமுத மூறும்
இடகலையும் பின்கலையும் சுழன்றே நிற்கும்.

(125) நிற்குமந்த வாசியது வலுத்துப் போகும்
நியமமொடு இயமமது நிலைய தாச்சு
சற்குருவே உருவாகி வந்து நிற்பார்
சகலகலை ஞானமது தானாய்த் தோன்றும்
உற்பனமாய் நெருப்பாறு வெய்யோ னாகும்
உயர்ந்தமயிர்ப் பாலமது மதிதான் விந்தே
கற்பனைகள் மெத்தவுண்டு கருத்தி னுள்ளே
கலங்காது உன்னுருவைக் கண்டு தேரே.

(126) தேருதற்காய்த் தினகரனில் தெளிந்த பின்னர்த்
திங்களதைத் திடமுடனே திருத்தி யூதக்
குருவிருக்கும் இடந்தோன்றும் கோணம் கோணம்
கொள்கையுடன் உம் ஏத்திப் பூர கஞ்செய்
ஆரு இதன் மணிவாசல் நந்தி பீடம்
அரூபவெளி அண்டரண்டம் ஒன்றும் சோதி
சீருறவே ஒருருவாய் நேரே நிற்கும்
நெருப்பாறு மயிர்ப்பாலம் இடபின்கலைய தாமே.

(127) மலையாது பூரணமே அறிந்தோ ரானல்
அந்தரத்தில் வாசியது அசையா நிற்கும்
அலையாமல் உண்டவர்கள் கண்டே கொள்வார்
கஞ்சாவுங் கள்ளுமுண்டோர் காணூர் பேயர்
முலையின்பால் உண்டாலல்லோ நிலைக்கும் தேகம்
நிலவரமாய் யோகசித்தி ஞானஞ் சித்தி
தலைகாமப் பாலுண்டோ ரருட்சித்த னுகி
வாழ்ந்திருப்பார் கோடானு கோடி காலம்.

(128) காலமதில் கடியரவின் விடமும் ஏரு
கடுந்தீயின் சூடேரு சலமுங் கொல்லா
ஞாலமதில் சமாதிபெற மண்ணுந் தின்னு
நடுவனவ னுனதருகே வரவே மாட்டான்
வேலனைய கத்திவாள் வெட்டு மேரு
விடந்தலைமேற் கொண்டவனும் விமலி யாத்தாள்
சீலமுடன் ஞானப்பால் தந்து கந்தே
யிரெட்டாம் வயதுமெப்போ திருந்து வாழ்வாய்.

(129) வாய்ப்பேச்சுப் பேசுவதால் பயனே இல்லை
வழுத்திடு வேன்அந்தகர ணத்தின் மார்க்கம்
பேய்த்தனமாய்த் திரியாதீர் பிரியம் வைத்துப்
பிசகாமல் தன்னுடைய கரணந் தன்னில்
ஓய்வறவே சிகாரமதை மனத்தால் நாட்டி
உங்,ரிங்,கங், சிவயவசி ரீம்ஸ்ரீம் கம்
தூய்மையுற ஆண்டிரண்டு செபித்துக் கொண்டு
துன்பமிலா துனதுசிறு நீர ருந்தே.

(130) அருந்திவரப் பத்தியந்தா னன்பாய்க் காத்து
அநுசரிக்க வுனதகத்துள் சொலிப்பே ஓங்கப்
பொருந்திரவில் தூங்குங்கால் சிகாரத் தோடு
புகன்றிட்ட மந்திரத்தைச் செபித்துத் தூங்க
இருநிதியும் பெருகிசோதி இசைந்தே நிற்கும்
இடரின்றிப் பார்த்தவரின் விழித னக்கே
கிருபையுடன் உனதுசடம் பிரிவாய்க் காட்டும்
கேட்டவர்கள் கண்டவர்கள் உணைத்து திப்பார்.

(131) பார்விளங்க இந்தமுறை தவரு தெய்திப்
பக்குவமாய் அநுபவித்த பேர்க்குப் பாரில்
சீர்நிறைந்த சிந்தூர வமுத மூறும்
சிகாரவித்தை யதனாலே செகமும் சித்தி
கார்நிறைந்து கண்டவர்கள் தனக்கு உன்றன்
கரணங்கள் பிரிந்ததுபோல் காட்டச் செய்யும்
தார்நிறைந்த மாந்தர்குரல் கேட்ட போதே
தந்திரமாய்ப் பிரிந்தசடம் பொருந்திக் காட்டும்.

(132) காட்டுவது மற்றவரின் கண்ணுக் கல்லால்
கரணங்கள் பிரிவாகிக் கலப்ப தில்லை
நாட்டுமிந்த கரணயோகம் இதைம றைத்து
வரையாகச் சித்தர்களும் ஓதி வைத்தார்
வாட்டமுறப் போகநாதர் கடைக்காண் டத்தில்
வழுத்திவைத்தார் இம்முறையைச் சூட்ச மாக
சட்டமுனி பிரமமுனி மந்திர காண்டம்
புகன்றிட்டார் மாந்தர்களும் மயங்கத் தானே.

(133) தானென்ற தத்துவங்கள் அடங்கி நிற்கத்
தாக்கிடுவேன் தவருது தரையி னேற்கு
மானென்ற வளர்மதியின் நாளி லப்பா
வங்–ரிங்–சிங் உங்–டங் கங் கென்றேநீயும்
கோனென்ற குருவாரம் மிகுவாம் நாளில்
தூளிதமும் தட்டமதில் நிரப்பி மேலே
வானென்ற வகாரமது வலுவாய்த் தாக்கி
வ.சி.ம.ந. வங்–உம் மென்று வகாரத்தானே.

(134) ஊணியே தூபதீப மிட்டு மைந்தா
உத்தமமாய் வடமுகமே யிருந்து நீயும்
பேணியே முன்னு ரைத்த மந்திரத்தைப்
பிசகாமல் லச்சம்உரு செபிக்கும் போது
கோணிடாக் கையாந்தகரை மிளகுங் கூட்டிக்
கொப்பெனவே உண்டு ஆவின்சுரபி யேற்று
நாணிடாத் துவர் கூட்டி யரிசி பொங்கி
நாளொன்றுக் கொருவேளை உண்ண வேண்டும்.

(135) நன்ருக அநுட்டித்து அப்பியா சிக்க
நாட்டுமந்த மந்திரத்தைப் பூரகமே செய்து
குன்ருமல் சூரியனி லிறக்கித் தாக்கிக்
கொள்கையுட னேமப்பா லுண்ண வேண்டும்
அன்ருகுந் தத்துவங்க ளடங்கிப் போகும்
அம்பர மின்னல்போல் திரேகம் காந்தி
மன்ருக ஏமனிட விகற்பம் நீங்க
மாடகூ டங்கள்தோன்றும் விந்தே சந்திரன்.

வ–சி–ம–ந
வங்–உம்

மந்திரம்: வங்–ரிங்–சிங்–உங்–டங் கங்.

(136) சந்தேகம் அறஇன்னம் சாற்று வேன்கேள்
சாயுச்சியம் பெற்றவர்போல் உலகில் தானே
விந்தையுடன் வேடமுற்றுச் சாது வென்றே
வெகுவாகச் சடைமுடிகா சாயம் பூண்டு
வந்திடுவார் யோகியென்றும் ஞானி யென்றும்
வாய்ப்பேச்சுப் பேசிடுவார் சித்த னென்பார்
இந்தவிதம் வந்தவரைப் பஞ்சாக்கரத்தின்
ஒவ்வோரெழுத் தியல்புசெய்கை பேரும் கேளே.

(137) கேட்பதற்காய் நமசிவய பஞ்சாக் கரப்பேர்
கெடியான நகாரந் திரையக்கரம் திரோபாக்
கரமாகும்
மாட்சியற மகாரம் மாலக்கரமிருளெழுத் தாகும்
மயங்கிடாச் சிகாரம் பதியெழுத்
திரையெழுத்தாம் பேரே
வாட்டமிலா வகாரம்பரையெழுத்து சத்தியக்கரமு மாமே
யகாரமது சீவாக்கரம் தனியெழுத் தாகும்பாரே
நாட்டமுடன் சிகரவகரம் பதியெழுத் தாகும்
நன்றெனஇப் பதியக்கரமொடுங்கச் சீவன் முத்தி.

(138) முத்திபெற மூவகைப்பஞ் சாக்கர முண்டு
முறையுடனே செப்பிடுவேன் மிகுந்து நன்ருய்ப்
பத்தியுடன் தூலபஞ் சாக்கர மென்றும்
பயன்பெரிய காரணபஞ் சாக்கர மாகும்

நத்தியந்த மூவகையி னெவ்வொன் றின்பேர்
நமசிவய தூலபஞ் சாக்கர மாகும்
சித்திநிறை சிவயநம சூக்குமபஞ் சாக்கரம்
சிதரூதோம் வயசி கா ரணபஞ்சாக்கரமாமே.

(139) ஆமேதான் தூலபஞ் சாக்க ரத்தை
அகலாமல் இல்லறத்தோர் செபிக்க முத்தி
நேமேபின் கிரியைமார்க்கம் சூக்குமம் நன்று
நெறியுடனே யோகநிலை காரணபஞ் சாக்கர மாகும்
பூமேவு பதியெழுத்தால் ஞான சித்தி
பொருள்ஞான சோதியது பொருந்த வேண்டில்
தாமே அம்.உம்.நம். மென்றநுட்டித் தேற்றித்
தவருது வாய்ப்பதுன்னை சீவன் முத்தி.

## நமசிவய வென்ற எழுத்துக்களின் பெயர்.

ந—திரையக்கரமென்றும் திரோபாக்கர மென்றும் பெயர்.
ம—மாலக்கரமென்றும் இருளெழுத் தென்றும் பெயர்.
சி—பதியக்கர மென்றும் இறையெழுத் தென்றும் பெயர்.
வ—பரையக்கர மென்றும் சத்தியக்கர மென்றும் பெயர்.
ய—சீவாக்கர மென்றும் தனியெழுத்தென்றும் பெயர்.

யகார.வகாரம். பதியக்கரமாகிய சிகாரத்திலொடுங்கும். இந்தப் பதியக்கர மொடுங்கச் சீவன் முத்தியாகும்.
பஞ்சாக்கரம் மூன்று வகைப்படும்.
தூலம் சூக்குமம் காரணம் என. அவையாவன:—
நமசிவய—தூலம். சிவயநம—சூக்குமம். வயசி—காரணம்.

## வேறு—தனி

(140) ஒடுக்கமாய் நிற்கும் முத்தி சிகாரமே சோதி வட்டம்
ஓதிடும் ஆன்ம சோதி வ-ய-சி மெய்க் காரணம்பார்
அடுத்திடனு பூதி தானும் திடமுறு போத மாகும்
அயர்விலாத் திங்கள் வட்டந் தேய்ந்திடா தோங்கி வாழும்

நடுநிலை திரம தாகில் பரசிவன் அம்மை நாட்டம்
அமுதமு மீந்து மிக்க பாலனு யாக்கு வித்து
முடுகுமுக் கோணந் தன்னில் குறைந்திடா ஞான வீடு
உடலுயிர் நீங்கா தோங்கிக் குவலயம் வாழ
லாமே.

## வேறு

(141) ஆமென்ற இல்லறத்தில் யோக முத்தி
அருள்பெறவே இல்யோகம் செய்யக் கேண்மின்
நேமமென போகநாதர் கற்ப சூத்திரம்
நிகழ்த்தினர் நானினிய விரியச் சொல்வேன்
தாமென்ன மாந்தர்களும் நலமுற் றோங்கத்
தாக்கிடுவேன் சந்திரரேகை இருநூ றுள்ளே
காமென்ற காமப்பால் தன்னால் சூட்சம்
கருத்தெல்லாம் ஓதிடுவேன் உண்மை யாக.

(142) ஆகவே ஓங்–டங்–டிங்– ரிங்– ஆ–உஎ
ஒவென்று அநுட்டித்துப் பூரத் தெய்திப்
பாகமாய் ஓர்மாதைப் பார்த்துக் கூவப்
பட்சமோ டம்மாதுன் பக்கத் தெய்தும்
தாகமுடன் அம்மாதைத் தயங்கி டாது
தக்கதொரு பேய்க்குறிஞ்சா வேரை யுண்டு
மோகமாம் ஆவின்பால் அருந்தி மாதை
முறைமையுடன் செபித்தணைய விந்தி றங்கா.

(143) திரங்கெட்ட மாந்தருக்குச் செப்பொண் ணாது
தெள்ளிதமாய் என்னூலில் விவரம் சொன்னேன்
வரமினிய பசுபதியைத் தவமேற் காண
வழுத்திடுவேன் மந்திரத்தை வாதை தீரப்
பரம்பொருள் ஓம்–அம்–ஆம்–ஊம்–உம்–அம்
ஓம் சிவயநம சிவயவசி யென்
றுரகமிட்டு வாசியுடன் தவமே புகத்
துலக்கமுடன் திங்க ளாறுள் ளரன்முன்னுவர்.

## குருமூலி

(144) ஆகவே வயித்தியமாம் வாதங் கேண்மின்
அறிவுகெட்ட சிதடிகளே யலையா துய்யத்
தாகமெனத் தாக்கிடுவேன் தகர லின்றித்
தட்டழிந்து போகாது பகர்வேன் சத்தியம்
வேகமுற்ற குருமூலி பதிணெண் பேர்க்கும்
விளங்கவைத்த திதுதனக்குச் சாபம் இல்லை
பாகமுறப் பரிபாஷை யதனை நீத்துப்
பட்சமுட னியம்பிடுவேன் மூலி தானே.

(145) தானென்ற திருநீற்று இலையு மாகும்
தன்மையுடன் சரக்கெல்லாம் நிற்கும் பூடு
கோனென்ற கொள்கையுடன் பதினெண் பேரும்
குவலயத்தில் மறைந்திட்டார் குணமா கத்தான்
மோனென்ற சரக்கெல்லா முறையே செய்து
மூட்டிடவே இலைச்சாற்ருல் சுண்ணம் சுண்ணம்
கானென்ற காயகற்ப வாத சூட்சம்
கழறிடுவேன் பதினெண்பே ருண்டதாமே.

## முதார்சிங்கிச்சுண்ணம்

(146) உண்டதொரு கற்பமிதை யுரைப்பே னிங்கு
உண்மையுடன் முதார்சிங்கோர் பலமே கொண்டு
வண்மையுறத் திருநீற்றுச் சாறு தன்ஞல்
வலுவாகத் திரிநாளும் ஆட்டிப் பின்னர்
பண்டுபோல் வட்டுச்செய்து ரவியு லர்த்திப்
பாங்காகக் குக்குடமாம் புடமும் ஐந்து
செண்டுபோல் இட்டெடுக்கச் சுண்ண மாகும்
சித்தர்களும் கண்டுவிட்டால் கொண்டே
போவார்.

(147) கொண்டவர்கள் போகாமல் இருப்ப தற்கு
ஓம்-அம் உம்-லம் மென செபிக்கக்
கண்டுஉனைச் சித்தர்களும் வரங்கள் ஈவார்
காசினியில் இம்மருந்தைக் காலை மாலை
உண்டிடுவாய் மண்டலமே ஆவின் நெய்யில்
உலையாது கற்ருண்போல் திரேகங் காந்தி
சண்டனில்லை வாதமெண் பதுவும் போகும்
சார்ந்திடவே புளிபோகம் அகற்றிக் காரே.

(148) கார்த்திடவே குண்டலிதான் வாசி தானும்
களங்கமற்று வலுவாகிச் சோதி தங்கும்
பூர்த்தியுற்றுப் பூரணமே லமுதம் பொங்கிப்
புகழ்பெரிய ஞானசித்தன் நீயே யாவாய்
கீர்த்தியுற்றுப் பதினெண்பேர் கொண்ட கற்பம்
கூறினேன் வாதிகளே விளம்பக் கேண்மின்
நேர்த்தியுடன் சுத்தித்த வெள்ளி செம்பில்
ஈந்திடவே சிங்கிச்சுண்ணம் மாற்றெட் டாமே.

## 146 முதல் 148 முடிய உரை. முதார் சிங்கிச் சுண்ணம்.

பதினெட்டுச் சித்தர்களும் உண்ட முதார் சிங்கிக் கற்பத்தைக் கூறுகின்றேன். மிருதார் சிங்கி ஒரு பலம் வாங்கிக் கல்வத்திலிட்டுத் திருநீற்று இலைச் சாறுவிட்டு மூன்று நாள் வலுவாக அரைத்து வட்டாக வில்லை தட்டி வெயிலில் உலர்த்திக் கோழிப் புடம் இடுக. இங்ஙனம் ஐந்து முறை சாறுவிட்டரைத்துப் புடம் போடச் சுண்ணமாகும். சித்தர்கள் கண்டால் எடுத்துக் கொண்டு போய் விடுவர். அவர்கள் கொண்டு போகாமல் இருப்பதற்கு ஓம் அம்–உம்–லம் என்று மந்திரம் செபிப்பாயாக. சித்தர்கள் உன்னைக் கண்டு வரங்கள் ஈவார். இம்மருந்தைக் காலைமாலை ஆவின் நெய்யிற் கலந்து நாற்பது நாள் உண்டு புளி போகம் நீக்கிப் பத்தியம் காப்பாயாக. உடம்பு உலையாது. கற்றூண் போலாகும். ஒளியும் உண்டாகும். கூற்றங் குதித்தல் கை கூடும். வாதம் எண்பதுவும் போகும். குண்டலி வலுவாகி வாசியும் களங்கமற்று விளங்க உடலில் ஒளி தங்கும். அமுதம் பொங்கும். நீ ஞான சித்தனுவாய். சுத்தித்த வெள்ளி செம்பில் சிங்கிச் சுண்ணத்தை உருக்குமுகத்தில் தூவிப் பார்க்க எட்டரை மாற்றுத் தங்கமாகும்.

## தாமிரச் சுண்ணம்

(149) ஆமேகேள் சிங்கியொன்று செம்பு பாதி
அவ்வெடைக்கு வீரங்காற் பலமும் கூட்டித்
தாமேநீற் றிலைச்சாறு தன்னி ஞலே
தாக்கியே மூன்றுநா ளரைத்து லர்த்திப்
பூமேவு குக்குடமாம் புடமும் ஏழு
போட்டெடுக்கச் சுண்ணமது காந்தி காந்தி
மாமேவு குட்டமொடு குறைநோய்க் கெல்லாம்
மண்டலமுண் ணுவின்நெய் புளிய கற்றே.

(150) அகன்றிடவே கண்ணினல் கண்ட ரோகம்
யாவைக்கும் அரிசியெடை யீவாய் ஈவாய்
புகன்றிடுவேன் மருந்தின்பெயர் இராச வர்த்தம்
பொய்யில்லை வெள்ளிசெம்புக் கீய எட்டு
மிகமாகி நிற்கும்பார் சீனங் காரம்
நீற்றிலையின் சாறதனல் சுண்ண மாகும்
தகமைபெற எல்லாமும் இலைதன் னலே
தாக்கிடவே மடிந்துநீறு முறுதி யாச்சே.
காரம்—வெங்காரம்

## 149,150-ஆம் பாடல்களின் உரை. தாமிரச் சுண்ணம், சீனச் சுண்ணம், வெங்காரச் சுண்ணம்.

சிங்கி 1 பலம். செம்பு ½ பலம். வீரம் ¼ பலம். இவற்றைத் திருநீற்றிலைச் சாற்ருல் மூன்று நாள் அரைத்து வில்லை தட்டி வெயிலில் உலர்த்திக் கோழிப் புடமிடுக. இங்ஙனம் ஏழுபுடமிடச் சுண்ணம் ஒளியுடையதாகும். குட்டநோய் குறைநோய்க்கு ஆவின் நெய்யில் 40 நாள் உண்க. புளி நீக்குக. மேலும் கண்ணல் கண்ட நோய்கட் கெல்லாம் அரிசியெடை கொடுத்துப் பார்க்க நோய் நீங்கும். மருந்துக்குப் பெயர் இராச வர்த்தம். வெள்ளி செம்பில் ஈய 8 மாற்று உண்மை. மேலும் சீனம் வெங்காரம் இவற்றையும் திருநீற்றிலைச் சாற்ருல் சுண்ணமாக்கலாம்.

## கோரக்கர் நூல். சித்தர்கள் வருகை

(151) ஆச்சென்ற மூலியதா லனேக சூட்சம்
ஆடிடவே அறிவித்தேன் மக்காள் மக்காள்
சூட்சியதாய்ச் சித்தர்கள்தாம் செய்து வைத்த
சூதான நூல்களுக் கெல்லாம் முன்னே
காட்சிபெறத் தெளிவாகக் களங்க மின்றிக்
காளமேகம் கபாடப்பூட்டு கமலாஞ்சனி
தாட்சியிலாப் பிரமபோதம் திலத ரவி
தகைமையுறுஞ் சுரபிவிந்து லலாடப் பூட்டே.

(152) பூட்டான பஞ்சவர்த்தம் மறலி வாதம்
புகழ்பெரிய சென்மசித்து ஆன்ம சித்து
தாட்டிகமாம் வகார கந்தம் ஞான சோதி
தான்பெரிய சோடசரம் கல்ப போதம்

மேட்டிமையா நிலையொடுக்கம் மேன்மை யாக
மேதினியி லறிவதற்கு வெளியாய்ச் சொன்னேன்
நாட்டினிலே சித்தர்களின் புரட்டை யெல்லாம்
நானுணர்ந்து விவரமுடன் செப்பினேனே.

(153) செப்பிவைத்த நூலையெல்லாம் சித்த ரான
இடைக்காட்டார் அகப்பைமுனி நந்தி தேவர்
ஒப்பியே மச்சமுனி சட்டை நாதர்
பிரமமுனி யமுகண்ண ரான பேரும்
மெய்ப்பின திடமெய்தி யென்னூல் கேட்டார்
மேதினியில் தெரிந்துற்ற தாலே சித்தர்
தப்பிதங்க ளில்லாது தெளிவாய்ச் சூட்சம்
தாக்கினீர் மாந்தர்நமை மதியா ரென்றார்,

(154) என்றிவர்கள் வருதற்கு முன்னே யானும்
ஏத்தமுறக் கஞ்சாவைப் பயிரே செய்து
அன்றுடனே வந்தவர்க்கு அரிசி யோடு
அரைத்துஅடை தட்டிச்சுட்டு உணவை யிந்தேன்
தின்றவுடன் மதிமயங்கித் தலைசாய்த் திங்கே
திடமற்று வீழ்ந்திட்டா ரப்போ தேயான்
நன்றாய்ச்சந் திரரேகை யிருநூறு தன்னில்
நாட்டிவைத் தேன்மனுக்கள் பலனுற் றோங்க.

(155) ஓங்கிவந்த சித்தர்களும் போதை நீத்து
என்னூலைக் கேட்டார்பின் னெடுத்து ஈந்தேன்
தேங்கிடா திவர்கள்பின் பறந்தே சென்றார்
தெரியாமல் இவர்களையான் மயக்கிப் போட்டுப்
பாங்குடனே பதித்துவைத்தேன் பாபம் நீங்கப்
பழிகாரச் சித்தர்களின் பகடி யெல்லாம்
தாங்குமுயர் வஸ்துவினைத் தானே காணத்
தாக்கிவைத்தேன் உமைபரனின் பாதத் தாணை.

## இலிங்க மெழுகு

(156) ஆனைமுகன் றனைப்பயந்த வபிரா மித்தாய்
அம்பிகையாள் இருபதத்தைப் போற்றி செய்து
மானைக்கரம் ஏந்திட்ட மதியின் நாதன்
மகிழ்ந்துதிருத் தாள்வணங்கிக் கரங்கு வித்து

தேனையெடுத் ததுசமனுய் நீற்றுச் சாறும்
　　தேக்கிலிங்க மோர்பாலத்தின் கட்டி தாக்கிப்
பானையிட் டடுப்பேற்றித் தீயெ ரிக்கப்
　　பக்குவமாய் மெழுகாகும் பதனம் பண்ணே.

## 156,157 உரை இலிங்க மெழுகு

ஒருபலம் லிங்கத்தைச் சட்டியிலிட்டுத் திருநீற்றுச் சாறும் தேனும் கலந்து 4யாமம் சுருக்குக் கொடுத்து எரிக்க மெழுகாகும். (நோய்களுக்கும் ஈக. வெள்ளி செம்பிலும் ஈக) துருசு வாங்கி யதனையும் இங்ஙனம் செய்து மெழுகாக்கி இருமெழுகும் சமன் சேர்த்துச் சீனச் சுண்ணம் அதற்கு நேர் சேர்த்து அரைத்து வில்லைதட்டிக் காய வைத்துக் கலசத்திலிட்டுக் கவசம் செய்து கௌதாரிப் புடமிடுக. நீறிவிடும். எடுத்தெடுத்த தொழிற்கெல் லாம் இது குருவாகும்,

## துருசுப் பற்பம்.

(157) பண்ணிடவே துருசைலிங்கம் போன்றே தாக்கிப்
　　பாகமுடன் இருமெழுகுஞ் சமனென் ருக்கிக்
கண்ணியமாய் இலைச்சாற்றுல் மெழுகை யாட்டிக்
　　களங்கமறச் சீனத்தின் சுண்ணம் நேராய்
நண்ணிவிட் டரைத்துவில்லை தட்டிக் காய்ந்து
　　நாட்டிலே சீலைமண் வலுக்கச் செய்து
எண்ணிநிறை கௌதாரிப் புடத்தில் நீரும்
　　எடுத்தெடுத்த தொழிற்கெல்லாம் குருவு மாச்சே.

## கெந்தகச் சுண்ணம்.

(158) ஆச்சென்ற கெந்தகத்தை யெடுத்து நீயும்
　　அறிந்திடவே சட்டியிட்டு அடுப்பி லேற்றிப்
பேச்சென்ற திருநீற்று இலையின் சாற்றுல்
　　பிசகாமல் சாமம்ஒன்று சுருக்குத் தாக்கி
மாச்சரிய மின்றிப்பின் கல்வத் திட்டு
　　மகிழுடைய முன்சாற்றுல் சாமம் நான்கு
தோய்ச்சலற அரைத்துவில்லை ரவியு லர்த்தித்
　　துகளறவே சீலைமண் வலுக்கப் பூட்டே.

(159) பூட்டியே குக்குடமாய்ப் புடத்தைப் போடப்
பூப்போல சுண்ணமாம் எடுத்து நீயும்
நாட்டிலே தேவிக்குப் பூசை யிட்டு
நலமாகப் பதனஞ்செய் மார்க்கங் கேளு
தாட்டிகமாய் மேகமுதல் குட்டம் தீரும்
தன்மையுடன் இம்முறையால் கோடி வித்தை
ஆட்டிடுவாய் ரசஞ்சேர்த்துச் சுண்ணத் தோடு
அன்புடைய சாறுவிட்டுச் சமனாய்த் தாக்கே.

## ரசகெந்திச் சுண்ணம்.

(160) தாக்கியரை விந்ததுவும் மடிந்தே போகும்
தட்டிவில்லை ரவியுலர்த்தி வலுவாய்ச் சீலை
தேக்கியே கௌதாரிப் புடத்திற் சுண்ணம்
திகழ்பெரிய ரசவாதி நீயே யாச்சு
பாக்கியவா னுன்றனைப்போ லில்லை யில்லை
பதறாமல் இம்முறையால் கோடா கோடி
மீக்கொளுயர் சென்மநோய்ப் பிணிகள் ஏகும்
புத்தியுளோன் இதையறிந்தோன் சூட்சம்
காண்பான்.

(161) பான்மையிலாச் சித்தர்களும் பதன மாகப்
பாரோர்கள் அறியாமல் மறைத்தே வைத்து
மேன்மையென்ற ரசவாத சூட்சா சூட்சம்
மேதினியோர்க் கறிவிக்க லாகா தென்று
தேன்போல சாத்திரங்கள் பலவாய்ப் பாடித்
தெளிவாகச் சொல்லாமல் கபாட மிட்டார்
தான்தானே அறியஇந்த ரசசுண் ணத்தின்
தாட்டிகத்தால் கெவுனமணி மிகுவதாமே.

**158 முதல் 161 முடிய உரை. கெந்தகச் சுண்ணமும், ரசகெந்திச் சுண்ணமும், மேகமுதல் குட்டம் நீங்க, கருவில் தொடர்ந்த பிணி நீங்க, பொன் செய்ய, பறக்கும் ரசமணி செய்ய.**

வேண்டிய அளவு கெந்தகம் எடுத்துச் சட்டியிலிட்டுத் திரு நீற்று இலையின் சாற்றால் ஒருச்சாம நேரம் தவறாமல் சுருக்குத் தாக்கிப் பின் கல்வத்தி லிட்டு முன் சாற்றால் அரைத்து வில்லை

தட்டி வெயிலிலுலர்த்திச் சீலை மண் செய்து கோழிப் புடமிடுக. பூப்போன்ற சுண்ணமாகும். நாட்டியே தேவிக்குப் பூசை செய். மேகம் முதல் குட்டம் தீரும். இம்முறையால் கோடி வித்தை ஆகும்.

மேற்படி சுண்ணத்துடன் ரசம் சம எடை சேர்த்து மேற்படி சாறு விட்டரைத்து வில்லை தட்டி வெயிலிலுர்த்திச் சீலை மண் வலுக்கச் செய்து கௌதாரிப் புடமிடுக. சுண்ணம். திகழ் பெரிய ரசவாதியும் நீயே. உன்னைப் போல் பாக்கியவான் இல்லை. பதருமல் இம்முறையால் கோடா கோடி நோய் நீங்கும். கருவிலே தொடர்ந்த பிணிகளும் நீங்கிப் போகும். சித்தர்கள் பாரோர்கள் அறியாமல் மறைத்து வைத்தார். ரசவாத நுட்பத்தை உலகினர்க்கு அறிவிக்கலாகாதென்று தேன் போலே நூல்கள் பல பாடித் தெளிவாகச் சொல்லாமல் கபாட மிட்டார். இந்த ரசச் சுண்ணத்தின் வலிமையால் விண்ணிற் பறக்கக் கூடிய கெவுன மணி உண்டாக்க முடியும்.

## சிலைகூ பர்பம்

(162) ஆமேகேள் ரசச்சுண்ணம் செய்த பின்னர்
அன்புடனே தலைமயிரைக் கொண்டு வந்து
வாமேகேள் முலைப்பாலில் ஊறப் போட்டு
வாகாயப் பாலதனு லரைக்கத் தானே
பூமேவு மெழுகாகும் வில்லை தட்டிப்
புகழுடனே ரவியுலர்த்திக் கவசஞ் செய்து
தேமேநல் கௌதாரிப் புடத்தில் நீறும்
விந்துச்சுண்ணம் இதனிடையே சேர்த்தி டாயே.

## ரச மணி

(163) சேர்த்துமே தனிரசத்தைச் சட்டி யிட்டுச்
சிதருமல் அவ்வெடைக்குச் சுண்ணம் கொட்டி
நேர்மையுடன் அடுப்பேற்றிச் சிறுதீ யிட்டுத்
திருநீற்றுச் சாறதனல் சுருக்குத் தாக்கப்
பேர்பெரிய ரசமதுவும் திரண்டு கட்டும்
பிசகில்லா மணியுருண்ட பின்னர் தானே.
வார்சடையா னுத்தாளை ஓம்–கிரிங்– ரங்–கங்
வங்–இம்– லம் மென்று போற்றே.

## 162, 163. உரை முடிச்சுண்ணமும் இரசமணியும்

முன் கூறிய இரசச் சுண்ணம் செய்த பின்பு தலைமயிரைக் கொண்டுவந்து தூயதாக்கி முலைப்பாலில் ஊறப்போட்டு அப் பாலினால் (துகளாகக் கத்தரித்து எடுத்துக் கொண்ட முடி) அரைக்க மெழுகாகும். வில்லை தட்டிவெயிலுலர்த்திச் சீலைசெய்து கௌதாரிப்புடமிட நீறும். இந்தமுடிச் சுண்ணத்துடன் இரசச் சுண்ணமும் சேர்த்துக் கொள்க. தனிரசத்தைச் சட்டியில் இட்டு அவ்வெடைக்குச் சுண்ணம் கொட்டி அடுப்பேற்றிச் சிறுதீ யிட்டுத் திருநீற்றுச் சாற்றால் சுருக்குத் தாக்குக. இரசம் திரண்டு கட்டும்.மணியுருண்டபின்னர் இறைவன் இறைவியை ஓம்–கிரிங் ரங்–கங்–வங்–இம்–லம் என்று செவித்துப் போற்றுக.

## சித்தர்களிடம் கொருத்த நூற்றெருப்பு.

(164) போற்றிமுன் யானுரைத்த நூற்றெரு குப்பும்
புகலவில்லை புகன்றிடுவேன் காள மேகம்
ஏற்றிடவே ஆயிரம்பார் கபாடப் பூட்டு எண்ணூறே
கமலாஞ்சனி நானூ ருகும்
தேற்றிடவே பிரமபோதம் எண்ணூ றென்னே
திலதரவி ஐந்நூறு சுரபி விந்து
சாற்றிடவே முந்நூறுபார் லலாடப் பூட்டு
அறுநூற்று எண்பதுவு மாகும் ஆகும்.

(165) ஆகவே பஞ்சவர்த்தம் ஐம்பத் தெட்டு
மறலிவாதம் எண்பதுபின் சென்மசித்து
வேகமுடன் நூறதாகும் ஆன்ம சித்து
விகற்பமற இருநூற்று எட்ட தாகும்
பாகமுடன் வகாரகெந்தம் எண்ணூற் றைந்து
பாவாக ஞானசோதி ஆயி ரந்தான்
தாகமறச் சோடரசம் கற்ப போதம்
தனித்தனியே ஐந்நூற்று ஏழதாமே.

(166) எழுநூற்ரு மைந்ததுவே நிலையொ டுக்கம்
நிகழ்த்தியதின் உண்மையெல்லாம் குறுக்கி நன்ருய்
வாழுதற்காய்ச் சந்திரரேகை இருநூறு
ஆமிக்க வையகமும் தழைத்து ஓங்கத்

தாழுதலும் இல்லாமல் இந்நூல் மார்க்கம்
தானறிந்து நடந்திடிலோ பேதம் போகும்
சூழுலக நிலையறிவான் ஞானி ஞானி
சொல்லிவிட்டேன் சாபமில்லை இந்நூற் காமே.

## விரேசனத்திற்கு மூலிவேர்

(167) ஆமேகேள் சூட்சமொன்று சொல்வேன் சித்தன்
ஆதரவாங் கருப்புக்காக் கணத்தின் வேரைத்
தேமேகொள் ளாவின்பால் தனிலரைத்துத்
திகட்டாது சிறுபுன்னைக் காயின் விதம்
வாமேகொள் மூன்றுநாள் காலை தன்னில்
ஆவின்பால் தனிற்கலக்கி யருந்து பத்தியம்
பாமேவு புளியகற்றிப் பானம் கொள்ளப்
பதருமல் விரேசனமும் ஆகும் பாரே.

(168) பாரேகு விடங்கள் முதல் பாண்டு தீரும்
பான்மையிலா எலிகடியுங் காசம் போகும்
வாரேறு வாதமுதல் குன்மம் குட்டம்
வாகாகத் தீர்ந்திடுமே கோடி நோய்கள்
சீரேறு வயித்தியந்தான் செய்யு முன்னர்
சிதருமல் ரோகிக்கு மூன்று காலை
காரேநீ கருங்காக்கண வேரீந்து பின்னர்
களங்கமற நோயைக்கண் டவிழ்த்த மீயே.

### 167, 168—உரை. வயிறு கழிய மூலிகைவேர்.

கருப்புக் காக்கணத்தின் வேரை ஆவின்பால் விட்டு அரைத்துச் சிறுபுன்னைக் காயளவு ஆவின்பாலில் கலக்கி மூன்று நாள் காலைவேளை தோறும் உண்டு பத்தியமாக இருக்க. புளி நீக்கி உண்க. வயிறு கழியும். நஞ்சு, பாண்டு, எலிகடி, காசம் வாதம், குட்டம் முதலியநோய் நீங்கும். மருத்துவம் செய்யும் முன்னர் நோயாளிக்கு மூன்றுகாலைவேளை கருங்காக்கணம் வேர் கொடுத்து பின்பு களங்கம் நீங்க நோயைக்கண்டு அவிழ்தம் ஈக.

## செயராச பூபதி

(169) ஈயவே ரசம்வீரம் வெங்கா ரந்தான்
இணைசமனாய் அரைத்திடவே சாம்பல் வண்ணம்
நேயமுடன் நீற்றுச்சாறு விட்டு ஆட்டி
நெதியாகக் காயவைத்து நுணுக்கிப் பின்னர்

தூயமுடன் குப்பியிட்டுச் சீலை செய்து
முடாவில்மணல் கொட்டிமருந் திட்டு மூடிக்
காயநாற் சாம மெடுத்துப் பற்பம்
களங்கமின்றி யரிசியெடை பத்திய மின்றே.

## 169—உரை செயராச பூபதி.

இரசம், வீரம், வெங்காரம் ஒத்தஅளவாக எடுத்து அரைக்கச் சாம்பல் வண்ணமாகும். திருநீற்றுச் சாறுவிட்டாட்டிக் காயவைத்துத் தூளாக்கிக் குப்பியிலிட்டுச் சீலைமண் செய்து காயவைத்துப் பானையில் மணலிட்டு அதற்குள் குப்பி வைத்து நாற்சாமம் எரித்து எடுத்துப் பற்பத்தை யரிசி எடை நோய்களுக்கு வழங்குக. பத்தியமில்லை.

## கௌரி ராச சிந்தாமணி

(170) இன்றியமை யாததொரு கௌரி ராச
சிந்தாமணி கெடியாரம் போலே சொல்வேன்
நன்றெனவே கருவங்கம் வெள்வங்கம் நாதம்
நயமான விந்து லிங்கம் சிறுகண் ணுகம்
அன்ருக வோர் நிறையாய் நிறுத்துக் கொண்டு
ஆனவங்க நாகமதைத் தகட தாக்கிக்
குன்ருது சிறுகவதை நறுக்கிக் கொண்டு
குணமாக லிங்கமதைச் சிறுதூ ளாக்கே.

(171) ஆக்கியே குடுவையதில் லிங்கந் தன்னை
ஆகஇரு பாலாக்கி யொருபா லிட்டுத்
தேக்கியே ரசமுதல்மற் றெல்லாங் கொட்டித்
தேறமறு பால்லிங்கம் மேலே யிட்டுப்
பாக்கியரே சீலைமண் வலுக்கச் செய்து
பதனமுடன் ஐந்தெருவில் புடத்தைப் போட்டுத்
தாக்கிடவே மருந்தெல்லாம் மடிந்து நீறும்
தாழ்மையுற மூவரைக்கால் சேரு கொள்ளே.

(172) கொள்ளவே கௌரிபலம் ஒன்ற ரைதான்
கூட்டியே சரக்கெல்லாம் கல்வத் திட்டுச்
சள்ளையற இராசகனிச் சாற்ரு லாட்டிச்
சாந்தமுடன் வட்டுச்செய்து ரவியு லர்த்தி

கள்ளமறச் சீலேமண் கனக்கப் பூட்டி
கன்மமிலா முப்பதெரு தன்னிற் போட
வள்ளல் அருளதனுல் நீறிப் போகும்
வாகாக எடுத்ததனைப் பின்னுங் கேளே.

(173) கேள்இத மாகவுயர் மேலேச் சாற்ருல்
கிருபையுடன் இருசாமம் அரைத்து எடுத்து
சூளகதி வட்டாக்கி ரவியு லர்த்திச்
சுந்தரம்போல் சில்லிட்டுக் கவசம் செய்து
வாளவே இவ்விதமாய்ப் புடமும் மூன்று
வயணமுறப் பத்தெருவில் புடமும் போடு
காளமேகம் போலமுழுக் களங்க மற்றுக்
கருதரிய சுண்ணமது வாகுந் தானே.

(174) தானேகொள் வாதவித்தை இதிலே யாச்சு
தட்டாமல் குட்டமுதல் நோய்கட் கெல்லாம்
ஆனேகேள் நாள்மூன்று காலே மாலே
அரிசியின் எடைதானும் ஈய நன்று
கோனேகொள் ஆவின்பால் கஞ்சி யாகும்
குறைநோயாம் குட்டமுதல் எல்லாம் தீரும்
வானேறு முகமலரும் மலர்ந்து பூக்கும்
வாலேயிரு தாளறிய உண்மை சொன்னேன்.

## 170முதல் 174முடிய உரை. கௌரிராச சிந்தாமணிச் சுண்ணம்

கருவங்கம், வெள்வங்கம், கெந்தி, இரசம், இலிங்கம், சிறுகண்ணுகம் இந்த ஆறும் ஓர்நிறையாய் நிறுத்து எடுத்துக் கொள்க. வங்கத்தையும் நாகத்தையும் தகடாகத் தட்டிச் சிறுகச் சிறுக நறுக்குக. இலிங்கத்தைச் சிறுதூளாக்கி இரு பாகமாகப் பிரித்து ஒருபாகத்தைக் குடுவையில் இட்டுப்பரப்பி இரசம் கெந்தகம் முதலிய எல்லாம் அதன்மேல் கொட்டி மற்றப்பாக இலிங்கத்தூளே அதன்மேலிட்டுப் பரப்பிச் சீலேமண் வலுவாகச் செய்து 5எருவிற்புடமிட மடிந்து நீறும். இந்த நீற்றில் காலேயரைக் காற்சேர் எடுத்துக் கௌரி 1½பலம் கூட்டிக் கல்வத்திலிட்டு இராசகனிச் சாற்ருலாட்டி வட்டுச் செய்து உலர்த்தி அகலிலிட்டுச் சீலேமண் செய்து காய்ந்தபின் 30 ஏருவிற் புடமிடுக.

நீறி விடும். இந்தச் சுண்ணத்தை முன்கூறிய சாற்ருல் 2சாமம் அரைத்து எடுத்து வட்டாக்கி யுலர்த்திக் கலயத்திலிட்டுச் சில்லிட்டுக் கவசம் செய்து பத்தெருவில் புடமிடுக. இங்ஙனம் 3புடமிடக் களங்க மற்றுச் சுண்ணமாகும். இதனுல் வாத வித்தையும் ஆகும். குட்டம் முதலிய எல்லா நோய்களுக்கும் மூன்று நாள் காலை மாலை 6வேளை அரிசி எடையளவாகக் கொடுக்க நன்ருகும். ஆவின்பாலும் கஞ்சியுமாகும். குட்டமுதல் எல்லா நோயும் தீரும். முகமலரும் மலர்ந்து பூக்கும் உண்மை.

## கருவங்கச் செந்தூரம்

(175) சொன்னலங்கள் பெருகிடவே யின்னுங் கேளு
சூதில்லா வாதமொடு வைத்தி யந்தான்
நன்னயமாய்க் கருவங்கம் அதையு ருக்கி
நண்டுச்சா றதனில் மூன்று விசையே சாய்த்துக்
கன்மமறக் காட்டுமருக் கொழுந்துச் சாற்ருல்
காரிய மரைத்துப்புடங் கௌதா ரிபோல்
பின்னமற ஏழுபுட மிடச்செந் தூரம்
உற்றசெம்பு வெள்ளிபத்துக் கொன்று தாக்கே.

### 175-உரை.

கருவங்கத்தை உருக்கி நண்டுச் சாற்றில் மூன்று முறை சாய்த்துத் தூய தாக்கிக் காட்டு மருக் கொழுந்துச் சாற்ருல் அரைத்துக் கௌதாரிப் புடமிடுக. இங்ஙனம் 7புடமிடச் செந் தூரமாகும். செம்பு வெள்ளி பத்துக்கு ஒன்று உருக்கு முகத்தில் கொடுக்கச் செம்பொன்னுகும். நோய்க்கும் வழங்குக.

## அரிதாரச் செந்தூரம்

(176) ஒன்றல்ல வெகுநேர்த்தி உறுதி யாகும்
உண்மையுட னிதுஆதித் தொழிலு மாச்சு
குன்றேறி யலையாதே இன்னம் கேளு
கெந்திரசம் வெடியுப்பு அரிதா ரம்நேர்
வென்றிடவே சமனெடையாய்க் கல்வத் திட்டு
வினையமறக் கடுகிலையின் சாறு தன்னுல்
நன்ருக ஏழுநாள் அரைத்து லர்த்திக்
கௌதாரிப் புடத்திற்கொடுஞ் சுண்ணம் பாரே.

(177) சுண்ணமதை வெள்ளிஏழு செம்பு மூன்று
சேர்த்துருக்கி யொன்றீயப் பத்துக் காணும்
கன்மங்க ளாகாது கண்ட போதே
காசினியி லறம்வளர்த்து உண்ணல் வேண்டும்
வண்ணம்வர வழுத்திடுவேன் வாதி மாரே
வாகாக வெள்ளிசெம்பு தனையு ருக்கிப்
பின்னமற மருந்தீந்து உருக்கி யொன்ருய்க்
கூட்டிப்பின் மருந்தீந்து உருக்கல் வேண்டும்.

## 176, 177 உரை.

கந்தகம், இரசம், வெடியுப்பு, அரிதாரம் எலலாம் ஒத்த அளவாக எடுத்துக் கல்வத்திலிட்டுக் கடுகிலேயின் சாற்ருல் ஏழு நாளரைத்து உலர்த்திக் கௌதாரிப் புடமிடச் சுண்ணமாகும். வெள்ளி7 செம்பு3 சேர்த்துருக்கிச் சுண்ணம் ஒன்றீயப் பத்து மாற்று. வெள்ளி செம்பை உருக்கி மருந்து ஈந்து பின்னரும் உருக்கி யொன்ருக்கிக் கூட்டிப் பின் மருந்து ஈந்து உருக்குதல் வேண்டும்.

## வெடியுப்புச் செந்தூரம்.

(178) வேண்டுமந்த உப்பறிந்தோன் வாதி யாவான்
வினையங்கள் கைப்பின்நலன் அற்றே போச்சு
காண்பதற்குக் கரிஉப்பு வெடியும் கெந்திக்
கருதிசம னெடையதாகப் பொடிய தாக்கிப்
பூண்டிடவே சட்டியிட்டு அடுப்பி லேற்றிப்
புகழாமல் சாமமொன்று தீப்பற் ருமல்
பாண்டமதில் வறுத்திடுவாய் பதரு மற்ருன்
பரிவாகச் செந்தூரம் அருணன் போலாம்.

(179) அருண நிறம் கண்டெடுத்துப் பதன மாக்கி
அறியவே செம்புருக்கி மருந்தை யீயக்
கருமமெனுங் களிம்பற்று ஊறல் போகும்
கனவெள்ளிக் கவ்வாறே ஈந்து ருக்கிப்
பெருமையுறுஞ் சுத்தித்த செம்பி ரண்டு
பேசியதோர் வெள்ளியொன்று சேர்த்துத் தானே
குருமருந்து கழஞ்சியொன்று நூற்றுக் கீந்து
உருக்கிடவே பதினறு மாற்று மாச்சே.

(180) ஆச்சரியம் இதனாலே கோடி வித்தை
ஆடலாம் சித்தர்களும் மறைத்தே வைத்தார்
பேச்சில்லை குருவாணை சொன்னேன் சொன்னேன்
பிரபலமாய்ப் பூதலத்தோர் பிழைக்க வேண்டி
நீச்சுகொண்டு என்போலோர் விரிவாய்த் தானே
நிலைகாட்டாச் சாத்திரங்கள் புகன்றே ஏய்த்தார்
காட்சிபெற என்னூலை யுணர்ந்தோன் சித்தன்
களங்கமற ஓதிவைத்தே னிருநா ருள்ளே.

## 178 முதல் 180 முடிய உரை.

கரிஉப்பு, வெடியுப்பு, கெந்தி சம எடை பொடித்துச் சட்டியிலிட்டு ஒருச் சாமம் தீப்பற்ருமல் வறுக்க அருணன் நிறச் செந்தூரமாகும். செம்பிணை உருக்கியியக் களிம்பு அறும். வெள்ளியை உருக்கிக் கொடுக்க அதுவும் தூயதாகும். மேற்படி செம்பு2 வெள்ளி ஒன்று சேர்த்து உருக்கிக் குருமருந்து கழஞ்சு ஒன்று நூற்றுக்கு ஈந்து உருக்கப் பதினாறு மாற்ருகும். சித்தர்கள் மறைத்தார்கள். பூதலத்தோர் பிழைக்க வெளியாய்ச் சொன்னேன்.

## சீனக் காரச் செந்தூரம்

(181) உள்ளறிந்து பார்த்தவனே ஞானி ஞானி
ஓதுமுறை பராபரியாள் சொன்ன சூட்சம்
கள்ளமற நாய்ப்பாகல் சாறு தன்னால்
கனமான சீனமதைச் சாமம் ரெண்டு
சள்ளையற அரைத்துவில்லை ரவியு லர்த்திச்
சார்வாகக் காடையொரு புடத்தில் மிக்க
தள்ளாத செந்தூரம் அருணன் போலாம்
தாக்கிடவே லோகமெல்லாம் பசும்பொன்
மாத்தே.

## 181—உரை

சீனத்தை நாய்ப்பாகல் சாறுவிட்டரைத்து வில்லை தட்டி வெயிலிலுலர்த்திக் காடைப்புடமிடச் செந்தூரமாம். உலோகங்களில் கொடுக்கப் பசும் பொன் மாற்ருகும்.

மேற்கோள்:—

"நவமான சீனக் கரத்தைக் கேளு நாய்ப்பசுகல் சாறுவிட்
டரைத்துக் கொண்டு
சிவமான வில்லைதட்டிக் காயப் போடு சேர் மானம்
முன்படியே புடமே தீர்ந்தால்
அவமானம் வாராது செந்தூ ரங்கள் ஆடலாம்
அளவிறந்த வித்தை யெல்லாம்
பவமான தறுக்குமடா சீனக் காரம் படுமுன்னே
லோகமெல்லாம் பசும்பொன் மாற்றே,"
அகத்தியர் பெருநூல் 2-ஆம் காண்டம் (247)

## நவச்சார செந்தூரம்

(182) மாத்தவும் மயங்காது நவச்சா ரத்தை
மகிழுடைய அவுரிச்சாறு தன்னுற் சாமம்
காத்திருந் தரைத்துவில்லை வெய்யோ னிட்டுக்
காடை யொடு புடந்தீரக் களங்க மில்லா
தேத்தியுயர் செந்தூர மிதற்கீ டில்லை
தேடுவார் இரசவாதி சித்தர் மார்கள்
சூத்திரத்தி லிந்தமுறை சுளுவாய்ச் சொன்னேன்
செம்புவெள்ளிக் கீய மாத்துப் பதினு றுமே.

### 182--உரை

நவச்சாரத்தை அவுரிச்சாற்ருலரைத்துக் காடைப் புடமிடச் செந்தூரமாகும். பதினுறுமாற்று உண்டாகும்.

மேற்கோள்:-

"நாடும்பார் நவச்சார மவுரிச் சாற்றில்
நயமாக அரைத்துவில்லை ரவிதான் கண்டு
போடுவாய் காடையொரு புடத்தைப் போடு
பூபதிசெந் தூரமிதற் கொப்போ இல்லை
தேடுவார் இரசவாதி சித்தர் மார்கள்
செப்பரிய செந்தூர மாகு மென்று
கூடுவார் குகைதோறும் நவச்சா ரத்தைக்
கொள்ளுவா ரள்ளுவார் நவமி தென்றே.
(அகத்தியர் பெருநூல் 2-ஆம் காண்டம் (246)

## முப்பூ

(183) பதிவாகப் பதிதனிலே சித்த ரூர்கள்
பகர்ந்திடவு மாகாது முப்பு வென்றே
துதியில்லாப் பரிபாஷை துகளாய்ப் பாடித்
துன்பமுற மாநிலத்தை மயக்கிப் போட்டார்
சதியறவே முப்பூவென்ற மார்க்கம் கொஞ்சம்
சாற்றிடுவேன் சள்ளையறச் சாக ரத்தில்
கதியுடையே வெடியுப்புச் சீனம் வீரம்
கருத்தாகச் சமனெடையாய் ஒன்று கூட்டே.

(184) கூட்டியே சிறுநீரால் நாள்மூன் ருட்டிக்
குணமாக வில்லைதட்டி ரவியு லர்த்தி
நாட்டியே மண்சீலை வலுக்கச் செய்து
நயமான பூநீறு படிதான் ரெண்டு
தாட்டிகமாய் முடாவதனிற் பாதி யிட்டுத்
தன்மையுடன் வில்லைவைத்து மேலுங்கொட்டிப்
பூட்டியே மேலுமொரு முடாவை மூடிப்
பொருந்தவே சீலைமண் ணேழு செய்யே.

(185) செய்துமே யடுப்பேற்றிச் சிறுதீ யாகச்
சிதருமல் சாமம் இரண்டு எரித்து ஆற்றி
உய்வாக வில்லையெடுத் ததற்கு நேராய்
வெங்காரம் ரசமதுவுங் கலந்த ரைக்க
நொய்வாகக் கருமைநிற மாகக் காணும்
நுண்மையுடன் மாதர்கருப்பக் குடநீர் தன்னுல்
பொய்மையறச் சாமம்ரெண் டரைக்க வேகம்
புகலொணுக் காரமது வீரம் போகா.

(186) போகாது வில்லைதட்டி ரவியு லர்த்திப்
பூப்போலே சில்லிட்டுக் கவசம் செய்து
நோகாது இரண்டுபத்துப் பலந்தான்
எருவதனில் நீறிவெகு காந்தி யாகும்
வாகாக வாலையபி ராமித் தாயை
வணங்கித்தினம் போற்றியே வாதை நீத்துப்
பாகாக வுரைத்திட்டேன் முப்பூச் சூட்சம்
பதனஞ்செய் சித்தர்கண்டால் கொண்டே
போசவார்.

(187) போகாத ஊருக்கு வழியே காட்டிப்
பூத்தான மாக முப்பூ மார்க்கந் தன்னை
ஆகாகா செப்பிடவு மாகா தென்று
அநியாயச் சித்தர்களும் மறைந்தார் ஏட்டில்
சாகாமல் இருப்பதற்கு முப்பூச் சொன்னேன்
சத்தியமாய்ப் பிசகில்லை சார்பாகத் தான்
ஏகாதி பத்தியங்கள் எந்நா ளுந்தான்
இழிவின்றி நிலைத்துவிடும் இன்னம் கேளே.

(188) மின்னிடவே மீறிவரும் நோய்கட் கெல்லாம்
மிகுவாக அரைஅரிசி தீட்டிப் போடு
பன்னிவரும் சரக்குவகை இதனைக் கண்டால்
பலம்பெற்று நீருகிச் சுண்ண மாகும்
தன்னிருப்பைத் தானுணர்ந்து தத்துவ ஞானி
தானாகித் தரணிதன்னில் வாசம் உய்யப்
பின்னமிலா தோதிவைத்தேன் வாலை சந்திப்
பிரபலமாம் உலகமதி னுண்மை தானே.

(189) காணவே கலைக்கோட்டார் ககன வித்தை
கனமாகப் பதினெண்ணா யிரத்து எட்டு
தோணவே ரசாயனமும் சிற்பம் லெட்சம்
தொலையாகக் கூறிவைத்தார் துன்பம் ஏக
பூணவே போகரவர் கலைக்கோட் டாரின்
போதகத்தை யறிந்தவரும் விரித்தார் விண்ணில்
நாணவே நாதாக்கள் அறிந்து போற்ற
நானுரைத்தேன் சூட்சங்கள் எல்லாம் முற்றும்.

## நாகச் சுண்ணம்

(190) முற்றுமாய் எழுதுதற்குப் பனையே டில்லை
மூதண்டத் தாளகத்தைச் சுத்தி செய்து
நற்றுறையாம் அவ்வெடைக்கு நாகர் வண்டு
நலமாக ஓடுரெட்டி சேர்த்து மிக்க
குற்றமற்ற திருநீற்றுச் சாற்றுல் நாள்மூன்
றுட்டியே வில்லைதட்டி யுலர்த்திச் சீலை
கற்சுண்ணம் தன்னினுற் கவசம் செய்து
கலங்காமல் ஐந்தெருவில் புடமும் ஐந்தே.

(191) புடமிட்டு எடுத்திடவே கொடிய சுண்ணம்
புகலரிது அரிசியெடை நெய்யி லிட்டுத்
திடமாகக் காசமெட்டுக் கைந்து ஏழு
தினமிந்து பனைவேருக் கியாழம் உண்ணக்
கடமினிய கடுகுமஞ்சள் புளிஎள் ளெண்ணெய்
ஆகாது குட்டமுதல் ரோகம் போகும்
சடம்வலுக்கும் சாதகங்கள் மெத்த வுண்டு
சஞ்சலங்கள் நீங்கும்கலைப் பான்மை கேளே.

183 முதல் 188 முடிய முப்பு முறை வெளிப்படை, சுண்ண வகைகள் கூறப் பெற்ற இடங்களிலுள்ள சுண்ணங்களுக் கெல்லாம் இந்த முப்புச் சேர்த்தால் சுண்ணமாகும் என்ற நுட்பக் குறிப்பு உணர்க.

189-ல் கலைக் கோட்டு முனிவர் ககனவித்தை 1808 என்ற நூலும் இரசாயன சிற்பம் நூருயிரம் இயற்றிய சிறப்பும் போகர் அந்நூல்களை உணர்ந்தமையும் கூறினர்.

## 190, 191-ல் தாளகச் சுண்ணம்.

தாளகத்தைச் சுத்தி செய்து நாக வண்டின் ஓடு அதற்கு இரட்டிப்பு சேர்த்துத் திருநீற்றுச் சாற்ருல் மூன்று நாள் அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலிலடக்கிக் கற்சுண்ணச் சீலை கவசம் செய்து 20 எருப் புடமிடக் கொடிய சுண்ணம். அரிசி எடை நெய்யில் 5 அல்லது 7 நாள் உண்க. காசம் போகும். உண்டு பனைவேர்க் கியாழ முண்டால் குட்டம் முதலிய நோய் நீங்கும். உடல் வலுக்கும். கடுகு மஞ்சள் புளி எண்ணெய் நீக்குக.

## கடவுள் உண்மை

(192) பான்மையுறப் பதினெண்பேர் நாதாக் கள்தாம்
பாலிதங்க ளானதொரு ஞான சூட்சம்
மேன்மையுட னேதிடுவேன் வாசி கூட்டி
முக்கோணம் அதனுள்ளே வட்டம் சோதி
ஆன்மமுடன் நிபார்த்து அசையா துற்ருல்
ஆதார மாகமனம் அசையா துய்யும்
வான்மதியும் ரவியடங்கும் வட்டத் துள்ளே
வாசிவெளி யாகாது ஞான வீடே.

(193) வீடான வீடதுவும் சொந்த மாச்சு
வெளியாக ஓதிவைத்தேன் வினையம் ஏக
நாடான நாடதன்றிற் கடவு ளென்று
நானிலத்தி லாட்டுவித் நல் காற்று காற்று
கோடான கோடிதெய்வம் காற்றுக் கேதான்
கூறிவைத்தா ரல்லாது வேறொன் றில்லை
ஆடாத ஆட்டமெல்லாம் காற்று மாகும்
அதுவகன்று லகிலமுத லழிந்து போமே.

## கலியுதிப்பின் கிளை

(194) அழிந்திந்தக் கலியுதிப்புப் பிரமாதி யாண்டு
ஆனசித் திரைவெள்ளி நவமி மூலம்
பழியில்லாப் பரிச்சித்தைஞ் நூறே யாண்டான்
பரிவாகச் சனமேசயன் முந்நூ றுண்டான்
இழிவில்லா நரேந்திரனு மென்ற மன்னன்
இரண்டுநூற் றெண்பத் தெட்டாக வாண்டான்
செழிப்பாகச் சாரங்க னெண்பத் தைந்து
செகமுழுதும் விக்கிரமா தித்த வேந்தன்.

(195) வேந்தனவன் இரண்டாயிரம் ஆண்ட தப்பால்
வினையமுற்றுச் சாலிவா கனனுந் தோன்றிப்
பாந்தமிகு முந்நூற்று நாற்பத் தொன்ப
தாண்டகிலம் அரசுரிய செங்கோ லோச்சி
ஏந்துகங்குல் நற்போசன் ஐந்நூ றுண்டான்
சுப்புராய லறுநூற்றுத் தொண்ணூற் றைந்து
போந்தவே கர்த்தாக்க ளெண்பத் தைந்து
பிறையிசுலாம் அறுபத்தி ரண்டொரு நாள்

(196) ஒருமையிலா தாழிக்கரைக் கப்பா லூற்றோன்
ஓதுமந்தப் பறட்டையன்செம் மூஞ்சி சுக்கன்
பெருமையுடன் எழுபத்து மூன்ற தாண்டு
பேதமற ஆண்டிடவே இவன்சார் புற்றோன்
கருமையில்லா வெள்ளைநிற மாகத் தானே
கபடுற்றுக் கவர்ந்துதொண்ணூற் றுற தாண்டு
வறுமைசெய் தாண்டபின்னிதுகு லத்தான்
வந்திடுவன் விசயனென்றோ ரரசன் தோற்றி.

(197) தோன்றியி றுறவுநான்கை வருட மாகுந்
துறைதவரு முறைபிசகா திருந்து ஓங்கும்
மேன்மையுற இதுகடந்து நாள துய்ய
மேதினியிற் பதினெண் பேர் கூட்டத்துற்ற

ஆன்மநலம் அறிந்தகிள்ளு நாமக் காரர்
அகிலசக்கிரப் பார்வேந்தாய் அழியா தென்றும்
பான்மையுடன் அரசாள நான்மட் டல்ல
பகரவில்லை சினேந்திரமா முனியும் சொன்னார்.

(198) சொல்லதிகப் பின்பாலாய் வெள்ளைச் சுவேதன்
சூட்சியதாய் ஆளுமந்தக் காலந் தன்னில்
தொல்லையுடன் நம்மவரைத் தொந்தரித்துத்
தோன்றலிடர் கொலை சமராய் வதைக்கு நாளில்
வெல்லமளிப் போலோகம் புரண்டே நின்று
வெகுவாகச் சீணிக்கும் செகத்தி லேதான்
அல்லல் செய்யும் அரசனெனும் வெள்ளைச் சுவேதன்
அரசிழப்பா னிதுநாளென் றறைய லாமே.

(199) ஆகுமந்த நாளதனிற் போக நாதர்
அகிலபர தேசவெளி விட்டு நீங்கி
வாகுறவே நமதுபுவி வருவ தாக
வாக்களித்துச் சென்றிட்டா ரந்நாள் தன்னில்
பாகுபெற எனதுரிய சமாதிக் கூடம்
பளபளத்துச் சோதிலிங்கம் தானாய்த் தோன்றி
நாகுபண சலபடதி நவநீ தங்கள்
நாட்டமுற்று மனுக்கள் வசமே யோங்கும்.

(200) ஓங்குவளர்ந் தோங்குபர நாத விந்தின்
உண்மைநிலைச் சூட்சங்கள் வெளியாய்ச் சாற்றித்
தேங்கமழும் சோலைபுனை யருவி பாயத்
தித்திக்கும் வாதவித்தை வயித்தி யங்கள்
பாங்குபெறு பஞ்சவிதி தீட்சை மந்திரம்
பயனுரிய உலகநிலை பேத வாழ்வு
தீங்கின்றிக் கூறிவைத்தேன் இருநூ றுள்ளே
திறமினிய அரனுமை பால்இந்நூல் முற்றே.

இந்நூலில் சொல்லியிருக்கும் திருநீற்றுப் பச்சிலைக்கு அருகு பத சிவமூலி என்பது பெயர். இதனால் பல நுட்பங்கள் உண்டாகும். மிகப் பல சரக்கும் நீறும்.

**கோரக்க முனிவரருளிய சந்திரரேகை இருநூறும்**
**உரையாசிரியர் ந. சேதுரகுநாதன் உரைக் குறிப்பும்**
**முற்றிற்று.**

# கோரக்கர் அருளிச்செய்த
# நமனுசத் திறவுகோல்

ஹம் ஸம்ஸ்ரீ ராஜசிவ ஆனந்த நந்திஓம்
யாமனீ கோமனீ யாகாதி கம்ஸாதனி
சம்பனரி வாசனி சகஸ்ரதள ரூபிணி
சத்வகுண சம்பனி சாயுச்ய நேமவதனி
நம்மிலகு நாரணி நயனபரி புராரணி
சயனசிந் தாமணி சுலோகசா மீபணி
தம்பவொளி வீசநம னுசத் திறவுகோல்
தானேதச் சத்தியென் தாயிரு தாள்சரண். (1)

சரணமிட் டுமைதாட் பதமல ரணிந்திடும்
பாலனெனை ரட்சித்து நேர்கிரண மதிவீச
கிருபாகர கௌரிநீ கிளருதய சம்பத்துத் தா
கானகண சித்தர்கள் கழறும்பல நூல்களின்
கபடம தைக்காட்டு முன்பாய வரமருள்வீர்
வரமருள் வீர்நம னுசத் திறவுகோல்
யானேத வந்துய்ய வே வந்தோம்.........
(சுவடியில் அரையடி குறைவு) (2)

வந்தேயி தோமைந்த னேநந்தி கோரக்கர்
வாசமதி லுண்மனு வையகத் தோங்கிடுஞ்
சுந்தரத் தவனிமிசைச் சித்தர்ாளின் மேலனு
சுகிதநவ வமுது கைக் கீந்தோம்
கந்த கம மூலகினில் கம கைக் கோங்கவே
கனகவருள் நிறைசெல்வ ஞானசித்த ரூபனே
நிந்தையிலா நமனுசத் திறவுகோல் நீயோதி
நிகழ்த்தவரம் அருள்பெருக நிலைவாழ்கவே (3)

வாழ்வுறவே வந்துபதி வழியைக் காட்டி
வழங்கிடுவேன் வாதையறத் திறவுகோலில்
தாழ்மையெலாம் அகன்றிடமுத் தனங்க ளோங்கத்
தக்கபொரு ளிந்நூலைக் கண்டு சொன்னேன்

ஊழ்வினைகள் அகற்றுதற்காய் உரைத்தேன் சித்தன்
உடல்பொருளு மாவியுடல் நீங்கா துய்யச்
சூழ்பதினெண் சித்தர்களின் சூட்ச மாறல்
சூதெல்லாம் வெளியுரைத்தேன் இந்நூற் குள்ளே (4)

## மறைப்பின் வெளியுண்மை

உள்ளவிதம் அகத்தியரும் பரிபா ஷைக்குள்
ஓதிவைத்தார் மாதர்மா தாந்தம் தன்னை
தெள்ளமுதம் என்றதற்குப் பேரும் சாற்றித்
தேவரொடு முனிவருண்டு வாழ்ந்தா ரென்றுந்
தள்ளிடவும் ஆகாதென மாதாந் தத்தைத்
தாக்கிவிட்டால் வெகுகெடுதி செய்யு மென்றும்
கள்ளமறக் காட்டியுடன் மறைத்தா ரேட்டில்
களங்கமறுங் குடநீர்மா தாந்தம் உண்டே. (5)

உண்மையுட னகத்தியரு மிலக்க சௌமியம்
உரைத்திட்டார் முதற்காண்டம் தன்னிற் சூட்சம்
திண்ணமுடன் திருநீற்று மூலி மர்மம்
தெளிவாகச் செப்பினேன் மறைத்தார் நூலில்
வண்மையுடன் மூலிதன்னால் கோடா கோடி
வாதமும் வைத்தியமும் வழுவா தோங்கும்
நண்ணிபர மானந்த நந்தித் தேவர்
நவின்றார்குட நீருண்மை மறைப்பாய்த் தானே. (6)

## குட நீரின் பெயர்.

மறைப்பின்றிக் குடநீரின் மர்மப் பேரை
மகிழ்வுடனே செப்பிடுவேன் மயக்கம் நீங்க
முறையுடனே மூலப்புளி முதியார் கூந்தல்
முலைப்பாலாங் கலைப்பாலாந் தலைப்பா லாகும்
இறைநாதம் பரைநாதம் இஞ்சிச் சாறும்
ஏமநீர் வாமநீர் சிப்பி வாய்நீர்
திரைநீரும் தேனமுதம் முட்டை நீரும்
திகழ்வான மலைநீரும் கருத்தைல மாமே. (7)

ஆகும்பழச் சாறினிய அத்திப் பாலாம்
அண்டநீர் உப்புநீரும் ஆவின் பால்தான்
வாகுடைய சோடசத்தின் செயநீ ராகும்
வண்மையுள்ள பச்சையென்றும் தூய்மை என்றும்
பாகுரிய குமரிநீர் கடல்நீர் விண்ணீர்
பாதநீர் சுரபிநீர் சுத்த கெங்கை
நாக்குமிழ்நீர் தலைமுலைமை மைநீர் ஏனுய்ப்
பாலென்று மறைந்திட்டார் குடநீர்ப் பேரை. (8)

பேரெல்லா மிதற்கன்றி வேறுன் றில்லை
புகழ்வாய்நவ சித்தர்களும் புலனுய்க் காட்டி
காரென்றும் கருவென்றும் நூலிற் சொல்லிக்
கலங்கவைத்தார் மனுக்களையும் கபடங் கொண்டே
சீரென்றும் பெறுவதற்காய்ச் செப்பு மிந்நூல்
சித்தர்களின் பரிபாஷை திறந்து காட்டி
நேராயென்று மிருந்தென்னைத் துதிப்போர்க் கையா
நிலைகாட்டிக் கிடைத்திடுமென் திறவு கோலே. (9)

கோலறியாத் திரியும்புவிக் குருட ருக்கும்
கோல்கொடுத்து நிலைகாட்டுங் குருநூ லிந்நூல்
வேலெடுத் தெய்பதுயர் வினையும் நீக்கும்
வித்தையெலா மியம்பினேன் வாதம் வைத்தியம்
சாலமதி லழுகண்ணர் அகப்பை மூலர்
பாம்பாட்டி சட்டமுனி போக நாதர்
ஞாலமதில் பதினெண்பேர் செய்நூற் கெல்லாம்
நயமாமித் திறவுகோல் திறந்து காட்டும். (10)

காட்டிடவு மாகாதெனப் பதினெண் பேர்கள்
கருதியே சதுரகிரிச் சங்கம் கூடி
நாட்டினர் பதினெண்பேர் சித்தர் தாமும்
நாலாயிரத் தைந்நூறு நூலின் பேர்கள்
பூட்டிய பதினெண்மர் பூரண பொக்கிஷம்
என்றுபேர் பூட்டியதி லுண்மை சொன்னேம்
தாட்டிகமாய் வெளியிடவு மாகா தென்றே
தந்திரமாய் அகத்தியரும் பொதிகை வைத்தார். (11)

## அகத்தியருக்குச் சித்தர்கள் சாபம்

வைத்ததொரு நூல்தன்னில் வெளியாய் எல்லாம்
ஓதிவைத்தோம் புவிமனுச்சந் தேகம் தீர
மெய்த்தவநூல் மேதினியில் அறியா வண்ணம்
மறைவாக வகத்தியரும் மறைத்த தாலே
உய்வாக என்பாலாம் சித்த ணுர்கள்
உரிமையிலா வகத்தியர்க்குச் சாபம் ஈந்தே
தூய்மையுடன் வைத்தநூல் இவர்கண் ணுக்குத்
தோன்ருமல் போகுங்கண் தெரியா தென்றே. (12)

என்றேகிச் சாபமிட்ட போதே நூலும்
இழிவாகப் பாறையைப்போல் திரண்ட தங்கே
நன்ருகப் பாறையிடம் சென்ருேர்க் கெல்லாம்
நகருமது தெளிவாக நூலும் தோன்றும்
நின்ருலும் அகத்தியரின் கண்ணுக் கிந்நூல்
நிலவரமாய்த் தோற்றிடுவ தில்லை யில்லை
வென்றிடவே நூலிருக்கும் பாறை யெய்தி
விகற்பமற ரவிமேகலை யுரைத்த மந்திரம் (13)

## பொக்கிஷம் கிடைக்க

மந்திரமுடன் எந்திரத்தை மனமா ரத்தான்
மகிழ்வுடனே சித்தர்களைச் செவித்து வேண்ட
நிந்தையற வந்திடுவா ரவரை நோக்கி
நிறையாகப் பதினெண்மர் பூரண பொக்கிஷம்
விந்தையுடன் வேண்டுமெனக் கேட்டா யாகில்
வினையமற ஈவாரோர் முகூர்த்தத் துள்ளே
சிந்தையற நூல்பார்த்து வேண்டு மவற்றைச்
சிதருமல் அறிந்துணர்ந்தே ஈந்தோர்க் கீவாய் (14)

## சித்தர் கைலாச தெரிசனம்

வாய்மையுடன் அகத்தியரும் பூரண பொக்கிஷம்
விளங்கவே ஒளிந்தஇடம் பாறை யைப்போல்
தூய்மையுற வளர்ந்ததொரு மலையின் நாமம்
துகள்சித்தர் பருவதமென் றதற்குப் பேரு

மெய்மையுறும் பருவதத்திற் கடையா ளங்கேள்
மிகுவாதத் தேனருவி புத்தேன் சோலை
ஆய்தலுறக் குன்றருகில் ஆம்பல் குண்டம்
அருவிநீர்ப் பாய்ச்ச லோடை. (15)

ஓடைமேல் சந்தனமுந் தேவ தாரு
உயர்காம தேனு பசுந்தே னிற்கும்
மேடையங்கே மேலுமையின் கோவி லுண்டு
மெதுவலுடன் அவ்விடத்தில் சென்று பார்க்க
ஆடையன்றி ஒருவரங்கே தவத்தி லுய்வார்
அவர்பின்னுல் சித்தர்பர் வதமுந் தோன்றும்
வாடையிட் டவரைவேண்டிச் சென்று யானுல்
வாதையுற வடபாகம் போகும் பாதை. (16)

பாதையிலே புனலருவிக் கூபம் உண்டு
பதருமல துகடக்கப் பாறை வட்டம்
வாதையறத் தோன்றுமதில் தென்பா கத்தில்
வழுத்துமந்தச் சித்தர்பர் வதமு மாகும்
தீதையெல்லாம் விலக்கஅந்தப் பாறை யுற்றுத்
திடமாக ரவிமேகலை சொன்ன மந்திரம்
நீதைரிய மாகஇருந்து செபித்து வேண்ட
நினைத்ததொரு சித்தர்பொக் கிஷமும் கிட்டும். (17)

கிட்டுதற்காய்ச் சித்தர்களின் வாசத் தானம்
கிளத்திடுவேன் கெவனமுடன் கேட்பீர் மக்காள்
தட்டவிலா நீநின்ற பாறைக் கீழ்பால்
தணிவாகச் சலமருவி யாறு ஓடும்
திட்டமுட னதுகடந்து கரையி லேறத்
தேவியுடை யாலயமுந் தோன்று மைந்தா
கட்டமற அவ்விடத்தில் குன்றென் றுண்டு
கலங்காமல் குன்றுக்குள் நுழையு முன்பாய் (18)

முன்னுக ரவிமேகலை யுரைத்த மந்திரம்
மயங்காமல் இவனைநினைத்துச் செவிப்பா யானுல்
நன்மையுடன் நானழைத்துச் சொல்வேன் சித்தர்
நண்ணியங்குச் சித்தர்க ளில்லங் கூட்டம்

பின்னமிலாப் பெண்டுகளும் பிள்ளை மெத்தப்
பிரபலமாய் வாழ்ந்திருக்கும் தேசம் நாடு
........................ ........................ ........................ ........................
ஊரனந்தம் பேரனந்தம் உண்டே உண்டே
சுவடியில் 1வரி குறை (19)

உண்டந்த மலைபுகுந்து வரும் போது
உத்தமமாய்த் திருநீற்றுப் பூண்டின் கோட்டி
விண்டுநிறை முதற்காவ லிதுதான் காண்பாய்
விளங்கிடவே பேசிடுமிம் மூலி யும்மே
அண்டிவரும் அருகுபத சிவமூலி என்றும்
அறைந்திட்டார் பேர்மாற்றிச் சித்த ரூர்கள்
தண்டமிழ்சூழ் சித்தர்வாழ் நகரத் துள்ளே
சென்றவுடன் உன்றனக்குப் பிரணவந் தோன்றும். (20)

## சித்தர்களின் குடும்ப வாழ்க்கை

தோன்றிடவே சித்தர்களு முன்னைக் கண்டு
தேடிநீ வந்ததொரு வயணங் கேட்பார்
ஊன்றிடவே உத்தமமாய் மனத்தை நாட்டி
உனக்குவேண்டும் வரமதனைக் கேட்டா லீவார்
தேன்போலே உன்றனக்கு மணமுஞ் செய்து
திடம்பெறவே சிவனுமைவா றிடமுங் காட்டி
மேன்மைபெறச் செய்திடுவா ருன்ற னக்கு
மிகவாக ஐந்துபெண்கள் பெண்டி ராகும் (21)

ஆகுமந்தப் பெண்களொவ் வொருவ ருக்கும்
அரியவீரர் மைந்தர்களும் உண்டு கண்டாய்
பாகுமந்தப் போகருக்குப் பெண்டீர் பிள்ளை
பலருண்டு பாரினிலே யகத்தி யர்க்கு
ஏகுதலாய் இவ்வாறு பேரன் பேர்த்தி
இயல்பதுவும் மெத்ததுவாம் பதினெண் பேர்கள்
(ஒரு வரி குறை) (22)

பேர்களுயர் மலைக்குகையில் பட்டம் பெற்றுப்
பிரபலமாய் ஆவியுடல் அழியா துன்னிச்
சீர்பெறவே ஞானசித்து நீயு மாகிச்
செகமதிலே சிவன்சத்தி யூடே வாழ

நேர்மையுடன் நமனுசத் திறவு கோவில்
　　நிகழ்த்தினேன் சூட்சமிதை வெளியா கத்தான்
கார்ப்பதற்காய்ப் பதினெண்மர் சூட்ச பொக்கிஷம்
　　காண்பீர்ரவி மேகலையால் மகிமை தானே (23)

(1) அகத்தியர் முடிவு

தானந் தவம் தனித் தன்மை தனைத் தாங்கும் புட்பம்
ஞானம் பெருகு மியல்பறிவான அண்ட பிண்டம்
பானம் பரைநாதம் விந்து விளைசடம் உருவாய்த்
தேனங் கருக்குழிக் குடநீர் தெவிட்டாததின் முடிவிதுவே.

(2) நந்தீசுவரர் முடிவு

சூதம் வழலைச் சுழிமுனை சுழுத்தி சுக சூலதுறை
நாதம் நதிக்சுழல் நஞ்சு நங்கையோனிக் கருக்குழிவாய்
பேதம் பிணக்கற்றுணர்வு பிறைமா ரவிகோளணிகால்
மாதர் மகவு மங்கைக் குடமதிநீர் மதிமானப் புவியிதுக்கே.

(3)

அஞ்சும் ஆம் அரசும் பரிமா மாமரி கரிமா
கொஞ்சுங்குழி குருவேர்நெடி குலைவானதி பதியாய்
நெஞ்சம்பொழி நிலைக்கநெறி நிறைவேருயர் கொடிமா
வஞ்சுங்கருக் குடநீர்பதி மிகவா முயர் முகிலே

(4) மச்ச முனிநாதர் முடிவு

மடவார்தனி மடிமீதறி மயிருடறி மதிபால்
திடமாமுடி திகழ்பூவலை திரைகோளுதி கனியே
நடமாடுட னதிமேற்புனல் நலியாதலை தடமே
யிடமாமங்கைக் குடநீருறை இதுவால் பலசித்தே

(5) அகப்பை நாதர் முடிவு

பச்சைபடர்ந்த மலைவித்துறைந்து மதிபரிபால்
இச்சிச்சிறந்த இருசெக்கச் செவந்த தடமடவார்
கொச்சைக் குவிந்த குழிகுட்டித் திரண்ட அமுதளிவாய்
மொச்சைப் படர்ந்த குடிமுத்திருந்த குடசலமே.

(6) பாம்பாட்டிச் சித்தர் முடிவு

நஞ்சையொரு பாற்றடத்தில் நயந்துகரி வாரிபுக்கி
கஞ்சிகுழல் கழகமென கலேசே பூரகும்பச்
சஞ்சித் ததிநிறை சரக்கைச் சருகதாக்கும்
வஞ்சியரின் குடநீரே வாலேவய தாகுமுற்றே.

(7) இடைக் காட்டுச் சித்தர் முடிவு

இடைஇடை இகபர இருமுலே கலச முகிசி சார்
நடைநடை வருக நரைதிரை யகலும் பதியார்
மடைமடை வழிவளி மதலேயின் இருகழல் கொடிநேர்
அடைகுடை குடசல மதிலதி பிறவிநோய்தீருமே.

(8) குதம்பைச் சித்தர் முடிவு

குதலேக்கொரு குருதி குமரிப்புழை கொள் பூந்தடமே
மதலேப்பணி பரியப்பரை பரவுகாலே உருவுற்றிடுமுயிராய்
இதமுச்சுழி இதமுக்கமழ் இறையற்ற தமிழுட்பலவுளதிரம்
சுதமாசுத மதளாரதி குடநீர்குரு பிரசாதமுன்னமுள நீர்

(9) தன்வந்திரிச் சித்தர் முடிவு

தன்னினத்தால் தன்னினத்தைத் தன்னினமே தான்
சார்தல் வேண்டும் வேண்டும்
பின்னமிலாப் புன்மலத்தில் போகும் தூரும் பூநீரும்
பூச்சோரைப் பேணிப் பேணி
கன்னிகுழல் கால்வழியே கருத்தரித்துக் காமனமாய்ப்
பத்துத் திங்கள்
மன்னிவரும் மதனேகுட நீராண்மைச் சித்து ஓங்கும்.

(10)

கண்ண மாக்கனி காலுமேலுமாய்க் காட்டினர்கலே
நாட்டினர்
புண்ணு ளகத்தி பூசு பூசுங்கா பூவழல்புரை பூவழல்
விண்ணு மண்ணுய விந்துவால்கடி தலமதேநில வளமதே
நண்ணு தங்கையின் குடசலநவ நாதமே சொர்ண
வாதமே

## (11) வான்மீகிச் சித்தர் முடிவு

வாழ்விஞ் சனுரி சுரிவாழ் மிஞ்சும் பரிவாழ் வுண்டுண்டு
குறுந்தூமை
சூழ்விண் டெரிமாக் சூழ்பெண் டிருமால் குங்குங்
குமரி கரிதாகம்
சீழ்பெண் நஞ்சுச் சீழ்தன் வித்துச் சீர்பெண் புளிமா
மரிவேகம்
பாழ்போ காக்குட மாதபதிநீர் பாரோங் குயில்பல்
சரக்காமே.

## (12) இராமதேவர் என்ற யாக்கோபுச் சித்தர் முடிவு

ஓதரிய பிம்பம் உணர்மாயை வித்து ஒன்றி யொன்றுய
நாதமணிச்சுடர் நடுவாய் நஞ்சாகி வட்ட நாடகமாய்
பாதகத்தில் பேசாதசேர்க்கை பொதிந்து துளித்தே திரண்டு
சீதக் கருக்குழிக் குடநீரே சிறந்த தேயங்கு குருமுடிப்பாரே.

## (13) கொங்கணச் சித்தர் முடிவு

கொங்குருதி பால்சொரிய கோதையழல் கேணி மது
ரமாய்
தங்குமரி தண்டுபரை தம்பஒளி வண்டுசுழல் சூழ்
சங்குவளை யுந்திமணிச் சந்துநடு புட்பகலசம்
வந்தவழி யோனிதுறை வந்துபதி குடநீராமே.

## (14) கருவூர்ச் சித்தர் முடிவு

கருகிகண் தாரை கருவிலமைத்திரு கலை களிவாயழல்
கங்குலாளி
பருதிமதிபரை பரவு இரத்தினக் கரணவ பூதகப் பண்
பூடாடி
குருமண கத்துறை குடிகொடி நவவழி குணநதி
பனிவளர் குடமாகித்
திருவுற லக்கர்ண திக்க நகமுகத் திடநட சலமங்கைக்
குடநீரே.

## (15) சுந்தரானந்தச் சித்தர் முடிவு

சுந்தரம் பரைநாதம் சூழ்வழலை யுப்புச்
சுயம்பாம் சுக்கிலச் சுரோணித மொன்றதுவாம்
எத்தரம் மலரிடைபூ ஏறழிஞ்சி கனத்திரை
மணிக்கொடி முடித்தோன் சுழல் வண்டு.

இந்திரம் கந்தம் கீழ்குள விண்ணடிமூலம்
புளிபுனல் பொன்புலால் அத்திப் பால்
சிந்துரச்சிப்பிச் செயநீர் ஊமச்சி ஊனீர்
சிறுநீர்கருநீர் செகமுன் குடிநீர் முடிபிதுவே.

## (16) திருமூலச் சித்தர் முடிவு

கும்பங்குடி குமழ்கோண வட்டமுக் கோணம்
தம்பந் தனித்தவத் தம்பரம பரச்சித்த ம்பரமுட்
கம்பங் கலைமாசி பூநீரகம் பிறவிமதி பீசமுயர்ச்
செம்பொன் மதிபால் சிகரத்துறுகுட நீரிதுவே.

## (17) போக சித்தர் முடிவு

போகவர வற்றஇடம் போகவர வுண்டுசுகம்
புனிதம் புனிதமும் பர்த்தில்
புரைகாய வழிகழல் நாறுபுல துரத்திப்
புண்ணிடைக் கேணிப் பூமலராய்த்

தாகந் தனித்தமங்கைத் தனமு மல்குல்
தங்கும்வழி காமத் தடங்குடிலைத்
தவத்திலம் பரபரந் தனித்தூஞ் சங்குத்
தகத்திலுறைப் போகுப்புக் கலந்த வட்டத்

தேகந் திரண்டு திங்கள்ஈ ரைந்துநிறை
திடமெனு வனப்பதி தீயினுள் ளே
திதி நவக்கோள் தினத்தி லங்குமுயிரத்
தெளிமக வெளிவரு திலகுகடம்

பாகம் பனிக்குட நீர்பல ரதுவாய்ப்
பகரும் பதினெண் சித்தரை
பலதங் கோடிச்சித்தர் ப்னிக்குட நீரதனுல்
பலதுண்டணி கற்பகாய முப்பதுவே.

## (18) கோரக்கர் முடிவு

கோரமில்லாது மலர்க்குமிழ்க் கேணியது மலரப் பாணியது
சாரமுற் றுரையாடும் பரைநாதமணி மங்கை சூதமணி
ஆரமுறைப் பரநாதம் அழலன்னம் தண்ணீர் பரைபிர
சாதம்
தீரமுள்ளணி மாது திகழ்தித்திருக்குந் தேனமுத புளி
கோதும்.

(19)
கட்டுயர் கட்டுக்குடம் கலிகார சாரம் ஆதியுப்புசடம்
திட்டமோ டாதியுப்பு தொல் தீ பற்றி யெரிந்திடா
சோதியுப்பு
மட்டில்லா மாதுகுடங் கமழ்மணக்கும் யோனிவழி
படியாந்தடம்
கிட்டியே வெளிநாடுங் குழவிகின் கினியோடு குகு
கூவாமென்றே.

(இதுவரை 19 பாடலில் பிறர் முடிவும் தமது முடிவும் கூறினர். இனி நூல் 24ஆம் பாடலிலிருந்து தொடங்குகின்றது)

இத்துறை யாழியுற்று இலங்கு இலங்கிய மாதுகுரு குடிநீர் பெற்று
வெத்தியுயர் சரக்கிலுற்ற வினவேக மதிகமுண்டு கவனம் கவனம்
சித்தர்கள் மனமதுற்ற என்னல் செப்பினர் வெளியாக இயற்றகரு
சத்தியின் தாளையுற்று இந்தச் சாகரத் துரைத்தே னுண்மை.(24)

## சிவ உப்பு

கேளமுதக் குமரிநீரும் படிதா னிரண்டு
கிருபையுடன் பலம்பத்துப் பூநீ ருகும்
வாளத்த வெடியைந்து பலமும் கூட்டி
வண்மையுடன் கரைத்துநீர் தெளிவி றுத்து
மீளவதை யடுப்பேற்றிச் சிறுதீ யிட்டு
மெதுவலுடன் எரித்துமே சுண்டக் காய்ச்சு
கூளதுதான் பூத்துவரும் அருணன் போல
குணமான சிவனுப்பு இதுதா னுச்சே. (25)

ஆச்சென்று சொல்லுவதா லறிவா ரில்லை
அந்தவுப்பைக் கல்வமிட்டுக் குடநீர்ச் சாற்றால்
பாய்ச்சியரை சாமம்நான்கு பண்பாய் மைந்தா
பதருமல் வட்டுசெய்து ரவியுலர்த்தி
மீச்சலறச் சில்லிட்டுச் சீலை யைந்து
மெதுவாகத் தீட்டிமண் மறைவில் ரெண்டு
கூச்சலறப் புடமிடவே கட்டிப் போகும்
குணமாகப் பின்னுமதைக் குழிக்கல் தாக்கே. (26)

தாக்கியதைக் குடநீரும் சாமம் ஆட்டித்
 தவருமல் வட்டுசெய்து ரவியு லர்த்தி
நோக்கியே சீலைமண் வலுக்கச் செய்து
 நுண்மையுடன் குக்குடமாய்ப் புடமுந் தாக்கப்
பாக்கியரே இவ்வாருய்ப் புடமு மூன்று
 பண்புறவே போட்டுவிடு பளிங்கு போலாந்
தாக்கியநீர் கொடியசுண்ணம் ஆகும் கண்டாய்
 தீதில்லாச் சிவவுப்புச் சுண்ண மாச்சே. (27)

ஆச்சரியம் உப்பைப்புட மிட்டால் சுண்ணம்
 அல்லாவிட்டா லூறலுற்றுச் சிதாகா யம்போம்
பேச்சின்றி யிறுகியுப்புக் கட்டி நிற்கும்
 பெருமைபெற்ற சிவவுப்பு இதுதான் மக்காள்
மாச்சரிய மில்லாது இதற்குப் பேரு
 ரவிபீசம் மதிபீசம் அரன்விந் தாகும்
தாழ்ச்சியிலா தாடுதற்குத் தாயைப் போற்றித்
 தாக்கிடுவேன் சத்தியுப்பு உண்மை காணே. (28)

**25முதல் 28முடிய உரை.**

குமரிநீர் படி 2. பூநீறு பலம் 10. வெடியுப்பு 5பலம். இவ் விரண்டினையும் அந்நீரிற் கரைத்துத் தெளிவிறுத்து அடுப்பேற்றிச் சிறுதீயிட்டெரித்துச் சுண்டகாய்ச்சுக. கூழாக இருப்பது அருணன் போல் பூத்து வரும். இது சிவவுப்பு. இந்த உப்பைக் கல்வத்திலிட்டுக் குடநீர்ச் சாற்ருல் நான்கு சாமம் அரைத்து வட்டாக்கி உலர்த்திச் சில்விட்டுச் சீலை 5செய்து மண் மறைவில் புடமிடுக. இங்ஙனம் 5புடமிடக் கட்டிப் போகும். பின்னும் அதைக் குழிக்கல்லிட்டுக் குடநீரால் 1சாமம் ஆட்டி வட்டுச் செய்து உலர்த்திச் சீலைமண் வலுக்கச் செய்து கோழிப்புடமிடுக. இங்ஙனம் 3-புடம். பளிங்குபோல் கொடிய சுண்ணமாகும். இது தான் சிவவுப்புச் சுண்ணம். உப்பைப்புடமிட்டால் சுண்ண மாகும். இல்லாவிட்டால் ஊறலுற்று வீணய்ப் போகும். இதற்கு மதிபீசம், ரவிபீசம், அரன்விந்து என்றும் பெயர் உண்டு.

## சத்தியுப்பு

(சத்திச்சாரம் என்பது அமுரியுப்பு)

காணவே பனிக்குடநீர் படிதான் ரெண்டு
 கருத்தறிய மஞ்சள்நிற மாயி ருக்கும்
தோணவே சத்திச்சாரம் பலமும் பத்து
 தொகுத்திட்ட பூநீறுதான் பலமும் ஐந்து

பூணவே குடநீரில் கலக்கி வைத்துப்
புகழாகத் தெளிவிறுத்து அடுப்பி லேற்றி
நாணவே தெளிவிறுத்துச் சுண்டக் காய்ச்ச
நலங்காமல் உப்பதுவும் பூக்கும் பாரே. (29)

பாரிதற்குச் சத்தியுப்பு என்றும் பேரு
பலிதமுள்ள மதிபிசம் என்ப தாகும்
நேரிந்த உப்பதனைக் குழிக்கல் விட்டு
நிகழ்த்திடுவாய் நாற்சாமம் குடநீர் தன்னுல்
பூரித்தே வட்டுசெய்து ரவியு லர்த்தி
பூப்புடந்தான் மண்மறைவி ரெண்ட தாகும்
ஆரியதே கட்டிவிடும் வட்டோ மஞ்சள்
அதுநிறம தாகுமிது சத்தி யுப்பே. (30)

உப்பதனை யம்மியிட்டுக் குடநீர் தன்னுல்
உகந்துஒரு சாமமது ஆட்டி வில்லை
தப்பிதங்கள் வாராது வட்டுச் செய்து
தாக்கிவில்லை சில்லிட்டு வலுவாய்ச் சீலை
ஒப்பவொரு சாணளவு எருவ டுக்கி
மூன்றுபுட மிவ்வாறு யிட்டுப் பார்நீ
கப்பிகடுங் காரமுள்ள சுண்ண மாகும்
கனமஞ்சள் நிறம் உப்பு வேகம் மெத்த. (31)

மெத்த சத்திச் சுண்ணமுடன் சிவசுண்ண மிரண்டு
மிருசமனுய்க் கூட்டிக் குழிக்கல்லி விட்டு
சுத்தசல மானகுட நீரால் சாமம்
சூதின்றி யாட்டிவில்லை ரவியு லர்த்திச்
சித்தமுடன் குக்குடமாம் புடமும் மூன்றுஞ்
சிதரும விட்டிடவே கொடிய சுண்ணம்
முத்திபெறச் செப்பிடுவே னிதற்குப் பேரு
முப்புவென்றும் அண்டக்கல் என்றும் சொன்னேம். (32)

சொல்லிவைத்தா ரகத்தியரும் குருநூல் முப்பு
சுகமாக ஐம்பதுக்குள் சூட்சா சூட்சம்
வெல்லுதற்காய்க் குருநூல் விளக்கம் பாரு
விதமாகச் சத்தியுப்பு சிவத்தி னுப்பு

தொல்லையில்லா அண்டக்கல் முப்பு உண்டை
தொகுத்திட்டார் ரோமரிஷி சூத்திரம் நூறில்
வல்லபமாய்ச் சட்டமுனி சூத்தி ரந்தான்
வளமுரைத்தார் இரண்டு நூறில் சூட்சம் சொன்னார் (33)

சொன்னவிதம் அறிவதற்காய்த் திறப்புச் சொன்னேன்
சூட்சமெல்லாம் வெளியாக விரித்துச் சித்தன்
கன்னலாய் முன்னுரைத்த சிவனார் சத்தி
களங்கமில்லா உப்புகுருசுண்ணம் கனிந்து போற்றி
பின்னமிலாச் சரக்குகளில் ஒன்றுக் குச்கால்
பேசாமலிட்டுக் குடநீராட்டி
உன்னி கௌதாரிப் புடத்திற் சுண்ணம்
ஓதரிய சத்திசிவ குருவி தாச்சே (34)

குருவான உப்புச்சுண்ணம் வெள்ளி செம்புக்
கொருபத்துக் கொன்றீயப் பதினா றுரும்
கருவாகும் உருவாகும் காலம் தன்னைக்
காணும லோட்டுவிக்கும் காயங் கற்றூண்
பேருபெறு ஞானமுடன் யோகஞ் சித்தி
பேசரிய சமாதிநிலை நிலைத்துப் போகும்
உருவான தேகந்தன்னை யனல்மண்ணுந் தின்னு
ஒருகோடி நோய்களிதைக் கண்டா லோடும் (35)

கண்டிடவே என்போலாஞ் சித்த னார்கள்
காசினி யில்மனுக்க ளறியா வண்ணம்
விண்டிட்டார் பரிபாஷை விரிவா கத்தான்
விளக்கமுடன் உண்மையைப் பின்னு ரைப்பேன்
அண்டிவரும் உப்புகுரு சுண்ண மப்பா
அவனிதனில் கையடக்கம் செய்வாய் நீயே
தெண்டிசையில் சித்தர்கண்டால் கொண்டே போவார்
பேரண்டம் ஒன்று சொல்வேன் (36)

29 முதல் 36 முடிய உரை. சத்தியுப்பு.

மஞ்சள் நிறமாக இருக்கும் பனிக்குடநீர் இரண்டு படியில் பத்துப்பலம் சத்திச்சாரமும் ஐந்துபலம் பூ நீறும் கலக்கிவைத்துத் தெளிவிறுத்து அடுப்பிலேற்றிச் சுண்டக் காய்ச்ச உப்பு பூக்கும்.

இதற்குச் சத்தியுப்பு என்று பெயர் வழங்கும், மதிபீசம் என்றும் கூறுவர். இந்த உப்பைக் குழிக்கல்லிலிட்டு நாற்சாமம் குடநீர் விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து கலசத்திலிட்டுச் சில் விட்டுக் கவசம் செய்து மண்மறைவிற் புடமிடுக. இங்ஙனம் இரண்டு புடம். கட்டிவிடும். நிறம் மஞ்சள். இது சத்தியுப்பு. இதனை 1 சாமம் மீண்டும் குடநீராலாட்டி வில்லைதட்டிக் காய வைத்துக் கலசமிட்டுச் சில்விட்டுக் கவசம் செய்து சாணளவு எருவடுக்கி ஒரு புடம். இங்ஙனம் 3 புடமிடச் சுண்ணமாகும். மஞ்சள் நிறவுப்பு. வேகம் மிகுதி.

இந்தச் சத்திச்சுண்ணத்துடன் சிவசுண்ணமும் சம எடை சேர்த்துக் கல்வத்திலிட்டு 1 சாமம் குடநீராலரைத்து வில்லை தட்டிக் காயவைத்துக் கலசமிட்டுச் சில்விட்டுக் கவசமிட்டுக் காய வைத்துக் கோழிப்புடம் மூன்று இடக் கொடிய சுண்ணமாகும். இதற்கு முப்பு என்றும் அண்டக்கல் என்றும் பெயர் உண்டு. அகத்தியர் முப்புக் குரு நூலும், உரோமரிஷி சூத்திரம் நூறும், சட்டமுனி சூத்திரம் நூறும் பார். அவர்கள் கூறிய வகை நுட்பம் அறிவதற்காகத் திறப்புச் சொன்னேன். மேற்கூறிய உப்புக்குரு சுண்ணத்தை சரக்குகளுக்கு ஒன்றுக்குக் கால் கூட்டிக் குடநீரா லாட்டிக் கௌதாரிப் புடமிடச் சுண்ணமாகும். இது சத்திசிவ குரு. வெள்ளி செம்புக்கு ஒரு பத்துக்கு ஒன்றீயப் பதினுருகும். உடல் கற்றூணுகும். ஞானம் சித்தி, யோகம் சித்தி. சமாதிநிலை நிலைத்துப் போகும். உடலை அனல் தின்னுது; மண் தின்னுது. இதைக் கண்டால் ஒருகோடி நோய் ஓடிப்போகும். என்போன்ற சித்தர்கள் உலகோர் அறியாவண்ணம் பரிபாஷை விரிவாகச் சொல்லி மறைத்தார்கள். பின்னுல் விளக்கம் சொல்வேன். இந்த உப்புக் குருச்சுண்ணத்தைக் கையடக்கம் செய். சித்தர் கண்டால் கொண்டுபோய்விடுவார். இனி பேரண்டம் ஒன்று சொல்வேன் கேள்.

## பேரண்டச் சுண்ணம்

கேள்மனிதர் தலையோட்டைக் கொண்டு வந்து
குழிக்கல்லி லிடித்து மாவ தாக்கித்
தாழ்மையில்லா இருபலம்பின் வெடியும் வீரம்
தான்வகைக்குக் காற்பலமாய் ஒன்று சேர்த்துக்

கூழ்பெருகும் குடநீரால் சாமம் ரெண்டு
குணமாக வரைத்துப் பின் னீற்றுச் சாற்ருல்
ஊழ்வினைக எறவிரண்டு சாமம் ஆட்டு
உத்தமமாய் வில்லேதட்டி ரவியு லர்த்தி (37)

உலர்த்திவில்லை சில்விட்டுச் சீலை யைந்து
உத்தமமாய் ஐந்தெருவில் புடமும் ஐந்து
மலர்ந்துவிடும் மாவேகம் கொடிய சுண்ணம்
மயங்காமல் மாற்றுப்பதி ஞரும் காணும்
தளர்ந்தவுடல் கற்றூண்போல் தேகங் காந்தி
தரணிதனில் மாபிணிமா ரோகம் போகும்
களங்கமிலாக் காசினியில் மறைத்தார் சித்தர்
கருத்தறிய சங்குசுண்ணம் கழறு வேனே. (38)

## 37, 38 - உரை

தலையோட்டுத்தூள் இரண்டுபலம். வெடியுப்பும் வீரமும் வகைக்குக் காற்பலம். குடநீராலிருசாமம், பின் திருநீற்றுச் சாற்ருலிரண்டுசாமம் அரைத்து வி. த. கா. சீ ம. செ.5 (வில்லை தட்டிக்காய வைத்துச் சீலைமண்5செய்து) ஐந்துபுடம். கொடுஞ் சுண்ணம்–பதினறுமாற்று. தளர்ந்தவுடல் கற்றூணுகும். உடலில் ஒளியுண்டாகும். பெரும்பிணியும் கொடுநோயும் நீங்கும். சித்தர் மறைத்து வைத்தனர்.

### சங்குச் சுண்ணம்

கழறுங்கடற் சங்குதனை மாவ தாக்கிக்
கலங்காம லகத்திலைச் சாறு தன்னல்
உளங்குளிரச் சாமம் நான்கு அரைத்து மைபோல்
உறுதியுடன் வில்லைதட்டி ரவியு லர்த்தி
விளங்கவைந்து எருவதனிற் புடமும் மூன்று
விகற்பமறப் போட்டெடுக்கப் பற்ப மாகும்
இளங்கிளியாள் குடநீரும் நீற்றுச் சாறும்
இரண்டுஞ் சமனெடை சங்குப் பற்பம். (39)

சங்குப்பற்பம் பலமிரண்டு வீர மோகால்
சருகாமல் வெடியரையும் மூன்று மொன்ருய்ப்
பங்கமறக் குழிக்கல்லி லிட்டுச் சேர்த்துக்
குடநீர்ச் சாறுதன்னல் சாமம் நான்கு

மங்கலமா யரைத்துவில்லை ரவியு லர்த்தி
மகிழவே மூன்றெருவில் புடமும் மூன்று
தங்குபுட மிட்டெடுக்கச் சுண்ணம் காந்தி
தக்கபதி னுறுகும் வித்தை கோடி. (40)

கோடிவித்தை இதனாலே யுண்டு மைந்தா
குணமான இதுசங்கு முப்புச் சுண்ணம்
நாடிவரும் சரக்கெல்லாம் இதனைக் கண்டால்
நழுவாமல் காட்டித் தலை யெடுத்தி டாது
கூடிப்பலம் சுண்ணமொன்று துருசு அரையும்
கூட்டியே நாலுசாமம் நீற்றுச் சாற்றால்
செடி நீரும் சேர்த்தரைத்து ரவியு லர்த்திச்
சிறுபுட மைந்திடவே கொடிதாம் சுண்ணம். (41)

செடிநீர்—குடநீர்

39, 40, 41. உரை. கடற்சங்கினை மாவாக்கி அகத்திலைச் சாற்றால் நான்கு யாமம் மைப்போ லரைத்து வி.த.கா. சீ.ம.செ 5எருவில் புடம். மூன்றுமுறை போடப் பற்பமாகும். குடநீரும் நீற்றுச்சாறும் சமஎடை சேர்ப்பதால் சங்குபற்பம் நயமாகும். இப்பற்பம் இரண்டு பலம். வீரம் காற்பலம். வெடியுப்பு அரைப் பலம். குடநீர்ச் சாற்றால் நான்குயாமம் அரைத்து வி.த.கா.சீ.ம. செ. 3எருவில். இங்ஙனம் 3புடம். சுண்ணமாகும். தக்க பதினாறு மாற்று. கோடிவித்தை. இது சங்கு முப்புச்சுண்ணம். எல்லா வகைச்சரக்கும் கட்டும் நீறும். இச்சுண்ணம்1. துருசு½. நீற்றுச் சாறும் செடி நீரும் சேர்த்துவிட்டரைத்து வி.த.கா.,சீ.ம.செ. சிறுபுடம்5. கொடிய சுண்ணம்.

## அண்ட பிண்ட பின்ன தெய்பது

வேகமுடன் செப்பிடுவேன் அண்ட பிண்டம்
என்றதொரு விவரமிகத் தெளிவாய் மைந்தா
பாகமுடன் பதினெண்பேர் நாதாக் கள்தாம்
பகர்ந்திட்டார் சூட்சமுடன் பலவா றுக
தேகமது எங்கிருந்து எப்பா கத்தில்
திடம்பெறவே வந்ததொரு விவரம் காண்பாய்
ஆகமதின் வழியறிந்து கொண்டா லையா
அண்டபிண்ட முன்னுக்குட் டோன்றுங் காணே. (42)

காணவென்ருல் வெகுசுளிவு கருதிக் கேளு
கருத்தரித்துக் கருவுருவாய் முட்டை யைப்போல்
தோணுவது பிண்டமதை மூடிக் கொண்டு
தொகுத்துநின்ற அன்னைகருக் குழியில் மாட்டிப்
பூணநிறை யண்டபிண்டம் பொதிந்துள் ளாகப்
பொருந்திநின்ற தேகமிதை வளைத்துள்வைத்து
ஆணவமாம் காமியங்கள் அமைந்தா டாடி
அமைந்தசேய் இருந்தகுடப் பைய தாமே. (43)

தாமந்தக் குடப்பைதான் அண்ட மாச்சு
தனித்துநின்ற மதலையது பிண்டமாச்சு
நேமமுடன் நிறைந்ததொரு அண்ட பிண்டம்
நிலையான் மாதுகருக் குடநீ ராச்சு
வாமமதிப் பால்சுரந்து வழியூ றுற்ற
வகையறிந்து வையகத்தில் வாழ்த்திப் போற்றப்
பூமணக்கும் அகத்தியரின் நேமத் தாரை
யெனும்பஞ்ச காவியநிகண் டென்னூறு பாரே. (44)

பார்த்திடுவாய் எண்ணூற்றின் முதற்காண் டத்தில்
பனிநீரும் மாதுநீர்க் கிருதம் தன்னைப்
பூர்த்தியுறச் செப்பிவைத்தார் புகழ தாகப்
புண்ணாக்கர் முத்திக்காண்டம் ஐந்நூறு பாரே
கீர்த்தியுள்ள சட்டநாதர் சம்வாதக் கொத்து
கிளத்தினர் நூறதனில் தெளிவாய்த் தோன்றும்
மூர்க்கமுள்ள காலாங்கி நாதர் கௌன
முப்புநீர் ஐந்நூறும் அறிந்து காணே. (45)

காணவே போகர்நிகண் டாயிரத் திருநூற்றில்
கருத் தெல்லாம் வெளியுரைத்தார் குடநீ ருண்மை
பூணவே நந்தி சூத்திரம் முப்பத் திரண்டில்
புகன்றிட்டார் மாதுநீர்க் குடநீர் மேன்மை
ஆணவங்க ளகலுதற்காய் அறிந்து நானும்
அறைந்திட்டேன் திறவுகோல் வெளியாய்ச் சித்தன்
தோணுபுவி யுரைத்தகரு மறைப்பை யெல்லாம்
தொகுத்தவை பின்விளக்கம் இனிச்சொல் வேனே. (46)

செப்பினிய மாதுகருக் குடநீர் தானும்
சீக்கிரத்தில் மானுடர்க்குக் கிட்டா தாயின்
ஒப்புஞ்சிவ சத்திக்குட நீரை யாங்கள்
உமைபரனைத் தியானமுடன் தாள்ப ணிந்து
தப்பிதங்கள் உலகவர்க்கு வாரா வண்ணம்
தகுநிதியாய்ச் சிவக்கிணறுஞ் செயநீர் செய்தோம்
கப்பியந்த இடமதனைக் கண்டு போற்றக்
கழறுகிறேன் காசினியோர் அறியத் தானே. (47)

## சத்திசிவக் கிணறு

செப்புகிறேன் சாகரத்தில் அரனுமையுந் தானே
சிறந்தரவி மதியுடனே இலங்கிடும்பெண் மானே
ஒப்புவமை யீடதற்கு உலகிலில்லை கோனே
உதயகிரி என்றதற்குப் பேருண்டுதான் காணே.

காணவதின் சிகரமுச்சிக் கனவெளியாய்த் தோணும்
கருதுமந்தப் புண்ணியர்க்குத் தங்கநிறங் காணும்
ஆணவமாங் காமியங்கள் மலைமிதிக்க நாணும்
அந்தஇடம் வந்தெங்களைத் துதித்திடவும் வேணும்,

வேணுமந்த ரவிமேகலை உரைத்த மந்திர யெந்திரம்
விகற்பமற நீசெவக்கத் தோன்றிடுமே யந்திரம்
பூணுமங்கு நிறையதனி லெய்திடுவோம் அந்தரம்
புகழுமந்த உதயகிரி வடபாகஞ்செல் சுந்தரம்.

சுந்தரமே குறிவடக்குக் குட்டிமலை யொன்று
சொர்ணமய மாய்த்துலங்கும் சோதிமலை யொன்று
நிந்தையிலாப் பேரதற்கு நிகழ்த்தினர்கள் அன்று
நிறையங்குகிரிக் கீழ்புறத்தில் சத்திகோயில் ஒன்று.

ஒன்றுமந்த ஆலயத்தின் முன்பாலே ஐயா
ஒத்தனுமான் உருபிரம அண்டங்காண் மெய்யா
நன்றிதற்குப் பக்கம்நதி ஓடைபார்க்க ஐயா
நாணும லதுகடந்து அப்புறஞ்செல் துய்யா.

துய்யடவி சோலைபுனல் மிருகம்பல உண்டு
தொடர்ந்து வரும் ரவிமேகலை மந்திரஞ்சொல் கண்டு
அய்யமெல்லாம் அகன்றுவிடும் அடவிதனிற் சென்று
அவ்விடத்தில் அரக்கர்களும் வசித்திடுவர் பண்டு.

பண்டுரிய பதுமாசூரன் பாறையெனப் பேரு
பாறையின்மே லடித்திருக்குங் கவனமுற்றுப் பாரு
தண்டணியு மாயவனு ராலயமு நேரு
தானிருக்கு மதனருகில் மயங்கிடாமல் சேரு.

சேர்ந்துமந்தச் சிரிதரனைப் பூசைசெய்து போற்றிச்
சிவனுமையை யவ்விடமே தோத்திரஞ்செய் தேத்தி
கூர்ந்துமந்தக் கோவிலுக்கு வடபாரிசம் தேற்றக்
குலைந்திடாது கௌனநெறி தூரமதி லேற்றி.

ஏற்றியங்கு சந்தனமும் நாணலும்பேய்க் கரும்பு
இருக்குமந்த இடத்திலென்பேர்ப் பாறையின்மேல் விரும்பு
போற்றி யந்தப் பாறையின்முன் இருகிணறு சூழ்கும்
பூதமுடன் பாம்பதற்குக் காவலுண்டு தரும்பு.

தருநிறைந்த பாம்புபூதம் தான்விலக் கோரு
தந்ததொரு ரவிமேகலை யந்திரத்தால் வாரா
பேறுபெற நீசெவிக்க வருமேயந்த நாளு
பேய்பூதம் மற்றதெல்லாம் ஏகிடும்பின் மீளும்.

மீளுதற்கா யிருகிணற்றை நாங்கள்நிலை யாக்கி
மேதினியில் வைத்தோமதில் நிறமதனைத் தேக்கி
ஆளுஞ்சத்திக் கிணற்றின்சலம் மஞ்சள்நிற மாகும்
அரனுமந்தச் சிவக்கிணறு வெண்ணிறமாய்த் தூக்கும்.

தூக்கியேநீ இருசலமும் துகளறவொன் ருக்கித்
தோன்றிடவுன் மண்டலமே சொட்டதனிற் றேக்கி
பாக்கியவான் நீயேயாவாய் இவ்வழியாய்த் தூக்கிப்
பரனுமையு முன்னிடத்தில் குடியிருப்பான் நோக்கி.

நோக்கியே புளிபோகம் நீக்கியே முதன்மை
நீபுசிக்க இல்லைதொல்லை புவியிலென்றும் பின்னும்
தேக்கியிந்நீர் சரக்கி லூற்றி ரவியில்வைப்பாய் வண்ணம்
தெகிட்டலறக் காரசாரம் உப்பு ஆகும் சுண்ணம்.

சுண்ணமதால் செகமழியாச் சித்தஞானி யாவாய்
சீராமிந்த நீரைநாத விந்தென் றிட்டோ மறிவாய்
மண்ணுமிது ரவிபீசம் குடநீரிது தெளிவாய்
மாந்தர்களும் பிழைத்துவாழ அமைத்துவைத்தோம்
பரிவாய்.

பரிவாயஅந்த நீர்தனக்கு அநேகம்பேர்க ளுண்டு
பாடிவைத்தார் சித்தர்களும் பரிபாஷையாய்க் கண்டு
அரியகுரு நீரிருக்கும் கிணற்றினையான் பண்டு
அறிவித்தேன் அல்லாது மற்றோர்சாற்ற வில்லை.

கொண்டிதனை நாட்டமுற்று அமைப்புளவ னுனல்
குறிப்புடனே வந்தெடுத்து அறிந்திடுவாய் தானுய்
மண்டலத்தில் அம்பிகையைத் துதித்து அரன் கோனுய்
மகிழ்வுடனே வாழ்வாரெந்த நாளுஞ்செல்வ னுக.

செல்வநலங் காரசார மிதன்வேகமோ மெத்த
சீரும்எமன் தனைவிலக்குந் தூமையிதுகாண் சுத்த
வல்லபமாய் வாலிபத்தை யுண்டுபண்ணுஞ் சத்த
சாகரமழிந் தாலுமழி வில்லைசொன்னேன் சித்தன்.

சித்தர்பதி னெண்மரோதும் நூலிலிந்தச் சேதி
செப்பிடாது சூட்சமதில் சூட்சமமாய் ஓதி
வெற்றிபெறுஞ் சத்திசிவ நீராத்தும சோதி
விகற்பமிலா வாதசித்து யோகஞான மாதி. (48)

## பிரமசூற்பம்

ஆதி யாநின் றரும்பொரு ளாகிய
அண்ட பிண்ட பிண்டமத னுலே — இந்த
அகில பிரபஞ்ச மெலாநினைந் துருகியே
ஆத்ம சோதிமென் மேலே — உயர்
நீதி யாய்நின்ற நிராமய வத்துவின்
நித்திய தத்துவத் தாலே — நிறை
நீள்ரவி மதிமெய்ஞ் ஞானச் சுடரொளி
நிறைகுட மங்கைநீ ராலே — அதில்.

## செயநீர் சூலக்குமுறை

உண்மை தனைமுன்னே ஓதாமல் மறந்து
ஓதினேன் வையாதீர் கூடியே — உரை
உத்தமியாள் சிப்பிக் குடநீர் படியொன்று
ஓங்கும் உறுதிகொண் டாடியே — துரை
வண்ணமா மங்கிலியம் சூட்டாத ஈரெட்டு
வயதுள்ள மங்கையைத் தேடியே — கால்
வாய்வழி யவள்பெய்யு மூத்திரத் திலரைப்
படிசலங் குடநீர்சேர் நாழியே — திகழ்.

திகழ்திரு நீற்றுப் பூண்டின் சாறுபடி யொன்றுடன்
குடநீராஞ் சிறுநீரும் கூட்டியே -நன்னிகர்
திடமாயோர் நாள்மட்டும் பனியில்வைத் தெடுத்ததை
தெளிவாய்வைத் திறுத்துவை நாட்டியே -காலைக்
குருவான சரக்கெல்லாஞ் செயநீரால்
கொடுத்துநீ யாட்டிடு உளபடி -குறை
ஒன்றுமே வாராது எப்போதும்
உமையாள் மேலாணை சூட்டியே -இன்னும்.

ஒளியாம லோதுவேன் பிரமகல் பந்தன்னை
உயர்மணி வாசலுள் ளாடவே -நல்ல
சித்துமெய்ஞ் ஞானச்சு காதீத பேரின்பச்
சிற்சபை நடனங் கூடவே -மலர்
வெளிவெளி நாடக மானந்த பேரிகை
விண்மணி நேயர்கொண் டாடவே -இதை
உன்னிட மேநின்று பிறபிறப் பில்லாத
தென்றமு தன்னமும் போடவே -முன்னே.

சாற்றிய குடநீர் சிறுநீர் அவ்வெடைச்
சாதக மேனிச்சா றென்றரை -அதில்
கற்கண்டு பனைவெல்லம் சீரகம் வகைக்கரைப்
பலமதாய் நுணுக்கியே சேர்த்தரை -முற்றும்.
ஏற்றியே ரவியில்வைத் தெடுத்திடு மெழுகதாய்
என்றும்பின் செப்புவேன் மேல்வரை -பொல்லாக்
கூற்றுவ னைநீக்கிப் பூலோகம் ஆண்டிடப்
போற்றுமிந் நூல்சீனி சர்க்கரை -முறை.

தப்பா திருவேளை யெடைகுன்றி மெழுகினை
மண்டலமுண் டப்பாலு முண்டிடே -இருள்
தங்கா தொளிவீசித் தன்மயமாகித்
தங்கமயந் தேகங் காந்தியே -இணை
ஒப்பாரு மின்றி நரைதிரை மாறியே
உடலாவி நீங்காது கொண்டிட்டே -பரி
ஓங்கார வட்டச் சுழிநிலை யோங்கியே
ஊமைச்சங் கூதிடுங் கண்டிடே -இந்தப்.

பிரமகற் பமுன்சை யோகச்சிற் றின்பம்பு ளியுடன்
போகமு மாகாது பத்தியம் -மீறி
லீலைகள் செய்திடில் வெடித்துட லழிந்திடு
மிதைமாற்ற மருந்தில்லை சத்தியம் -பொல்லாக்
கரும வினைகளும் பிரமவிதிகளும்
காணுமல் வயதோங்கும் நித்தியம் -நிறை
நாற்பத்தெட் டுடன்மறு நாற்பத்தெட்டுநாள்
ஆனபின் னில்லைபார் பத்தியம்.

பொல்லாத குட்டநோய் பலபல பிணிக்கெல்லாம்
எடைகுன்றி வெண்ணெய்யில் தாக்கியே -காலை
மூன்றேழ்நாள் மட்டுந்தா னுண்டிட ரோகம்போம்
செய்குவாய் பண்டிதம் நோக்கியே -சிறக்கச்
சொல்லிய மருந்தெல்லாம் இம்மெழு குக்கன்றி
வேறில்லை சூட்சமும் போக்கியே -யானும்
செப்புவே னந்த அகத்திய ரிதைச் சொல்வோர்க்
கிட்டார் சாபத்தை நீக்கியே -வல்ல.

அகத்தியர் தத்துவ பஞ்சகா வியநிகண்
டானவெண் ணூறுமுதற் காண்டமே -அதில்
சாற்றினு ரிம்முறை சீரகம் பனைவெல்லம்
கற்கண்டு சூட்சமம்பிர மாண்டமே -இதைச்
செகத்தோ ரறிந்திடா மார்க்கமாய்ப் பேரையும் மாற்றியே
செய்திட்டார் சித்திர பாண்டமே -கூடி
நூல்கள் பலபல செய்து மனுக்களின்
சித்தத்தைக் கலக்கினர் மீண்டுமே -நாடி.

மூன்று சரக்கின்பேர் மாற்றமா யோதிய
சித்தர் மறைப்புநான் போக்கியே -உண்மை
செப்புவேன் சீரகம் பனைவெல்லம் கற்கண்டின்
ஒவ்வொன்றின் விவரங்கேள் நோக்கியே -சற்றே
ஊன்றிப்பார் சீரகம் பேரண்டச் சுண்ணமே
ஓதுகற் கண்டுபேர் தூக்கியே -சிவ
முப்புச்சுண் ணமாகும் பனைவெல்லமது வுமை
சத்தியுப்புச் சுண்ணமு மாக்கியே -முன்னே.

காட்டிய சீரகம் கற்கண்டு பனைவெல்லம்
கடைச்சரக் கானதை விட்டுமே -நல்ல
காரசா ரமான முப்புச்சுண் ணத்தைக்
கணக்கின் நிறைப்படி யிட்டுமே -அந்த
மேட்டிமைச் சிப்பிநீர் குடநீர் சிறுநீரும்
மேனிச்சா றளவதைக் கூட்டுமே -சுண்ணம்
மூன்றையு மித்தோடே தாக்கி ரவியில்வைத்
தோங்கும்போ துள்ளங்கை நாட்டுமே.

நீங்காதிருந்து மறலியை வென்றந்தப்
பிரமனின் விதிப்பினை மாற்றவே -புவி
நீடுழி காலமட் டோங்கியே வாழ்ந்திட
நிகழ்த்தினேன் பிரமகற்ப மேற்றவே -நிலை
ஓங்குமுண் மையரன் பாதத்தின் மேலாணை
உற்றது இதுசத்தியம் சாற்றவே -நானும்
உலகில் பதினெண்மர் சொற்கப டம்நீக்கி
உகந்து உங்களைக்காப் பாற்றவே. (49)

## ஆதிநீர் வளப்பமும் குடநீர் உதிப்பும்

கடல்நதியாம் புனலருவி யோடைகழல் நாடு
கன்னிகையும் வீற்றிருப்பாள் பாலைநிறை வீடு
மடல்விரியும் இருபுறமும் மாதுநடுத் தோடு
மங்கலஞ்செய் யழல்பொருதும் மாமதுரப் பேடு
அடல்வலிது அமுதகலை அண்டமதி னோடு
ஆணவமாங் காமியங்கள் தனைவிட்டுப் போடு
நடனமயி லாதிசத்தி யம்பிகையைத் தேடு
நாட்டிடுவேன் குடநீ ருண்மை யறிந்துபதம்பாடு.

பாடுபட்டுப் பயனறிய வேண்டுநடுக் கம்பம்
பார்த்தாலும் பச்சைநிறம் ஆத்தாளவள் பிம்பம்
நாடுநடுக் கனலபதி உச்சியான தம்பம்
நாதமணிப் பஞ்சமியாள் பஞ்சவருண கும்பம்
காடுகரை யானசுழிக் காற்றடித்து ரொம்பும்
கன்மமதி பூப்பூக்கும் கமலவேள்கூர் ரம்பம்
கூடிருக்குங் குழலிருக்குங் குங்குங் குங்குங் கும்பம்
கேசமளமா மாதினிட வமுதமதே பொங்கும்.

பொங்கமுடன் திருட்டாந்திரம் புகன்றிடுவேன் கேளு
பூலோகமும் பிரளயத்தால் அழிந்திடுமந் நாளு
தங்குதரை தரணிசீவ கோடி யெல்லா ம்பாழு
தட்டழிந்து போய்விடுமே தயங்கிடாமல் வாழு
புங்கவியாள் பூவாழி பூத்தமலர் நாளு
புரைவட்டத்தி லங்குஞ்சிப்பி யானமத வேளு
கொங்கையின்றிப் பால்தருவாள் நாட்டமுற்றே யாளு
கோதைகுடி யிருப்பாளாழி யதையறிந்து மீளு.

மீளுவரை யோனியைப்போ விருக்கும்புரை தானே
மேவுமப்புச் சிப்பியுமென் றதற்குப்பேரு நாளே
கூழுமுண்டு சோறுமுண்டு குடலானகல் லானே
கூட்டினுள்ளே வழலைமது மாமிசங்கள் தேனே
வாழுமுயர் நாமகலை மங்கலமுய் வானே
நாதவிந்து சிப்பிச்சலம் நங்கைநதி பூணே
வேளுரிய விமலமடல் வயதீரெட்டு ஊணே
வெயில்நிலவு மாவாள்செனித்து வீற்றிருப்பாள் நானே.

பாழ்போ காது பாஷாணமெனப் பேரு
பாதைவழி யறிந்தவர்க்கே பலித்திடுங்காண் நேரு
வாழ்வதற்குச் சிப்பிச்சலம் வெளியாகவே கோரு
வழுத்திவைத்தார் சித்தர்களும் பரிபாஷையாய் வேறு
தாழ்மையிலாப் பஞ்சறிவு சிப்பிக்குண்டோ பாரு
தங்கும்போக ஞானமது அடைந்திடுமா கூறு
ஆள்உன்பெண்டு சுத்தகெங்கை மங்கைக்குட நீரு
சூதில்லாச் சிப்பிநீரும் சிறுநீருமாய்ச் சேரு.

மாய்கையிலாச் சிறுநீர்சிப்பிக் குடநீர்சமன் தாக்கே
மகிழுஞ்சீவ கலையமிர்தம் இதுதான்கண்டு நோக்குத்
தூய்மையிலா இம்மூன்றுமே தூய்மையாகுந் தூக்கித்
துய்யவண்ட பிண்டமுயர் தொந்தரவை நீக்கி
வாய்மையுறுஞ் சித்தர்களும் மறைத்துரைத்தார் போக்கு
வயணமுடன் உண்மைவழி யுரைத்தேன் சித்தன் வாக்கு
பாய்மரமும் மலமிதனின் பேருலைவைத் தாக்கு
பக்கமுடன் சிப்பிக்குடநீர் சிறுநீர்கொள் நாக்கு.

கொள்ளமுத பூரணத்தால் கூடிவரும் வேதை
குமரிபரா பரிவிமலி தீர்ப்பாளுன்றன் உபாதை
சள்ளையில்லாப் பிரமகற்பம் முன்னேசொன்னேன் பாதை
சாதனையாய் அறிந்துஉன்னைப் போய்விடுமு பாதைக்
கள்ளமில்லாக் கற்பமுண்ணைக் காணவரும் போதை
கனலெழும்பி வீசியுடன் நீக்கிடுமுன் பேதை
……………… ……………… ……………… ………………
வேசிமையல் விட்டுமையின் பூசைகொள்தாய் மாதை.
(ஒருவரி குறை)

தாய்தந்தை பிள்ளையுடன் மூன்றுதொன்ற தாச்சி
தட்டழியாச் சிப்பிக்குடநீர் சிறுநீருமை பேச்சு
ஆய்ந்தறிந்து கொண்டிடுவாய் அன்னைகொங்கை பாச்சி
அம்மட்டிலும் இம்மட்டிலும் ஆணும்பெண்ணும் சாட்சி
மாயந்திடாது பிரமாவிஷ்ணு ருத்திரன்முன் சாட்சி
மங்கையர்களைச்சுமந்தார் மூவருங்கண் காட்சி
பேய்மக்காள் பிரமவிஷ்ணு ருத்திரனின் சூழ்ச்சி
தெரிந்திருந்தும் பிழைக்கவழி யறியாததேன் காட்சி.

காட்சியுடன் கடலில்விஷ்ணு அலையதின்மேற் றுயின்று
காமமுற்றுச் சிப்பிக்குட நீருண்டு நின்றுர்
ஆட்சியுடன் பிரமாருத்திரன் அதையறிந்து நின்றுர்
ஆழாழிக் கரையில்அன்ன வன்னமது உண்டார்
தாட்சியில்லா மூவருமே அறியாவரங் கொண்டார்
தந்தைமதி வந்தநிதி தாயமுத மென்றுர்
மூஷிக கணுதிகரு மூவருய்ய வென்றுர்
மும்மூர்த்திக ளிதனையுண்டு மூவுலகாண் டிருந்தார்.

ஆண்மையுடன் சிப்பிக்குடநீர் சிறுநீர்தன்னை முத்தர்
அண்டபிண்ட மென்றுரைத்து மறைத்திட்டாரே சித்தர்
காண்பதற்கு என்போலாஞேர் கடலேரமாய்ப் பத்தர்
காரணமாய்ச் சமாதிகொண்டு நின்றுரேவி ரக்தர்
பூண்டுலகில் விவரமதைத் தெரியச்சொன்ஞர் மனிதர்
பூரணமாய் மாந்தர்களும் அறியாரென வறைந்தார்
வேண்டுவதை யொளித்துப்பின்பு வேண்டாததை யுரைத்து
வீணுகவே பலபலவாய் நூலுரைத்தார் கருத்தர்.

கருத்தரென்ற பதினெண்மரில் போகரவர் தானும்
கருதுபல வஸ்த்துவினைச் செய்தீந்தார்பெம் மானும்
சருவசித்தர்க் குத்திரநளின சாதகமாய்க் கோனும்
சார்ந்திருக்கச் சூத்திரசித்து எண்ணூறுசொன்னர்
தோணும்
மிருத்துவிலாக் ககனசித்தெண் பதில்போக ரவாவாணும்
சிப்பிக் குடநீருண்மை விவரம்சொன்னர் பூணும்
கெருவமின்றி என்னூல்தன்னைப் பதனஞ்செய்ய வேணும்
சித்தனென்சொல் போல்நடந்தோர் சாகாரவர் காணும்

காணும்பதி சித்தமுடன் சம்வாதங்க ளிட்டுக்
கருத்தையெல்லாம் சாபம்நீக்கி யுரைத்தேன்வெளிப் பட்டு
ஆணும்பெண்ணும் சீவகலை யொன்ருகச்சேர்த் திட்டு
ஆணவமாங் காமியம்பொய் மாய்கைதனை விட்டு
வேணுகியாள் அமுதவிமலி தங்கப்பாதம் தொட்டு
சிப்பிக்குட நீர்சிறுநீர் மூன்றுஞ்சேர்த்துக் கட்டு
நாணுதலாய் நமனுநம திடத்தில்வாரான் மெட்டு
நாதமணிப் பிரமகற்பம் உண்டுகொள்நீ சொட்டு.

செட்டிமகன் சித்தரியில் அ.இ. யென்ற சோதி
சித்துபல இக்கும் இணு.றிணு ஹ ஹவிதி
கட்டுங்கலை ஹம்சம் ஸ்ரீ–யிம்–ஜிம் ஆம்நீதி
காலநிலை கங் கங் கெங் காணலாம் பிரம மாதி
வட்டமதி லுய்யவொளி வீசுமகர மாதி
வாமவீட்டி லிருந்துபார்க்க நீங்கிடுமு பாதி
தட்டலின்றி மந்திரத்தைத் தகர்ந்தி டாமலே
தாவிபிரம கற்பமுண்ணப் பிறவிபோமெய்யே சோதி

விளக்கம்:— ஹரி–இல், ஆ–இ–இக்கம் இணு–றிணு
ஹ–ஹ–ஹம்சம்–ஸ்ரீ–யிம்–ஜிம்–ஆம்–கங்–கங்
கெங்–அ–சுவா ஹா:.

சோதிதன்னைப் பதினெண்பேரும் ஒளித்து நூலில்பேசி
சித்துஞான மர்மம்மிகக் காட்டிடாமல் ஏகி
ஓதியதின் உண்மைதன்னை யோகஞான தேகி
உரைத்தேநித்தம் மந்திரத்தை யனுதினமும் நேசி

நீதியாயிரம் மந்திரத்தா லகலும்பேய்பி சாசி
நிலைத்துவாசி தங்கிக்காயம் அழியாதுவிசு வாசி
ஆதிமந்திரம் இதுதன்னாலே சித்தரநேகம் வீசி
அம்பிகையின் பாதத்தாணை அறைந்திட் டேன்சந்யாசி.

## மிருத் யுஞ்செய மந்திரத் துதி

சன்னியாசி யிருந்தகத்தி லூடு தாக்கிச்
சரிந்திடாது மிருத்தியுஞ் செய செபந்தன்னை
பின்னமற வோதிடுவேன் பிழைத்து வாழ
பிங்கலையும் இடகலையும் சுழினைத் தியாம்
கன்னமிலா வமுதநிலைக் களத்தி னூடே
கலந்தாடி நின்ருக்கால் கால னற்று
வென்றிடவே வினையமின்றி விளங்கி யோங்க
விவரமுடன் ஓதிடுவேன் மந்திர மார்க்கம்

## மந்திரத்தியான விதி திறப்பு

மந்திரோ பாவன மகமகஞ் சாத்த ரட்சணியே நம:
மாதவமாம் ஸம்ஸ பீஜாட்சரி திரிகோணத் திரியே நம:
பிந்துபாஷ்ய அகாரஉகார மகாரத் துரியே நம:
புஜபராக்கிரம புண்ணிய ஸ்ரீ மாதாக் ஞானி நம:
நவமூர்த்தி நவரார்ஜித துஷ்டமிருத்து விஞ்சனியே நம:
நவபாஷித நயன நேத்திர சிகார சிவாஞ்சனியே நம:
சித்துருப சிதமானுஷ சின்மய சத்சித் தாந்தியே நம:
ஸ்ரீலஸ்ரீ கவிககர பாஷிதவமுத வர்ச்சினியே நம:
ஆப்தகாரண அம்.உம்.நம். பாம்பாக் கனகனே நம:
ஆ.இ.ஐ.ஒ.ஔ அக்.இக். கொம்பூத மாரினியே நம:
ககனுமிர்த கங்.கெங்.ரங்.டங். வாசி வசியே நம:
இகபரசித.இல்.ஹல்.ஹம்.ஸம்.ஜிம் சிந்தாமணியே நம:
இனு.றினு.உனு.குங்.குனு சர்வரோக நிவாரணியே நம:
ஞானர்ச்சித அங்.உங்.அம்.உம்.லம். சிவபூரணியே நம:
தானுத்வித வங்.சங்.ரங்.கங்.இங். யோகபும் பாணியே நம:
ஹருங்.ஹரிங்.உருங்.உரிங்.ஹ்ரும் பஞ்சமூர்த்தி தரிசனியே நம:
ஆவ்.ஊவ்.பாவ்.தேவ் ஹேவ் அஷ்டதளபாங்கரியே நம:
ஹரி.ஹரி.ஹருங்.ஹரு.ஹரு. துஷ்டசங்காரியே நம:
சௌ.மௌ.பௌ.யௌ.உங் தேகதிடார்த்தியே நம:

பானு ரவி கசி.கக.சிக.சிக. காணவோ சியே நம:
ஆங்கார புடாதன. டத.பத.த.த.தட.தட அமுர்வர்ச்சியே நம:
குருசுக்கிர தனுரல.ரல.ரு.ரு.லர.லர சுத்ரம் சாதயே நம:
கார்க்கினி ராகு.அங்.உரிங்.அங்.அங்.உரிம்
ஆயுளாஸ்பதயே நம:
கிருகாதே அ.உ.ம. ஓம்.ஓம். ஞான கேதுவார்ச்சனியே நம:
ஆயுள் விர்த்திதே. லலாடே. அம்.உம்.அம்.நம்.உம்.
பாக்கினியே நம:
தேவி ஸ்ரீறீம்.றீம்.ஹரிம்.ஆம்.ஊம். பிரசன்னதெரிசயே ஸ்ரீ
தேவியை நம:

## முக்கியாம்ச மந்திரம்

ஓம். கிரீங்,ரீங், கிரீங்.சிம்.சிம். சிவயநம
ஓம். உம்.கிலி. அங்.லங்.அங் சிவயநம
ஓம். வங்.சிங். யங்,ரங்.ரங் சிவயநம
ஓம். வயநமசி .உம்.உம்.லிங்.லிங் சிவயநம
ஓம். நங்கிலி. நௌ.மௌ.ரங்.யங். சிவயநம
ஓம். நசிமசி. வசி.வசி. சிவ சிவயநம
ஓம். அங் அங் கங். கெங் ரிங் சிவயநம
ஓம் அம் உம் நம் லம்.சிம். சிவயநம
ஓம் சிங்.கிலி. கிலி.நம்.நம் சிவயநம
ஓம் சிவசிவ. நசி,மசி, சிவயநம
ஓம் மங்.கிலி. ஸ்ரீங் சிங்.சிங் சிவயநம
ஓம் மசிமசி வயநமசி லிங்.லிங் சிவயநம
ஓம் சிங்சிவ மங்மங் வசி சிவயநம
ஓம் லங்லங் ருங்ருங் ரீங் சிவயநம
ஓம் லா லி லூ. லம்.சிங் சிவயநம

## அம்ஸ பீஜாட்சரத் திறப்பு

மும்மூர்த் தாபரண ருங்.உங் டங்.டுங்.றங் முகவசீகரியே நமஹா
முத்திலோக வாசன சாங்.ஹாங் கூங்.குங். சாங்கு பாதியே
நமஹா
குங்.குங்.ஹங்.கங்.சீரிங்.குண்டலி. சுவாதிஷ் டானியே நமஹா
ஹலூங்.ஹிலுங் குலுங்.ஸ்ரீலுங்.ரீலுங். ஆத்மநீடி தாச்சினி நமஹா
அக.உக.கக.நக.லக. நேத்திரவதனி சித்தியாம் சனியே நமஹா
விர்த்தரப்பிரிய நிவாரண குகு நகு.பிகு இகு பால்யருபதியே நம

ஹக் கக் ஹக் கக். ருக்.கக்சிக் கக்குக்கக் சித்தவாஜை
கோகரணியே நம:

சங்க சங்க. டங்க கிலிங்கீ. லிங்க சர்வதேவரனுரு வாக்கினி
நமஹா

வம் லம் கம்ஸம் நம். வாசி வசக்யானுபதியே நமஹா

ஜீக லூக. ஈக்க லக். லுக். ஜீவ வாக்கினிஸ் தம்பனியே நமஹா

றக்க றிக்க. இக்க நிக்க. லிக்க ஸ்ரீதாமஸ மனம் ரெக்ஷி
ரெக்ஷிகயே

## ஆயுள் விருத்திக்கு மூலமந்திரம்

ரெக்ஷகியே நமோ நமா பார்வதி
நீபஞ்சா க்ஷரி ரிங் ரிங் குரு
தக்ஷணி நகு லக் ஸ்ரீரீங்
க க. லுக். டங். லுங்
அக்ஷரி. ஹரி. பிர்ம, விஷ்ணு
ஆத்ம ஸம்ரெக்ஷ ஆதார பீஜ
கட கட மிருத் விநாசக
இட் இட் இமாம் இமாஞ்ச
இக் ருக் மம துயிருள் நீடித்தே நமஹா.

## சித்துக் குருமூல மந்திரம்

நமஹா நமாமி நம் லம் ஸம்.ஸம
நவ்.யவ். ஹரீம். ஸ்ரீரீம். சும்.சும்
மம வளி வளி வங் வங் ருங்
மாதா மஹி மனே தடசித்த வா ரூபிணி
கம் கம் நகோடி சித்தமாம் தேவ்தேவ்
கங் கரிங் இட்டஇட்ட தெசஸ்யா
அம்ம அம்உம்ஜட பிலத்த வாணி வஸ்க்கிய
ஹங் ஹிங் ஹிதா ஹித் இக்க இக் நமஹா.

## சர்வ அபமிருத்து நாசனத்திற்கு மூலமந்திரம்

நமம்–மமம்–யம்–வம்–ஆம்–ஊம்–ஐம்
நங்–குகு–டம்–பம்–ஹம்–டு–டு–டு–டு
குமங்–குங்–குரு–ஹம்–கிலீம்–கிரிம்
கிங்–கங்–கனி–ஹரீம் ஹரீம்

ஹம் ஹம் ஹண ஹண ஹட ஹட றெல றெல
ஹற ஹற ஆதாராத்ம விருத்தித
சமதா தேவ தெரிஸய நம நாஸன
சக பல மிருத்யஞ்சுஹதஹத நமாமி நமஸ்து

## சமாதி நிலையடைய மூல மந்திரம்

நமஹா–நகா–ககா–இகா
அகா–உகா–மகா–ரிக
துமம்–துரு–துருவ–பஞ்சா க்ஷரி
துய்–துய்– தூர்த் சம்மாரி ரீரீ
சுமம்–சுட்–சுட்–சர்வ மனுஷிய நேத்ர
சுட்–சுட்–சுக்–தக் கடே கடக்
மமா மமே சமாதிக் பந்தனே
மணிபூரக ஞானசித்தாம் திதே நமஹா

## மும்மூர்த்தி தரிசன மூலமந்திரம்

சித்தி–தம்–ஹரி–பிர்மம் விஷ்ணுக் கியானே
ஸ்ரீங்–ரீங்–யங்–டங்–லங்– உமாமகேஸ்வரி
முத்திதம்–யுக்–தக்–ஹிக் ஹிலக்
மும்மூ க்ஷிகரண பிர்ம தெரிஸ்யே
தத்வ கரண தம்ஸம் சொர்ணமயே
தானே அங்–மங்–சங் சுகாரமய
சத்துச்சித் தானந்த திருமூர்த்தி தெரிஸயே
சதாக்கியனே உம்–ஸ்ரீம்அம்–உம்–ஸ்ரீம்–உம் நமஹா.

## சூக்ஷமமூல மந்திரம்

ஸ்ரீம்–ஸ்ரீம்–றீம்–ஹரீம்–ஹரீம்
ஸ்ரீம் றம் டம் டங் றங் ஹணங் ஹரீங்
ஸ்ரீம் ருங் குருங் குராங் குரீங்
ஸ்ரீம் ஹவாங்–ஹிலங்–ஹிலங்– ஹிலாங்
ஸ்ரீம் டு.டு குரு. துரு. குரு. வசி
ஸ்ரீம் ஸம்–அம்–உம்–ஜம்–ஜீம்
ஹிதம் ஸமஸ்தம் மமபாகே ஹிதோ பூஷிதே நமஹா.

## மூலமந்திரங்களின் பயனும் விவரமும்

பூசித்திடு மூலமுதல் மந்திரத்தைப் போற்றி
புகன்றிடுவேன் லெட்சமுரு ஆவர்த்தி கொள்போற்றி
வாசிகொண்டு வாலைசத்தி அம்பிகையைச் சாற்றி
வாதையறச் சக்கரத்தை வரைந்துகலை மாற்றி
நேசித்திடு நிலையுடனே நினைவு கொண்டு தேற்றி
நிதமுனக்கு அமுதமீவாள் அமுதூற்றி
தேசிகமா மணிகோபுரம் ஊடாடும்பா லாற்றி
தேவிபரா பரிரெக்ஷித்துக் காப்பாளுனைத் தேற்றி.

காப்பதற்கு ஆயுள்விருத்தி மூலமந்திர மோது
காலனற்றுப் போய்விடுவா னில்லைநாளுந் தீது
ஏர்ப்பதற்காய் இன்னமுண்டு இயம்பிடுவேன் மீது
இன்பமுடன் சித்துமந்திரம் செபங்கள்செய் தப்பாது
பூர்த்திசெய் துகந்துகண்டு கொள்வாய் மூலத்தாது
புன்மலத்தில் ஆசையற்றுப் போய்விடும்பொய் சூது
நேர்த்தியாப்பின் அபமிருத்து மூலஞ்சொல்நீ சாது
நிலைத்திடுமுன் காயமாவி இல்லையேமன வாது.

வாதுநீங்கி வாழநீ சமாதுமூல மந்திரம்
வயணமுற்றுப் போட்டுரைப்பாய் முன்னுரைத்த யந்திரம்
தீதர இயன்றதொரு அச்சரத்தால் தந்திரம்
தீமையில்லா வெள்ளிரேக்கில் "இ" எழுதிச்சுந்தரம்
மாதுமையின் பூசைசெய்துன் வாயிலிட யந்திரம்
அடக்கிரேசக பூரகத்துக்கும் பகஞ்செய்வாங்கி நிரந்தரம்
சுதுகந்து வாசிதங்கி மேவிடும் சுதந்தரம்
மேன்மையுற்ற "இ"தூய மனம்நிலைக்கும் சாத்திரம்.

திறமைபெற்று மும்மூர்த்திகள் மந்திரத்தால் சித்தி
தீர்க்கமுடன் வாழவரந் தருவாளேதாய் சத்தி
அரதனமும் மூலமந்திரம் அல்லால் ஆளைவெற்றி
ஆதிமலைக் குகைபுகுந்து ஆதியெல்லாம் சுத்தி
அரனுமையின் பாதமினை பார்க்கவென்று கத்தி
பலித்திடுமென் பஞ்சவிதி மந்திரத்தால் முத்தி
சரம்"இ"என்ற அட்சரத்தால் சகமனைத்தும் ஏற்றி
சாகாமலே இருப்பதற்குச் சார்ந்துரைத்தேன் நேர்த்தி.

நத்திநந்தி சட்டைமுனி அகத்தியர்கும் பேசர்
நாடிமந்திர திட்சையோதி மறைத்தாரேவிசு வாசர்
சத்திவேலன் ஞானம்எண்ணூறு தன்னில்கும ரேசர்
சாகாமலே யிருக்கச் சித்து நுட்பம்சொன்னு ரீசர்
அத்திக்கிளை யோன்முழுதும் அறையாது ஞானேசர்
அகத்தியரின் சூழ்ச்சியதில் பட்டுரைத்தார் நேசர்
வெத்திகொள்ளும் சக்தியுடன் கெஜமுகன்கை லாசம்
விரகெண்டா மணியடித்து உலகிலுப தேசம்.

உபதேசிக்க என்போலானுர் உற்றுணர்ந்து தானே
உண்மையைக்கண் டென்னிடத்தில் சம்வாதித்தார் வீணே
அபவாதமாய் ஈசன்சாபம் வருமென்றுதான் நானே
அரனுமைக ரியிடத்தில் விவாதமுரைத் தேனே
தபசித்தர் உமைமுகனும் சினந்துகைலை யோனே
தாக்கிச் சாபம் ஈவோம் வாதம் வேண்டாமென்று
........ ........ ........ ........
கனமுரைத்தேன் கருத்தைவெளி பருதிமதி யூணே.
(அரைவரிகுறை)

ஊணவழி பொக்கிஷங்கள் உண்மைவெளி யாக
உற்றமூல மந்திரத்தால் ஊழ்வினையற் றேகும்
நாணவதி காரமுள்ள நமன்வலிவு போகும்
நறுமணஞ்சூழ் நாரணிநற் றெரிசனமுண் டாகும்
பூணதிக பஞ்சபூத முன்னுள்திட மாகும்
பூரணங்கொண்டானந்தமாய்ப் புத்தமுத மீகும்
வேணவழி சித்துமந்திரம் செய்யத் தனதாகும்
வீக்ஷண்யமாய் என்சொற்கேட்போர் கவனம்நன் ருகும்.

ஆகுதற்கு ஆதிசித்து சூட்சமூலங் கொண்டு
அறிந்துபூர்வ பக்கந்தன்னில் அன்பாய்மந்திரம் விண்டு
வாகுரிய ஆமீரெட்டு நாளம்பிகையைத் தொண்டு
வாசமுற்றுப் பூசைசெய்ய ஒருவேளையன்ன முண்டு
பாகுரிய சக்கரத்தைப் பத்திரபுஷ்பம் கொண்டு
பாங்கமாக வேதுதிக்கப் பாரோர்செய்வார் தொண்டு
சாகுதலும் இல்லாவரம் ஈவாள்தாய்பூச் சென்டு
சாதனைசெய் தகனைச்செய்தால் வெற்றியடைவார் கண்டு.

கண்டுகொள்வாய் எனதுஞான மந்திரபோதம் உற்று
காயம்ஆவி அழியாதுண்மை கமலைபாதம் பற்று
தெண்டிசையில் சித்தர்களும் திடபலன்கள் பெற்று
தெளிவின்றியே சொன்னர்கள்நூல் தேசத்தில் பற்ருது
விண்டஎன்போல் ஆனேர்சாத்திர விகற்பகங்கள் அற்று
வீணே யெமனிடத்தில்கிட்டா வேதமிது பற்று
தொண்டர்கள்செய் நூல்களோடு எந்திரமில்லாது சற்று
தெளிவதில்லை சொன்னேன் சத்தியம் தேவியின்
தாள்உற்று.

## திறவுகோலிருக்கும் சித்தர்கள் வரவும் மூர்த்திகள் உறவும்

உற்றுணர்ந்து ஓதிடுவேன் உணர்விருண்மைச் சேதியே
உத்தமமாய்ச் சித்தர்கள்சொல் லுறுதிவாக்கியம் நீதியே
பற்றுக்கொண்டு என்னிடத்தில் பத்தர்முத்தர் கூடியே
பாவலர்கள் என்திறவு கோலினைக்கொண் டாடியே
குற்றமற்ற திறவுகோல் பரீக்ஷித்திட நாடியே
கொள்கையுற்று நூல்விதிபோல் காட்டச்சொன்ஞர்
கூடியே
ஏற்றுகந்து சித்தர்களும் அம்பாள்மந்திரம் ஓதியே
ஓங்குமந்தப் பிரவாகத்தில் மிதக்கவிட்டார் நாடியே.

நாடிநீர்ப்பிர வாகந்தன்னில் சித்தர்கள்மி தந்துமே
நலிந்துவாடிக் கூகூவெனக் கூவின ருகந்துமே
வாடிடாதீர் என்றுசொல்லி யப்பொழுதி ரைந்துமே
வடித்தநீரை வற்றச்செய்து வண்மையோடு றைந்துமே
கூடிநிற்க என்போல்சித்தர் கூற்றன்போல றைந்துமே
கும்பலாய்ப்ப லமிருகக் கூட்டமிட்டி ரைந்துமே
வேடிக்கைகள் பார்த்திருந்தார் வித்தகர்கள் விரைந்துமே
விலங்குகளின் வாதைநீக்கி விந்தையரா யிரந்துமே.

இறைவிமூல மந்திரபீஜத் திறவுகோலின் சக்கரம்
இட்டுப்பூமி தன்னில்வைத்து குறுக்குச்சங்கிலி லுக்கரம்
விரைவில் நாட்டிச் சித்தர்களையென்னிடத்தி லக்கரம்
வேகுமோசங் கிலியதனைக் தாண்டிடுவாய் இப்புரம்

நிரைந்துகூவி வாங்கவென்ன நீடித்திட வக்கரம்
நெருங்கியுன்னைக் கிட்டிச்சார முடியாதென்ன தக்கரம்
குறையுரைத்துக் கூடிக்கூடிக் கோபமிட்டார் மாத்திரம்
கொள்கையோடி வர்கவென்ன முடிவில்லைநற் சாத்திரம்.

ஞானத்தநதி பரானசித்தர் சித்துஞான சூழ்ச்சியாய்
இட்டசங்கி லிச்சக்கரம் தன்னையும கிழ்ச்சியாய்
வனத்திலுற்ற பூதபேய்கள் என்னிடத்தில் மகிழ்ச்சியாய்
வாதைசெய்ய அனுப்பினுர்கள் அனுப்பித்துப் புகழ்ச்சியாய்
ஞானமுற்றுச் சங்கிலிச்சக் கரத்திடத்துக் காட்சியாய்
ஞானமின்றி வந்தபூத பேய்கள்மாள வீழ்ச்சியாய்
போனகத்தில் அங்குச்சித்தர் என்னைவெல்ல ஆட்சியாய்
பேதாபே தங்கள்செய்தும் பலிதமில்லை மீட்சியாய்.

இல்லையென துதயகிரி சத்திரிவக் கிணற்றுரை
இயம்பினே னிதற்குமேல் புறத்தினிலெ டுத்துரை
தொல்லையில்லாச் சங்கிலியு மிட்டிருக்கேன் பார்த்தரைத்
தோற்றமிட்ட தெவராலும் எவரலாகா தற்பரை
வல்லவிசொல் ரவிமேகலைத் திறவுகோலால் அக்கரை
வாசமுற்று கந்துதியானம் உய்வோர்க்கில்லை தொந்தரை
அல்லலனே கங்கள்செய்து அயர்ந்தனர்கள் பன்முறை
ஆவதன்றி யென்னைநோக்கி அனுசரித்தார் பின்முறை.

பின்னமின்றிச் சித்தர்களும் நமனுசத் திறவுகோல்
பெருமைகொண்டு பேதமின்றிப் பிசகில்லாது கந்துமே
நன்னயமாய் வாக்களித்தார் தாதுமணி நாதவேள்
நாதன்நத்தி வந்துனது நட்பூடுற்று கந்தநூல்
சொன்னநலம் பெருகிவாழ வென்றுநல் வரமுமால்
சூத்திரந் துலங்குமுத்தி வேதமென் றுரைத்தபால்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
வண்ணங்குனது சொல்லருளும் வாழ்த்தியே யுரைக்குமால்.

தாரெல்லா நிறைந்துலங்கித் தங்குஞான பூஷகத்
தத்துவமனே லயத்தில் அங்குசித்து போஷகப்
பேரெனப்பிர தாபரெத்தின முத்திக்குண வாசக
பிங்கலிட கலைசுழி பஞ்சபூத ரேசக

பாரையெனத் துறையுலவு பதினெண்மர்சொல் நூலதேக
பரிபாஷைக்கென் நமனுசத் திறவுகோலில் வாதிகாள்
வேறெதுவும் இல்லையில்லை வினையமற்று ணர்வாக
விமலநாதன் பாதம்போற்றி ஓதினேன் தென்பாக.

தென்னுதி பதியெமன் திக்குமுக்குக் கொண்டிட
தேசோமய மாகத்தேகம் எந்தநாளும் நின்றிட
நின்மலசொ ரூபதேவி தேவனைமேல் கண்டிட
நித்தியமுந் தத்துவப்பிர கிருதிகளை வென்றிட
கன்மநோய்கள் அண்டவந்து எணுகிடாம லரண்டிட
காதலாக மிருத்துவிஞ்சுக் குளிகைதனை விண்டிட
பண்ணுவம்பாள் பூஜைதன்னைப் பாரிலுள்ளோ ராண்டிட
பக்ஷமுற் றுரைத்தேன்சித்தன் பண்பாயுற்று ஓங்கிட.

## மிருத்யுவிஞ்சுக் குளிகை
## ஆனந்தக் களிப்பு

கிடக்கிது போகட்டுங் காணே — சித்தர்
கிருபை யிருந்திட வேணுமென் றேனே
தடத்தினி லாத்துமந் தானே — தங்கித்
தன்மணம் வீசிடத் தானுரைப் பேனே
இடத்தினுற் பரனுனை மிருத்து — விஞ்சு
குளிகையை இப்புவிக் கெடுத்துரைப் பேனே
திடமுள மதிகன வானே — தேடித்
திரியச்சொன்னார் சித்தர் உங்களை வீணே.

வீணில்லாத் திருவ ருளடுத்து —மேலும்
விளங்கிடச் சிப்பியைக் கொண்டிடத் தெடுத்து
பூணி னளவாக உடைத்து —உள்ளே
பொருந்திய மாங்கிசம் தன்னை யெடுத்து
காணின வாகச் சிதைத்துச் —சதை
கணக்கில்பா திப்பங்கு வெங்காரம் பொதிந்து
நுணுக்கிப் பிசரியே வைத்து —நாள்
ஒன்றேகல் வத்தில் வடிநீ ரெடுத்து.

எடுத்தொரு பாண்டத்தி லிட்டு —மங்கை
குடநீரும் சிறுநீருஞ் சமனுய்ச்சேர் த்திட்டு
அடுப்பிலேத் தித்தீயி லிட்டு —சிறு
அனலாக எரித்துமே சுண்டிட ரெண்டு

இடுமெழுகு பதமெனத் தொட்டுப் -பார்த்து
இணக்கமாய்க் கொள்ளவே சொல்வேன்பிற் பட்டு
தொடுமெழு கானதில் எட்டுப் -பங்கில்
ஒருபங்கு மதஃனமேல் பூத்தமாக் கொட்டு.

கொட்டியே அரைத்திடு மெதுவாய் -அதைக்
குணமாகப் பதனஞ்செய் திட்டுநீ உய்வாய்
அட்டியில் லாமலே மெய்யாய் -யானும்
அறைகிறேன் மிருத்யுஞ்சயக் குளிகைநீ செய்வாய்
துட்டத் தனம்விட்டுத் துய்வாய் -நல்ல
திருநீற்று வேர்வேஃன மேனிவேர் பெறுவாய்
கட்டும்பேய்க் குறிஞ்சாவே ராய்சித்திர -மூலஞ்
சத்திச்சா ரஃணநாக தாளிவேர் குருவாய்.

குருவான வேரேழுந் தேக்கு -வகைக்குக்
குறையாம லரைப்பலம் குணமாகத் தாக்கு
செருநீர்விட் டரைத்துஒன் ருக்கு -பின்னும்
நீற்றுச்சாறு விட்டு நிகழ்த்திநொய் வாக்கு
கருக்குட நீர்விட்டு நோக்கு -எல்லாம்
கல்வத்தி லாட்டியே மயனம்போ லாக்கு
திருவருள் கொண்டுகை தூக்கு -மதஃனயே
விட்ட மெழுகோடிம் மெழுகுசம னுக்கு.

சமனிரு மெழுகுமே கூட்டிச் -சருவாமல்
சார்ந்தேழு பலமிருந்திட நாட்டி
கமழண்டச் சுண்ணமுந் தீட்டி -வீரச்சுண்ணம்
சத்தியுப்புச் சிவஉப்புச் சுண்ணமு மாட்டி
விமலர்விந்துச் சுண்ணமுங் கூட்டி -வங்கச்சுண்ணம்
சிங்கித் தாளகக் கெளரிச்சுண்ணம் - நீட்டி
அமலமில் கெந்திச்சுண்ணம் வாட்டி -வெள்ஃளப்
பாஷாணம் வெங்காரம் வெடிசுண்ணம் பூட்டி.

பூட்டகமில் சீனச்சுண்ணம் -துருசு
சூடச்சுண்ணம் சேர்த்துபதி ஞறு சுண்ணம்
நாட்டகமாய் வகைக்குக்கால் திண்ணம -சேர்த்து
தன்மை யுடன்முன் மெழுகுடன் வண்ணம்

நாட்டியரைத்திடப் பின்னும் –செப்புவேன்
தேன்திரு நீற்றுச்சாறு சமனெடை பண்ணும்
தாட்டீக மெழுகுச் சுண்ணமும் –தன்னுடன்
தாக்கிரு சாமம் ஆட்டப் பயன்பெறப்பண்ணும்.

பண்புற மெழுகுபோ லெடுத்துக் — குன்றி
யாக உருட்டியே நிழலிலிரு தொகுத்து
உண்டிடப் பாகங்கே ளடுத்து — முன்னே
ஓதிய ஆயுள்விருத்தி மந்திரஞ் செபித்து
அண்டியே மண்டிலங் கொடுத்துப் — பூசை
அம்பிகையைத் தியானம் செய்துபின் முடித்து
சண்டனு நீங்கிட நடத்து — மிருத்துவிஞ்சை
சாரும் குளிகைகொள் ளகாரமும் விடுத்து.

மும்முத லாதாரம் நாட்டி — முறையுடன்
குளிகையைக் கோவெண்ணெய்க் குள்ளிட்டுத் தீட்டி
"ஹம்"மென் றருந்திடப் பூட்டு — நாளொன்று
அன்பா யிருவேளை யாகச் சூட்டி
உம்மெனப் பத்தியங் கூட்டிப் — புளிபோகம்
நீக்கியே மணடலம் சாப்பிடு மாட்டி
நம்மென் றோர்மண்டலந் தீட்டிக் — கொண்டிட
நமனில்லை உட்லாவி திடமாம்பா லூட்டி.

பாழுட லுயிர்விட்ட போது — ஆனம்
பற்றியே சீவித்துப் பலுக்கவும் மீது
மீளுடன் சிறுநீர்தப் பாது — கொண்டு
மிருத்துவிஞ்சை மாத்திரை முன்னுரைத்தாது
மாளுடற் கிட்டிடச் சூது — இன்றியே
மரித்தவர் எழுந்துமே பேசுவர் சாவு
நாளுமில்லை எமனது வாது — இதை
நாட்டினல் பிரமன்விதி மாற்றிடு மீதே.

தீதன்றி மரித்தோர்க்கு முன்னே — ஆயுள்விருத்தி
இடமந்திரம் நூற்றெட்டு ஓதித்தான் பின்னே
வாதின்றி யிறந்தவர் கண்ணே ஓங்கி
வலுவுற் றெழுந்துடன் பேசுவார் கண்ணே

மேதினி முகூர்த்தமென் றெண்ணே — ஆவி
மேலிடு மதற்குப்பின் னிலைத்திடப் பண்ணே
சோதித்த முகூர்த்தமூன் றெண்ணே — முறைப்படி
ஈந்திடச் சாவில்லை இருந்தவர்க் கென்னே.

வர்க்கத்தி லானதி லாகும் — வகை
வாதனை நீக்கியேமன் பழியதும் போகும்
நற்கம லாள்தனக் காகும் — பரை
நாத மணிமலர் நாளுமுண் டாகும்
உற்பவ வினைகளும் போகும் — மிருத்யுவிஞ்சுக்
குளிகையால் இறந்தோர் பிழைத்திட லாகும்
சற்குரு பாதமுன் னாகும் — சித்தர்கள்
சாற்றுமல் மறைத்ததைச் சொன்னேம்மெய் யாகும்.

## "கிடக்கிது" என்று தொடங்கும் பாடல் முதல் 12 பாடல் களுக்கு உரை. மிருத்யுவிஞ்சுக் குளிகை

உயிர் உடலில் தங்கித் தன்மணம் வீசி என்றும் வாழ ஆயுள் வளர்ச்சிக் குளிகையைக் கூறுகின்றேன். சிப்பியை எடுத்துக் கொண்டுவந்து உடைத்து உள்ளே இருக்கும் தசையினைத் தொகுத்து வைததுக் கொண்டு, அதன் அளவுக்குப் பாதி வெங் காரத்தைத் தூளாக்கிப் போட்டுப் பிசைந்து ஒருநாள் வைத் திருக்க நீர்வடியும். அதனையொரு பழகிய பாண்டத்தில் விட்டுக் குடநீரும் சிறுநீரும் சமஅளவாக விட்டுச் சிறுதீயாக எரித்துக் காய்ச்சுக. சுண்டக் காய்ந்து மெழுகான பின்மெழுகின் எட்டில் ஒருபங்கு, பிறக்கின்ற குழந்தைமேல் பூத்திருக்கும் மாவினைச் சேர்த்துக் கொண்டு வந்து கலந்து கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்க. பின்னர் திருநீற்றுவேர் வேலைவேர் மேனிவேர் பேய்க் குறிஞ்சாவேர் கொடிவேலிவேர் சத்திச்சாரணைவேர் நாகதாளி வேர் ஆகிய ஏழுவேர்ப் பொடிகளையும் வகைக்கு அரைப்பலமாகச் சேர்த்துச் சிறுநீர் விட்டரைத்துப் பின்பு திருநீற்றுச்சாறு விட் டரைத்து மென்மையாக ஆக்குக. பின்னர் கருக்குட நீர்விட்டுக் கல்வத்திலாட்டி மயனமாகச்செய்க. முன்னர்க் கூறிய மதலைமாச் சேர்த்த மெழுகுடன் இதனைச் சமஅளவு சேர்க்க. ஆக ஏழு பலமாகும். அத்துடன் அண்டச் சுண்ணம், வீரச்சுண்ணம், சத்தியுப்புச் சுண்ணம், சிவஉப்புச் சுண்ணம், விந்துச்சுண்ணம்,

வங்கச்சுண்ணம் சிங்கி, தாளகம், கௌரி, கெந்தி, வெள்ளை, வெங்காரம், வெடியுப்பு, சீனம், துருசு, சூடன் ஆகிய இவற்றின் சுண்ணமும் சேர்ந்து பதினாறு சுண்ணமாகும். ஒவ்வொரு சுண்ணத்திலும் வகைக்குக் காற்பலம் எடுத்து முன்மெழுகுடன் சேர்த்துத் திருநீற்றுச்சாறு சமஎடை சேர்த்து இரண்டு யாமம் அரைத்து மெழுகு போல் எடுத்துக் குன்றியளவாக உருட்டுக. நிழலில் உலர்த்துக. முன்கூறிய ஆயுள் வளர்ச்சி மந்திரம் ஓதிப் பூசைசெய்து அம்பிகையைத் தியானம் செய்து கொள்க. பின்பு ஆவின் வெண்ணெய்க்குள் குளிகையைச் சேர்த்து நாளொன்றுக்கு இருவேளை 40 நாள் உண்க. பத்தியம், புளியும் போகமும் நீக்குக. உடலும் உயிரும் வலுக்கும். சாவு இல்லை. உயிர் பிரிந்த உடலின் மேல் சிறுநீரில் ஆயுள் விருத்திக் குளிகையை உரைத்துப் பூசச் சூதின்றிச் செத்தவர் எழுந்து பேசுவர். ஆயுள் வளர்ச்சி மந்திரம் 108 ஓதித்தான் குளிகை கொடுக்க வேண்டும். உயிர்த் தெழுந்தவனுக்கு ஒருமூன்றே முக்கால் நாழிகைக்குள் மேலும் மருந்து வழங்கி உயிரை நிலைக்கச் செய்க. இறந்தோரைப் பிழைத்திடச் செய்யுங் குளிகை இது. சித்தர்கள் சாற்றுமல் மறைத்து வைத்த முறையை ஈங்கே கூறினோம். (மேற்கூறிய சுண்ணங்கள் பதினாறும் இந்நூலாசிரியர் மற்றப் பகுதிகளில் கூறிய முறைப்படி செய்தல் வேண்டும்.)

## இங்கோலத் துறுதி கூறல்

ஆகுதற்காய் இங்கோலத் தைலந் தன்னை
அறைந்திடு வேனுலகில் மக்காள் மக்காள்
பாருபத மாகத்தான் பதினெண் பேர்கள்
பரிபாஷை சூட்சமமாய் மறைத்துப் பேசி
வாகுடைய அகத்தியரும் மந்திர காண்டம்
வழுத்திவைத்தார் வயணமின்றி வாது பேசி
காருத்தன் கடலிருக்கக் கபாட மிட்டுக்
கழறினதை யகற்றியிங் கோலஞ் சொல்வேன். (50)

## சிந்து

அம்மை யரனுமை தாள்போற்றி — அனுதினம்
அம்.உம். உயர்மதி ஆதியாய் நின்றுள — இங்கோலம்
சொல்லும்படிக் கிரங்கியானே — சுகமுறவே
ஒருவேன்கு தறவுமையவள் தன்னைத்துதித்து
அல்லலகற் றிடவுந் தானே — இங்கோலத்
தயிலமெ னும்பரை நிறையெனு வழியுற

சல்லாபச் சிப்பிச்சதை யூனே — சரிந்திடாது
ஐந்துசேரெடுத் தொருபாண்டம திட்டுப்பின்
உல்லாசச் சிறுநீருயர் மானே — படிமூன்றும்மே
விட்டதன் பின்பிற குயிர்ச்சரக்குகள் ஓதுவன் நானே (51)

நாணமில் லஞ்சனமுந் தொட்டி — வெள்ளை
பாஷாணங் கௌரியும் வீரமுஞ்சிலை கெந்தி
காண தீமுரு சங்குகெட்டி — வகைக்கரை
பலம்நுணுக்கி யெடுத்து எட்டிவிதை இடித்தரை சேர்
பூணும் பானைமேல் மூடிசட்டி — தயங்கிடாது
பூமியில் புதைத்திடு உமையவள் செபம்சொல்லி
தோணமண்டலம் மூன்றுவெட்டி — யெடுத் துடனே
துதிபெற நிதியுடன் திகழுற வாண்டிட. (52)

ஆண்டிடப்பானை யடுப்பது ஏற்றி — வினையமற
ஆமணக்கு விறகினு லெரிசிறு தீயிட்டு
மூன்னுடி எரிக்குமுன்னே யுமையைப்போற்றிப் — பானையுள்ளே
உள்ளதைக் கையினுல் பிசைந்துமே வடித்துப்
பூண்டிடச் சித்துமந்திரஞ் சாற்றி — எரித்துறுதி
மெழுகு பதமெடு மதலைமேல் பூக்குமாச் சொரிந்து
தூண்டிப் பலம்ரெண் டேற்றி ஓர்பலம் புனுகு
ஒன்ருகச் சேர்த்துடன் நிகழ்த்தியே யெடுத்து. (53)

எடுத்திடு அண்டச்சுருடன் சுண்ணம் அரைப்பலம்
வகைக்குச் சேர்த்துமே கோநெய்விட் டரைத்துமே
தொடுத்தரை மண்டலம் முதன்மை நிவேதனமாய்
தோத்திரம் செபித்து மந்திரத் தியானஞ்செய்
தடுத் திடனுல் தீரும்பின்னர் இதற்குப்பேர்
ஆனதோர் பிண்டத்தின் கருவதுமாகும் — மாற்றமாய்
விடுத்துச் செல்லார் என்போலானோர் முன்னேரிப் புவிமனு
வெகுவித சூட்சமாய் மறைத்துநே ரோதினுர்கள். (54)

கள்ளமில்லா ஐங்கோல மாச்சு காசினியில்
கருவாளிக்குயர் கருவாகு மமுதாய்
உமலாது உற்றபே ரம்பாச்சு உலகமதில்
உற்றதோர் சூனிய மாரண வசியாம்

தள்ளாத சித்துக்கு உறுதியுமாச்சு தயங்கிடாது
தகர்ந்திடும் பலபல விஷயங்கள் சூட்சம் செபமந்திரம்
அள்ளியஞ்சன மிட்டுமே பாய்ச்சி யரைநொடியில்
அண்டபிண்டமது ஒன்ருகநிறைந் தாடும். (55)

ஆடும்பார் துட்ட மிருகங்கள் கூட்டம் ஐங்கோலந் தன்னைக்
கண்டவுடன் பயந்தோடியே யணுகிடாது
நாடும்படிக்கும் வேருமெ தேஷ்டம் நானிலத்தில்
நவிலொணு வகாரமெய் ஞானம் விளங்கிடும்
ஓடும் சரக்குநிற்கும் நாட்டும் உலகமதில்
ஓங்கதிர்பல கோடி நோய்களும் நீங்கியே
கூடுஞ் சித்துவிலாச கோஷ்டம் குமரியம்பாள்
கோமளை யிருபாத மேலுண்மை யுரைத்திட்டேன். (56)

## ஐங்கோலத் தைலம்

50முதல் 56முடிய உரை.

பதினெண் சித்தர்கள் பரிபாஷை கூறிநுட்பமாக மறைத்து வைத்த ஐங்கோலத் தைலம் கூறுவேன் கேட்பீராக. சிப்பிச் சதை ஐந்து சேர்எடுத்து ஒருபாண்டத்திலிட்டு உல்லாசச் சிறு நீர் மூன்றுபடியும் ஊற்றிக்கலந்து வைத்துக்கொண்டு அதற்குள் அஞ்சனபாடாணம், தொட்டிப்பாடாணம், வெள்ளைப்பாடாணம், கௌரி, வீரம், மனேசிலை, கெந்தி, தீமுருல்பாடாணம், சங்குப் பாடாணம், வகைக்குப்பலம் அரைநுணுக்கி, எட்டிவிதை யிடித்த தூள்சேர் அரையும்சேர்த்து விரவி யொருபானைக்குள் ளிட்டுக்கவிழ்சட்டியால் மூடிச்சீலைமண் வலுக்கச் செய்து நிலத்தில் குழிவெட்டிப் பானையை வைத்துமூடி மூன்று மண்டலம் கழித்து எடுத்துப்பின் அடுப்பிலேற்றி ஆமணக்கு விறகினுல் சிறுதீயாக எரித்து மெழுகு பதமாக்குதல் வேண்டும். (எரிக்குமுன் உமையம்மையைப் போற்றிக் கொள்க. பானைக்குள் உள்ள பொருளைக் கையினுல் பிசைந்து வடிகட்டிச் சித்து மந்திரம் சொல்லி எரிக்கவேண்டும்.) அம்மெழுகு பதத்துடன் மதலைமேல் பூக்கும் மா இரண்டு பலமும் புனுகுஒரு பலமும் சேர்த்துக் கொள்க. அத்துடன் அண்டச்சுண்ணம், சூடச் சுண்ணம் வகைக்கு அரைப்பலம் சேர்த்து ஆவின் நெய்விட்டு அரைத்துச் சிமிழில் வைத்துப் பேணுக. இருபதுநாள் முதன்மை யாக படையல்கள் வைத்துப் பூசைசெய்துபாடி மந்திரம்

செவித்துக் கொள்க. இதற்குப்பேர் பிண்டத்தின் கரு என்பது. இதனுனுட்பமாக மறைத்தனர். சூனியம், மாரணம், வசியம் முதலியன வெற்றியாம். சித்துக்கும் உறுதி. தீயவிலங்குகள் அஞ்சிவிலகும். வகாரம் பற்றிய அறிவு தோன்றும் பலகோடி நோய்கள் நீங்கும்.

## கௌரிச் சுண்ணம்

திட்டமுடன் கௌரியென்ற சுண்ண மொன்று
தீவிரமாய்ச் செப்பிடுவேன் அறிந்து தேர
தட்டியின்றிக் கௌரிபலம் கட்டிக் கொண்டு
தாழ்மையிலாச் சிப்பிநீர் தன்னுல் சாமம்
கட்டிரெண்டு தீமூட்டிச் சுருக்குத் தாக்குக்
காரணமாய்ச் சீனம் இருபலம் தன்னை
அட்டியின்றி யண்டவெள்ளைக் கருவால் ஆட்டி
ஆனதொரு கௌரிதன்னை அதனுள் தாக்கே. (57)

தாக்கியதன் மேலேமண் சீலை ஐந்து
தவருமல் பூட்டியபின் ரவியு லர்த்தித்
தேக்கியொரு பாண்டமதில் புளியம் புறணித்
தீச்சுட்ட சாம்பலது பாதி யிட்டு
நோக்கியதில் கவசித்த கட்டி தாக்கி
நுண்மையுடன் மேலும்புளிச் சாம்பல் கொட்டி
பாக்கியற முடாவிற்குச் சில்லிட் டேழு
மண்சீலை செய்தெரிப்பாய் சாமம் ரெண்டே. (58)

இரண்டாகி யெடுத்துப்பின் னியல்பு கேளு
குடநீரும் சிறுநீரும் நீற்றுச் சாறும்
பண்டாகச் சமனெடையாய் ஒன்று கூட்டிப்
பனியதில் ஓர்நாளே வைத்து எடுக்கக்
கண்டுசெய நீரினுலே சாமம் ஒன்று
கனககௌரிக் கிட்டாட்டி ரவியுலர்த்தி
விண்டிடவே சில்லிட்டுச் சீலை யைந்து
விளையமற மணல்மறைவில் புடமும் மூன்றே. (59)

மூன்ருகும் வில்லையது வெண்க லம்போல்
மூர்க்கமின்றி யொளிவீசுங் கல்வத் திட்டு
மேன்மையுறச் சாமமொன்று முன்னீர் தன்னுல்
மிகவாட்டி வட்டுச்செய்து உலர்த்திச் சில்லிட்

டான்மமுறச் சிலமண் வலுக்கப் பூட்டி
யணியைந்து பலமெருவில் புடமு மைந்து
பான்மையுறப் போட்டெடுக்கக் கொடிய சுண்ணம்
பாதகங்கள் வாராது பலநோய்க் கீயே. (60)

57முதல் 60 வரை உரை.

## கௌரிச் சுண்ணம்

கட்டிய கௌரி இரண்டு பலத்துக்குச் சிப்பி நீர் கொண்டு ஒருச்சாமம் சுருக்குத் தாக்குக. இரண்டு பலம் சீனத்தை முட்டையின் வெள்ளைக் கருவாலரைத்து அதனுள் கௌரியை வைத்து இறுகப் பொதிந்து மண்சீலை ஐந்து தவருமற் செய்து வெயிலிலுலர்த்தி எடுத்துக் கொள்க. புளியம் புறணி சுட்ட சாம்பலில் ஒரு பாதியை ஒரு பாண்டத்திலிட்டு அதற்குள் கவசித்த கட்டியை வைத்து மற்ற ஒரு பாதிச் சாம்பலை அதன் மேலிட்டு அந்தப் பானை மேல் சில்லிட்டு மண்சீலை செய்து காய வைத்து இருச்சாம நேரம் எரித்து எடுத்துக் கொள்க. பின்னர் குடநீரும் சிறுநீரும் திருநீற்றுச் சாறும் சம அளவாகக் கலந்து கூட்டிப் பனியதிலோர் நாள் வைத்து எடுக்கச் செயநீராம். இந்தச் செயநீரை மேற்படி கௌரிக்கு விட்டு அரைத்து வி.த.கா.சீ.ம.செ. மணல் மறைவிற் புடமிடுக. இங்ஙனம் மூன்று புடமிட வில்லை வெண்கலம்போல் ஒளிவீசும். பின்பும் கல்வத்திலிட்டு ஒருச்சாமம் முற்கூறிய நீரால் அரைத்து வி.த.கா. சீ ம.செ. சில்லிட்டுக் காயவைத்து ஐந்து பல எருவிற் புடமிடுக. இங்ஙனம் ஐந்து புடமிடுக. கொடிய சுண்ணமாகும். பல நோய்களுக்கு வழங்குக. எவ்விதக் குற்றமும் வராது.

## நவபாஷாணச் சுண்ணம்

பலநோய்கட் கீந்திடவே இச்சா பத்தியம்
பாங்கமாக் காத்திடவும் வேண்டும் வேண்டும்
நலமுறவே நவிலுவேன் நவபா ஷாணத்தை
நன்மைபெறக் கௌரிச் சுண்ணம் செய்முறையே
தலமிசையில் செய்தெடுக்கத் திடம தாகும்
தாரணியில் இம்முறைகள் நுட்பஞ் சொன்னேன்
கலகமின்றி யுப்புப்புளிச் சரக்கின் மார்க்கம்
கண்டுகொள்ளக் காட்டிடுவேன் அறிவீர் மக்காள். (61)

## உப்புப் புளிச் சரக்குகள் விவரம்.

தாய்தந்தை கூடியுயிர் உருவமுண் டாச்சு
தரணிதனில் புளியுப்பாலும் விரவிக்கொள் பேச்சு.

மக்காத வெடியுப்பு கல்லுப்புறுதி யுப்பே
மகிழ்படி காரம்பழம் புளியது புளிப்பே
தக்காது சூடன்கடல் நுரையது உப்பே
தகர்ந்திடாத துருசுகற் சுண்ணும்பு புளிப்பே
மிக்கஅதி சூடன்காந்தம் மேன்மைபெறு உப்பே
மிகுநல்ல கெந்தகமும் காடிபார்பு ளிப்பே
தொக்குமிரும்பு தொட்டிப் பாஷாணம் உப்பே
தோன்றும்நல் லெண்ணெய்புளி நரளையும் புளிப்பே. (62)

அன்னபேதியும் மாங்கிசபேதியும் உப்பே
அறிந்திடும் கல்மதமும் புளியாரையும் புளிப்பே
நன்னய வீரம் அப்பிரேகநல் உப்பே
நாட்டிடும் வளையலுப்பு பொன்னம்பர் புளிப்பே
பின்னமில்லாத கௌரி வெள்ளையும் உப்பே
பேர்பெருகும் புளிமாங்காய் பனங்கள்ளும் புளிப்பே
பன்னும்வைக் கிராந்தம்எழில் தங்கம்எழில் உப்பே
பயனுறு நிமிளையும் மனேசிலையும் புளிப்பே.

நாகம் நவச்சாரம் நயந்தரும் உப்பே
நன்றுரை வெங்காரம் சவ்வீரம் புளிப்பே
ஆகம முட்டை வெள்ளைக்கரு கிளிஞ்சோடு உப்பே
அண்டத்தின் மஞ்சள்கரு கிளிஞ்சல்சதை புளிப்பே
பாகமாய் மனுஷமூத்திரம் பச்சைக்கற்பூரம் உப்பே
பண்பான இந்துப்பு மனுஷமலம் புளிப்பே
சகல புளியுப்புச் சேர்ந்தசுவை சகிப்பே
சாரஞ்செய் புளியுப்பு தன்னுல் வகார முப்பே.

முப்புவாது வேண்டில் உப்புப் புளியறிவாய்
மூர்க்க மகற்றி யோகநிஷ்டை தனைப்புரிவாய்
செப்பினுர் சித்தர் களும்பல நூலில் விரிவாய்
போகர்நிகண் டாயிரத்தெண் ணூறும்பார் பரிவாய்
தப்பிதமில் லாதிந்தத் தரணியுள்ளறி வாய்
தயங்காதென்நம னுசத்திறவு கோல்பார் தெரிவாய்
சப்தரச ரூபகெந்த மாதறி வாய்
சத்திநாத விந்தான சரக்கைச்சொல் வேனறிவாய்.

தெரிந்திடவே பூநீறு அப்பிரேகம் நிமிளைநாதம்
திகழ்வெள்ளைப் பாஷாணம் சூடன்சூதம் விந்து
திருகுணசல் பூநாகம் லிங்கமுயர் நாதம்
வீரமுடன் கடல்நுரையும் கல்லுப்பு விந்து
நெறியாக நாகவங்கம் இந்துப்புசெம்பு நாதம்
எவச்சாரம் சலாசத்துபூரம் இயல்புடைய விந்து
புரியவே நாகமது நாதக்கல்மதம் இந்துப்பு
புகழ்நாத விந்துவால் திரேகதிடம் வகாரமே. (63)

## வகார குருச் சுண்ணம்

வகாரமுடை வாததீட்சை குருவாய் நிற்க
வழுத்திடுவேன் வகாரதீட்சை குறுக்கி நன்றாய்
அகாரம்விட்ட உப்புப்புளிச் சரக்குத் தன்னால்
அறிவிப்பேன் அலையாதீர் வித்தை கோடி
விகாரமில்லா வெடியுப்புப் படிகா ரந்தான்
வினையமில்லாக் கல்லுப்பு இந்துப் பாகும்
காரமிட்ட அப்பிரேகம் வளைய லுப்புக்
கல்மதமும் வகைக்குஅரைப் பலமுந் தாக்கே. (64)

தாக்கிவெடி படிக்காரம் அரைத்தெ டுத்தே
தனிவைத்துக் கல்லுப்போ டிந்துப் புத்தான்
நோக்கினேன் கீழ்மைபுத்தி விட்டுப் பின்பு
நுகர்ந்திடவே அப்பிரேகம் வளைய லுப்பு
தேக்கிடவே ஆட்டியேயொன் றுகக் கூட்டி
..................... ..................... ..................... .....................
தாக்கியெடுத் தெல்லாமாய்க் குழிக்கல் விட்டுத்
துவட்டிடுவாய் இருசாமம் பகரக் கேளே
(ஒருவரி குறை) (65)

கேளப்பா நுணுக்கியதோர் சரக்கை யெல்லாம்
குணமுடனே சாமமொன்று நீற்றுச் சாற்றால்
கோளறவே சட்டியிட்டு வறுத்தெ டுத்துக்
கௌரிசுண்ணம் செய்முறையின் செயநீர் தன்னால்
சூளஇரு சாமமது நன்றாய் ஆட்டிச்
சுகமுடனே மண்மறைவில் புடமி ரண்டாய்
மீளவந்த வட்டெடுத்துக் கல்வந் தாக்கி
முன்செயநீர் விட்டுஇரு சாமம் ஆட்டே. (66)

ஆட்டியே வட்டுசெய்து ரவியு லர்த்தி
அகலிவிட்டு மண்சீலை யைந்து தாக்கி
நாட்டியே பத்துப்பலம் எருவ தன்னில்
நன்மையுடன் புடமைந்து இவ்வா ருகப்
பூட்டியே யெடுத்திடவும் கொடிய சுண்ணம்
புகழ்பெருகு வகாரக்குரு வாதியாச்சே
காட்டிலே அலைந்துபோய்க் குருதே டாதீர்
கவலையற வகாரதீட்சை செய்து காணே. (67)

காணவே செம்புவெள்ளி பத்துக் கொன்று
கருத்தறியக் குருச்சுண்ண மிட்டு ருக்கத்
தோணபரி மாற்றுப்பத் தரையு மாகும்
தினங்கண்டு அறம்வளர்த்து உண்பீர் உண்பீர்
பூணஇந்த முறை காட்ட லாகா தென்று
புரட்டாகப் பலகோடிநூல் மொழிந்தார் சித்தர்
ஆணவமாய்க் காமியங்கள் விட்டெறிவீர் மக்காள்
அம்பிகையின் பதமறியச் சொன்னேன் பூவே. (68)

64 முதல் 68முடிய உரை

## வகார குருச் சுண்ணம்

வெடியுப்பு, படிகாரம், கல்லுப்பு, இந்துப்பு, அப்பிரேகம், வளையலுப்பு, கல்மதம் ஆகியவற்றில் வகைக்கு அரைப்பலம் எடுத்துக் கொள்க. இவற்றுள் வெடியுப்பு படிகாரம் இரண்டை-யும் தனியே அரைத்து எடுத்து வைத்துக்கொண்டு பின்மற்றவற்றையும் தனியே யரைத்து அத்துடன் சேர்த்துப்பின் குழிக்கல்லிலிட்டுத் துவள இரண்டுசாமம் அரைப்பாயாக. பின்னர் எல்லாவற்றையும் பொடித்துத் திருநீற்றுச் சாற்ருல் கோளறவே சட்டியிட்டு ஒருசாமம் வறுத்தெடுத்துக் கௌரிச்சுண்ணம் செய்முறை போல் செயநீரால் இரண்டுசாமம் நன்ருய் அரைத்து ஆட்டி வி.த.கா.சீ.ம.செ. மண்மறைவில் இங்ஙனம் இரண்டு புடமிடுக. மீளவும் அந்தவட்டவில்லைகளைக் கல்வத்திலிட்டு முன்செயநீர் விட்டிருசாமம் ஆட்டுக. வி.த.கா.சீ.ம.செ.5. பத்துப்பலம் எருவில் இங்ஙனம் ஐந்து புடமிடுக. கொடிய சுண்ணம். இதுதான் புகழ்பெருகு வகார குருச்சுண்ணம். காட்டிலேயலைந்து குருத்தேடாதீர் கவலையற வகாரதீட்சை செய்து காண்க செம்பு வெள்ளி பத்துக்கு ஒன்று குருச்சுண்ணமிட்டுருக்கப் பரிமாற்றுப் பத்தரையாகும். அறம்வளர்த்து உண்க. இந்த முறையைக்காட்டலாகா தென்று சித்தர் பலகோடி நூல்கள் புரட்டாக வெழுதி மறைத்தனர். ஆணவமும் காமியமும் விட்டு அம்பிகை திருத்தாள் மலர்மேல் நன்மலர் தூவுக.

## கௌரிச் செம்பு

பூமகளாங் கௌரிக்கட்டி பலமொன் றெய்திப்
புனிதமுள்ள கார்த்திகையின் கிழங்கு தன்னை
நேமமுடன் குடைந்து கௌரிக் கட்டிவைத்து
தினைவுடனே யவ்வாயைக் கிழங்கால் மூடிச்
சேமமுடன் சீலைமண் கிழங்கிற் கைந்து
சிதருமல் இட்டுரவி யுலர்த்திப் பண்பாய்
……………… ……………… ……………… ………………
இணக்கமுடன் குகையழிய ஊதிக் காரே. (69)
(ஒருவரி குறைவு)

ஊதியே குகையாற்றி யுடைத்து நோக்க
உண்மையுயர் தங்கம்போல் உகந்து காணும்
நீதிபெறுங் கௌரிச்செம்பு ஒன்றுக் கெட்டு
நிறைவெள்ளி யிட்டுருக்க மாற்றெட் டாகும்
சோதிமய மாகிச்சுகம் உற்று வாழச்
சொல்லிவைத்தேன் வாதவித்தைஇதுதா னாகும்
வாதிமகன் வாதியும் நீயாய்க் காவாய்
வாதையறக் கெந்தகச்செம் புரைப்பேன் நன்றே. (70)

**69, 70 உரை.**

கார்த்திகைக் கிழங்கினைக் குடைந்து அதற்குள் ஒரு பலம் கௌரிக் கட்டியை வைத்து கிழங்கின் வாயைக் கிழங்கினால் மூடிக் கிழங்கிற்கு சீ. ம. 5 செ. காய வைத்துக் குகைக்குள் வைத்துக் குகையழிய ஊதிப் பார்த்துக் குகையை யாற்றியுடைத்து நோக்க உண்மையான உயர் தங்கம் போன்ற கௌரிச் செம்பு இருக்கும். செம்பு ஒன்று வெள்ளி யெட்டுச் சேர்த்துருக்க எட்டுமாற்றுகும். நலமுற்று வாழச் சொல்லிவைத்தேன். இனிக் கெந்தகச் செம்பும் கூறுவேன்.

## கெந்தகச் செம்பு

நன்றெனவே கெந்தகத்தின் செம்பு வாங்க
நாட்டிடுவேன் முருங்கையிலை தனைய ரைத்து
உன்னிஉரி தேங்காயளவு எடுத்த தற்குள்
உயர்கெந்திக் கட்டி பலம் ஒன்று தாக்கி

வென்றிடவே சீலைமண் ஐந்து பூட்டி
எரிவெயில் காய்ந்த பின்பு உயர்சாண் எருவில்
தண்மையுறப் புடமிடவும் செம்ப தாகும்
தாக்குஒன்று வெள்ளியெட்டில் வயதே மாச்சு. (71)

71—உரை

முருங்கையிலையை அரைத்து உரித்த தேங்காயளவு எடுத்து அதற்குள் கெந்திக் கட்டியை ஒரு பலம் வைத்துச் சீ. ம. 5. செய்து வெயிலில் காய வைத்துச் சாண்புடமிடச் செம்பாகும். வெள்ளி யெட்டில் ஒன்று தாக்க ஏழு மாற்று.

## தங்க பற்பம்

ஆச்சென்று சுருள்தங்கம் மெல்லிய தாகக்
கத்தரித்துக் குழிக்கல்லில் இட்டு நன்றாய்
வீச்சென்று உத்தாமணிச் சாறு தன்னால்
இருநான்கு சாமமது அரைத்துத் தட்டி
நாச்சலுற்றுக் குக்குடத்தில் புடமிட் டெடுக்கக்
கனகமுயர் பற்பமதாம் அரிசி யெடை
நீச்சென்று கோநெய்யில் பலநோய்க் கீய
நிலைத்துவிடும் காயம்பத் தியமு மில்லை. (72)

72 உரை

தங்கத்தின் மெல்லிய சுருளை வாங்கிக் கத்தரித்துக் குழிக் கல்லிலிட்டு உத்தாமணிச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வி. த. கா. சீ. ம. செ. கோழிப்புட மிட்டெடுக்க உயர்ந்த பற்பமாகும். ஆவின் நெய்யில் அரிசியெடை யளவாகப் பல நோய்கட்கு வழங்குக. பத்தியமில்லை. உடல் நிலைக்கும்.

## பஞ்சபூதச் சரக்கு

இல்லத்தி லிருந்துப்பு கல்லுப்பு பிருதிவியாகும்
இயல்பான நவச்சாரம் சத்திச்சாரம் அப்புவாகும்
தொல்லையிலா வெடியுப்பு சவுட்டுப்பு தேய்வாகும்
துளக்கரிய துரிசு வெண்காரம் வாய்வாகும்
வல்வழலை பூரமது வலுத்தவா காயமாச்சு
வழங்குமந்தப் பிருதிவு அப்புவினி லொடுங்கும்
நல்லவப்பு தேய்வினி லொடுக்கம் தேய்வு வாய்வினி லொடுக்கம்
வாய்வு ஆகாயத்தி லொடுக்கம் ஆகாயம் சிவத்தோடு
ஒடுக்கமாமே. (73)

ஒடுக்கமுயர் பஞ்சபூத நிலையைக் கண்டு
ஒவ்வொன்றுக் கீரைந்து சரக்குக் கூட்டி
நடுவணையைப் பிடித்துத்தெரி நயந்துற் ருட
நாதாந்தம் வேதாந்த சித்தாந்த மாச்சு
அடுத்துவரும் வாதவித்தை வயித்தியங்கள்
ஆதாரம் பஞ்சபூதச் சரக்கா லாகும்
தொடுத்துவரும் ஐம்பூதம் தன்னுல் பாரும்
திடமுரைப்பேன் வகாரசூட்சம் அறிந்து போற்ற. (74)

## பஞ்சபூத வகார குருச்சுண்ணம்

போற்றிடவே கல்லுப்பு நவாச்சா ரம்பார்
புகழ்பெரிய வெடியுப்பு வெங்காரம் பூரம்
சாற்றிடவே வகைக்குஅரைப் பலமும் கூட்டிச்
சருகாது கல்வமதில் நுணுக்கிச் சட்டி
ஏற்றிடவே மருந்திட்டு நீற்றுச்சாறு கொண்டு
இயல்பாகச் சாமமொன்று வறுத்தெ டுத்து
ஆற்றிகல்வ மிட்டுமுன் செயநீர் தாக்கி
அரைத்தெடுப்பாய் சாமமது மூன்று காணே. (75)

காணவே வட்டுச்செய்து கதிரோ னிட்டுக்
கருதியகல் தாக்கியேழ் சீலை செய்து
தோணபுடம் மண்மறைவில் இரண்டு தாக்கித்
தொகுத்திட்டமுன் செயநீரால் சாமம் நான்கு
பூணவில்லை ரவியுலர்த்தி யீரொன் பானப்
புகழ்பலமா மெருவில்புடம் ஐந்து தாக்க
நாணமறத் தங்கநிறச் சுண்ணங் காந்தி
நன்னயமாய்ச் செயநீரின்றேல் பகரக்கேளு. (76)

கேளுதிரு நீற்றுச்சாறு தன்னு லேசெய்
தெடுத்திடவும் செயம்பொருந்திச் சுண்ண மாமே
வாழும்பஞ்ச வகாரகுரு வலுவுண் டாச்சு
வயங்குவெள்ளி செம்புபூத்துக்குக் குருவொன் றிய
மீளும்வய தீரெட்டாம் கோடிநோய் தீர்ந்து
இன்பமுறும் பத்தியமும் இல்லை கண்டாய்
தாழுதலும் இதற்கில்லை என்னுல் கற்பம்
தாக்குஞ்சரக் காட்டச்செய நீர்தான் சொல்வேன். (77)

75, 76, 77,- உரை

கல்லுப்பு, நவச்சாரம் வெடியுப்பு, வெங்காரம், பூரம் வகைக்கு அரைப்பலம் கூட்டிக் கல்வத்திலிட்டு நுணுக்கிச் சட்டி யிலிட்டுத் திருநீற்றுச் சாற்ருல் இயல்பாக ஒருச்சாமம் வறுத்து எடுத்து ஆற்றிக் கல்வத்திலிட்டு முன்செயநீர் விட்டு மூன்று சாமம் அரைத்து எடுத்துக் கொள்க. வி.த.கா.சீ.ம. 7 செ. இங்ஙனம் மண்மறைவில் இரண்டு புடமிட்டு முன்செயநீரால் நான்கு யாமம் அரைத்து வி.த.கா.சீ.ம.செ. இங்ஙனம் ஐந்து முறை 19 பலஎருவில் புடமிடத்தங்கநிறமான சுண்ணமாக ஒளிறும். முன்கூறிய செயநீரின்றேல் திருநீற்றுச்சாற்ருலே செய்க. சுண்ணமாகும். இது பஞ்சவகாரகுருச்சுண்ணம். வெள்ளி செம்பு பத்துக்கு ஒன்று ஈய ஈரெட்டு வயதாகும். கோடிநோய் தீரும். இன்பம்மிகும். பத்தியமில்லை. தாழ்வில்லை. இது கற்பம்.

## சகல சரக்கும் நீற்கச் செயநீர்

தான்பெறவே குடநீர்சிப்பி நீர்சிறுநீர் மூன்றும்
 தவருமல் வகைக்குஅரைப் படிநீற்று ச்சாறு
மேன்மையுற இருழக்காற் படியோ டெல்லாம்
 ஒன்ருகக் கூட்டிமதி யொருநாள் வைத்துப்
பான்மையுற வெடுத்துத்தெளி விறுத்துப் பாரு
 பாங்காகத் தாய்மையைப்போல் நிறமும் காந்தி
ஆண்மையுற வெடுத்ததோர் சரக்கை யெல்லாம்
 அஞ்சாமல் ஆட்டுமிந்தச் செயநீர் பாரே. (78)

பார்த்திடவே எச்சரக்கும் நுணுக்கி யேமுன்
 பக்குவமாய்ச் சட்டியிட்டு அடுப்பி லேற்றி
நேர்த்தியுடன் திருநீற்றுச் சாறு கொண்டு
 நிலவரமாய் இருசாமம் வறுத்தெ டுத்துக்
கார்த்திடப்பின் செயநீரா லரைத்துத் தாக்கக்
 கட்டிதங்கக் கட்டியெனக் கலந்துற் ருடும்
பூர்த்தியாது சித்தர்கள் செய்ந்நூற் கெல்லாம்
 புகன்றிட்டேன் சூட்சமிது அறிவீ ருண்மை. (79)

## பஞ்சபூதக் குருச் செந்தூரம்

உண்மையுடன் பஞ்சபூதச் சரக்குத் தன்னை
 உகந்துநீற்றுச் சாறதனுல் வறுத்தெடுத்துத்
தண்மையுறப் பொற்றலைக் கையான் சாற்ருல்
 தாக்கிச்சாமம் நான்காட்டி வழித்து வில்லை

பண்புடனே காய்ந்துசிலை யைந்து தாக்குப்
பத்தெட்டுப் பலம்எருவில் புடமே தாக்க
வண்ணருணச் செந்தூரம் வெள்ளி செம்பு
நாவிரண்டுக்குக் குருவொன்றீயப் பதினு ருச்சே. (80)

80- உரை

முன்கூறிய ஐம்பூதச் சரக்கினை யந்த அளவுப்படி சேர்த்துச் சட்டியிலிட்டுத் திருநீற்றுசாறு தெளித்துத் தெளித்து வறுத்து எடுத்துப்பின் பொற்றலைக் கையான் சாற்றால் நான்கு யாமம் அரைத்து வி.த.கா. சீ.ம.5.செ. காயவைத்துப் பதி னெட்டுப் பலஎருவில் புடமிட அருணநிறச் செந்தூரமாகும். வெள்ளி செம்பு நாவிரண்டுக்குக் குருவொன்றியப் பதினாறு காணும்.

## சிவப்புக்கல் செந்தூரம்

ஆச்சென்ற சிவப்புக்கல் தளசெந் தூரம்
அறைந்திடுவேன் பூங்கதலி மோத்தை தன்னை
பேச்சென்று வெட்டியதின் பால்பி டித்துப்
பிசகில்லாத் தளக்கல்லை இடிதூ ளாக்கிக்
காட்சியுடன் கல்வமிட்டு மோத்தைப் பாலால்
கலங்காமல் நாலுநாள் அரைத்தெ டுத்துத்
தாட்சியாய்க் குழிவெட்டி யெருவ டுக்கித்
தட்டாமல் குக்குடமாய்ப் புடமூன் றிட்டே (81)

புடமூன்று போட்டெடுத்துப் புனிதமாய்க் கேள்
புகழ்ச்சியுடன் காலமுதற் சோகை பாண்டு
திடமில்லா நீர்ரோகம் தீரும் தீரும்
தீர்க்கமுடன் இன்னமொரு பாகம் சொல்வேன்
முடக்கமில்லாச் சிறுபூளைச் சாற்றால் கல்லை
முன்போல ஆட்டிப்புடம் போடச் செந்தூரம்
நடமிடவே நவரெத்தினம் மோத்தைப் பாலால்
நன்மைபெறு பற்பசெந் தூரங் கண்டாய். (82)

## நவரசாமிர்த மெழுகு

கண்டுலிங்கம் சிலைகெந்தி காந்தம் ரசம்
வீரமும் சிங்கிகாரம் பச்சைக்கற்பூரம் செந்தூரம்
உண்டுகௌரி படிக்காரம் பாஷாணம் பூரமும்
நல்லவெள்ளைப் பாஷாணம் மிளகுடனே யரிதாரமும்

பண்டுமெட்டி விதையெல்லாம் சமம்ஆர வாரமுநிறை
பத்தொன்ப திட்டாட்டு நால்சாம நேரமும்பின்பு
விண்டைந்து தினஞ்செயநீர் விட்டரை தீரமும்
மைபுனு குந்தன வேத்த வட்டுள் வைத்துண்பரி
வாரமும். (83)

பரிந்தோடுமீளை யட்டகாச மட்டகுன்மம் தீராத
டரண்டுகுட்ட மிருபத்தொன்றும் எண்பது வாதமும்கட்டி
மூருக்கு மிசுவுங் காமாலை சோகை
மூத்திரக் கிரிச்சனமும் வெட்டையும்
கிரந்திசூலை மகோதரம்பித்த மயக்கமும் மேவித்திரியும்
அட்டநாகமும் சில்விசகடி சோகமும் பொலா
சுரங்களுர்பெரும் பாடுவலிப்புநீர் ரோகமும் இன்னுமநேகநோய்
தீரும் நீக்குச்சை யோகமும் நாளைந்தே யூண்ணப்
பத்தியமில்லையே (84)

## சிவப்புக்கல் செந்தூரம்

### 81,82,-உரை

பூங்கதலித் தூரை வெட்டிப் பால்பிடித்துத் தளக்கல்லை (சிவப்புக்கல்) இடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு மேற்படி பாலால் நாலுநாள் அரைத்து எடுத்து வி.த.கா. சீ.ம.செ. சேவற் புடமிடுக. இங்ஙனம் மூன்றுபுடம் நல்லமருந்தாகும். சோகை, பாண்டு, நீர்ரோகம் திரும். மேற்படி கல்லைச் சிறுபூளைச் சாற்றுல் ஆட்டிப்புடம் போட்டாலும் செந்தூரமாகும். ஒன்பான் மணிகளும் இந்தப்பாலால் பற்ப செந்தூரமாம்.

## நவதசாமிர்த மெழுகு

### 83,84,-உரை

இலிங்கம், மனேசிலை, கெந்தகம், காந்தம், ரசம், வீரம், மிருதாருசிங்கி, வெங்காரம், பச்சைக் கற்பூரம், இரசசெந்தூரம், சாரம், கௌரி, படிகாரம், சங்குப் பாஷாணம், பூரம், வெள்ளைப் பாஷாணம், மிளகு, அரிதாரம், எட்டிவிதை ஆகிய பத்தொன்பது சரக்கிளையும் சுத்தி செய்து வகைப்படுத்தியரைத்துச்சேர்த்து அரைத்தல் வேண்டும். ஐந்து நாள் செயநீர்விட்டரைத்து மெழுகாக்குக. புனுகு சேர்த்துச் சர்க்கரையில் வைத்து உண்க.

பாடலில் சரக்கு 18கூறப்பட்டுள்ளது. அடிக்குறிப்பில் சாரம் சேர்த்து எழுதப்பட்ட முறைப்படி 19 ஆகின்றது. புனுகு பாடலில் உள்ளது. சாரத்தைநீக்கிப் புனுகு சேர்த்தால் 19 ஆகின்றது. ஆராய்ந்து செய்க.

ஈளை, அட்டகாசம், அட்டகுன்மம், பாண்டு, குட்டம் இருபத்தொன்று, வாதப்எண்பது, கட்டிகள், உடலைமுருக்கும் இசிவுநோய், காமாலை, சோகை, மூத்திரகிரிச்சனம், வெட்டை, கிரந்தி, சூலை, மகோதரம், பித்தமயக்கம், அட்டநாகத்தின் நஞ்சு, சில்விசகடி, பொல்லாச்சுரம், பெரும்பாடு, வலிப்பு, நீர் ரோகம் முதலிய மிகப்பல நோய்நீங்கும். சையோகம் மட்டும் நீக்குக. ஐந்துஅல்லது ஏழுநாள் உண்க. பத்தியமில்லை.

## அனுமாரின் உண்மை விதிப்பு

பாகமுடன் நுட்ப சுபமும்அக்ஷரமு மாதி
பகரனுமதியான பக்திக் கலையெனும் சோதி
வாகமுடன் வாயுமகன் இல்லாவிடில் சோதி
வந்திடாது சப்தபரிச ரூபரச நீதி
தாகமுடன் மாருதியின் மந்திரத்தைச் சாற்றி
தவறிடாமல் எந்திரத்தைத் தாக்குவேன் பினரோதி
பூகமுடன் பூகிமுனி அகத்தியர்கொங்க ணுதி
உண்மைநீக்கி அனுமார்மந்திரம் உரைத்தாரே சங்கமாதி.

சங்கமர்க ளானசித்தர் அநுமனின்தன் னூலே
சாகரத்தின் வலிவுகொண்டு உயர்ந்தனர்விண் மேலே
அங்கநியாசம் ஆத்துமசுத்தி அநுமானின்றிக் காலே
அடைந்திடவும் முடியாதிந்த அகிலந்தன்னினு லே
பங்கமில்லாப் பரனுமையும் பாசுபதம் மாலே
பாரிலிவ ரழியாவரம்பெற் ருத்மரத்தி யாலே
தங்கிடநா னிவரைக்கொண்டு வழியறிந்தப்பா நீ
தரணிதனி லரனுமைகண் டேனுன்சித்தன் கேளே.

கேளமுத கரிமுகனும் அனுமான்தன்னைக் கூவி
கிருபையுடன் சிரஞ்சீவிமுன் வரமீந்தனர் மேவி
சூளதிப ரானசித்தர்க் காகவிவர் தாவி
சூதில்லாது காத்துஉடல் நீங்காநிலைக்கு மாவி

மீளுபய பாரிசத்தில் அனுமன்சஞ் சீவி
மிருபலனுஞ் சித்துதனக் குறுதியாம்நற் சாவி
வாளுமனு மானுஷமும் உள்ளாகத் தாவி
வழங்கிடுவேன் மந்திரயந்திரம் வாதையறச் சேவி.

சேவித்திடச் சித்துயோக ஞானமிக வுண்டு
சின்மயத்தில் நன்மயமாய் வாழ்வாரே கண்டு
பாவித்திட ஹரிபிரம்ம விஷ்ணுமூவர் கொண்டு
பககமதி லுற்றிடுவார் அரனுமையு விண்டு
ஆவியுட லழிந்திடாது ஆதாரமே யுண்டு
அனுமானவர் மூலமந்திரம் செபிக்கச்சித்தி யுண்டு
புவியதனி லுற்பனமாம் மாயையருந்தொண்டு
பொல்லாநமன் வாதுதொல்லே சொல்வேன்பத்தின் தொண்டு.

## அனுமானின் ஆன்மநியாசம்

1. ஓம் அமூர்தோத்பவாய சுவாஹா ஹ்ருதயாய நம
2. ஓம் மகாகேதனுய சுவாஹா சிரசே நம
3. ஓம் சங்கபத்தியாய சுவாஹா சிகாயவ, ஷடு
4. ஓம் நக்ஷத்திர ரூபாய சுவாஹா கவசாய ஹூம்
5. ஓம் இச்சுதனூர்த்தராய சுவாஹா நேத்ராப்யாம் வௌஷடு
6. ஓம் புஷ்ப சாராயா சுவாஹா அஸ்திராய படு
7. ஓம் பசுபாச பஞ்சமூர்த்தயா சுவாஹா ஆத்ம ரெக்ஷிதிடாய ஹூம்
8. ஓம் ரெக்ஷரெக்ஷ திரிமூர்த்தாய சுவாஹா தினேதினே சுகாரமாயாயா.

## அனுமாரின் அங்கு கர நியாசம்

1. ஓம் சரசப் பிரதா பாயா சுவாஹா அங்கந்நியாச லிங்காய நம
2. ஓம் திக்பந்தனே ஹம், ஸம், லக் ஆருதாரத் துரியேயே
3. ஓம் திருமூர்த்த மூர்த்துவாயா சுவாஹா திரிலோக ஸமஸ்திதே நம
4. ஓம் ஜீவ திரஸ்திதே சுவாஹா சபே. ஆகாயயயதிதே லம்
5. ஓம் அஷ்ட வாஷியாக் கிரண வியாபிதே சுவாஹா சித்த தம் பிராணுய கெங். கெங் நம
6. ஓம் சந்திர சூரியாக்கினி ஜலகத்திதே சுவா தேவியே தேயாதி றீம்

7. ஓம் கரணும் ஜகத்சித் யோகே சுவாஹா சிதன் பஹிமாம் ஹிம மரீம்

8. ஓம் சர்வாம்ஸ நமஞசனே சுவாஹா ஞானேதயப் பிரணவ கெங். கெங் நம்.

## கவசம்

ஓம் நாம நமோ பகவதோ ஈஸ்வரத அனுஷ்டிப்பு சரணும்,
ஓம் விஷ்ணுமுகம், பிரமமுகம், மயஸ்வரமுகம், ஸ்ரீவாயு புத்ராயா
ஹரி, ஹிம், ரீம், அங், மங், சங், ஐயும் கிலியும், சவ்வும்
அங், மங், சங், ஹரீஹி ஓர்அஞ்சனு தேவி புத்ரா மா ஹரீம்
ரீம் ஆத்ம சம் ரெக்ஷ காயா அம் உம் நம் ஞான சித்த
ரூபாயா ஹம் லம், ஸர், இஷ்ட பரிபூரண தேக திடா
மஸாய லங் விங் வாசி வசக் கியானும் ருத்ராய லுங்
ருங் ருங் துஷ்ட மூர்க்க தூர்த்தவ சம்மா ராய லாலீலு.
லே.லம். நவகோடி சித்தியாம் தேவாம் சாய மாமேவு
ஏகி ஏகி கருணநிதியே பியம்.லுக்.லக் ஹக் சமாதிக
பந்தனே இமாம் இமாம் சாகராய ரக் ருக் ஹிக்
அஷ்ட.நவாமஸதன் பார்த்திபா.பா.றம் றம்
ஹரும்.ஹரீம் ஹ்ரும் பிரசன்ன வதன, தெரிஸ்யா
யாயா. ஹிமாம். ஹிமம். ஹிட்ட ஹிட்ட ஹிட்ட
ஹிம். பஞ்ச மூர்த்துவ பகாய டம். பம். ஸம்
ஆம். ஊம். பாரு உப்பிய பாத சரணய
நமஸ்து நே நம.
ஓம் நாம நமோ, பகவதோ, ஜடாத்மாதிக
பிராணவாஞ்சன தேவயா திருகால வர்த்தம் நேத்திராய
வம். வாய்வாயா. யம். அம் ரேசகாய. உம் பூரகாயா.
நம் கும்பகாயா ஹிமங் ஹிமங் ஹமங் ஆனம்
பிலத்துவ பாலாம்பி காயா.நம்.சிம்.வம். பரிபூரணக் ருத
ஈஸ்வராய ருங் லுங் கெங் கெஜ கர்ணமூல
கெஜ முகாயா சும்.ரும்.ரீம். ருத்ராம்ச திருமூர்த்தி
காயா அம்.வம்.மம. வாய்வு புத்தி ராய
டம்.பம்.றம். அனுமந்த பிரகிருது வாயா
சப்தபீஜ மந்திரதே. சித்தாய யுக்.ருக்.லுக்.
அந்தக் கரண சுத்தாம் ஸாய ஸ்ரீரிங், ரிங், ஸ்ரீங் ரிங்
நின்னுகத்த சிரஞ்சீவி மமக்கிதே தேவ். தேவ்.
அனுமந்தா. றம். ரும். கேசவாஞ்சன மூர்த்தி
மமபிதாம்ம, ரெக்ஷ ரெக்ஷ கர்யதே நமஸ்து.

அண்டிடுவாய் அனுமாரின் தெரிசன மந்திரம்
ஆதார அனவரத ஓம். ரா.ஜ.மூர்த்த
விண்டுனு வாய்வு புத்திரா. ஹா. ரீம். அனுமந்தாய
வீக்ஷண்ய பக்ஷ ராஜசிரஞ்சீவி வாமஸ்யா
கண்டு ஸ்ரீம். உமாபதிங். உங். ருங். லுங். சுங்
ஆம்.அம்.உம்.லா.லீ.லூ.லே.லம்.ஸம்
பண்டு மம.ஜீவ.ரெக்ஷ தரத் மான்மியம்
தேவ்.மாவ்.பாத தெரிசய அனுமந்த சரணுய நமஸ்து(85)

## மந்திரம்

ஓம் ராஜ மூர்த்த வாயு புத்ரா. ஹா. ரீம்
அனுமந்தாயா. வீக்ஷண்ய பக்ஷராஜா
சிரஞ்சீவி வாமஸ்யா ஸ்ரீம் உமாபதிஸ்
உங். ருங். லுங். சுங். ஆம். அம். உம்.
லா. லீ. லூ. லே. லம். ஸம். மம. ஜீவ ரெக்ஷதரத் மான்மியம்
தேவ். மாவ். பாததெரிசய. அனுமந்த சரணுய நமஸ்து.

## அனுமாரின்மை

நமக்கிதுநா னுறுதியாயனு மாரின்மை சொல்வேன்
நாயகரு நம்மைவிட்டு நீங்கார்தின முய்வேன்
அமர்தனக் காகஇம்மை அகமகிழ்ந் துய்வேன்
ஆதரவாய் நாகர்வண்டு சேரொன் றுய்வேன்
கமகமவென இடித்துமுடா விட்டதனை உரைப்பேன்
கள்ளமில்லா வெள்ளைசங்கு பலம்ரெண்டு எய்வேன்
சமனிட்டுச் சிறுநீர்படி ரெண்டதுவார் வையென்
சாதகமாய் மண்டலமொன் றேபுதைபின் சொல்வேன்.

புதைத்தெடுத்துப் பிசைந்துவடி கட்டியடுப் பேற்றிப்
புனிதமுடன் சிறுதீயிட் டேமெழுகாய் மாற்றி
அதையெடுத்ததற்கு எட்டுக்கொன்று மதனைமாக் கூட்டி
அறிந்திடவே கோநெய்விட்டு ஆட்டிப்பதம் போலக்
கெதைபிடித்து மாருதிக்கும் மையைவைத்துச் சாற்றி
ஈரெட்டுநாள் அனுமார்மந்திரம் செவிப்பாயுரு வேற்றி
இதையமுறப் பால்பழநை வேத்தியம் தூப மேற்றி
இனியசிமிழ் தனிலடக்கம் செய்வாய்முரு வேற்றி (86)

அமுதமுயர் அங்கஆன்ம நியாசமதைக் கண்டு
அந்தஎந்திர மந்திரத்திற் காதியிதுபார் கொண்டு
விமுதவங்க வான்மநியாச மில்லாவிடிற் பண்டு
விளங்கும்பல மந்திரங்கள் பலிக்காதுவீண் தொண்டு
சமுதாய சஞ்சீவிஇந்த மையதனி லுண்டு
சகலவித தேவதைக ளிதைவைத்தழை விண்டு
குமுதமுயர் கோமளமாஞ் சித்து இதிலுண்டு
கூறிடுவேன் சரக்குகளைச் செயிக்கச்செய நீரே. (87)

## செயநீர் எருக்கும் காலம்

ஒன்றான பூமிநாத மென்ற நீரை
ஓதாமல் மறைத்துவைத்தார் என்போ லானோர்
நன்றாக விபரமதை வெளியாய் யானும்
நவின்றிடுவேன் நாடிவரும் சரக்கை வாட்ட
குன்றாமல் பூமியதில் குடைபோல் வட்டாய்க்
குமுறலிடி காலமதில் விதையில் லாமல்
நின்றுடிப் பூக்குமந்த நல்ல காளான்
நிலவரமாய்ப் பூமிநாதக் கருவிதாச்சே. (88)

ஆச்சிதற்கு வெகுபெருமை உண்டு உண்டு
அன்புடனே காளானை இடித்த நீரால்
பேச்சின்றி யோடுமந்தச் சரக்கிற் கெல்லாம்
பெருமையுடனிருசாமம் சுருக்குத் தாக்கி
ஏச்சின்றிப் பின்னுமந்த நீரைக் கொண்டு
பிசகாமல் நாற்சாமம் ஆட்டி வில்லை
நீச்சின்றி மண்மறைவில் புடமூன் றிட்டு
புகழதாய்ப்பின் விட்டரைத்து ஈரொன்பாமே. (89)

ஈரொன்ப தானபலம் எருவில் மூன்று
இனியதுஉயிர்ச் சரக்குகளைப் புடமும் வைக்க
சீரொன்றுங் குறையாது விகற்ப மில்லை
விளங்குமந்த நாகவங்கந் தனையுருக்கு
தூரொன்று மின்றிநீரால் சுருக்கிட் டாய்ந்து
துகளின்றி முறைப்படியே புடங்கள் தாக்கே.
(ஒருவரிகுறை) (90)

தாக்கிடுவாய் எனதுமுறைச் சுண்ண மெல்லாம்
தவருமல் சமனெடையாய் ஒன்று கூட்டித்
தேக்கித்திரு நீற்றுமுன் செயநீர் தன்னுல்
திடமாக அரைத்துச்சிறு புடமும் தீட்டி
யோக்கியமாய் எடுத்துக்குப்பி தனில டைத்து
உத்தமித்தாய் மூலமந்திரம் அனுமார் மந்திரம்
பாக்கியறச் செய்தெடுத்துப் பதரு மற்ருன்
பாரிற்பல நோய்க்கீவாய் வகாரஞ் சித்தி (91)

சித்திபெருங் குருவாச்சு செகமே வசியம்
சீர்பெறவுன் சடம்ஆன்மா நிலைத்துப் போகும்
வெத்திதரும் வெகுகோடி நோய்கள் தீரும்
விந்திறுகி மணியாகும் கூற்ற னில்லை
சத்துசித் தானந்த மாகி வாழ்வாய்
சாகரத்தில் சித்தர்வந் துன்னைக் காப்பார்
சத்தியமாய் இந்தமுறை வழிதன் னுலே
சந்ததியும் மேன்பொருளும் கைக்குள் ளாச்சே. (92)

## பராபரியின் தெரின மந்திரம்

ஆச்சென்ற பராபரியின் தெரிசனமா கத்தான்
அடைவதற்காய் மந்திர யெந்திரம் அறைவேன் மக்காள்
ராஜ்ய ராஜ ஸ்ரீம். ஓம். ரீம் ராஜதேவி
ரமணி ராம். ரங். ரிங். ருங் ஹம்சநேத்திரி
மூக்ஷிகர ஞுதி கரமும் உம்.வம்.அம் முத்திஞான
ஆத்மதிட ஜெடா மஸனி ஹிரச்ச நிச்ச
லம்.லும்.யாம் பார்வதி ஹிம் மாஹ்யாம்
திரி மூதாரி காயத் ரிணி. (93)

திருநேத்ரி. ரும், லூம் லுக் பும்பாணி ஹிதே
இம். ஜிம். ரிம். ஜீவரெக்ஷாம்ருத பூஷணி
ஹரி. பிர்ம. ருத்ர - தெர்ஸய - சிவராஜ ரிஷி
கலைக்கியான சோடச திரிகால போதக
தெரிஸ்ய ஞான மம பாகே ரெக்ஷவ ரோத்தய
உமா உமம். உம் உமச மாகேஸ்வரி
ஹரீங் ரிங். கெங். ஆம். ஊம் ஹிதோபதேச
சித்சத் ஸ்ரீதரி, அம்பாள் வரே வரே நமஸ்து.

நமஸ்துதே ஸ்ரீம் ஹ்ரம் பரமாம்ஸ பாக்கினி
நங் ரங். ருங் கிங். லிங். குருங். குரோங்
அமங். இமங். உமங். வங். மங். சங் ஜீவாக்ஷரி
அமுர்த வர்ச்சனி அந்தரி ஸம்ஸ ஜோடசரி
வம்.வம். வஸ.வஸ. அம்.உம். உமாபதி
சத்தி பார்வதி பிரஜோல் குரு குரு
சமதேக்கி திரிகால சதாதெரிஸ்ய வசனி
சாம்பவி மம யாகே.ஆவ்.யாவ். வாரூபிணி வரே நமஸ்து.

## அனுஷ்டான விதி

நாமுற்றிட நவிலும்பதி அம்பாள்மூல மந்திரம்
நாளுந்துதிப் பார்க்குவாழ்வு வந்திடும் நிரந்தரம்
க்ஷேமமுண்டு ஜீவன்ஆவி நிலைத்துஓங்கும் எந்திரம்
சித்துயோக ஞானமீய வருகுவாள்தாய் சுந்தரம்
பூமகள்செ பங்கள்செய்யப் புகலுவேன்கேள் எந்திரம்
பூரணஅமா வாசையன்று தேவிச்சக்கர புரந்தரம்
நேமமாய தகட்டிலிட்டுக் கும்பம்வைத்துச் சுந்தரம்
நிறைந்தபால்ப ழங்கள் புஷ்ப நிவேதனை துரந்திரம்.

நைவேத னங்களிட்டு நீள்தியான மோதி
நின்றுவாசி ரேசகபூரக கும்பகங்கள் செய்திடு
சுவேதனச் சுவாசமேவி யுள்ளடங்கு முய்த்திடு
சுழன்றுவாசி பூரகத்தி லேற்றியேகும் பித்திடு
விவேகமுற்று மத்தியத்தில் ஞானதீப மேற்றிடு
விந்துவாசல் சோதிவெளி மின்னிடும்பா ருய்த்திடு
கூவே கூவேன் குலவிகுண் டலங்கூடும் வைத்திடு
கோசபீச நாதகோணத் தாடு மாட மடைந்திடு.

அடைக்கஆன்ம சோதியொன்றாய் அந்நிலையில் தங்கிடும்
அந்தவீட்டில் அன்னைமேவி யமுதமீவாள் பொங்கிடும்
தடைகளின்றித் தாரணை திறந்து ஊதிரங்களும்
தட்டழிவி லாததேவி ரூபமும்து லங்கிடும்
விடைகொடுப்பா ளாதிமூல மின்னதென்றி லங்கிடும்
விகற்பமிலா மூலமந்திரம் மண்டலஞ்செய் பொருந்திடும்
நடைபெருகும் நாதமணி சப்தமுன் னிறைந்திடும்
நாரணியா ளிருப்பா ளின்னம்விவரஞ்சொல்வே னிலங்கிடும்

சேர்ந்துதேவி பூசையுற்றுப் பிரமகற்பம் உண்டு வாழ்
சின்மயத்தின் நன்னயங்கள் எய்திடும் மகிழ்ந்து சூழ்
ஏர்ந்துமுன்பு மிருத்துவிஞ்சுக் குளிகையுண்டு நெடியவூழ்
வினைகளேகிக் காலனற்றுப் போய்விடுவான் உண்மைகேள்
தேர்ந்திருக்குந் தேவிதியானம் செய்யத் தீமை யேகும்நாள்
தினமுஞ் சுத்தம் சுத்தியாகி ஞானவீட்டை வாழவே
கூர்ந்துகந்து ரத்தினபீடக் கொண்டலா லமுதக்கூழ்
உண்ணப்பொங்கி வழியுமுன்தன் ஆன்மசடம் தங்கியே.

இலங்குதேவி சக்கரத்தில் சத்திமுத்தி யுண்டுயர்
இல்லறத்தில் நல்லறமும் எமனில்லை கண்டுதேர்
நலங்கொள்யோக ஞானசித்து ஆடலா முகந்துநேர்
நல்லசித்து நீயுமாவாய் நாசமில்லை நாளுஞ்சீர்
துலங்கத்தேவி யந்திரமந்திரம் முறையுட னிலங்கீர்
தொண்ணூற்ருறு தத்துவமும் திடமதாக முற்றுந்தேர்
பலன்களுற்ற சித்தருன்றன் பூசையில் வருவார்நேர்
பாரில்நீயும் தேகமுத்தி யாகுவாய்நீமேல் கண்டுதேர். (94)

நீயாவாய் சமாதிசித்து மந்திரஞ்சொன்னேன் பூர்த்தி
நிலைக்குமாயுள் விருத்திமூல மந்திரம்அனுமார் மந்திரம்பின்
நான்குகுறைந்து போயிடாது வாசிமூலக் கனலையுள்
நடுவணையாம் பூரகத்தில் ஏறிநின்றி யங்குதுன்
தாண்மையன்றித் தங்கிவாசித் தாரணைதி றந்துகொள்
தடமடைநி றைந்துஊறும் தினமும்தேனை யுண்டுநில்
ஆண்மையில்லை மாய்கைநீங்கும் மகிழ்ந்துரெத்தி னம்நட
ஆதிரவி சுழன்ருேடும் மறலியையு தைத்துத்தன். (95)

உதயமாம்வா லாம்பிகை உமையாள்மந்திரம் நாட்டிடு
ஊசரத்தில் நின்றுஊது உயரத்தாக்கும் பூட்டிடு
இதையமுற்றுத் தேவிமந்திரம் ஸ்தம்பித்துநீ தீட்டிடு
இடைகலையும் பின்கலையும் ஏருங்கணை மாட்டிடு
சிதைந்திடாது சிகாமயத்தில் பரியேற்றி யோட்டிடு
செந்தீவட்டங் கலந்தூடாடும் சிக்கிடாமல் வட்டிடு
புதையலான பொக்கிஷமெய் ஞானமிதுபார் கூட்டிடு
புத்தியாய்என் முத்தாரம்பார் புகன்றேன்போதம் கொண்டிடு. (96)

## கௌனமணி

கேட்டிடுவாய் கௌனமதிற் பறந்து நோக்கக்
கிளத்திடுவேன் கௌனமணி கவுனம் வைப்பாய்
ஆட்டிடவே செம்மறியி னுட்டுக் குட்டி
அதன்வாயில் மேனிச்சாறு விட்ட ரைத்து
மாட்டிடவே ரசம்சேர் தானென் றூற்றி
மறிவாயும் பானமதைத் தைத்துக் கேளாய்
தாட்டிகமாய் ஆட்டைமுடா விட்டு மூடித்
தாக்கிடுவாய் மண்டலந்தான் பூமிக் குள்ளே. (97)

உள்ளாக்கி நாள்கடந்து எடுத்துப்பாரு
உரகம்போல் ரசந்திரண்டு மணியாய் நிற்கும்
மெள்ளவதை யெடுத்துமறு சட்டி யிட்டு
மேதையின் நீரூற்றிச் சுண்டக் காய்ச்சக்
கள்ளமறக் கட்டிகற்போ லாகி நிற்கும்
கண்டவுடன் கனபோதை கவுனம் பாயும்
சள்ளையற மணிவைத்துத் தேவி பூசை
சாற்றியொரு மண்டலமும் செபித்துப் போற்ற. (98)

போற்றியுடன் மணியெடுத்து வாயிலிட்டுப்
பூரணத்தி லிருந்தூது கெகனம் போவாய்
நாற்றிசையும் நொடிக்குள்ளே சுற்றித் தாண்டி
நாலிரண்டு மெட்டுசர பீஜக் கூடம்
தோற்றிடவே தேவிசத்தி காப்பா ளுண்மை
திகைப்பின்றிச் செப்பிவைத்தேன் புலத்திய தேவர்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
சாகரத்தில் மறைப்பின்றிம் முறையைப் போல. (99)
(ஒருவரி குறை)

முறையாமென் திறவுகோல்சொல் மார்க்க முன்னி
முக்காலும் எக்காலும் துதித்துப் போற்றில்
இறையவனின் அருளுண்டு அழிவோ இல்லை
இறப்பிறப்பு நீங்கியுயிர் எந்நாளு மோங்கும்
மறைப்பாகச் சித்தர்கள்செய் பலநூற் கெல்லாம்
மாநிலத்துக் கோரக்கன் திறவுகோல் கொண்டு
உறைபெருகச் செப்பிவைத்தேன் உமையா ளின்தாள்
உண்மையுடன் சித்தர்கள்தாள் துதித்தேன் முற்றே,(100)

## சித்தர்கள்துதி

முற்றுயர் குறுமுனி யகத்தியர் நந்தி போகர் திருமூலர் ரோமர்
இடைக்காடர் வான்மீகர் கொங்கணர் தன்வந்திரி
சுந்தரர் கருவூரார் இராமதேவர்
சட்டையர் அகப்பை மச்சைநாதர் புவியோங்கு சுகப்பிரமம்
முதல் காக்கையர் நவகோடி சித்தர் நவமூர்த்திகோன்
மற்றும் சிவயோகி மெய்ஞ்ஞானி யறிஞர்கள் மகிழ்சித்த வித்தியாதரர்
மங்கலமிலங்கும் மூர்த்தியுமை பார்வதி மத்தகெஜ முகனுர் மதவேள்
வெற்றிபெறும் இவர்களடி போற்றிப் பணிந்து முகில்
வேண்டு கோரக்க ரென்வாய்
விற்பனவிதேய பார்வழங்குற்ற நுமக்குரை
ஓங்கு நமஸ்துதுதி நமஸ்தே.

அருள்மிகு கோரக்கரருளிச்செய்த நமனுசத் திறவுகோல்
பதிப்பாசிரியர், பேராசிரியர், டாக்டர், ந. சேதுரகுநாதன்
உரையுடன் முற்றிற்று.

---

# கோரக்கர் அருளிய ரவிமேகலை 75.

## உமையவள் துதி

அருஉபரதி ரூபவொளி அண்ட பிண்ட
அகரவுயிர் பிரணவமா மோங்கா ரத்தாய்
கருணைபெறு கற்பகத்தேன் அமுத ஞானக்
கமலபரி பூரணிமுக் கமலத் தோங்கும்
பருவரைய மதலை குமரி பராப ரிநற்
பார்பதிபங் கஜவேணி பரம நந்திக்
குருரவிமே கலையோதக் குமரி வாலைக்
குஞ்சரீயென் தாய்சத்தி யிருதாள் காப்பே. (1)

தாள்பணிந்து தெண்டனிட்டுத் தாயைப் போற்றித்
தந்ததொரு வரமதனைத் தரணி யோர்க்கு
ஏழ்மையற் றெப்போதும் இருந்து வாழ
எடுத்துரைத்தேன் சந்திரரேகை இருநூறு முன்னே
வாழ்நலங்கள் பெருகிடவும் வாத யோகம்
வழுத்திடுவேன் வைத்தியமும் ஞான சூட்சம்
பாழ்போகா ரவிமேகலை எழுபத் தைந்தில்
பலம்பெற்ற சித்தர்களின் மறைப்பைத் தானே. (2)

தானென்ற சித்தர்களுங் கபடாய்ப் பேசித்
தரணிதன்னில் சாத்திரங்கள் சங்கா சங்கம்
வானெய்ய ஒழித்துவைத்த கருவு மார்க்கம்
வழங்கிடுவேன் வெளியாக வாமம் வைத்து
ஊனென்ற வுடலாகி யுகந்துற் றுய்ய
உண்மையுடன் கற்பவகை சுண்ண முந்தான்
பானென்ற மாதவமாங் கருவின் சூட்சம்
மகிழ்ச்சியுடன் ஓதிவைத்தேன் மனுக்கள் வாழ. (3)

வாழவதி வாழைசலம் வாழைப் பூச்சாறு
வமுதரச குடத்துநீர் நாத விந்து
சூழதிக ஆசிநீர் சுத்த கெங்கை
கரபியுடன் பனங்கள்கைத் தோடா வாழை

கூழருவி கானப்பால் குமரிப் பாலாம்
தேசிநீர் வாசிநீர் தீப்ப னிநீர்
தோஷமரும் மாதர்கருக் குடத்து நீர்க்குத்
தொகுத்தின்னம் பலநாமம் உண்டு காணே. (4)

காணவே ஐங்கோலக் கருவ தென்றும்
காசினியிற் பூநீர்தான் அறியா வண்ணம்
நாணவே வானமாமலை நாத மென்றும்
நன்மையுறக் குடநீரை மறைத்துப் பேசித்
தோணவே தொல்லுலகோர் தியங்கி வாடத்
தொகுத்திட்டார் சித்தர்களும் தொகையா கத்தான்
பூணவே குடநீர்க்கே யெல்லாப் பேரும்
புகன்றிட்டார் சித்தர்கள்நான் வெளியாய்ச் சொன்னேன். (5)

## ஐங்கோலக் கருவின் மார்க்கம்

சொல்லுவேன் ஐங்கோலக் கருவின் மார்க்கம்
சித்ததிகம் இதனாலே கோடா கோடி
சொல்லுதற்குப் புளிநரலைச் சாறு நாவி
பொன்னிமினை பூங்காவி வீரம் காரம்
நல்லபுனுகு கத்தூரி காந்தம் லிங்கம்
நாட்டியே குங்குமப்பூ வகைபலம தாகத்
தொல்லையறச் சாற்றினா லாட்டிப் பின்னர்
தொகுத்துஒரு முடாவதனில் தாக்கி டாயே. (6)

தாக்கியே குடநீரைச் சரக்கோ டூற்றித்
தயங்காமல் பூமியதில் மண்ட லந்தான்
தேக்கியே வைத்தெடுத்துத் திறம தாகத்
தீவிரமாய் அடுப்பேற்றித் தீ யெரித்து
மீக்கொளுயர் கோநெய்யும் விட்டுக் காய்ச்சி
மெழுகுபதம் கண்டெடுத்து மிகவ தாகப்
பாக்கியங்கள் பெற்றிடவும் பதன மிட்டுப்
பராபரியாம் பார்வதியின் பூசை கேளே. (7)

## ஐங்கோலப்பூ செய்முறை

கேளோம் அண்டபகி ரண்டத் தாயே
கிங். இங். சங். றங். றீங். காரிமோகி
வாளேவம். லோககித்தி வகிலஞ் சித்தி
வசியநம கோடிசித்து வசியத் தாயே

ஆளேமுன் னகிலமுதற் பூதப் பேய்கள்
அடியேனைக் கண்டவுட னடங்கி நின்று
தொண்டதுவும் எல்லோரும் எனக்குச் செய்ய
சுந்தரியே வா வா கிங் இங் சங் றங் நீங்கே சுவாஹா. (8)

கேட்டிடவே முக்கோணம் பெரிதா யிட்டுக்
கிரீங், ரீங், சிங், கென்றுள்ளே நாட்டிப்
பூட்டிடவே உரீம், வசி, பும் பும் மென்று பக்கல்
புகழாகத் தாபனம் திருநீறு கிறி
நாட்டியொரு மண்டலந்தான் மருந்தை வைத்து
நாரணியைப் பூசித்துச் செபங்கள் செய்து
தாட்டிகமாய் அவனியில் நவகோடி சித்துத்
தானுண்டு இதனுல் சரக்கெல்லாம் நீறும். (9)

## செய்முறை

ஓம், அண்டபகிரண்டத்தாயே, கிங், இங், சங்
றிங்காரி, மோகி, வம், லோகசித்தி அகிலஞ்சித்தி வசிய
நவகோடிசித்தி, வசியதாயே, அகிலமுதல் பூதப்பேய்கள்
அடியேனைக் கண்டவுட னடங்கி நின்று
தொண்டதுவும் எல்லோரும் எனக்குச்செய்ய
சுந்தரியே வாவா, கிங், இங், சங், றங், நீங் சுவாஹா.



## சரக்குகள் கட்டும் வகை

நீறுறுஆதி சரக்கெல்லாம் நிறைந்து கட்ட
நிகழ்த்திடுவேன் நீற்றுமுறை நிலையா கத்தான்
வீறுடைய வெடியுப்பு துருசு சூடன்
வினையமில்லாச் சாரமுடன் புளியுஞ் சீனம்
ஆறுசரக் கானவெல்லாஞ் சமனு யாட்டி
அப்பனே மெழுகாகு மதற்குள் ளாகப்
பேறுடைய சரக்கதனைப் பொதிந்து பின்பு
பிசகாமல் மெழுகதின்மேல் சுண்ணாம்புச் சீலை. (10)

சீலையது மூன்றுடனே வலுக்கச் சுற்றிச்
சிதருமல் அதன்மேல்மண் சீலை மூன்று
கலையாது செய்துரவி காய வைத்துக்
களங்கமறக் காடையொரு புடத்திற் ருக்கக்
குலையாது சரக்கதுவும் இறுகிக் கட்டும்
குணமாக இந்தவிதம் செய்து கொண்டே
நிலையாக வாதமுடன் தீட்சை வைப்பு
நீயறிந்து செய்ய திறம் நீடிப் பாமே. (11)

### 10,11-உரை

வெடியுப்பு, துருசு, சூடன், சாரம், புளி, சீனம் ஆகிய ஆறு சரக்கினையும் சமமாக எடுத்துக்கல்வத்திலிட்டு ஆட்ட மெழுகாகும். அம்மெழுகினுள் கட்டவிரும்பிய சரக்கினைவைத்துப் பொதிந்து அதன்மேற் சுண்ணச்சீலை மூன்றுவலுக்கச்சுற்றி யதன் மேல் மண்சீலை மூன்று சிதருமல்சுற்றிக்கலையாமல் ஆக்கி வெயிலில் காயவைத்துக் களங்கமறக் காடைப்புடமிடுக. சரக்கு குலையாமல் இறுகிக் கட்டும். பண்பாக இங்ஙனம் செய்து வாத முறை மருத்துவமுறை யறிந்துசெய்யத்திறனுகும்.

## வெண்காரச் சுண்ணம்

நீடிப்பாய் வெண்காரச் சுண்ண நேர்மை
நிறைமதியாய் ஓதிடுவேன் வெளியா கத்தான்
நாடியொரு சட்டியதில் காரந் தன்னை
நாட்டியே யடுப்பேற்றித் தீயெ ரிக்கக்

கூடியே பொங்கியே யெரிந்த பின்பு
புகழாகத் திருநீற்றுச் சாற்றில்
மோடியாது வாட்டச் சாறுசுண்டிப் போகும்
முறைமையுடன் காரமிதைக் குழிக்கல் போடே. (12)

போட்டுமே நீற்றுச்சாறு தன்னுல் சாமம்
புகழாக வாட்டியே வில்லைசெய் துலர்த்தி
நாட்டியே சில்லிட்டு எருவிற் றுக்கு
நயமாயவ் விதமூன்று புடமிட் டுய்யக்
கூட்டியே கொடியசுண்ணம் குருவ தாகும்
குணமாக வெள்ளிசெம்பில் ஈய மாற்றும்
ஆட்டியே சரக்கிவிடப் பழுத்துப் போகும்
புகழாகச் செயதேவிச் சுண்ணம் சொல்வேன். (13)

12,13-உரை

சட்டியை அடுப்பிலேற்றி வெண்காரம் வேண்டிய அளவு உள்ளிட்டு எரிக்கப்பொங்கும். பொங்கிய பின்பு திருநீற்றுச்சாறு விட்டுமெல்ல எரிக்கச்சாறு சுண்டிப் போகும். சுண்டிய வெண் காரத்தைக் குழிக்கல்லிட்டுத் திருநீற்றுச்சாற்ருலாட்டி வி.த.கா. சி.ம.செ. புடமிடுக இங்ஙனம் மூன்றுபுடமிடக் கொடியசுண்ணம் குருவாகும். வெள்ளி செம்பில் ஈயப் பழுக்கும்.

## செயதேவிச் சுண்ணம்

சொல்விடவு மாகாதெனச் சித்த ருர்கள்
சூட்சமுடன் மறைந்தோதி ஏய்த்துப் போட்டார்
வெல்லுதற்கு விவரமதைச் சொல்வேன் பூவில்
வாகமா ரசம்பூரம் வீரம் தாரம்
அல்லலறும் பாஷாணம் வகைக்குக் காலாம்
அவ்வெடைக்கு வெண்காரச் சுண்ணம் நேராய்
தொல்லையற வொன்றேகாற் பலமுங் கூட்டித்
திருநீற்றுச் சாற்ருல்நாற் சாமம் ஆட்டே. (14)

ஆட்டியே வில்லைதட்டி ரவியுலர்த்தி
அகவில்வைத்து மண்சீலை மூன்று செய்து
நாட்டியே மண்மறைவில் புடமும் ரெண்டு
நலமாகத் தீரவில்லை வெண்க லம்போல்

வாட்டமறக் கண்டிடுமே வலுவா கப்பின்
வசனிப்பேன் வட்டதனைக் கல்வத் திட்டுத்
தேட்டமுடன் நாற்சாமம் நீற்றுச் சாற்றால்
தீமையற ஆட்டிவில்லை யுலரப் போடே. (15)

உலர்ந்தபின் சில்விட்டுக் கவசம் பூட்டி
உலையாமல் இரண்டெருவிற் புடமும் மூன்று
நிலவரமா இட்டெடுக்கச் சுண்ணங் காந்தி
நிக்ஷேப மெடுத்ததொழிற் கெல்லா மாகும்
தலமிசையில் குட்டமுதல் குறைநோய் வாதம்
தாக்கிடுவாய் அரிசியெடை யாவின் நெய்யில்
கலக்கமற அந்திசந்தி நாட்பத் தியம்
கடுநோய்போம் பத்தியமதில் இல்லை பாரே. (16)

பாரதனில் வெள்ளிசெம்பு பத்துக் கொன்று
பட்சமுட னுருக்கப்பத் தரையு மாகும்
சாரமுற்ற செயதேவிச் சுண்ணத் தாலே
சாதகங்கள் மெத்தவுண்டு கண்ணால் கண்ட
கோரமுற்ற நோய்க்கெல்லா மியம்பத் தானே
குணமாகக் கூற்றுவனு மில்லை யில்லை
தீரமுடன் ஞானிகளின் பேதிக் கல்பம்
தெளிவாக வோதிடுவேன் சித்தன் யானே. (17)

சித்தமுடன் குமரிமடல் பெரிதா யைந்து
சீவிய தன்னமோர் முடாவி லிட்டு
வித்தகமாய்க் கடுக்காய்த்தூள் பலமுந் தாக்கிப்
பிசைந்திடவே செயநீராய் நீர்த்துப் போகும்
சுத்தமுடன் வடிகட்டித் தேசிச் சாற்றுத்
துளிபத்து இட்டுண்ணப் பேதி யாகிப்
பித்தமுடன் வாத ஐயபேதம் நீங்கும்
பிசகாமல் முக்காலை யருந்தல் நன்றே. (18)

## செயதேவிச் சுண்ணம்

### 14முதல்18 உரை

இரசம் பூரம் வீரம் தாரம் பாஷாணம் ஆகிய ஐந்தும் வகைக்குக் காற்பலம்; வெங்காரச்சுண்ணம் அதற்குநேரளவு ஒன்றே காற்பலம்; ஆக இரண்டரைப்பல மருந்தினையும் திரு

நீற்றுச் சாற்றால் நாற்சாமம் நன்றாயரைத்து வி.த.கா.சீ.ம.පී.செ இங்ஙனம் இரண்டுபுடம் மண்மறைவிலிடுக. வெண்கலம்போல் வலுவாக வட்டமாக இருக்கும். மீண்டும் கல்வத்திலிட்டுத் திரு நீற்றுச் சாற்றால் நான்குயாம நேரம் தீமையறஆட்டி வி.த.கா. சில்லிட்டுக் கவசம்பூட்டி இரண்டெருவில் புடமிடுக. இங்ஙனம் மூன்றுபுடம். ஒளியுள்ள சுண்ணமாகும். எடுத்த தொழிற் கெல்லாம் உதவும். அரிசிஎடை ஆவின் நெய்யில் கொடுக்கக் குட்டம் குறைநோய் வாதம் முதலிய பலநோய் நீங்கும். கூட்டுறவு ஆகாது. வேறு பத்தியமில்லை. வெள்ளி செம்பிற் பத்துக்கொன்றுருக்கப்பத்தரை. கோரமான நோய்க்கெல்லாம் கொடுக்கலாம். கூற்றுவனில்லை.

## இனிபேதிக் கற்பம் கூறுவேன்

சோற்றுக்கற்றாழை மடல்பெரிதாக ஐந்து கொண்டுவந்து
சீவிச்சோற்றை யெடுத்து மிடாவிலிட்டுக் கடுக்காய்த்தூள்
ஒருபலம் உள்ளிட்டுப் பிசைந்து பார்க்க நீர்த்துப்போகும்.
நன்றாய் வடிகட்டி எலுமிச்சம்பழச்சாறு பத்துத்துளி விட்டு
உண்ண வயிறு கழியும். வாதபித்த ஐயம் நீங்கும்
மூன்றுநாள் காலை அருந்தல் நன்று

## துருசுச் சுண்ணம்

நன்றுறவே துருசினிட சுண்ண மார்க்கம்
நானறிந்த மட்டுமினி நவில்வேன் கொஞ்சம்
கன்னலறக் கரியுப்பு வெள்ளறுகு தானும்
வகைக்கு ஒரு பலமதுவாய்ச் சேர்த்து
குன்றாமல் கோவைத்தண்டுச் சாறு தாக்கிக்
குணமுற்று நாழிகையி ரிரண்டு மாட்டி
வென்றிடவே விழுதெடுத்து அதற்குள் ளாகத்
துருசுஓர் கட்டியோர் பலமுந் தாக்கே. (19)

தாக்கிரவி யிட்டுலர்த்தி யதன்மேல் மூன்றுந்
தவறாமல் சீலைமண் ஐந்து பூட்டி
பாக்கியமும் பெற்றிடக்கேள் குக்கு டத்தில்
பதறாமல் நீறிவிடும் பருதி போலாம்
யோக்கியமாய் நீறியதை நீற்றுச் சாற்றால்
உத்தமமாய் அரைத்துருட்டி யிரண்டுசாமம்
நோக்கிரவி காயவைத்துச் சில்லுள் தாக்கி
நேர்த்தியுடன் சீலைமண் மூன்று செய்யே. (20)

செய்துநிறை கவுதாரிப் புடமூன் றிட்டுச்
 செகசோதிச் சுண்ணமிது சோதித்துப் பார்
வையகத்தின் கண்மூடித் திறக்கு முன்னே
 சரக்கெல்லாஞ் சுண்ணமிதால் நீறிப் போகும்
உய்யவரும் சோதிக்கப் பத்தரையு மாகும்
 தொடர்ந்துவரும் பலகோடி நோய்கட் கீயே
அய்யமறும் அம்பிகையின் பாதத் தாணை
 அறைந்திடுவேன் கற்பூரச் சுண்ணம் கேளே. (21)

19, 20, 21 உரை.

கரியுப்பும் வெள்ளறுகும் வகைக்கு ஒருபலம் சேர்த்துச் கோவைத் தண்டுச் சாறுவிட்டரைத்து அந்த விழுதை எடுத்து அதற்குள் ஒருபலக் கட்டித் துருசுவைத்து உலர்த்தி யதன் மேல் சீலைமண் எட்டும் செய்து கோழிப் புடமிட நீறிவிடும். அதனைத் திருநீற்றுக் சாறுவிட்டரைத்து வி.த.கா.சி ம.8.செ கௌதாரிப் புடமிடுக. இங்ஙனம் மூன்று புடமிட ஒளிமிகு சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்தால் மற்றச் சரக்கெல்லாம் சுண்ணமாகும். சோதிக்கப் பத்தரையுமாகும். பல கோடி நோய்கட்கு ஈய ஐய மின்றி நலம் தரும். அம்பிகையின் திருவடி யாணை.

## கற்பூரச் சுண்ணம்

கேள்பூவன் கதலிமடற் சாறெ டுத்துக்
 கிருபையுடன் கற்பூரம் பலமும் ரெண்டு
தாழ்மையறக் கல்வமிட்டுக் கதலிச் சாற்றால்
 தவருமல் சாமம்நான் காட்டி வாட்டே
வாட்டிடு ரவியுலர்த்தி யம்மட் டைக்குள்
 எடுத்தடக்கி மண்சீலை மூன்று செய்து
பாழ்போகாப் பதினைந்து பலமெ ருவில்
 பதமுடன் புடமிட்டு வாங்கிக் கொள்ளே. (22)

கொண்டுவில்லை திருநீற்றுச் சாறு தாக்கிக்
 குறையாம லிருசாமம் அரைத்துத் தட்டிப்
பண்டுபோல் அரைத்துவில்லை அகலி விட்டுப்
 பதருமல் அங்கியது வலுக்கக் கட்டி
மண்மறைவில் புடமிரண்டு போட்டெ டுத்து
 மயங்காமல் திருநீற்றுச் சாற்று லாட்டிச்
செண்டுபோல் கவசித்து எருவில் மூன்று
 புடம்போட்க் கொடியசுண்ணம் வங்கங் கேளே. (23)

22,23உரை

இரண்டுபலம் கற்பூரத்தைக் கல்வத்தில் இட்டுக் கதலிமடற் சாற்ருல் நான்குசாமம் தவருமல் ஆட்டி வெயிலிலுலர்த்தி அந்த மடலுக்குள் வைத்து மூன்றுமுறை மண்சீலை செய்து பதிணைந்து பல எருவிற் புடமிட்டெடுத்து மீண்டுங் கல்வத்திலிட்டுத்திருநீற் றுச்சாற்ருல் அரைத்துத் தட்டியுலர்த்திக் காய்ந்தபின் மீளவும் திருநீற்றுசாறு விட்டு முன்புபோல் நான்குசாமம் நன்ருயரைத்து வி.த.கா. அகலிவிட்டு வலுக்கச் சீ.ம.செ. மண் மறைவில் இங்ஙனம் இரண்டுபுடம் போட்டு மீண்டும் மேற்படி சாறு விட்டரைத்துச் சென்டுபோல் கவசம்கட்டி எருவினுல் மூன்று புடமிடச் சுண்ணமாகும்.

## கருவங்கச் சுண்ணம்

சொல்லரிது கருவங்கம் பலம தொன்று
சூழ்வரித் திப்பிலியும் பலமும் ஏழு
அல்லலிலாத் திப்பிலியைத் தூளிட் டப்பால்
அன்புடனே வங்கமதைச் சட்டி யிட்டுத்
தொல்லையற வறுத்தெடுக்க மடிந்து போகும்
தீய்ச்சை சயுயர் மணியகன்று பற்ப மாகும்
நல்லதொரு நீற்றுச்சாறு தன்ஞற் சாமம்
நான்கரைத்து வில்லைசெய்து காய வைத்து. (24)

போட்டுடனே சில்லேற்றிக் கவச மிட்டுப்
புகழாக மூன்றெருவிற் புடமு மைந்து
நாட்டிடவே கடுங்காரச் சுண்ண மாகும்
நாள்பத்தில் இருபத்தோர் மேகந்தீரும்
காட்டிடவு மாகாதென வென்போ லுள்ளோர்
கருத்தெல்லாம் மறைத்திட்டார் காசினியில்
பூட்டதனைத் திறந்திடுவேன் முப்பு மார்க்கம்
புகன்றிடுவேன் வெளியாகப் புவியி ஞேர்க்கே. (25)

24,25-உரை

அரிசித்திப்பிலி ஏழுபலம் தூள் செய்து வைத்துக்கொண்டு, தூய கருவங்கம் ஒருபலத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரியிட்டு மேற்படி தூளிட்டுத் தொல்லையற வறுத்து எடுக்க மடிந்து நீறிய பற்ப மாகும். அதணைக் கல்வத்திலிட்டு நல்ல

திருநீற்றுச் சாறுவிட்டு நான்குயாமம் அரைத்து வி த.கா. கலசமிட்டுச் சில்லேற்றிக் கவசம் செய்து இங்ஙனம் மூன்றெருவில் ஐந்து புடமிடுக. கடுங்காரச் சுண்ணமாகும். பத்துநாள் உண்ண இருபத்தொருமேகம் தீரும்.

## முப்புச் சுண்ணம்

பூவென்ன முப்புவும் சூட்சம் சூட்சம்
பொய்யில்லா வெங்காரச் சுண்ணம் ஒன்று
காவென்ன கற்பூரச் சுண்ணம் ஒன்று
†கருதரிய துருசினுடைச் சுண்ண மொன்று
தாவென்ன மூன்று மொன்ற தாகத்
தவருமல் வீரங்கால் வெடியுங் காலாய்ப்
பாவென்ன அய்ந்தொன்ருய்க் கல்வத் திட்டுப்
பன்னீரால் சாமம்ரெண் டரைத்து ருட்டே (26)

பன்னீர்—குடநீர். †"கருத்தரிய துருசினுடையயச் சுண்ண மொன்று" என்றும் பாடம்.

போட்டுடனே வில்லைதட்டி ரவியு லர்த்திப்
புகழாக அகலிலிட்டுக் கவசம் செய்து
வாட்டமறப் பூநீறு படிதான் ரெண்டு
வண்மையுற முடாவிலிட்டு மத்தி பத்தில்
தேட்டமுடன் கவசித்துச் சீலை தாக்கித்
தீரமுடன் முடாவின்வாய்ச் சில்லுத் தாக்கி
நாட்டமுறச் சீலையேழு செய்து ஆற்றி
நவியாம லடுப்பேற்றி நான்கு சாமம். (27)

சாமந்தான் எரிக்கச்சத்தி செபமும் சொல்வேன்
சங்.மங்.வங். ஓம் சம்பூரணி வாவா
நேமமுடன் தியானித்துத் தீயெ ரித்து
நீதமிகுஞ் சூடாற்றி வில்லை பார்க்க
ஏமமதாய் இறுகிக்கல் போலே கட்டும்
எடுத்துவட்டைக் குடநீரால் சாமம் ஆட்டி
தாமதிக்க ஈரைந்து பலத்தெ ருவில்
தாபவிய மைந்துபுட மிட்டுக் காரே. (28)

கார்ப்பதற்காய்ப் பதனமிடு வேகம் மெத்தக்
கலந்துருகி யாடுமெல்லாச் சரக்குங் கட்டே
ஏர்ப்பதற்கு ஏமநேம ஏகாந் தம்பார்
எடுத்துரைப்பே னின்னமொரு முப்பூ மார்க்கம்
மார்க்கமுடன் சீனம்கற் பூரம் வீரம்
மகிழ்வெடிகல் லுப்புவெங் காரம் பூரம்
நேர்த்தியுறச் சமனெடையாய் நிறுத்தெ டுத்து
நீற்றுச்சாறு விட்டுஇரு சாமம் ஆட்டே. (29)

ஆட்டியே மண்மறைவில் புடமும் ரெண்டில்
அப்பனே கட்டிப்போகும் வில்லை தன்னை
நாட்டியே குடநீரால் சாமம் மூன்று
நலமாக அரைத்துவில்லை ரவியு லர்த்தி
தாட்டிகமாய்க் கவுதாரிப் புடமும் ஐந்து
தாக்கிடவும் மதிபோலே பூத்துப் போகும்
வாட்டமிலா இதனாலே வாத வித்தை
வசனிப்பேன் தாம்பூரச் சுண்ணம் பாரே. (30)

26 முதல் 30 வரை உரை.

பொய்யில்லா வெங்காரச் சுண்ணம் ஒன்று, கற்பூரச் சுண்ணம் ஒன்று, துருசுச் சுண்ணம் ஒன்று, வீரம் கால், வெடியுப்புக் கால் ஆக இவ்வைந்தனையு மொன்றாகச் சேர்த்துக் குழிக் கல்லிவிட்டுப் பன்னீரென்ற குடநீரால் இரண்டு சாமம் அரைத்து வி.த.கா. அகலிவிட்டு சி.ம.செ. காய்ந்த பின், ஒரு முடாவினுள் இரண்டுபடி பூநீறிட்டு அதன் நடுவில் சீலைமண் செய்து காய்ந்த அகலை வைத்துப் பொதிந்து மூடி முடாவின் வாய்க்குச் சில்லிட்டு மூடிச் சீலைமண் 7 செய்து காய்ந்த பின் அடுப்பேற்றி நான்கு சாமம் எரிக்கும் போது, சங் மங்.வங். ஓம் சம்பூரணி வா வா என்று நியமமுடன் தியானித்துச் சத்தி செபம் செய்து எரித்துச் சூடாற்றி வில்லையைப் பார்க்கப் பொன்னாக இறுகிக் கற்போன்று கட்டும். எடுத்து வட்டினைக் கல்வத்திலிட்டுக் குடநீராலாட்டிப் பத்துப் பல எருவிற் புடமிடுக. இங்ஙனம் ஐந்து புடத்தில் சுண்ணமாகும். கடுமை மிகுதி. இதனால் எல்லாச் சரக்கினையும் கட்டுக.

இன்னுமொரு முப்புநெறி கூறுவேன் கேண்மின். சீனம், கற்பூரம், வீரம், வெடியுப்பு, கல்லுப்பு, வெங்காரம் பூரம்

எல்லாம் நேரளவாக எடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டு சாமம் திருநீற்றுச் சாற்ருலாட்டி வி.த.கா. சீ.ம.செ. மண்மறைவில் இரண்டு புடமிடுக. கட்டும். கல்வத்திலிட்டுக் குடநீரால் மூன்று சாமம் ஆட்டி வி.த.கா, சீ.ம.செ. இங்ஙனம் ஐந்துமுறை கௌதாரிப் புடமிட மதிபோல பூத்துப் போகும். வாட்டமில்லா இதனுலே வாதவித்தை யுண்டாகும்.

## தாம்பூரச் சுண்ணம்

பாரேநீ தாம்பூரக் காசி ரண்டு
பலமுடனே கெந்தகமும் பலமு மொன்று
சீரேறு சிறுகுடுவை யிட்டுச் சீலை
செய்பத்து எருவிலிட மடிந்து போகும்
காரேநீ பின்கல்வத் திட்டு நீற்றுச்
சாறதனுல் திரிநாளு மாட்டி வில்லை
நீரேகொள் ளீரெருவில் புடமு மூன்று
நீறியே களிம்பற்றுப் போகும் வில்லை. (31)

வில்லைதனக் கிருபங்கு கெந்திச் சுண்ணம்
விகற்பமில்லா வெண்காரச் சுண்ணம் நேராய்
தொல்லையறக் கூட்டித்திரு நீற்றுச் சாற்ருல்
துலக்கவே இரண்டுநா ளரைத்து ருட்டி
வெல்லவே ரவியில்காய்ந்து சில்லிட்டுச் சீலை
வினையமிலா மூவெருவிற் புடமு மைந்து
அல்லலறத் தங்கம்போல் நிறமும் சுண்ணம்
அதிவேகம் இதனுல்மகா ரோகம் போமே. (32)

போமேதான் குட்டமுடன் குறைநோய் மேகம்
பேதிக்கும் வாதம்எண் பதுவுங் குன்மம்
தாமேதான் பத்தைந்துநாள் நெய்யி லுண்ணத்
தணிந்தேகும் பலபிணியும் இச்சா பத்தியம்
பூமேவும் வெள்ளிபத்துக் கொன்ற தீயப்
பூரணமாய் மாற்றதுவும் சோதி சோதி
ஆமேநீ இதுகண்டா லறஞ்செய் துண்ணு
அறைகுவேனென் குருமெழுகு அன்பு கொண்டே. (33)

31, 32, 33, உரை

ஒரு சிறு மண் குடுவையில் இரண்டு செம்புக் காசும் ஒரு பலம் கந்தகமும் இட்டுச் சில்லிட்டுச் சீலைமண்செய்து பத்து எருவிற் புடமிடச் செம்புக்காசு மடிந்துவிடும். அதனைக் கல்வத்தி லிட்டுத் திருநீற்றுச் சாற்ருல் மூன்று நாள் ஆட்டி வி. த. கா. சீ. ம. செ. இரண்டெருவிற் புடமிடல் வேண்டும. இங்ஙனம் மூன்று புடமிடக் களிம்பற்று நீறிப்போகும். அங்ஙனம் நீறிய வில்லைக்கு இருபங்கு கெந்திச் சுண்ணமும், வெண்காரச் சுண்ணமும் சேர்த்துத் திருநீற்றுச் சாற்ருல் இரண்டு நாளரைத்துருட்டி வி.த.கா.சீ.ம.செ. இங்ஙனம் மூன்றெருவிற் புடமும் ஐந்திடத் தங்கநிறச் சுண்ணமாகும். மிக்க வேகமுள்ளது. பெருநோய் களெல்லாம் நீங்கும். குட்டம், குறைநோய், எண்பது வாதம், குன்மம் ஆகிய நோய்களுக்குப் பதினைந்துநாள் நெய்யிலுண்ணப் பறந்துபோகும். இச்சாபத்தியம். வெள்ளி பத்துக்கு ஒன்றிய நிறைமாற்று ஒளிறும். இதுகண்டால் நீ அறஞ்செய்து உண்க.

## கோரக்கர் குருமெழுகு

கொண்டிடுவாய் ரசம்கெந்தி சிலை யிந்து
குருலிங்கம் அரிதாரம் வீரம் காரம்
விண்டுளவாய் விளங்கமுடன் சுக்கு ஓமம்
கொடுவேலி கடுக்காய் காக்க ணம்வேர்
தண்டொளிறும் தாம்பரத்தின் சுண்ணம்
தாக்கிடுவாய் வகைக்குஒரு பலமும் காலே
பூண்டுறுமுன் னவைகள் சமன் வாளந் தாக்கிப்
பூர்த்திசெய் தரைப்புமுறை ஓது வேனே. (34)

ஓதிடு தனிக்கெந்தி காரம் உப்பு
உயிர்ச்சரக்கை ஒவ்வொன்ருய்க் குழிக்கல் லிட்டு
நீதியுப்பு கெந்திக்காரம் மற்ருே டாட்டி
நிரையாய்ப்பின் னரைத்ததெல்லா மொன்ற தாக்கிப்
பேதிக்க வேர்வகைகள் இடத்தெ டுத்தே
பின்னமைந்த சரக்கெல்லா மொன்று சேர்த்துக்
கோதில்நிறை வாளமுஞ் சுத்தி செய்து
குணமாய்ப்பின் னுத்தாமணிச் சாற்ரு லாட்டி. (35)

ஆட்டிடுவாய் முந்தினசா றூற்றி யூற்றி
அதுமுடிந்து மெழுகுபத மான பின்னர்
கூட்டிக் கூவுஞ் சேவல்தலை மூளைவாளத்
துற்றதிறை யளவுதொகுத் தொருசாம மாட்டித்
தாட்டிகமாய் எடுத்தடக்கம் செய்து கொண்டு
தந்திடுவாய் குன்றியெடை அனுப்பா னத்தில
மேட்டிமையாய் விரோசனமும் ஆகும் பத்தியம்
மேதினியில் பிணிபலவும் திரும் தீரும். (36)

தீருமதில் விப்புருதி மேகம் பாண்டு
திடம்பெற்ற சன்னி சுரம் புற்று மாலை
ஏறுகின்ற விரைவாதம் குட்டம் குன்மம்
ஏகிவிடும் பலபிணியும் கடலேழ்க் கப்பால்
வீறுடைய இம்மருந்தை வெள்ளிக் கீய
வேதைமெத்தச் செயக்கொடியும் போட்டு வாழி
பேறுடைய குருமெழுகு பேணிச் சொன்னேன்
வைத்தியரும் வாதிகளும் வாழ்ந்து ஓங்க. (37)

34 முதல் 37 வரை உரை.

இரசம், கெந்தி, மனோசிலை, இந்துப்பு, இலிங்கம் அரிதாரம் வீரம், காரம், வாய் விளங்கம், சுக்கு, ஓமம், கொடுவேலி, கடுக்காய், காக்கணம்வேர், தாம்பரச்சுண்ணம் ஆகியஇவை வகைக்குக் காற்பலம் இவற்றிற்கு நேரளவு நேர்வாளம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். உயிர்ச் சரக்கினை ஒவ்வொன்றுய்க் குழிக்கல்லிலிட்டு ஆட்டிக், கெந்தி காரம் உப்பு ஆகியவற்றைத் தனியே யாட்டி நிரையாக அரைத்தவற்றை யெல்லா மொன்றுக்கி வேர்வகைகளைத் தூளாக்கிச் சேர்த்து மற்றமைந்த சரக்கெல்லாம் ஒன்றுசேர்த்து நேர்வாளத்தைச் சுத்தித்து உடன் சேர்த்து உத்தாமணிச் சாற்றுலாட்டுக. பின் முந்தின சாறு ஊற்றி ஊற்றி மெழுகுபதமாக அரைத்துக் கொண்டு அதன் பின்னர் கூவும் சேவலின் தலை மூளை நேர்வாளத் தளவு எடுத்துச் சேர்த்துத் தொகுத்து ஒரு சாமம் ஆட்டி எடுத்து அடக்கமாக வைத்துக் கொள்க. குன்றியெடை அனுப்பானத்தில் கொடுக்க வயிறு கழியும். பல பிணியும் நீங்கும். பத்தியம் காக்க விப்புருதி, மேகம், பாண்டு, சன்னி, சுரம், புற்று, காமாலை, ஏறுகின்ற விரைவாதம், குட்டம், குன்மம் ஆகிய நோய்கள் ஏழுகடலுக்கப்பால் ஓடிப் போகும். வெள்ளியிலீய மாற்றுயரும். மருத்துவரும் வாதியரும் வாழ்வுற்றோங்க நற்பேறு மிக்க இந்தக் குருமெழுகு கூறினேன்.

ஓங்கிவளர்ந் தோங்கிடவும் இந்நூல் மார்க்கம்
உண்மைகண்டு செய்திடிலோ பலிதம் மெத்த
பூங்கமழ்சூழ் சோலைமலர் பூங்காகக் கொண்டு
பூதலத்திற் சித்தர்களும் செய்நூற் கெல்லாம்
பாங்குறவே ரவிமேகலை திறப்பாய்க் காட்டிப்
பாடினேன் முனிசித்தர் மறைத்துச் சொன்ன
தீங்கெல்லாம் வெளியாக வுரைத்துத் தள்ளித்
திறமாக உலகவசிய ஈடுமருந்தொன் றுமே. (38)

## ஈருவசிய மருந்து

ஒன்றல்லாப் பலவுண்டு சூட்சம் சூட்சம்
முருங்கைப்பிசின் அபின்புனுகு இந்திர கோபம்
குன்றிவிதை கத்தூரி மஞ்சள் லிங்கம்
குறித்ததெல்லாம் ஓர்நிறையாய்க் கல்வத்திட்டு
நன்றுயுன் விந்தோடை மலமும் தாக்கி
நாட்டியரை நாளொன்ற தாகவரைப் பாய்
வென்றிடுவாய் மிளகெடை யாயு லர்த்தி
வேடிக்கை யிதனாலே மெத்தக் காணே. (39)

ஐம்மலம்—கண், வாய், மூக்கு, செவி, உடல் அழுக்காகும்.

காணவே ஓம். ஆம். ஊம். ஜிம். ஜிம். றிம். ஜிம்
கா. உங். கீ. ஹரீங். வசிய. மோகி
நாணமா வா வா வந்தெல்லோரையும்
நானிலத்தில் மசக்கி யென்வசம தாக்கிப்
பூணவே போற்றிடச்செய் புராரி வீரி
பூரணியே எதிரிமனம் உருகச் செய்வாய் சுவாஹா
தோணவே இலக்கமுரு இவ்வா றேற்றிச்
செகத்தோருக் கிவ்வீடு ஈயச் சித்தி. (40)

சித்தாட இம்மருந் தில்லா விட்டால்
செகத்தில் ஒருவருந்தான் உன்னை நம்பார்
எத்தொழிற்கும் இம்மருந்தைத் தாக்கி ஈய
இணைபிரியார் உன்னைவிட்டு மாந்தர் தானும்
வெற்றிபெற்று வாழுதற்காய் மார்க்கஞ் சொன்னேன்
வீணர்கட்குச் செப்பிடிலோ வினையே யுண்டாம்
புத்தியுடன் பிழைப்பதற்குப் புவியிற் றுனே
வெடியுப்புச் செந்தூரம் உரைப்பேன் பாரே. (41)

## ஈடுமருந்து செபம்

ஓம். ஆம். ஊம். ஜிம். ஜிம். றிம். ஜிம்
கா. உங். கீ. ஹரீங். ரீங். வசிய மோகி
வா வா வந்தெல்லோரையும் நானிலத்தில் மயக்கி
என்வசமாக்கிப் போற்றிடச் செய்யும் புராரி.விரி.
பூரணியே எதிரிமனம் உருகச் சுவாஹா.

## வெடியுப்புச் சுண்ணம்

பாரேநீ வெடிசீனம் சமனுத் தாக்கிப்
பதருமல் வாய்நீரால் சாமம் மூன்று
நேரேநீ யாட்டிவில்லை யுலர வைத்து
நெறியாகச் சில்லிட்டுச் சீலைமண்(மூன்று)செய்
தீரேநல் கவுதாரிப் புடத்திற் சுண்ணம்
தீரவெடுத்து வாய்நீரால் குழைத்துத் துருசி
காரேதான் பூசிக்காய்ந்து சில்முச் சீலை
கவுதாரிப் புடத்திலிடச் சுண்ண மாமே. (42)

மாமேவு பற்பத்தை இரசத்திட் டாட்ட
வாய்நீரால் மடிந்துகட்டும் அதையெ டுத்து
பூமேகொள் காடையெருப் புடமே தாக்கப்
பூப்போலே நீறுஞ் செம்பு வெள்ளிக்கியத்
தாமேதான் தங்கமயம் வேதை மெத்தத்
தானுண்டு இதனுலே கோடி நோய் போம்
பாமேவு சரக்கெல்லாம் மாளச் செயநீர்
பகர்ந்திடுவேன் பலிதமுறப் பண்பாய்த் தானே. (43)

42,43-உரை

வெடியுப்பும் சீனமும் ஒரெடையாகக்கொண்டு வாய்நீரால் மூன்றுசாமம் ஆட்டி வி.த.கா. சீ.ம.3.செ. கௌதாரிப்புடமிடச் சுண்ணம். அதனை இரசத்திலிட்டு வாய்நீராலாட்டக்கட்டும். காடைப் புடத்தில் நீறும். செம்பு வெள்ளிக்கியத் தங்கமயம். கோடி நோய் போகும், சரக்கெல்லாம் மாளச் செய்யும்.

## பதினெரு சரக்குக் கட்டுத் திராவகம்

தானென்ற மூன்றுபத்துப் பலமும் சீனம்
காரமைந்து வெடிபத்துக் கல்லுப் பைந்து
கோனென்ற சாரம்மூன்று இந்து ரெண்டு
குணமாகப் பாறைகரி பலமும் நான்கு

மானென்ற துரிசுவீரம் எவாச்சார மொன்று
மகிழாகச் சரக்கெல்லா மொன்று யாட்டி
வானென்ற வாலையிட்டு வடிந்த நீரால்
வாகுடனே சரக்கெல்லாம் மடிந்தே கட்டும். (44)

கட்டியுடன் புடத்திலிடக் கனிந்தே கட்டும்
கருத்தறிய இன்னமொரு செயநீர் சொல்வேன்
அட்டியற வெடிபத்துச் சீனம் பத்துக்
காந்தமுடன் கல்லுப்புப் பலமும் நான்கு
முட்டிவரும் பூநீறும் பலமும் மூன்று
முதிர்ந்தரைத் தரைத் தேயொண் ணுவாலைக்கே
கொட்டி யெரித்தெடுத்த நீர்தா னெல்லாம்
குழுங்கிவிடும் நீறிவிடும் முப்புக் கேளே. (45)

### 44, 45-உரை

சீனம் பலம்30. வெண்காரம்5. வெடியுப்பு10. கல்லுப்பு5. நவச்சாரம்3. இந்துப்பு2. பாறையுப்பு2. கரியுப்பு2. துரிசு1. வீரம்1. எவாச்சாரம்1. ஆகிய இச்சரக்குப் பதினொன்றையும் ஒன்ருகச் சேர்த்து ஆட்டி வாலையிலிட்டு வடித்த நீரால் சரக் கெல்லாம் மடிந்து கட்டும். கட்டிப் புடமிட நன்ருய்க் கனிந்து கட்டும்.

இன்னும் ஒருசெயநீர் கேளீர். வெடியுப்பு10. சீனம்10 காந்தம்2. கல்லுப்பு2. பூநீறுபலம்3. ஆகிய இவ்வைந்தணையும் நன்ருயரைத்து வாலையிலிட்டு எரித்துநீர் வாங்குக. சரக்குநீறும். ஆகவே கட்டுவகைத் திராவகம் நீற்றுவகைத் திராவகமும் உணர்ந்தீர் இனிமுப்புக்கேளிர்.

## வீரமுப்பு

முப்புமுப்பு என்றுசொல்லி மேதினியில்
முறைகாட்ட லாகாதென மறைத்தா ரேட்டில்
கப்பிசீனம் வகைக்கரையாய் வெடியும் வீரம்
கலந்தாட்டிச் சட்டியிட்டு வறுத்தெ டுத்து
தப்பிதங்கள் வாராது பதினொன் ருன
சரக்கைச்செய நீராலிரு சாமம் ஆட்டி
ஒப்பிமணல் மறைவில் ஒருபுடமும் தாக்கே
ஓடாமல் கட்டிவிடும் பின்னுங் கேளே. (46)

பின்னமில்லாக் கல்வத்தில் வில்லை யிட்டு
இருசாமம் அரைத்தெடுப்பாய் செயநீர் தாக்கு
கன்னலறக் கதிரவனிற் காய்ந்து சில்லிட்
டுரியகௌ தாரிப்புட மிவ்வா றைந்தில்
மின்னலது போல்விளங்கிப் பூக்கு முப்பு
மேதினியி லிதையுண்ணக் கோடி நோய்போம்
வன்னமுப்பு வாய்நீரால் குழைத்துக் காசில்
தடவிச்சிறு புடத்திலிடப் பற்ப மாமே. (47)

மாமேவு பற்பமரிசி எடையே நெய்யில்
மகாரோகத் தார்க்குமுக் காலை தாக்கப்
போமேதான் பொல்லாத ரோகம் பாரில்
புளிப்பின்று கஞ்சியுப்பின் றுண்ண வேண்டும்
தாமேமெய் இந்தமுறை தரணி தன்னில்
தாக்கினும் துட்டர்கட்குப் பலிதங் கிட்டா
தேமேதான் மறைவுமை மூஞ்சூர் சூட்சம்
தெளிவாகச் செப்பிடுவேன் செகத்தில் தானே. (48)

46, 47, 48 உரை.

சினம் வெடியுப்பு வீரம் வகைக்கு அரைப்பலம் எடுத்து ஒன்று சேர்த்து அரைத்துச் சட்டியிலிட்டு வறுத்து எடுத்துப் பதினொரு சரக்குக் கட்டுத் திராவகம் விட்டு இரண்டு சாமம் அரைத்து வி. த. கா. சீ. ம. செ. மணல் மறைவில்ஒரு புடமிட ஓடாமல் கட்டும். அவ்வில்லைகளைக் கல்வத்திலிட்டுச் செயநீரால் இருசாமம் அரைத்து வி. த. கா. சீ. ம. செ கௌதாரிப் புடமிடுக. இங்ஙனம் ஐந்துபுடமிட மின்னல் போல் விளங்கி முப்பு பூக்கும். இதனை யுண்ணக் கோடி நோய்போம். இந்த முப்பு ஓரளவு எடுத்து வாய் நீரால் குழைத்துக் காசிற் பூசிச் சிறு புடமிடப் பற்பமாகும். இப்பற்பத்தில் அரிசியெடை நெய்யிற் குழைத்து உண்ண மூன்று வேளையில் பொல்லாத மாநோய்களெல்லாம் நீங்கும். புளி உப்புச் சேராமற் கஞ்சியருந்துக. தீயவர்கட்கு இந்த முறை பலியாது.

## மறைவு மை

தான்பத்துத் திங்கள்தங்கித் தரணி தன்னில்
தலைப்பிண்டந் தனில் மேலே மாவு
மேன்மையுடன் வலுவதாய்ப் பூத்து நிற்கும்
மிகவாகப் பிறந்தசிசு மீதி லுற்ற

பான்மைபெறு வழுமாவை வழித்தெ டுத்துப்
பதருமல் அவ்வெடைக்குப் புனுகு நேராய்த்
தீமையறச் சேர்த்தாட்டிச் செபங்கள் செய்யச்
செப்பிடுவேன் இன்னமொரு சூட்சந் தானே. (49)

தானென்ற மூஞ்சூரின் கண்ணெ டுத்துத்
தவருமல் ரவியுலர்த்திக் கண்தூ ளாக்கிக்
கோனெய்ய தாமிரத்தைக் குழலாய்ச் செய்து
குணமாகத் தூள்தன்னைக் குழாயுள் தாக்கி
மோனென்ற மோதிரம்போல் உருட்டிக் கையில்
முயங்காம விட்டேகப் புவியின் மீதே
தேனென்ற மாந்தரெல்லாந் தேவர் முதல்
தெரியாமல் மறைத்திடுவாய் செபஞ்சொல் வேனே. (50)

## மறைவுக்குப் பூசை முறை

சொல்லரிது அம். ஸம். லம். ஜம். ஜம். ஜம்
சோகமறச் சல். சல். ஜப். ஜம். லம். ஸம்
வெல்லவே மனுக்கள்முதல் மற்ருேர் கண்ணுல்
என்னைத்தான் பார்த்தாலும் தெரியா துய்ய
வல்லபமாய் மறைந்தாடத் தாக்கச் சுவாஹா
அறுகோணம் பெரிதாகத் தூளி தத்தில்
சல்லாப முடன்போட்டு மோதிரமை
சார்ந்துகீழ்மேல் மண்டலமும் நீசெ பந்தான். (51)

தாக்கித்தேங் காய்பழமும் பாலும் பொங்கல்
தவருமல் தூபங்கற் பூரஞ் சாற்றி
தேக்கியே யோர்வேளை யுணவ ருந்தித்
திடமாகத் தியானிக்கச் சித்தி யாகும்
யோக்கியமாய்ப் பூசைமுடி வாகு மட்டும்
ஓகோகோ மாதரிடம் போகங் கூடா
நோக்கியே மோதிரமுந் திலத மிட்டு
நீயேகப் புவியிலுனைக் காணர் சித்தர். (52)

## மறைவுமையின் செபம்

மனுக்கள் முதல் மற்ருேர் என்னைப் பார்த்தால்
அவர்கள் கண்ணுக்கு நான் தெரியாமல் மறைந்து
இருந்து தாக்குதாக்கு. அம்.ஸம்.லம். ஜம்.ஜம்
ஜப்.சல். சல்.ஜப்.ஜப்.ஜம்.லம்.ஸம். சுவாஹா.
என ஜெபிக்கவும்.

## மறைவுமைக்கு எந்திரம்




சித்திலே சட்டமுனி போகர் நந்தி
கும்பமுனி பாம்பாட்டி குதம்பை நாதர்
சுத்தமுறப் புகலாது சூட்சம பேதம்
செப்பிவைத்தார் யானதனைத் தெளிவ தாக
நத்தியே நரர்பிழைக்க நவில்கிறேன் கொஞ்சம்
நமனுசத் திறவுகோல் நூறில் தானே
உத்தமமாய் விபரமதிற் காணச் சொன்னேன்
ஓதியதோர் நூலுக்கெல்லாம் திறப்பு மாமே. (53)

திறவுகோல் இதனைவிட வேறொன் றில்லை
தீர்க்கமுடன் எத்தொழிலும் நூறிற் காட்டி
மறைப்பின்றி யுரைத்திட்டேன் மனுக்கள் வாழ
மாநிலத்தில் தெளிவாய்யான் சொன்ன தாலே
சிறப்புடைய சித்தர்களும் என்மேல் மிக்க
சினங்கொண்டார் சீருலகிற் சிதரு மற்றோன்
வரம்பெற்றேன் வாலையாள் பதமும் பெற்றேன்
வழுத்திடுவேன் அப்பிரேகச் சுண்ணம் ஒன்றே. (54)

## அப்பிரேகச் சுண்ணம்

ஒன்றான அப்பிரேகம் பலமும் நான்கு
உடைத்துக் குழிக்கல்லி லாட்டிப் பின்னர்
குன்றாது எழுத்தாணிப் பூண்டின் சாற்றைக்
குணமாகப் பிழிந்ததனில் ஊற்றிவை
வென்றாடே வெள்ளாவி போற்கொ திக்கும்
வினையமற நாளொன்று வைத்துப் பின்னர்
நன்றாகத் திரிநாளச் சாற்றி லாட்டி
நயம்பெறவே மெழுகாகும் வில்லை தட்டே. (55)

எழுத்தாணிப் பூண்டு—சிவப்பு முள்ளங்கி

வில்லையது காயவைத்துக் காசினள வாகச்
செய்துபிச காமல்ரவி யுலர்த்திச் சில்லிட்டு
அல்லலறச் சீலைமண் ஐந்து தாக்கி
அன்புடனே பத்தெருவில் புடமும் ஈயே
தொல்லையற எழுபுடமிட் டெடுத்து அப்பால்
தொகுத்திடவே திருநீற்றுச் சாற்று லாட்டி
வல்லபமாய் மூன்றுபுடம் வருத்துத் தாக்க
வாதையிலை சுண்ணமிது தங்கம் போலாம். (56)

தங்கநிற மானதொரு அப்பிர கத்தைத்
தாக்கிடுவாய் பொடிவெல்லம் நெய்யில் தேனில்
சங்கையற நாளைந்தாய் முறையு மூன்று
சாப்பிடவே காலைமாலை இருநேரம் அப்பா
பங்கமிலா நீர்ரோகம் காசம் ஈளை
பரந்துவிடு சுரமாந்தங் கிரிச்ச னங்கள்
மங்காமல் ஓதிவிட்டே னிச்சா பத்தியம்
மகிழுடைய வெடியுப்பு மெழுகு காணே. (57)

### 55, 56, 57-உரை

அப்பிரேகம் நாலுபலம் குழிக்கல்லிலிட்டு உடைத்து அரைத்துப்பின்னர் அதன்மேல் எழுத்தாணிப்பூண்டின் சாற்றைப் பிழிந்து ஊற்றிவை. வெள்ளாவி போற் கொதிக்கும். ஒருநாள் முழுதும் வைத்துப்பின்பு மூன்றுநாள் அச்சாறுவிட்டரைத்து மெழுகானவுடன் காசளவாக வில்லைதட்டிக் காய வைத்துக் கலசமிட்டுச் சில்லிட்டுச் சீ.ம.5.செ. பத்தெருவிற் புடமிடு.

இங்ஙனம் ஏழுபுடம். பின்னர் திருநீற்றுச்சாற்ருலாட்டி மூன்று புடமிடத் தங்கநிறச் சுண்ணமாகும். வெல்லப்பொடி, நெய் தேன் இவற்றிலேதேனுமொன்றின் குழைத்து நாளொன்றுக் கிருவேளையாக ஐந்து நாள் உண்க. இங்ஙனம் மூன்றுமுறை உண்ண நீரழிவுநோய், காசம், ஈளை.சுரம், மாந்தம், கிரிச்சனம் ஆகியநோய் நீங்கும். இச்சா பத்தியம்.

## வெடியுப்பு மெழுகு

காணவெடி துவரையுமி ஓமரிசி
        பனைவெல்லம் வகைக்குழர் பலம திட்டுத்
தோணவே யரைத்துச் சுண்டைக்காய் வீதம்
        தொகுத்ததொரு நாளீவாய் இச்சா பத்தியம்
நாணவே வயிற்றிலுள்ள கட்டி யாம்பல்
        நலிந்தேகிப் போயிடுமே மகோதரங்கள்
பூணவே இம்மெழுகு காலனேக நோய்போம்
        பூவிழுந்த கண்ணுக்கு மூலி கேளே. (58)

58-உரை

வெடியுப்பு துவரையுமி ஓமஅரிசி பனைவெல்லம் வகைக்கு ஒருபலம் எடுத்துக்கொள்க. ஓமஅரிசியையும் துவரைஉமியையும் தனித்தனி அரைத்துத்தூளாக்கிப் பின் வெடியுப்பும் சேர்த்து அரைத்து வெல்லமிட்டரைத்துச் சுண்டைக் காயளவு வழங்குக. நோய் நீங்கும்வரை ஈக. வயிற்றுக்கட்டி, நீராம்பல், மகோதரம் என்ற பெருவயிறு ஆகிய நோய்களைக் காலனையும் விரட்டிப் போக்கி விடும்.

## கண் பூவிற்கு

விள்ளுவேன் பூவிழுந்த கண்ணி னோர்க்கு
        விகற்பமற ஐந்தேழு ஒன்பது நாள்
சள்ளையறக் கோவைச்சாறு சிரசி லூற்றிச்
        சாரவே தேய்த்துப்பின் காண்கை யாரைத்
தெள்ளிதமாய்ப் பெருவிரல்கள் நகத்திலும்
        தொல்லையற ஊற்றிடவே பூவும் நீங்கும்
கள்ளமறக் கண்பார்வை தெளிவாய்த் தோன்றும்
        களங்கமறக் குன்மவுப்பு கண்டுதேரே. (59)

59-உரை

கோவைச் சாற்றை ஐந்துஅல்லது ஏழுஅல்லது ஒன்பது நாள் தலையுச்சியில் 'தேய்த்துப் பெருவிரல்களின் நகத்திலும் ஊற்றிவைக்கக் கண்பூவு நீங்கும். 'காண்கையாரை' என்பது கருதத்தக்கது. கண் என்றுபாடம் கொண்டால் கண்ணிலும் ஊற்றவேண்டும். 'கையாரை' என்பதனைக் 'கையானை' என்று கொண்டால் கரிப்பான்சாறு ஊற்றல் வேண்டும். 'கையாரை' என்பதற்கு சிறு ஆரையாகிய ஆரையிலைச்சாறு என்றும் கொள்ளலாம். பொருந்தும் வகை செய்துகாண்க.

## அட்ட குன்மத்திற்கு

தேரவே இலிங்கமரைப் பலம்கால் இந்து
திகழுடனே வகைக்குஇரு பலம தாகச்
சேரவே மூன்றுமொன்ருய்த் தூள தாக்கிச்
சிதருமல் நாற்சாமம் மேனிச் சாற்ருல்
சாரவே அரைத்துவில்லை ரவியுலர்த்திச்
சரியாதுஅவ் விலையரைத்துத் தேங்காய் வீதம்
தீரவே யரைத்துவிழுது பேர்பாதி யிட்டுத்
திடமாகக் காய்வில்லை யதன்மேல் வைத்து (60)

(ஒரு சரக்கு விடுபட்டுளது)

தாக்கியே பேர்பாதி விழுதும் வைத்துத்
தவருமல் சீலையிட்டுச் சீலை யேழும்
தேக்கியே காய்த்தபின்பு எருவோ பத்தில்
தீயிடவும் செந்தூரம் கருப்பே யாகும்
நோக்கியே பணவெடைதான் தேசிச் சாற்றில்
நிகழவைந் தேழுமொன்ப திருவேளை யுண்ண
நீக்கும்வலி அட்டகுன்மம் வயிற்றுக் கட்டி
நீடிக்கா தேகுஞ்சிசு வயோதி கர்க்கே. (61)

60,61-உரை

இலிங்கம் இரண்டுபலம் இந்துப்பு ஒருபலம் ஆகமூன்று பலத்தையும் கல்வத்திலிட்டு மேனிச்சாற்ருல் நாற்சாமம் அரைத்து வி.த.கா அந்தஇலையை யரைத்துத் தேங்காயளவு விழுதாக எடுத்து இருபங்காக்கி ஒருபங்கில் வில்லைகளை வைத்து மற்றப்பங்கினைமேல்வைத்து மூடித்தவருமல் ஏழுசீலைமண்செய்து

காயவைத்துப்பத்தெருவிற் புடமிடக் கருப்புநிறச் செந்தூரமாகும். ஐந்து ஏழு ஒன்பது நாள் எலுமிச்சம்பழச்சாற்றில் இருவேளையும் உண்ண வயிற்றுவலி அட்டகுன்மம் வயிற்றுக்கட்டி நீங்கும். குழந்தைகட்கும் முதியோர்க்குமாகும். புலாலும் பழைய சோறு மாகா.

## இளைப்பு இருமல் காசத்திற்கு

இக்கேயில்லை புலால்பழைய சோறு மாகா
இதனாலே தீராதவலி தீர்ந்தே போகும்
மிக்கலிங்கம் வெடிசினம் சமனாய்க் கூட்டி
இஞ்சிச்சாறு விட்டரைநீ சாமம் நாலு
தக்கவில்லை ரவியுலர்த்திச் சீலை செய்து
தவறாமல் குக்குடத்தின் நீறும் நெய்யில்
பக்குவமாய்ப் பணவெடையைந் தேழ்நா ளுண்ண
காசமெட்டும் ஈளை போகும் இச்சாபத்தியம். (62)

62-உரை

இலிங்கம் வெடியுப்பு சீனம் மூன்றும் நேரளவாகக் கூட்டி இஞ்சிச்சாறுவிட்டு நாலுசாமம் அரைத்து வி.த.கா. சீ.ம.செ. கோழிப்புடத்தில் நீறும். நெய்யிலுண்ண ஐந்து ஏழ் நாளில் காசம் எட்டும் ஈளையும் போகும்.

## சித்தர் தெரிசன விதி

பத்தியுட னெனதுகோர குண்டாப் பாறை
பருநீருஞ் சுனையருவிப் பாய்ச்சல் புத்தேன்
நித்தியமும் நிறைந்திருக்கும் மலையின் சாரல்
நீரோடுங் கால்புனல்வாய் யருவிப் பக்கல்
சித்தர்களைக் கண்டிடவென் பாறை யுற்றுச்
சிதறாமல் நானோதும் மந்தி ரத்தை
முத்திபெறக் கண்மூடி நாற்பத் தைந்துநாள்
முயங்காம லிருந்துதோத் திரமும் பாரே. (63)

தீமையறக் குகையிருக்கும் சித்தர் முத்தர்
தீவிரமாய் உனக்குவரம் தருவார் வந்து
ஊமையென்ற சங்குமையம் உதிக்கக் காட்டி
உண்மையுடன் ஓர்மொழியை உபதேசிப்பார்

ஆமையெழுத் தானதோ ராதி பீடம்
ஆதார மென்றபரை நாட்டஞ் சொல்வார்
தூமையென்ற கதிகோடு அமுர்த பானத்
தூடாடுஞ் சோதிநிலைச் சொருப மீவார். (64)

வார்சடை யாளத்தா ளுரைத்த மந்திரம்
வழங்கிடுவேன் வையகத்தில் வஞ்ச மின்றி
நேர்பெறவே ஓம். பசு.பரபதிபக்ஷ ராஜ
நிரதிசய சித்ரூப ஞான மூர்த்தோய்
தீர்க்க நேத்ராய, கண,கம்,கங், கெங்,லங்
லிங்,லங்,லா,லீலம்,ஆவ்,பாவ்,ஆம்,ஊம்
பார்கவ்விய சோதிமய வரப்பிர சன்ன
பாத தரிசியே கோரக்கர் சரணுய நமஸ்து. (65)

நமனறவே நானுரைத்த மந்தி ரத்தை
நாட்டமுடன் செபமோதிச் சித்துச் செய்து
அமைதியுடன் எந்திரத்தைத் தகட்டிற் கீறி
அசையாமற் கோரகுண்டாப் பாறை யெய்தி
தமதான காலடியில் மிதித்து நின்று
தவருமலோதிடுவாய் மந்தி ரத்தை
சமர்த்தாக வாசியைநீ யிழுத்து வாங்கிச்
சாற்றிடவே சித்தர்வந் தாத ரிப்பார். (66)

காலடியில் என்பது சந்திரகலை

## சித்தர் மந்திர எந்திரம்

ஓம். பசு. பரபதி. பக்ஷி ராஜ.நிரதிசயசித்ரூப. ஞான மூர்த்தோய். தீர்க்க நேத்ராய. கணகண. கம்கங்.கெங்லங் லிங்.லங். லாலீலம். ஆவ்.பாங். ஆம்.ஊம். பார்கவ்விய ஜோதிமய. வரப்பிரசன்ன. பாததெரிஸ்ய. கோரக்க சரணுய நமஸ்து.



ஆதரிப்பா ரம்மலையில் வெள்ளை மூர்த்தி
 ஆனைமுகன் றனைப்பணிந்து நின்று வேண்ட
ஜோதிப்பா லுன்றனக்குப் போகர் வந்து
 சோகமற ஈந்திடுவார் சொருபம் வேரும்
பேதமற்ற இடந்தோன்றும் பிறவி நீங்கும்
 பிசகில்லா ஞானசித்தன் நீயே யாவாய்
நாதபர நாதசிவ சத்தி வாலை
 நாதாந்த சோடசத்தின் செயநீர் காணே. (67)

## சோடசச் செயநீர்

காணவே ரவிபீசம் பலம தொன்று
 கனமான மதிபீசம் பலம தாகும்
தோணவே வெடியைந்து சாரம் ரெண்டு
 துகளறவே யிர்பத்துச் சீனம் சீனம்
தாணவே நாவியரை கல்லு இந்து
 நாட்டமுடன் இலிங்கமது ஒன்ற தாகும்
புகழான கம்பிநாலு கரிதா ளைந்து
 ………………… ………………… ………………… …………………  (68)

ஒருவரி குறை

ரவிபீசம்—ரசம். மதிபீசம்—கெந்தி.

ஐந்துபலம் வெண்காரம் துருசு ஒன்று
 அனமூங்கி லெவச்சாரம் வகைக்கி ரண்டு
மெய்மையுட னிரெட்டுச் சரக்கு மொன்ருய்
 மெதுவாக வுடைத்தாட்டி வாலைக் கேற்றி
உய்யவெகு நேர்த்திதாய்ச் செயநீர் வாங்கி
 ஒடுகின்ற சரக்கதில் நீட்டி வாட்டி
அய்யமறச் சுண்ணமதாய்க் கட்டி நீற்று
 அறைந்திட்டேன் கைகண்ட முறையி தாமே. (69)

ஒருமுறை யிதனைச் செப்பிட லாகா தென்று
 முனிசித்தர் ஏட்டினிலே மறைத்தார் முன்னே
திரையகலும் செயநீரால் கோடி வித்தை
 தொட்டதெல்லாம் ஆடிநிற்கும் தொல்லை தீரும்
விரைவுடனே வெள்ளிதனக் கிய மாற்று
 வினையமில்லா தாக்கிவிடும் வேகம் மெத்தத்
தரைதனிலே தாயைநிதம் துதித்துப் போறத்
 தாக்கிடுவேன் வெள்வங்கச் சுண்ணம் சூட்சம். (70)

68,69,70-உரை

இரசம், கெந்தி, வீரம், இலிங்கம், துருசு ஆகிய ஐந்தும் வகைக்கு ஒருபலம். சாரம், கல்லுப்பு, இந்துப்பு, மூங்கிலுப்பு, எவாச்சாரம் ஆகிய ஐந்தும் வகைக்கு இரண்டுபலம். கம்பியுப்பு ஒன்றும் நாலுபலம்; வெடியுப்பு, நாவி, சுரியுப்பு, வெண்காரம், ஆகியநான்கும் வகைக்கு ஐந்துபலம். சீனம் ஒன்றும் இருபதுபலம். ஆகச்சரக்குப் பதினாறும் ஐம்பத்தொன்றுபலம். மெல்ல உடைத்துத் தூளாக்கி வாலையிலிட்டுச் செயநீர் வாங்குக. நெருப்புக்கு ஓடக்கூடிய சரக்கினைச் செயநீரில் தோய்த்து வாட்டிக்கட்டிச் சுண்ணமாக்குக. பலஇடங்களிற் கூறிய சுண்ணங்களுக்கும் இங்ஙனம் கட்டிய சரக்கே பயன் படுமென்றுணர்க. செப்பிடலாகாதெனச் சித்தர் மறைத்தவற்றை வெளியிட்டேன். திரைமறைவுநீங்கும். இச்செயநீரால் கோடி வித்தை. தொட்டசரக்கெல்லாம் கட்டி உருக்க உருகியாடி நிற்கும். வெள்ளியில் ஈய மாற்றுயரும்.

சூக்ஷமாகி வெள்வங்கம் பலமதொன்று
சொல்லரிசித் திப்பிலியும் பலமும் ஏழு
தாழ்ச்சியறத் திப்பிலியைத் தூள தாக்கித்
தனிவைத்து வங்கமதை யுருக்கிப் பின்பாய்
தாழ்ச்சியறத் தூளதனைக் கொஞ்சங் கொஞ்சம்
தாக்கியே வங்கமதை வறுத்தெ டுக்க
தீட்சையுயர் மணியகன்று பற்ப மாகும்
தீமையற நீற்றுச்சாறு தன்னு லாட்டே. (71)

ஆட்டுவாய் நாளொன்று சாறு தாக்கி
அருணனில் இட்டுவில்லை சிலை யைந்து
தாட்டிகமாய்ச் செய்துகுக் குடத்தி லிவ்வாறு
தவருமலைந்துமிடக் கொடிய சுண்ணம்
நாட்டிடுவாய் ஐந்தேழு ஒன்பதுநாள்
நயமில்லா மேகமிரு பத்தொன் றேகும்
பூட்டிடுவாய் வெள்ளிசெம்பிற் பத்திற் கொன்று
தாக்கயோ கங்கள்மெத்த அறிந்து தேரே. (72)

தேரவே சித்தர்களைக் காணு முன்னே
தெளிவாகச் சொன்னதொரு மந்தி ரத்திற்
சாரவே பின்னிருக்கும் பேரை மாற்றிச்
சரியாக வுனக்குவேண்டுஞ் சித்தர் பேரைக்
கூறவே செபங்களாகத் தியானித் துய்யக்
குணமாகக் குறித்தபடி வருவார் கண்டு
தீரமுடன் வரம்பெறவே சொன்னேன் சித்தன்
திடம்பெற வென் னூலைவிட வழிவே றில்லை. (73)

இல்லையென் றதுசொன்னே னுலகத் தோர்க்கு
இகபரத்தி லிருந்துதினம் வாழ்வ தற்குத்
தொல்லையிலா இரவிமேகலை எழுபத் தைந்தில்
தொகுத்திட்டேன் பின்னமற்ற பேத மேக
முல்லைமல ரணிந்துமைதான் முரளி கொட்ட
மூர்க்கமிலா நமனுசத் திறவு கோல்பார்
தில்லைமா காளிவளர் கனக பிந்து
தொகுத்திட்டேன் எண்பத்தைந்தில் உண்மை தோணும்.
(74)

தோணுதற்குச் சுண்ணமுப்புச் சித்தர் தோற்றம்
துலக்கமறச் செயநீர்பூ எழுபத் தைந்தில்
காணுதற்காய் ஓதிவைத்தேன் பேதம் போகும்
காசினியில் சீவரத்தினம் தொண்ணூற் றைந்து
பூணுகச் சோதிநாதம் எண்ப தாகும்
புகலுமதி முத்தாரம் தொண்ணூற் றென்று
ஆணவம்போம் சித்தர்வாதம் அறுபத்தாறு
அறைந்தேன்தனித் தொகுப்புஒன் பதில்நூல் முற்றே. (75)

அருள்மிகு கோரக்கரருளிய இரவிமேகலை எழுபத்தைந்தும்
பதிப்பாசிரியர், உரையாசிரியர், பேராசிரியர், டாக்டர்
ந. சேது ரகுநாதன் உரையுடன் முற்றிற்று.

# கோரக்கர் அருளிய முத்தாரம் 91.

சத்துசித் தானந்த சங்கநிதி பதுமநிதி
சாம்பவி ஸ்ரீ லாலி லுவே சாயுச்சிய ஓம்
ஒத்அத்வித அம்உம்ஆம் ஆத்மதன வர்ஜினி
அந்தரத்தில் நவகண்ட நித்தியமும் மூர்த்தஜெய
நிஷ்களநி ரஞ்சனி நிர்விகற்ப ஸ்தானத் துறை
ஞானபோத வதனிமுத்து நவரத்தின கிரீடதிரி
நேத்திரி—நீமொழியு ரைத்துமுத் தாரம்
ஓத அரன் உமைதாள் சரண். (1)

சரணமிட் டெனதுகுரு நந்திபாதம்
சாந்ததுதி பாடிதினஞ் சிரமேற் கொண்டு
சிரமணி விசிடப்பொன் மாலை சூட்டிக்
கேசரத்தில் லலாடப் பூட்டுகம் மாதிறந்து
திரம்பெருகத் தேவசித்தர் தாளைப் போற்றித்
தீமையறச் செந்தமிழால் உலகினர்க்கே
முரணகல முச்சுடரும் சுருள நாட்டி
முத்தாரம் தனிற் களங்கம் தீரச் சொல்வேன். (2)

சொல்லரிய நமனுசத் திறவு கோலில்
சூட்சமா வெளியாகச் சாற்றி வைத்தேன்
நல்லனவாய் அவையடக்கம் நலனுற் றேங்க
நானிலத்தில் முத்தாரம் தனிற்சு ருக்கி
வெல்லுதற்காய்ச் சித்தர்களும் சூட்ச மாக
வினையமுடன் ஓதினதை விளங்கக் காட்டிக்
கல்பவகை முப்புசெய நீரின் மார்க்கம்
கிளத்திடுவேன் தேவியுமை அருள்பெற் றேங்கி. (3)

ஓங்கிவளர் ஓங்காரம் நாத விந்து
உமைபாதத்தின் உயர்நிலையம் உண்மை மார்க்கம்
தீங்காலே காணாமல் தேடித் தேடி
தினமகத்துப் பலதுன்பம் மிகவா யுற்று
பாங்காகப் பரிபாஷை சித்தர் முத்தர்
பாடியநூல் பார்த்துப்பல அர்த்தம் கொண்டு
மாங்குயில்தாய் உமைதானை மறந்து வீணாய்
மதிரவிதான் இன்னதென் றறிந்தி டாமல் (4)

அறிவதற்காய் அகரமுடன் உகரந் தானும்
அப்புஉப்பு ரவிமதியும் அன்னை தந்தை
தெரிவதற்காய் அப்புஉப்பு இரண்டுங் கூட்டித்
திடம்பெறவே செயநீர்முப்பு தீர்க்க மாச்சு
விரிவுடனே சித்தர்கள்சொல் சூட்சம் தன்னை
விளக்கமுடன் அறியாமல் மாண்டார் கோடி
பரிபு ரைத்தாய் திரிபுரையின் அருள்தன் னாலே
பகர்ந்திடுவேன் செயநீரின் உண்மை மார்க்கம் (5)

மார்க்கமுடன் சித்தர்தாம் செப்பி வைத்த
மட்டான பாகமதைக் கொஞ்சம் கொஞ்சம்
தீர்க்கமுடன் தேன்மதுவாங் குடநீ ரென்றார்
திங்கள்தை மாசியுடன் பங்குனியில்
நேர்மையுறப் பூர்வபக்ஷம் பௌர்ணமிநாள்
நிறைபெருகும் பிண்டநாள் நாத விந்து
சீர்பெறவே யெடுத்திடவு மிடத்தைக் காட்டிச்
செப்பிவைத்தார் சித்தர்களும் மறைத்தே ஏட்டில். (6)

ஏட்டதனில் பலபலவாம் கோடி மார்க்கம்
இயம்பிவிட்டார் வஸ்துவொன்றுக் காகச் சித்தர்
நாட்டமுடன் அவர்கள்சொன்ன வழியை யிங்கு
நாடிமாந்தர் பாராத குற்றம் குற்றம்
தாட்டிகமாய் அகத்தியமுனி கொங்க ணவர்
தன்வந்திரி வான்மீகர் செயநீர் சூத்திரம்
பூட்டகங்க ளில்லாது போக நாதர்
புகன்றார்கருக் கடைநிகண்டு ஐந்நூறு தன்னில் (7)

தன்னினத்தி லுற்றமணைப் பூநீர் தன்னைத்
தானெடுத்துச் சரக்குவைக்க முப்பூச் செய்ய
பின்னமாச் செப்பியவ ரெல்லாம் வேறே
பேசிடவு மில்லைபுவியில் என்போ லானோர்
நன்னயமாய் உரைத்தமொழி மார்க்கம் சூட்சம்
நவின்றிட்டேன் நவநாதத் திறவு கோலில்
கன்னலற முத்தாரந் தனிற்சு ருக்குக்
கழறிடுவேன் காசினியோர் பிழைத்து வாழ. (8)

## சத்திநீர் சிவநீர் இருக்குமிடமும் அடையாளமும்

வாழ்வதற்குச் சித்தர்களும் பூநீர் பூமி
வழுத்திவைத்தா ரல்லாது சூட்சத் தோடு
(தாழ்மையறச் சத்திநீர் சிவநீர் தாமும்
தாமிருக்கும் வண்மையான ஆழந் தன்னை)
ஏழ்மையறச் செப்பவில்லை மக்காள் மக்காள்
சிவஞ்சத்தி நீரிருக்கும் அடையா ளங்கேள்
சூழ்பசுமை உவர்சதுப்பு நிலத்துக் கேகிக்
கூர்மையுடன் முச்சுழிபோல் அடுப்பு வட்டம்
சூழ்ந்திருக்கும் சுழிமுனைகண் டறிந்து வெட்டிச்
சோதித்துப் பார்க்கச் சத்தி நீரே மஞ்சள். (9)

மஞ்சடையி னிருவளையுஞ் சுழியாம் வட்டம்
சதுப்புநிலந் தனிலிருக்கும் அடையா ளம்போல்
தெள்ளிதமாய் அறிந்துவெட்டி நோக்கும் போது
திகட்டலில்லாச் சிவநீரே இதுவோ வெண்மை
கள்ளமான தைமாசி மீன மாதம்
தவளமாம் பூர்வபக்கம் பௌர்ண மிநாள்
வள்ளல்தாய் கிருபைகொண்டு பூநீர் தோண்டி
வளப்பமுடன் குழியதனில் ஊறும் நீரில். (10)

நீரமுதச் சத்திசிவப் பூநீர் தன்னை
நேமமுடன் தனித்தனியாய்க் கொண்டு வந்து
சாரமுயர் பீங்கானும் குப்பி தன்னில்
சலிப்பறவே யூற்றிவைத்து அதனுள் தானே
காரசார வீரம்அரி தாரம் கெந்தி
கனகௌரி லிங்கம் கற்பூரம் தாரம்
தீரமுயர் வெள்ளைசங்கு சிலையும் நேராய்த்
திறமையுடன் வகைக்குஒரு பலமுங் கூட்டி (11)

கூட்டித்தூள் செய்தைந்து படிபூ நீரில்
கொட்டிக்குப்பி வாய்மூடி வலுக்கத் தீட்டு
நாட்டமுதல் நாலுமுழங் குழிதான் வெட்டி
நன்மைபெறப் பூநீர்க்குப்பி முடாவுள் வைத்து

தாட்டிகமாய்ப் பாண்மேற் சட்டி மூடித்
        தகர்ந்திடாது தூபதீபம் இட்டுத் தானே
கேட்டிடவே ஓம்,ஸ்ரீம், ரீம்,ரிங், கங்
        வங்சிங்கென்று செபம்நூற்றெட்டுத் துதித்து ஓதே. (12)

ஓதியபின் குழிக்குள்பாண் வைத்து மேலே
        உகந்துகுழி மண்ணதனல் கொட்டி மூடி
நீதியுடன் மண்டலந்தான் செல்லும் மட்டும்
        நிரஞ்சனமாய் முன்னுரைத்த மந்திரத்தைப்
பூதிகொண்டு செபஞ்செய்து தூப தீபம்
        புத்தியுடன் செய்துஒரு மண்ட லம்பின்
சோதித்துப் புதைத்தநீர் எடுத்து நேராய்ச்
        சிவநீரும் சத்திநீரும் வேருய் வையே. (13)

வைத்தபின்பு சிவநீரும் சத்தி நீரும்
        வரிசையுடன் சமனெடையாய்ச் சேர்த்துக் கொண்டு
பொய்த்திடாச் சரக்குகளில் இட்டுத் தாக்கில்
        புகழுடைய கௌதாரிப் புடத்தில் நீறும்
மெய்த்திறங்கள் உற்றவுயிர்ச் சரக்கு எல்லாம்
        மேவுமிந்தச் செயநீரால் மடிந்து கட்டும்
உத்தபதி உயர்நிலையாய் முனிவர் சித்தர்
        ஓதிவைத்தார் மர்மமுடன் உலகி னேர்க்கே. (14)

உலகறிய நமனுசத் திறவு கோலில்
        ஓதிவைப்தேன் சத்திநீர் சிவத்தின் நீர்தான்
நலமுடனே இருக்குமிடந் தானும் இரண்டு
        நன்னயநற் கிணற்றுரிமை வளமும் சொன்னேன்
பலனதனுற் கோடியுண்டு மறைத்தார் சித்தர்
        பயன்பெறவாய்க் குடநீரின் உண்மை தானும்
தலமறியத் திறவுகோல் திறந்து காட்டித்
        தாக்கிவைத்தேன் அதைக்குறுக்கி முத்தா ரத்தில். (15)

இல்லறமும் நல்லறமும் இலங்கி வாழ
        இருந்தகத்தில் இருந்தபடி இருந்து ஏற்கச்
சொல்லறிய அத்தன்நந்தி சைதன் னியத்தில்
        சூட்சநிலை யறியாத மாந்தர்க் கெல்லாம்

வெல்லுதற்காய் வினையமறத் தெளிவாய் யானும்
விளம்பிடுவேன் சத்திசிவச் செயநீ ருண்மை
அல்லலறும் அதுதன்னால் கோடா கோடி
அனந்தவித்தை காயகல்பம் அதுதா னுச்சே. (16)

ஆச்சென்ற அரனவரும் ஆணும் பெண்ணாய்
அகிலமதில் உருவாக்கி யமைத்தார் நம்மை
பேச்சுரிய வோர்சதுப்பு நிலமு மக்காள்
பெருமையுற்ற கோவானூர் ஏரி தன்னுள்
தாழ்ச்சியில்லாக் குண்டுமணி யம்மன் கோவில்
தானதற்கு எதிரிலே பூநீ ரென்று
சூழ்ச்சமுடன் அகத்தியரும் செப்பி வைத்தார்
சுகிர்தமுடன் கோவிலுவர் அறியச் சொல்வேன். (17)

வேனவராய்ப் பெண்ணுருவாய் விதிப்பி னாக
விளங்கிடும்நம் பாரியம்மன் அதரங் கோவில்
தானமல்குல் முன்னணைப்புச் சேர்க்கை நாதம்
தானவளின் மூலபதி உவர்நீர் உப்பு
ஈனமில்லா இடம்ஏரி நிலம்ச துப்பு
பூநீரும் பூக்குமுவர் ஆண்பெண் ணுள்ளே
ஞானகல்பம் காட்டிவில்லை வீட்டில் உண்டு
நயவாத சித்துபதி நீதா னுச்சே. (18)

ஆச்சென்ற அகத்தீசர் குருச்செய நீர்மிக்
கறுபதுக்குள் சூழ்ச்சமது சொன்னார் பின்னும்
பேச்சின்றி நிகண்டதற்குள் முடிவைச் சொன்னார்
நீச்சலற நந்திதேவர் பூநீர்ச் சூத்திரம்
நிலம்பெருத எண்பதுக்குள் விளங்கச் சொன்னார்
பாச்சலுறப் பாம்பாட்டி கல்ப சூத்திரம்
பகர்ந்திட்டார் நூறதனில் தெளிவாய் என்போல்
போல்வரையாய் உரோமரிஷி பூநீர் முப்பு. (19)

நூலது வாய்நூற் றிருபத் தொன்றில்
நால்யோனி பேதவகை காட்டி நன்றாய்
நாதாந்த அவனிபேத வகைகாட்டி நன்றாய்
நாதாந்த வரைதிறந்து செயநீர் தானும்

மேல்நிறையாய் உரைத்தென்போல் விளக்கத் தோடு
மேவுஉப்புச் செயநீருண் டாகும் பாகம்
சூல்விளைமை சுழிபூமி உவர்ப்பு ஆண்பெண்
என்றறியச் சுத்தநிலை யுரைத்தா ரையன். (20)

அய்யமா வதுகண்டு தெளிந்து தானும்
அன்புடனே குருநந்தி பொழிவு வாக்காய்
மெய்மையுற யோகதலத் திரிகா லங்கள்
உமையரனுர் தெரிசனமும் உளவாக் கேற்றே
உய்பரையின் நாட்டமதால் உகந்து உள்ளாய்
ஓதரிய பூச்செயநீர் உண்மை மார்க்கம்
செய்வகையும் அடைவழியும் சிறப்புற் றோங்கச்
செப்பிடுவேன் மக்கள்பதி நீடித் தோங்கும் (21)

## செயநீருதிப்பின் வளமை

ஓங்கும்ஓங் காரச் சுழிமுனைவாதம் —உயர்
உப்புச்சலம் நிறைந்தசட போதம்
தாங்கும்ரவி மதிகொள்ளழல் நீதம்
தாவிதரித் ததுபஞ்ச பூதமுயர் கீதம்
கீதம்பரை யினுடலாட நாட்டங் —கிளர்
கிங்கிணி எட்டு இரண்டு அ.உ. தேட்டம்
பேதமெனும் அகரம்ரவி யோட்டம் —பின்னும்
பிங்கலை உகரமதி தான்விசை யாட்டம். (22)

ஆட்டம் சுழிமுனை இந்நதி பீடம் —மூன்றும்
அமைந்த குண்டலி எழுபதி மாடம்
தேட்டம் நிறைந்தபீஜ யோனி கூடம் திகழ்
தித்திக் குந்தேன் அமுதக்கிளி யோடம்
ஓடநதி மூலப்பதி நாடே —உவர்
உப்புமல சலமெய்சோதி வீடே
சாடலில்சாயச் சரக்கான கூடே —அதில்
சந்தையின் பேட்டை நிறைவான காடே.

காட்டினில் ஐவர் தினங்காவல் சீரு —அதில்
கலந்துகாத் தோணி சுழன்றேடு மாறு
தாட்டிகப் பசலை மன்னுயிர்மேரு —கரை
தானில்லை யதற்குப்பேர் உமையன் ஊரு

ஊருக்குள்ளே சதுப்புநிலம் உண்டு —அங்கே
ஊறுங் குமுழிபொங்கி விளைவ துண்டு
காருலாவும் பரியரவம் தொண்டு தினம்
களத்துப்பூ விதுபூக்கும் மாதுளை வண்டு.

வண்ட தினங்களின்றியெழுந் தாடும் —சோதி
வட்ட வடிவத்து டனுயர்ந் தோங்கும்
திண்ணம தாகவடிமுடி கூடும் —திசை
தேனமுர்த உவர்ப்புப்புனல் நாடும்
நாடும்படிக் குவர்நிலம் நாட்டு —சிவம்
சத்திசெயநீர் கைக்கொண்டிடு வேட்டு
வீடுதனி விருந்துருப் போட்டு —திரை
நீக்கிவாங் கிக்கொள்ளுன் பெண்ணுளைக் கேட்டு.

கேட்டுநீவாங் கிடவும்கெடி யாச்சு —அதைக்
கிளறி விரிக்க எளிதாக்கும் பேச்சு
நாட்டுணரக் காணுங்கண் டறியலாச்சு —செயநீர்
அகத்திலிருந் தெடுத்துருப் பாச்சு
பாய்ச்சிப் பருகியாணும் பெண்ணுமென —இந்தப்
பாரில் படைத்தாரையன் நம்மையிணை
தாழ்ச்சிக ளின்றித் தருவயனுமுன் —தக்க
அமளியில் உண்டுவருப்பு உணர்வு காண.

கணவரை நாட்டமுற் றணையும் —போதுசூல்
காதலி கொண்டிடுவாள் புவி மீது
இனமதினம் உற்றிருக்கும் போது —செயநீர்
இதுமதித் துக்கொளப் போது
ஏதுஎன்னுது சித்தர்பல வாகி —நானும்
இயம்பினுர் பரிபாஷைத் தெளிவாகி —வாது
இன்றிக்குட நீர்க்கு ரித் தாதி —நவ
நாதத்திறவு கோலில் நெறி யாகி.

நெறியுடன் அறைந்திட்டேன் தெளிவாகப் பின்னும்
நிகழ்த்திடுவேன் முத்தா ரத்தில்வினை போக
தெரிவையின்உவர் சலநிறை போக —ஆணும்
பெண்ணுற்ற முப்புபதி தேக

தேகத்துள் நிறைந்துபஞ்ச கோசம் —தினம்
க்ஷிரத்தி லில்லைபரி மூர்த்திகள் வாசம்
சோகமுற வமுதகுண நேசம் —உற்று
சோதி(யாம்) யுன்னுள் காரசார பாசம்.

பாசமுறத் தைமாசி பங்குனி மாசம் —பூர்வ
பக்ஷத்தமு தூறல்விந்து நாதம்
கோசபீசமே வழியுவர் போதம் —வரும்
கோசலங்கண் டுண்ணநற்பிர சாதம்
சாதகம்உ வர்ப்புமுண்டு துவர்ப்புமுண்டு —மன்பதைக்குச்
சாற்றினர் சித்தர்களும் நூலிற் கண்டு
பேதமில்லாமல் யானும்பண்டு —இந்தப்
பூவில்எல் லோருங்காண உரைப்பேன் விண்டு.

விண்டிடுவேன் பூச்செயநீர் வினையமறத் தானே
நாதவிந்து முயர்கெந்த முவர்ப்புணர்வு கண்ணே
அண்டபிண்ட மாயுடல் உயிருமுப்புத் தேனே
ஆணும்பெண்ணு மாயிலங்கி உற்றநிறை —வீணே
கொள்கைதனைக் காணாது அலைந்துதவிப்ப தேனோ
இந்தப்பாரினி லேமூவரும் அமைத்துரைத்தர் காணே
காணுதற்காய் மூவர்களும் பெண்ணைச்சுமந் தேற்று
மீத காரணமாய் மங்கையரை யடைந்ததேனோ சாற்று.

பூணுலகில் பூச்செயநீர் பூமிதனி லேற்று —உவர்
உவருப்புச் சலமென்று சொல்லிவைத்தார் —கூற்று
நாணுதலு மில்லாதுயர் சதுப்புநில முற்று —அங்கு
நாடிப்பூநீர் விளைவுண்டதை எடுக்கச்சொன்னார் மாற்று
தோணுஞ்சர்ப்ப முண்டங்கது தீண்டிவன முற்று
மாண்டுபோவா ரெனச் செப்பினா ரென்போ
லார்துதிப்பேற்று
ஏற்றுதற்காய் இந்நிலத்தில் இயம்பிடுவேன் கொஞ்சம் —உயர்
இல்லறத்தில் நல்லவைகள் உண்டுயாவும் நெஞ்சம்

போற்றுதற்காய்ச் செயநீர்பூமிக் குள்ளில்லை தஞ்சம் —நிலை
போதமுற்றே வாதமுடன் வைத்தியங்கள் மிஞ்சும்
மேற்றணிவுரை யாய்வுகளால் மிடிவறுமையற்றுக் —கொஞ்சம்
பொல்லாத் தீமையுற்ற கோடான கோடிநோய்
ஆற்றுகளுள் தஞ்சும்மாற்றி மறலியுட கொட்டம் —ஓங்கா
தஞ்சும்மகிழ் மாதரசி மொய்வாள்சட மிருந்து.

## பல மிஞ்சும்

மிஞ்சிவரும் யோகஞான சித்துநிறை தேட்டம் —இந்த
மேதினியிற் பூச்செயநீர் அறிந்தால்எம ஞட்டம்
அஞ்சுபஞ்ச பூதமுன்னுள் நிறைந்திருக்கும் நாட்டம்
அதையுணர்ந்து பூச்செயநீ ரறியாதேஞே —வாட்டம்
பஞ்சமா காரணபேதை வாதிகளின் கூட்டம் —உற்ற
பாதைசித்தர் சொன்னவழி மாந்தர்காணுரே தேஷ்டம்
வஞ்சமாச் சொல்லிடுவேன் வையகத்துய் கோஷ்டம்
வலுவாக பூச்செயநீர் உணர்ந்தோங்கமெய் —யபீஷ்டம்.

## பூச்செயநீர் இன்னதென்றும் எடுக்கும் முறையும்

இஷ்டமுடன் பிரபலங்கள் நிறைந்து ஓங்கப்
பேதமறச் சொல்லிடுவேன் பிழைத்துற் றுய்ய
கோஷ்டம்நிறை குவலயம் காணக் கொள்கைமேல்
குறிப்புடனே பூச்செயநீர் இன்ன தென்றும்
தாஷ்டிகமாய் ஓதிடுவேன் தகர்த வின்றித்
தக்கபரி யாட்சூழ ஆண்பெண் கூருய்
பீஷ்டமுற்று வந்தநிலைப் பெருமை காணப்
பேசிடுவே னினியபல பவங்கள் தீர. (24)

நீங்கிடாதுன் மனைவியுடன் நீயும் தானே
நிலைபூர்வப் பௌர்ணமிநாள் அன்று கேளாய்
திங்கள்பகல் முழுவதுமே உணவ தின்றித்
தெள்ளிதமாய் இரவில்பழம் ஆவின்பா லுண்டு
பாங்குறவே துயின்றுவிடி காலந் தன்னில்
பகருமாண்பெண் சிறுநீரைத் தனித் தனியாய்
................... ................ ................ ................
உகந்து பாண்டத் தூற்றியடுப் பேற்றிக் காய்ச்சே (25)

காய்ச்சிடவே இவ்விதந்தான் மூன்று திங்கள்
கருதிப்பயன் பெறவினிய விரதங் கொண்டு
ஆட்சிதமாய் அமுரியேற்றுச் சுகமுய் வாகச்
சொற்பயனைய்த் தெரிந்தெடுத்து அமுரி உப்பு

தாழ்ச்சியறத் தனித்தனியாய்ப் பலமு மொன்று
தாக்கிடவே இருஉப்பு ஒன்ருய்க் கூட்ட
ஆட்சியுறச் சத்திசிவ உப்பி தாச்சே
அறிந்திடவே வீட்டுப்பு இரண்டி தையா. (26)

ஐயமறக் காட்டுப்போ சோற்றுப் பாகும்
அவ்வுப்பைச் சிப்பிநீரில் கரைத்தி றுத்து
மேன்மையுறத் தீயெரித்து உப்பை வாங்கி
மேவுமொரு பலமந்த வீட்டுப் போடே
தூய்மைபெறச் சேர்த்துக் கல்வத் திட்டுப் பின்னும்
தெரிந்தரை கார்பொருது நீற்றுச் சாற்ருல்
நொய்மையற வறுத்தெடுக்கக் கட்டிப் பூக்கும்
கோணுமல் கல்வத்தி லிட்டுத் தாக்கி. (27)

தாக்கியரை சிப்பிநீர் நீற்றுச் சாறும்
தவருமல் சமன்கூட்டித் திரிநா ளாட்டில்
பாங்குபெற வில்லைதட்டிக் காய வைத்துப்
பதருமல் சில்லிட்டுச் சீலை செய்து
நோக்கிடவே யிருபது பலத்தெ ருவில்
நுண்மைபெறப் புடமிடுவாய் இவ்வா ருக
ஆகியரைத் தெடுத்துப்புடம் பத்துத் தீரே
அன்புடனே உப்புகட்டிக் களிம்ப தேகும். (28)

ஏகிடுபின் புடமிட்ட வுப்பது தான்
இயற்கை பலமிரண்டு நிறுத்தெ டுத்து
பாகிதமாய்ச் சீனச்சுண்ணம் பலம தொன்று
பண்புடனே காரச்சுண்ணம் பலமும் ஒன்று
போகிதமாய்ச் சூடச்சுண்ணம் அரைப்ப லந்தான்
இயங்காமல் அண்டச்சுண்ணம் பலமும் ஒன்று
நோக்கிடாய் விந்துச்சுண்ணம் பலம தொன்று
நிறைவீரச் சுண்ணமொரு பலமும் கூட்டே. (29)

புடமிட்ட உப்புச்சுண்ணம் பலம்2. சீனச்சுண்ணம், காரச்சுண்ணம், அண்டச்சுண்ணம், விந்துச்சுண்ணம், வீரச் சுண்ணம் ஆகிய இவை ஐந்தும் வகைக்கு ஒருபலம். சூடச் சுண்ணம் அரைப்பலம்.

கூட்டியரை நவநாதத் திறவு கோலில்
குணமாகச் சொன்னகுட செயநீர் விட்டு
நாட்டிதால் சாமம்விட்டு நன்ரு யாட்டி
நலிப்பறவே வில்லேதட்டி ரவியு லர்த்தி
மேட்டிமையாய் அகலிவிட்டுச் சீலே மண்தான்
மெதுவலாய் ஐந்துசுற்றி ஈரைந் தான
தாட்டிகமாய்ப் புடமிடுவாய் இவ்வா றைந்து
தணந்திடாப் புடமிடவே கொடிய சுண்ணம் (30)

சுன்னமதால் கோடிவித்தை குருவி தாச்சு
குணமுடனே சோதிக்கப் பதினு ருகும்
கன்னலாம் பலபிணிகள் ஓடிட மாற்றும்
காணுமல் திசைதப்பி யன்றே போகும்
பின்னமறக் காயமது கற்றூண் போலாம்
பிரமவிதி மாறிஆயுள் வளர்ந்தே யோங்கும்
நன்மையாய் யோகஞான சித்து தீர்க்கம்
நாதாந்த வீடதுவும் நிலேத்துப் போகும். (31)

நிலேப்பதற்காய்ச் செயநீரென்ற வுண்மை தீர்க்கம்
நீணிலத்தில் சித்தர்சொன்ன மறைப்பை நீக்கித்
தலேயெடுத்து ஓங்கித்தரை மனுக்கள் வாழத்
தற்பரையாள் தேவியரன் அருளுண்டாகக்
கலேரவியும் கற்பகத்தேன் கலந்துள் ளாகக்
கருணேபரப் பிரமமகிழ் பூர ணங்கள்
மலேயேறித் திரிந்தாலங்கு கற்ப மேது
மாதுமங்கை யருகிருக்கச் செயநீர் சூட்சம். (32)

## செயநீரின் வகை விளக்கம்

சூட்சமெனுஞ் சூட்சமதி லாட்சிமிக வாக
என்போல்சித்தர் ஓதிவைத்தார் நூலின்குறை போக
சாட்சியுடன் சித்தர்சொன்ன கபடகற்றிப் போக —இந்தக்
காசினியில் எல்லோரும் பிழைத்திடத்தென் பாக
ஆட்சியுடன் வாழ்ந்துபலன் பெற்றிடமுன் பாக
அரனம்பிகை இருதாளேற்று ஓதுவேன்மெய் யாகத்
தாழ்ச்சியின்றிச் செயநீரில் தையல்பாரி யாகத் —தரை
தானுதித்துன் னகத்திருக்க அறியாதேநொய் வாக. (33)

உய்யப்பரி பாஷைசித்தர் ஓதியநூல் கண்டு —நீங்கள்
உணர்ந்துணர்ந்து பார்த்திடாது அலுத்துப் பலதொண்டு
செய்துநிமை ஏற்றிடாது சிக்கனமும் கொண்ட —நலனும்
சிரழிந்து காணுமலே அலைந்தலைந்து —பண்டு
மெய்மையுடன் அறிவதற்காய்ச் செப்பிடுவேன் இன்று —மிகு
மேவுமாது கருக்குடநீர் கிடைக்காவிடி லன்று
துய்யமேஷம் துணிக்குவதன் குடற்பையைக் கொண்டு —அதன்
உள்ளிருக்கும் குடற்சலநீர் எடுத்துக்கொள்ளல் நன்று.

நன்றுடனே குட்டிகுடநீர் சிப்பிபூவை நீரு —சமன்
வகைக்குஅரைப் படிதான் சார்ந்திடவே சேரு
கன்னலறப் படியொன்றுதான் திருநீற்றிலைச்சாறு —நீயும்
கலந்துஒரு நாள்நிலவில் வைத்தெடுத்துப் பாரு
........................ ........................ .................. ..................
உயர்பூச்செய நீரென்றதை உரைக்கலாகும் தேரு
வண்மையுடன் குட்டிப்பைநீர் கிடைக்கா விடில் —சீரு
இங்குவழுத்திடுவேன் செயநீரொன்று
வாதையதைப்பின் வேறு.

## செயநீரின் முறை

வேருமில்லை தூருமில்லை வினையமில்லை மாது —தன்னே
டுற்றுச்சேர்க்கைச் சரசலீலை யாடியபின் போது
ஆடுதலால்அவளும்நீயும் பேயும்மூத்திரக் கோது —நீரைத்
தனித்தனியாய் எடுத்துவகைக்குக் காற்படிசேர்தப் பாது
சீருரிமைச் சிப்பிசலம் அரைப்படியிப் போது —கூட்டி
நீற்றிலைச்சாறு படியொன்றுதான் கலந்திடும்போ தீந்து
பெருமையுடன் கலந்து நீரையுமெய்ப் போது —பின்னும்
நிலவில்வைத்து எடுத்துக்குப்பி தனிலடைத்த வதை.

அரை தவறில்லாத் தூமைநிறம் காரம்மெத்த வாகும்
ஊன்றிச் சரக்குகளில் விட்டரைத்துப்புடமிடச்
சுண்ணமாகும்
பலம்பெறவே செயநீர்மூன்று உரைத்தேன் உயிராகும் —இத்தால்
பாவதோஷ மற்றுஉயிர் நிலைத்துத் தீமையோடும்
குவலயத்தில் யானுரைத்த செயநீர்மூன்றுள் ளாகும் —கிட்டி
எந்தெந்தச் சமயத்திற்கதற் கேதுசெய் யுசிதமெய்யாகும்
கவனமுடன் கைமுறையாய் ஔஷதம்செய்ய லாகும் —நானும்
கண்டறிந்த முப்புசெயநீர் இதுவேவினை யேகும்.

ஏகிவிடும் எமன்வாதையும் இல்லைபுவி மீதே —முற்றும்
தோனும்பல விஷயங்களும் நான்முறைதப் பாதே
பாகிதமாய்ச் செயநீர்விட்டுச் சரக்கினைமுப் போதே —ஆட்டிப்
பக்குவமா மண்மறைவில் புடமூன்றுபிச காதே
மோகிதமாய்ப் போட்டெடுக்க ஓடுஞ்சரக்கப் போதே
கட்டுஇறுகும் கருதியதின் பின்புடம்பொய் யாதே
தாகிதமுற் றேயுரைத்தேன் தகாத லறவிப் போதே —சொல்
மார்க்கமுடன் செய்யில்குற்றம் வாராதுபோம் சூதே.

சூதுடனே ஏட்டில்சித்தர் முறைவழியைக் காட்டிப் —பின்னும்
சூட்சமுடன் மறைத்துவைத்தார் அகளமுறப்பா லூட்டி
வாதின்றி வழக்குமின்றி யவரோதமெய் கூட்டி
வழிமார்க்க முடன்எல்லாரும் பிழைத்தோங்கக்
கால்நாட்டி
மாதுகுடநீர் சிறுநீர்சிப்பி மேஷகுடநீர் பூட்டி —மேவும்
சந்திசிவ செயநீர்சதுப்பு நிலத்துள்ளதென(ப்பெயர்)
மாற்றி
தீதுமுற்று மகலச்சித்தர் தேவர்திருத்தா ளேற்றில் —என்றும்
செயம்பெறவே யுரைப்பேன்முப்பு மார்க்கங்கொள்மலர்
சூட்டி.

சூட்டிவைத்தார் அப்புஉப்பு இரண்டதனு லாச்சு
உவர்முப்புநீரைக் குருமுடிக்க மறைந்தார் சித்தநீ ராச்சு
விட்டுப்பு இரண்டுடனே காட்டுப்பே ஒன்ருச்சு —பின்னே
விளக்கமுடன் ஓதிவைத்தேன் விணையமறப் பாய்ச்சி
தாட்டீகமாய் முப்புமுடித் தோன்பெரியோ னுச்சு —இந்தப்
தாரணியில் என்செயநீர் இன்றேல்முடி வாச்சு
ஆட்கூட்டமிட்டு வாதமக்கள் கொள்ளைபோகும் பேச்சு
—வீணுய்க்
கூட்டிக்கெட்டார் தவயோகியும் முப்புமுடியான் சாட்சி.

## முப்புக் குரு முடிப்பு

பான்மைபெற வுரைத்திடுவேன் மக்காள் மக்காள்
பலிதமுற முப்புகுரு முடியு மார்க்கம்
மேன்மைநிலை யடைவதற்காய் உமையாள் பாதம்
ஓதசெப தியானபதி நிட்டை யோகம்
ஆன்மமுயிர் ஜடாநிலையும் நிலைத்து ஓங்க
அறிந்திட மெய்வாசி யறிவிலுற் ருட
தேன்புகழ்மா தவமேவித் தனங்கள் கொஞ்ச (84)

உண்ணுதற்காய் உன்மனைவி விலக்க நாள்தொட்டு
உகந்துஅவள் திரிநாளும் பெய்யும் மூத்திரம்
தன்மையுடன் முடாவொன்றில் தவரு தேற்றுத்
தணியவைத்துத் தையலுடை அமுரி தன்னைத்
திண்ணமுடன் அடுப்பிலேற்றித் தீயெ ரிக்கத்
திறம்பெருகும் நாத சத்தியுப் பாச்சு
எண்ணதிகப் பலிதமுடன் நீதான் பெய்யும்
இயல்பான மூத்திரத்தை ஏற்றுக் காய்ச்சே. (35)

காய்ச்சி இந்தஉப்பு சிவத்தின் உப்பு
கருதரிய சிவவுப்பு சத்தி யுப்பு
தாழ்ச்சியற வகைக்குஇரு பலமும் கூட்டித்
தவருமல் கற்பூரம் பலம் ஒன்று
பாய்ச்சிடு மூன்றுமொன்ருய் க்கல்வத் திட்டுப்
பதருமல் பூங்கதலித் தண்டுச் சாற்ருல்
காய்ச்சியரை நிகழ்த்தியதை மூன்று நாள்தன்
வில்லைதட்டி ரவியுலர்த்தி யின்னுங் கேளே. (36)

கேள்மகனே கதலிமட்டை யதனில் வில்லை
கிருபையுடன் வைத்துச் சுற்றிச்சீலை மண்தான்
தாழ்மையுற மூன்றுசுற்றித் தகர்ந்தி டாது
தக்கநிறை மண்மறைவில் புடமும் மூன்று
ஏழ்மையறப் போடுடனே கட்டிப் பூக்கும்
இனிமையுற வில்லையேற்றுக் கல்வத் திட்டு
ஊழ்வினைகள் அகலுதற்காய் நான்தான் சொன்ன
உகந்ததொரு பூச்செயநீர் விட்டு நாள்தான் (37)

மூன்றுநாள் அரைத்தெடுக்கச் செயந்தான் கேளு
முத்திரையாம் சிகாரசிங் கெனச்செ பித்து
பான்மையுற அரைத்து எடுத்து வில்லை
பக்குவமாய் ரவியுலர்த்தி அகலில் வைத்து
மேன்மைபெறச் சீலைமண் வலுக்கச் செய்து
மேவுபதி இருபத்தாம் பலத்தெருவில்
ஆன்மமுறப் புடமிடுவாய் இவ்வா றைந்து
ஐம்புடந்தான் இட்டெடுக்க வில்லை பூக்கும். (38)

பூத்தவில்லை முப்புவாகும் புனித மாகும்
புகழ்பெரிய இன்பநிலை யடையக் காட்டும்
மாத்ததிகம் மாத்ததுவும் மகிழ்வுன் சோதி
மங்கலமும் நிறைந்துபதி மேன்மை தங்கும்
கூத்தனைய கூற்றுவனை வெல்ல லாகும்
கோடிபல நோய்களும் அரிசி எடைதான்
ஏத்தமுடன் பத்தியமாய் ஆவின் நெய்யில்
இனிமையுற மண்டலந்தான் உண்ணல் நன்றே. (39)

நன்றுரிய வாசியது சுழித்தே நிற்கும்
நண்ணுமுயிர் நீங்காது காயம் கற்றாண்
பன்னமறத் தீர்க்கமுற்று அழல்மண் தின்று
பேதங்கள் அற்றுயோகம் ஞான சித்து
கன்னலறத் திடமாகும் ககனம் பாயும்
கருணைபெற ஆனந்த அமுதம் பொங்கும்
உன்னியிந்த முறைவிடவே றில்லை சித்தர்
உகந்துசொல்லிப் பலவிதமாய் மறைத்தார் கண்டே. (40)

நவநாதத் திறவுகோலில் (நமனுசத்திறவு கோலில்) சொன்ன
நவதசாமிர்த மெழுகரைக்கச் செயநீர் முறை கூறியது.

கண்டறிய நவநாதத் திறவு கோலில்
கருதிநவ தசாமிர்த மெழுகு சொன்னேன்
அண்டிமெழு காட்டச்சிப்பிப் படிநீ ரொன்றில்
சாரம்வெடி வகைக்கரை யிட்டதண்ணீர் தன்னில்
மிண்டியரை நாளைந்து அரைத்தெ டுத்து
[(வகைக்குஅரை) ஒவ்வொன்றும் அரைப்பலர்]
மேன்மைபெற அம்மெழுகில் இருப லம்தான்
கொண்டுஅதற் கையரைதான் வாளம் சேர்த்துக்
குறிப்புடனே முன்னரைப்பு நீரா லாட்டே. (41)

ஆட்டியிருந்த மெழுகதனை வேரு யேற்று
அரியஇரு உழுந்தளவு வட்டுள் வைத்து
மீட்டியுள்ள விரோசனமும் ஆகும் —மிக்கு
மேவிடிலோ மோரன்னம் அருந்த நிற்கும்
தாட்டிகமாய் ரோகமுற்ற போகத் திற்குத்
தகர்ந்திடா திரிநாளும் இட்டுப் பின்னர்
மேட்டிமையாய் வாளமிடா மெழுகு தன்னை
இருஉழுந்தின் அளவுண்ண அனுப்பா னங்கேள் (42)

கேள்பதியாய் வாளமிடா மெழுகு தன்னைக்
கிருபையுடன் அனுப்பானத் திருந்து மார்க்கம்
தாழ்மையற வாசகமாய்ச் செப்பு வேன்கேள்
தக்கநிறை யளவுடனே தகைமை யுற்று
வாழ்ந்திடவே வாளமிடா மெழுகு அருந்த
வசனிப்பேன் அவ்வகையாய் அருந்தி ஏற்கில்
ஊழ்வினைகள் அற்றுவிடும் குட்ட நோய்மற்
றுகந்தபல பிணிகளும் விஷங்கள் தீரும். (43)

## உரைநடை

நோய்களுக்கு வாளமிடா மருந்து ஈயவும்
அனுப்பானமும் கூறியது.

**சுரம் 64க்கும்** சுக்கு அல்லது இஞ்சிச்சாறு ஒரு பண வெடை மருந்து ஈயத் தீரும்.

**இருமலுக்குக்** கடுக்காயைத் தண்ணீர்விட்டு நசுக்கிப் பிழிந்து நீரில் ஒருபணவெடை கொடுக்க.

**இரத்தமூலத்துக்குப்** பசுவின் வெண்ணெய்யில்.

**பாண்டு, மகோதரம், பெருவயிறு, நீராமை, இவைகளுக்கு** மிளகு வெள்ளைவெங்காயம் அரைத்து மெழுகில் ஒரு பண வெடை வைத்துக்கொடுக்க. ஐந்து ஏழு பத்துநாள் வரைக் கொடுக்கலாம்.

**மேகம், குட்டம், சூசிகாவாதம்** இவைகளுக்கு நொச்சிச் சாற்றில் 3நாள் கொடுக்க.

**4400 நோய்க்கும் சன்னிவகை 18க்கும்** கழற்சிக்கொடி, முசுமுசுக்கை, நொச்சி இவைகளைச் சமனெடையாய் எடுத்துத் தட்டிப்பிழிந்து அதில் பணவெடை கொடுக்க.

**சூதகவலிநின்று கருப்பம் உண்டாக** அரசங்கொழுந்தை ஆவின் பால்விட்டரைத்து விலக்கமான காலத்தில் 3நாள் கொடுக்க.

**அட்டநாகம், சர்ப்பக்கடி நஞ்சுதீர** நாவற்கொழுந்து விராகனெடைஒன்று, மிளகு விராகனெடைஒன்று இந்த இரண்டையும் சேர்த்து அரைத்து வெற்றிலைச்சாற்றில் கரைத்து மூன்று பணவெடை மருந்து கொடுக்க நஞ்சு இறங்கிவிடும். துன்பம் தீரும்.

**விரியன்பாம்புகடிக்குத்** தாளியிலையும் அவுரிஇலையும் சமன்கூட்டி அரைத்து ஆவின்வெண்ணெய் கலந்து இரண்டுபணவெடை மெழுகுசேர்த்து 3நாள் கொடுக்கத்தீரும்.

**நீர்க்கட்டுக்கு** மிளகு பொரிகாரம் இரண்டையும் பொரித்துக் கற்கண்டு சேர்த்து ஆவின்நெய்விட்டுக் குழப்பி யொருபண வெடை மருந்து ஈயத்தீரும்.

**விஷபாண்டு வீக்கத்திற்கு** திரிகடுகு நொச்சிச் சாற்றி லரைத்து 5, 7, 9, நாள் கொடுக்கத்தீரும்.

**மேகச்சூடு 21** நொச்சிச் சாற்றில் 3நாளைக்கு வாளமிட்ட மருந்தை இரண்டு உழுந்தளவு கொடுத்துப்பின்பு வாளமிடா மருந்தை இரண்டு உழுந்தளவு மிளகும் மருதோன்றியிலையும் அரைத்துவைத்துக் காலைமாலை 48நாள் உண்ணக் குட்டம் குறைநோய். வெண்குட்டம், சனி, சுரம், அட்டகாசம், கண்டமாலை, அட்டகுன்மம், பாண்டு, காமாலை, சோகை, மகோதரம் நீங்கும்.

இந்த மெழுகுக்குப் பத்தியம் இல்லை. பெண்போகம் கூடாது. வெள்ளாட்டுக்கால், தலை, கறி, சூப்பு சேர்க்கலாம். நோயாளிக்கு 3நாளைக்கு மெழுகுகொடுத்து நிறுத்தித் தலைக்குத்தண்ணீர் விட்டுவைத்துபின்பு மருந்து கொடுக்க வேண்டியது. இவை நிற்க. இரவிமேகலையிற் சொல்லியுள்ள குருமெழுகை இதேபோல் அனுப்பானங்களில் கொடுக்க எல்லா நோயும் நீங்கும்.

**சூதகக்கட்டிற்கு** செங்கத்தாரிப்பட்டைபலம் 2. சூரத்தாவரை பலம்1. கருஞ்சீரகம் பலம் ½ சுக்கு பலம் ½ இவையெல்லாம் இடித்துச்சட்டியிலிட்டு இரண்டுபடி தண்ணீர்விட்டு ½படி யாகச் சுண்டக்காய்ச்சி வைத்து ஒருபணவெடை வாளமிட்ட மருந்தைக் கருப்புக் கட்டியில் கொடுத்துப்பின் அதன்மேல் ஷெகசாயம் சாப்பிடச்செய்ய பேதியாகும். 3நாளைக்கு இவ்வாறு கொடுக்கக் கட்டுப்பட்டிருந்த சூதகம் உடைந்து விடும்.

திருதற்காய்ச் சரக்குவகை சுத்தி செய்யத்
திறமையுறும மேஷநீர் படிதான் இரண்டு
பெருநிதியாய்க் கொண்டு சட்டி யிட்டுப்
பெருமைபெறச் சரக்கைத்தோ ளாந்திரமாக்கிக்
கூருடைய நீரில்படாமல் தொங்க விட்டுக்
குணமாக நீர்சுண்ட எரித்தெ டுக்க
வீறுடைய சரக்குக்கட்டி வேகம் போகும்
விகற்பமற ஆட்டுநீர் கிடைக்கா விட்டால் (44)

விட்டுவிடா நீபெய்யும் சிறுநீர் கொண்டு
வினையமறச் சரக்குகளை முன்னம் போலத்
தட்டலறத் தோளாந்திரம் கட்டித் தூக்கித்
தாண்மைபெற நீர்சுண்ட எரித்தெ டுக்கக்
கட்டிவிசச் சரக்கினிட கொடுமை நீங்கும்
கருதியே நீளடுத்த சிறுநீர் உப்பை
திட்டமுடன் செய்மெழுகு பற்பந் தன்னில்
திடம்பெறவே சேர்த்திடுவாய் மேன்மை யாகும். (45)

ஆகுதற்காய் எரித்த வுப்பை எறிந்தி டாதே
அந்தவுப்பைச் சேர்த்துச்செய்த மருந்தோவேகம்
பாகுடைய உன்கைமருந் தருந்தி னோர்கள்
பட்சமுடன் உன்றனக்கு வசிய மாவர்(கள்)
வாகுடைய செருசெருப்பு இல்லா விட்டால்
வசியமுடன் வைத்தியமும் பலிக்கா தையா
மீகுணத்தில் இதுவுமுறை விளக்கம் சொன்னேன்
மேதினியில் எல்லாரும் பிழைத்து வாழ. (46)

வாழ்வு பெற்றிடக் காயகற்பநல் லுப்பு சஞ்சீவி —உயிர்
வாமபூஷண தானமுற்றணி வர்கள் மெய்மேவி
சூழ்ப லனுயர் சுத்தசைதன்னிய சுன்னநிறைதாவி —உப்பின்
சூட்சமம் கண்டதில் கரிப்பூரல் நீங்கக் கழறுவேன்கூவி
ஆழ்மை யுற்றுநாம் உண்ணும்உப்பு அரைப்படியெடுத் தாவி
கண்டு
அமைத்து ஏனுச்சாறில் முக்காலும் கரைத்திறுத்தெடுத்
தாவி
தாழ்மை யற்றிட வடித்த சாறுப்பைச் சட்டியிலிட்டேவி
நிறை
அடுப்பி லேற்றியே சுண்டக் காய்ச்சிடு உகந்துயிர்சீவி.

உகந்திடவரும் உப்பினை இரண்டு சாமம் மெய்யாக அன்புடனே
ஏனுச்சாறுவிட் டியல்புற வறுத்தெடுத்துப்பாம் தென்பாக
எடுத்து
அகமல் வருமஞ்சுசீனம் வெடிபாக ஐந்துதுய்வாக
அதனைச்சட்டியிட்டு அடுப்பில்வைத்து நீஉருக்கிடுவாய்
தகமைபெற்றிட இரண்டுசாமமும் ஏனுச்சாற்றுலும் உய்வாகி
மடியதாகிச் சீனமும் வெடியுப்பை வறுத்தெடுப்பாய்
மெய்யாக
பகைமை ஏகிட வகைக்கிருபலம் சேர்த்துச்சையோகக்துணம்
பதிந்திடஏனச் சாற்றினுல் முத்தினமும் அரைப்பாய்
பொய்போக.

(வகைக்கிருபலம் என்பது வறுத்தெடுத்தஉபபு பலம்இரண்டு. சீனமும் வெடியுப்பும் சேர்த்து வறுத்ததுபலம்2.)

பொய்யற வில்லைதட்டிக் காய்ந்தபின் சில்லுள்தாக்கி
ஐந்துசீலைமண் செய்து மூவெட்டுப்பலம் எருதன்னில்
தூக்கியே
மெய்யாய்ப்புடம்போட இவ்வாறைந்து புடம்போட்டு
நோக்கியபின்பு
மேவிட நீற்றுச்சாற்றல் முத்தினமும் அரைப்பாய்
தேக்கியே
உயவெனவில்லைரவி யுலர்த்தி நற்புடமூன் ருக்கியே —இட்டு
உகந்துமுத்தாரந் தன்னிலோதிய செயநீர் தாக்கியே
செயமுற்றிட அரைத்து வில்லைசெய் காய்ந்து நீக்கியே
இவ்வாறு
அறிந்திடப்புட மிட்டெடுத்திடு வினைகள் போக்கியே.

கள்ளமற்றிட வுப்பூறலற்றுச் செந்தூரம் பூதியாதி
கனகநிறமுற் றேங்கும் இதுவே கற்பமெய் யாதி
சள்ளை திரவே ரசம்பலமரை கல்வத்துள் நீதி —விட்டுச்
சாரும் செந்தூரம் பலமிட்டரைக்க மடிந்திடும் சோதி
தெள்ளிதமுடன் மடிந்ததை வாரி அகலினுள் சோதி —வைத்து
செயநீர்விட்டுமே குழப்பிரவியில் காய்ந்திடும்போதி
உள்கையமுதம் உலர்ந்தபின் சீலைவலுக்கச்செய்து கியாதி
அதை
உகந்தீ ரைந்துபலத் தெருவிற்டபுமிட சோதி. (47)

சோதிமயம் செந்தூரம் அருணன் போலாம்
சொல்லுதற்கு எளிதல்ல வேகு மெத்த
நீதியுடன் வகாரபதி வாத தீட்சை
நிறைமணியும் லோகமதில் இடப்ப முக்கும்
பூதிகொண்டு செம்பினுட ஊறல் போகும்
பொன்மாற்றும் பதினாறும் திடமுற் றோங்கும்
வாதியுடன் வைத்தியரும் பிழைத்து மேவ
வழுத்திவைத்தேன் காயகற்பம் நிலையின் கேளாய். (48)

பின்னமற ரசமிட்ட செந்தூ ரத்தைப்
பேதங்க ளில்லாது குட்டம் மற்றும்
உன்னிவரும் நோய்களும் ஈயப் போகும்
ஓகோகோ இதன்பெருமை செப்பப் போகா
நன்னயமாய்க் காலைமாலை இருவே ளைதான்
நாடியே கோநெய்யில் மண்ட லங்கள்
கன்னலறப் பத்தியமாய் உண்டா யானால்
காசினியில் திரேகம்கற் றூண்போல் காந்தி. (49)

காந்தலுறும் அனல்மண்ணும் தின்னு தையா
கருணைபெரும் ஆனந்த வமுதம் பொங்கும்
சாந்தமுயர் யோகஞான சித்து தீர்க்கம்
பண்புடை சோதிநிலை வாசி தங்கும்
சாந்தமுயிர் வலுவுற்றுச் சடர்கள் நீங்கி
சாகரத்தில் பிரமன்விதி மாற்றி வாழ்வாய்
ஏந்துமுலை உமையா ளரன் உள்பற்றுற்று
எந்நாளும் காத்திடுவா ரியல்புள் ளாக. (50)

## புகையும் சரக்குகள் செந்தூரம்

ஆவதற்காய் இன்னமொரு செய்தி கேளாய்
அறைந்திடுவேன் ரசமிடாச் செந்தூ ரத்தை
மாய்ந்தோடும் சரக்குஅரைப்பலம் செந்தூரம் பலமொன்று
இட்டரைக்க மடிந்து நிற்கும்
தோய்ந்திடவே மடிந்ததூள் அகலிற் பாய்ச்சி
வைத்திடவே செயநீரிட்டுக் குழப்பிப் பின்னர்
காய்ந்திடவே ரதைாக்கிச் சீலை செய்து
கௌதாரிப் புடத்திலிடக் கட்டி நிற்கும்.

நீற்றினமாய்ச் சரக்கையெல்லாம் இவ்வா ருக
நிலைமைபெறப் புடமிட்டு எடுத்துக் கொண்டு
நாற்றிசையும் புகழ்ந்திடவே வைத்தி யந்தான்
நன்மைபெறச் செய்திடிலோ சித்தியாகும்
போற்றிடவே உப்பைவிட்டால் வழிவே றில்லை
புன்மலத்தி லாகும்உப்பை யறிந்தோன் சித்தன்
வேற்றுமைகள் இல்லாது முத்தா ரத்தில்
விளையமறச் சொல்லிவைத்தேன் இதுவே முப்பு. (51)

(கும்மியோசை)

முப்புமுடித்திட்ட பின்னும்ஒரு உப்புப்பேசிடுவேன்
அம்மை தாள்போற்றி
தப்பித மில்லாது தானுயிர் மேவிடத்
தங்கப் பறிநிறை வந்து கொள்ள
கொள்கை நிறையுடன் ஆடச்சி னச்சுண்ணம்
கூட்டும் வகைக்கொரு பலம தாகவே
கள்ளமா உப்புச் செந்தூரம் ஓர்பலம்
காணவே மூன்றையும் ஒன்ருகச் சேர்த்திடு.

சேர்த்துக் குழிக்கல்லில் தாக்கிய பின்னுங்கேள்
சிதரு வகைக்கரை வீரமும் பூரமும்
ஏத்திடக் கூட்டி யிருசாமம் தீர்க்கமாய்
இயம்பிட செய நீரைவிட்டு அரைத்திடு
எடுத்துவில்லை செய்து ரவி யுலர்த்தி
எகுராமல் சில்விட்டுச் சீலை வலுத்திட
தொடுத்துக் கௌதாரிப் புடமே மூன்று
போட்டெடுக்கச் சுண்ணம் அதி வேகம்.
வேகத்தி ளுலிந்தச் சுன்ன மதுதன்ளுல்
வித்தை பலகோடி செம்பு களிம்பறும்
பாகமுடன் வாத வித்தை பலித மெய்தப்
பாதக நோய்களும் எழுகடல் தாண்டிடும். (52)

## வெள்ளிய நாக வறுப்பு

தாண்டி விழாதுயர் நாகமும் வங்கமும்
தாக்கி உருக்கிட மடிந்து பலன்தரும்
மீண்டும் நிலைபெற மேவிடு முப்பினை
மேவிய மண்டலம் உண்டிடச் சித்தியே

சித்திபெற ஆவின் நெய்யில்அரி சியெடை
சிதருமல் காலையும் மாலையும் கொண்டிடு
விற்கமாய் நரை திரை மாறிடும்
மேவும் ஸ்திரிபோகம் புளியும் நீக்கிட
நீங்கிடா தாவி நிலைத்திடும் பார்புவி
நிச்சயம் சித்தர்கள் தொல்புவி மேவிய
ஓங்கும் பரிபாஷை ஓதினர் உசிதமாம்
உரைத்திட்டேன் தெளிவுற முப்புச்சுண்ணம் தீர்க்கமே. (53)

## தாம்பரச் சுன்னம்

தீர்க்கமாய்ச் செம்பொரு காசியில் சுன்னத்தை
விஷ்ணுக் கரந்தையின் சாறதால் குழப்பியே
நேர்கொளப் பூசிக்கௌ தாரிப் புடமிட
நிலைபெறுந் தாமிர பற்பமதி வேகமே
வேகமுயர் குட்டங் குறைநோய்க் கரிசியெடை
நெய்யிட்டுச் சலந்தனில் நிறுத்தியிடு
பாகமுற்றுக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்திடப்
பான்மையாம் மாரோகம் நீங்கியே வாழ்குவார். (54)

53-உரை

செம்பினைத் தூய்மைசெய்து, மேற்கூறிய முப்புச் சுண்ணத்தை, ஒருகாசெடை செம்பின்மேல் விஷ்ணுக்கரந்தைச் சாற்றுலரைத்துப் பூசிக் கௌதாரிப்புடமிடத் தாமிரப்பற்பம் மிக்க வேகமுடையதாகும். ஒருஅரிசி எடை பற்பத்தைநெய்யிற் கலந்து கொடுத்து நோயாளியைத் தண்ணீரில் நிறுத்தி வைக்கக் குட்டம் குறைநோய் நீங்கும். கஞ்சியைப் பாகமாகக் காய்ச்சிப் பத்தியமாக உணவு கொடுக்க. பெருநோய் நீங்கி வாழ்குவார்.

## துரிசுச் சுண்ணம்

வாழ்ந்திடவே துருசுச் சுண்ணம் பகருவேன்
வாதையுறப் புவிமீதில் உயர்ந்தருள்
தாழ்மையில் மேஷச் சிறுநீர் படிஇரண்டில்
தாக்கித்தோளேந்திரம் துருசு பலமொன்று

ஒன்றெனத் தாக்கிநேர் சுண்ட எரித்திட
உறுதியாய்க்கட்டி மலினம தற்றிடும்
நன்னுதல் துருசுபலம் ஒன்றிதற் கோர்பலம்
நாட்டிமுப் புச்சுண்ணம் கூட்டி நிகழ்த்துவாய்.

நிகழ்த்திடுவாய்பின் இருசாமம் செயநீர்விட் டாட்டியே
நிலையுற்ற வில்லைதட்டி ரவியில்வைத் தேந்தி
மகிழ்வுறச் சில்லிட்டு வலுசீலை செய்துமே
மங்காது கௌதாரிப் புடத்திட நீர்த்திடும்
நீர்த்திட்ட சுன்னத்தை நீள்பதி யோங்கிட
செம்பிலிடக் களிம் பற்றுப் பருதிபோல்
ஏர்ந்திட லாகுமே இடர்வலி பலபிணி
ஏதுமில்லைவாத வித்தையு மிதற்குளே.

உள்ளாய் இருந்திடச் சுண்ணத்தால் பலவித
வித்தைகள் மெத்தப் பலித மாகிடும்
கள்ளமில்லாப்பல பிணிவாதம் நீங்கியே
காசினியோர் கண்டு பிழைத்துத் தழைத்திட
தழைத்திடச் சித்தர்கள் பலநூல்கள்
பான்மையாய்ப் பாடினர் பலனுற மறைத்து
கந்தாற்றலாய்ப் பிழையற முத்தாரந் தன்னில்
பேசினேன் பேணுமென் முறைப்படி பலஞ்சித்தியே. (55)

உரை:-

ஒருபானையில் வெள்ளாட்டுச் சிறுநீர் இரண்டுபடி ஊற்றி அப்பானையின் வாய்வளையத்தின் இருபக்கமும் துளையிட்டுக்குச்சி செருகிக் குச்சியில் நூல்கட்டி அந்தநூலின்முனையில் ஒரு பலத்துருசுக்கட்டியை வைத்துக் கட்டிப்பானைக்குள் தொங்க விட்டு மேலேசட்டிமூடியடுப்பேற்றித் தீ யெரித்தல் வேண்டும். (இதனைத் துலைகட்டி எரித்தல் என்பர் திருமூலர். இதுவேதுலை எந்திரமாகித் தோளாந்திரமாகித் தோலாந்திரமாகவும் மருவிற்று.) நீர்சுண்ட எரித்திடத்துருசு உறுதியாய்க்கட்டி மலின மற்று விளங்கும். இந்தத்துரிசு ஒருபலம் முன்கூறிய முப்புச் சுண்ணம் ஒருபலம் இரண்டனையும் கூட்டி முன்சொன்ன செய நீர்விட்டு ஆட்டி வி.த.கா. சீ.ம.செ. கௌதாரிப்புடமிட நீறி விடும். நீறியசுண்ணத்தைச் செம்பிலிடக் களிம்பற்றுப் பருதி

போல் ஒளிறும். இடர்வலி, பலபிணி இல்லை. வாதவித்தையும் இதனுலாகும். (துருசினைத் தூயதாக்காமலும் முப்புச்சுண்ணம் சேராமலும் செயநீர்விட்டரையாமலும் வேறுவகையிற் செய்வன சிறந்தன வல்ல.) சித்தர் மறைத்தார் காசினியோர் கண்டு பிழைக்க முத்தாரத்தில் கூறினேன்.

## மேக சஞ்சீவி மெழுகு

(நொண்டிச்சிந்து)

மேகமொடு பிணிபலவும் இந்த மேதினியில்
குட்டம் குறை நோய்களெல்லாம்
சோகமறத் தீருதற்காய் மேக சஞ்சிவி
மெழுகொன்று ஓதிடுவேன் தீதுகள் நீங்க
பாகமொடு சித்திரமூலம் பரங்கிப் பட்டை
அமுகக்கரா சிவதையொடு ஆடாதோடை
தாகமுயர் நன்னரி நிலவேம்பு மலைவேம்பு
முத்தக்காசு கண்டங்கத்தரி
யோகமிடும் பூவரசு நிலப்பனை சிந்திற்கொடி
சிறுகாஞ்சொறி பேராமுட்டி
சாகசநேர் சூரத்தாவரை சிறுதேக்கு
கலப்பைசித் தாமுட்டி பெருமருந்து
பூகபூமிச் சர்க்கரைமாஞ்சில் கருவாப்பட்டை
சிவவேம்பு பொற்ப டாகம் செங்கத்தாரியோ
டாக வெத்தி சேங்கொட்டை சிறுநாகப்பூ
தான்றிசுக்கு திப்பிலி கருஞ்சீரகம் ஓமம்
ஓமமுடன் கிராம்புமிளகு சீரகம்
முள்ளிவித்து ரோசாமொக்கு தாளிச பத்திரி
வேகமதி கண்டந்திப்பிலி பிஞ்சுக் கடுக்காய்
பூவரச வித்துடன் கார் போகவரிசி
வாகமுறு யானைத் திப்பிலி குரோ சானியோமம்
வகைக்கொரு பலமெல்லாம் சமனெடையாய்
சேகரமும் செய்துலர்த்தித் - தூளதாய்
இடித்துக்கூட் டித்தரைக்குஞ் சரக்கெல்லாம் - கேளே
ரோகமறக் கெந்திமூவாறு - பலமுடன்
சூதம்பலம் பதினேழு சேர்த்தரைத்துமே

ஆகவடித் தூருடன்ஒன்ருய் - கலந்துமே
அறிந்திடவே நிதானங்கண் டெடுத்துப் பின்னர்
எடுத்துக்குழி யம்மியில் மின்னும் - சேரும் கலப்பைப்
போட்டண்டத் தைலம்விட்டு - அரைத்ததன்மேல்
கொடுத்தரைத் தூள்கள்தூவிக் கொஞ்சங் கொஞ்சமாய் - முட்டைத்
தைலத்தை மெழுகாய் ஆட்டே
ஆட்டிடவே கைபாகமாய் அரைத்திடித்து — மாரோக
மாயுள்ள மேகம்இரு பத்தொன்றுக்கும்
கூட்டி இருசுண்டைக்காய் வீதம் — மண்டலமொன்
றுண்டுவர நோய்களறும் பாங்குபெறவே
பாங்குடனே புளியகற்றிப் புலால் போகம் — ஆகாது
நெய்யில் தயிருங்கூட்டி
தேங்கமழச் சொல்லருள் — பெருகச் சஞ்சீவிமெழுகு
கோதிவைத்தேன் அம்புவியில் சங்கையறவே
சங்கரி யின்னருளால் சஞ்சலம்தீர
சார்ந்து சூட்சம் கண்டுசெய்தால் இப்புவியில்
பாங்கமறச் செயக்கொடியும் — கட்டியே திறம்
பாவலனுய் அறைந்திடலாம் சங்கர சம்போ. (56)

56-உரை

கொடிவேலிவேர், பரங்கிப்பட்டை, அமுக்கராக்கிழங்கு, சிவதை, ஆடாதோடை, நன்னறி, நிலவேம்பு, மலைவேம்பு, கோரைக்கிழங்கு, கண்டங்கத்தரி, பூவரசு, நிலப்பனை, சீந்திற் கொடி, சிறுகாஞ்சொறி, பேராமுட்டி, சூரத்தாவரை, சிறுதேக்கு, கலப்பைக்கிழங்கு, சித்தாமுட்டி, பெருமருந்து(கருடக்கொடி), பூமிச்சர்க்கரைக்கிழங்கு, சடாமாஞ்சில், கருவாப்பட்டை, சிவ வேம்பு, பற்படகம், செங்கத்தாரி, சேங்கொட்டை, சிறுநாகப்பூ, தான்றி, சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், கிராம்பு, மிளகு, சீரகம், முள்ளிவித்து, ரோசாமொட்டு, தாளிசப்பத்திரி, கண்டந்திப்பிலி, கடுக்காய்ப்பிஞ்சு, பூவரசவித்து, கார்போக அரிசி, யானைத்திப்பிலி, குரோசனியோமம் ஆகிய நாற்பத்தைந்தும் வகைக்கொருபல மெல்லாம் சமனெடையாய்ச் சேகரஞ் செய்துலர்த்தித் தூளாய் இடித்துக் கூட்டி மேலும் சேர்த்து அரைக்கும் சரக்கைக் கேட்பாயாக. கந்தகம் பதினெட்டுப்பலம், இரசம் பதினேழுபலம் சேர்த்து அரைத்துக்

கலந்து எடுத்து மற்றக்கலப்பு மருந்துத்தூள் எல்லாம் சேர்த்து முட்டைத் தைலம்விட்டு அரைத்தல் வேண்டும். பாகமானவுடன் இருசுண்டைக்காயளவு ஒருமண்டலம் உண்ண நோய்கள் நீங்கும். புளி புலால் போகம் நீக்குக. நெய், தயிர் ஆகும். துன்பம் தீரும் வெற்றிக் கொடி கட்டலாம்.

## நாகச்சுன்ன பற்பம்

சங்கையறச் செப்பிடுவேன் நாகச் சுன்னம்
நயமுடனே பற்பமது நவிவ தின்றி
மங்கலமாய் நாகமதைச் சட்டி யிட்டு
மகிழ்வுடனே யடுப்பேற்றித் துருத்தி கொண்டு
பங்கமற ஊதிடவும் உருகும் மேலாய்ப்
பான்மையுறப் புளியிலையைப் போட்டுப் போட்டுத்
தங்காமல் வறுத்தெடுக்க நாகந் தானும்
தண்மையுடன் மடிந்துமணி யில்லா தாமே. (57)

ஆகியநற் றூளதனைக் குழிக்கல் விட்டு
அன்புபெறத் திருநீற்றுச் சாறு தன்னால்
மோகிதமாய் இரண்டுதினம் அரைத்து வில்லை
முறைமையுடன் தட்டிரவி யுலர்த்தி யேற்றுப்
பாகிதநேர் சில்விட்டுச் சீலை செய்து
பக்குவமாம் சேவற்புடம் ஐந்து நேராய்
(பலம்இரு பதில்எரு)
பூகித்துப் போட்டெடுக்கக் கொடிய சுன்னம்
உகந்திடவே வேதைக்குப் பசும்பொன் மாத்தே. (58)

மாத்துரிய இருபத்தோர் மேகத் திற்கே
மண்டலந்தான் நெய்யிலுண்ண ரோகம் போகும்
ஏற்றிடவே வறுத்தெடுத்த நாகத் தூளை
இயல்புடைய குமரிமடல் அன்னம் போட்டு
நேர்த்திநிறை ஐந்துசாமம் அரைத்துள் ளாக்கி
நிலைமையுற வில்லைதட்டிக் காயப் போட்டுப்
பூத்திடவே பத்தெருவில் புடமும் ஒன்று
போட்டெடுக்கப் புகழ்பெரிய பற்பம் நன்றே. (58.அ)

நன்றறியப் பௌந்திரமாம் மூலம் மற்றும்
　　நயமில்லாச் சூடுகாங்கை வெட்டை ஏகக்
குன்றுது நெய்யிலேந்தேழ் ஒன்பதுநாள் உண்ணக்
　　குணமுடனே காலைமாலை புளியை நீக்கி
வென்றிடவே உண்டுவர விநயம் நீங்கும்
　　விகற்பமற இரத்தமுற்ற மூலந் தானும்
அன்புடனே நின்றுவிடும் அனல் தாங்கும்
　　அறிந்திடவே ரசமணியும் பற்பம் சொல்வேன். (59)

## 57,58,58அ,59-உரை

நாகச் சுண்ணமும் பற்பமும் நயமாகக் கூறுவேன் கேட்பீராக. நாகத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றித் துருத்தியால் ஊதுக. உருகிநிற்கும் செவ்வி பார்த்துப் புளிய இலையைச் சிறிது சிறிதாகப் போட்டுப் போட்டு வறுத்தெடுக்க நாகம் மடிந்து மணிமணியாய் உள்ள கட்டிகள் மறைந்து விடும். தூளாகும். தூளைஎடுத்துக்குழிக்கல்லில் இட்டுத் திருநீற்றுச் சாற்றால் இரண்டுநாள் அரைத்து வில்லை தட்டி வெயிலில் உலர்த்திச் சில்லிட்டுச் சீலைசெய்து சேவற்புடம் ஐந்து (இருபது பலஎருவில்) போடக் கொடிய சுண்ணம். வேதைக்குப் பசும்பொன் மாற்று. 40 நாள் நெய்யிலுண்ண 21 மேகம் போகும்.

வறுத்தெடுத்த நாகத்தூளைச் சோற்றுக் கற்றாழைச் சோறு போட்டு 5சாமம் அரைத்து வி.த.கா. சீ.ம.செ. பத்தெருவிற் புடமிடப் பற்பமாகும். மூலம், பௌந்திரம், சூடு, காங்கை, வெட்டை நீங்க 5,7,9,நாள் உண்க. புளிநீக்குக. இரத்த மூலமும் நீங்கும்.

## இரசமணியும் பற்பமும்

சொல்லிடுவேன் ரசத்தையோர் பலத்தைச் செப்பு
　　நெருஞ்சிச்சாறு விட்டுச்சூழ் கல்வி லாட்டத்
தொல்லையற மடிந்துவிடும் அதையொரு படி
　　துவரவே காய்ந்தெடுத்து நெருஞ்சி தன்னை
நல்குவாய் எலுமிச்சம் காயின் வீதம்
　　நாடியே அரைத்தெடுத்து விழுது உள்ளாய்
மெல்லவே ரசம்மடிந்த உருண்டை தாக்கி
　　மேலிடவே சில்லில்வைத்துச் சிறப்புள்ள தாக. (60)

உள்ளதிகச் சீலைமண் ஐந்து செய்து
உகந்திடவே ரவியிட்டு உலர்ந்த பின்னர்
கள்ளமின்றிப் பத்தெருவில் குக்கு டத்தில்
களங்கமறப் புடமிடவே பற்ப மாகும்
வள்ளலுமை தாயருளின் கிருபை தன்னல்
வயங்கிடவே ரசபற்பம் அரிசியெடை தான்
தெள்ளிதமாய்ப் புளியகற்றி மண்ட லந்தான்
நெய்யிலுண்ண இருபத்தோர் மேகம்தீரும்.

தீருதற்காய்ப் பின்னுங்கேள் முன்னும் மேலே
தீரமுடன் ரசம்அரைத்துக் கவசம் போலாய்
வீருடனே செய்துலர்த்தி விகற்பம் தீர
விளக்கமுடன் மூன்றெருவில் புடமிட் டேந்தச்
சீருரிய மணியாகிப் படி நிற்கும்
சிறப்புடனே மணியில்ரசம் இடவே வாங்கும்
பேருரிய மணியைவாயில் இடவே வானில்
பிரளாது விந்திறுகும் திரேகம் காந்தி. (61)

60, 61 — **உரை.**

ஒரு பலம் இரசத்தைக் குழிக்கல்லில் விட்டுச் செப்பு நெருஞ்சிச் சாறு விட்டு அரைக்க மடிந்து விடும். அது நன்ருய்த் துவரக் காய்ந்த பின் எடுத்து, நெருஞ்சி இலையை அரைத்து எலுமிச்சங்காயளவு உருட்டி எடுத்து அந்த விழுதின் உள்ளே மடிந்த ரச உருண்டையை வைத்துச் சில்லில் வைத்துச் சீலைமண் 5செய்து காய வைத்து உலர்ந்த பின்னர் பத்தெருவில் கோழிப் புடமிடப் பற்பமாகும். நெய்யில் அரிசி எடை உண்ண (ஒரு மண்டலம்) இருபத்தோர் மேகமும் நீங்கும். முன் போல் அரைத்த ரசத்தைக் கவசமிட்டு மூன்று எருவிற் புடமிட மணியாகி நிற்கும். அந்த மணியில் இரசமிட வாங்கும். வாயிலிட விந்திறுகும். உடல் ஒளி பெறும்.

## அரிதாரக் கட்டும் சுண்ணம்.

காந்திபெற அரிதாரக் கட்டி யொன்று
கழறிடுவேன் காசினியோர் பிழைத்து வாழ
சாந்தமுற அரிதாரம் பலமும் இரண்டு
சார்புடனே கல்வமிட்டுச் சாரு யத்தால்

பாந்தமுற அரைத்தெடுத்து வழிக்கும் போதில்
பண்புடனே நல்வேளைச் சாறுதாக்கிக்
காந்தலற ஆட்டிமெழு காம்ப தத்தில்
கருதிவில்லை தட்டிரவி உலர்த்திப் பண்பாய் (62)

பண்புடனே நாயுருவிச் சாம்பல் கேளாய்
படியொன்று எடுத்ததனில் அரைப்ப டிதான்
தண்டிடவே முடாவிட்டு அமுக்கி ஐயா
கனமான அரிதார வில்லை வைத்து
அண்டியரைப் படிசாம்பல் மேலுங் கூட்டி
அமுக்கியே கலசவாய்ச் சில்லிட்டு
மிண்டியறச் சீலைமண் ஏழு செய்து
இரண்டுசாமம் ஆவரையின் விறகு தன்னுல். (63)

தன்மையுடன் எரித்தெடுக்கக் கட்டிப் போகும்
தானதனை நுணுக்கிச்செம்பில் பத்துக் கொன்று
பின்னமற யீந்துருக்க மாற்றுக் காணும்
பேசிடவே கட்டியதோர் அரிதா ரத்தை
நன்னயமாய் நீற்றுச்சாறு விட்டு நான்கு
சாமமது ஆட்டிவில்லை ரவியு லர்த்தி
கன்னலற மண்மறைவில் புடமும் ரெண்டு
கருதியே போட்டெடுத்துப் பின்னுங் கேளே. (64)

கேள்மகனே வில்லைதனைக் குழிக்கல் லிட்டுக்
கிருபையுடன் முத்தாரந் தனில்யான் சொன்ன
தாழ்மையில்லாச் செயநீரால் சாமம் நான்கு
தவருமல் அரைத்துவில்லை ரவியு லர்த்தி
வாழ்வுபெறச் சில்விட்டுச் சீலை யைந்து
வலுவாகப் பதினெட்டுப் பலத்தெருவில்
சூழ்ந்திடவே இவ்வாருய்ப் புடமும் நான்கு
சுகமுடனே போட்டெடுக்கச் சுன்னமாகும் (65)

சுன்னமதை யரிசியெடை நெய்ய தனில்
அருணமுடன் ஐந்தேழு ஒன்பது நாள்
கன்னலற அட்டகாசம் மேகம் மற்றும்
கருதிவரும் குன்மமதில் மற்றநோய்க்கும்

பின்னமறப் புளிபோகம் புலால கற்றிப்
பேதமிலா துண்டிடவே நோய்கள் தீரும்
வன்னமுயர் இம்முறையால் கோடி வித்தை
வாகடமும் வைத்தியமும் பலிதம் மெத்த. (66)

## 62 முதல் 66 முடிய உரை.

இரண்டு பலம் சுத்திசெய்த அரிதாரத்தைக் கல்வத்தி லிட்டுச் சாருயம் ஊற்றி நன்ருய் அரைத்து வழிக்கும் போதில் நல்ல வேளைச் சாறு விட்டு ஆட்டி மெழுகு ஆகின்ற செவ்வியில் வி. த. கா. ஒரு முடாவினுள் அரைப்படி நாயுருவிச் சாம்பலிட்டு அமுக்கி அதன் மேல் அரிதார வில்லைகளை வைத்து அதன் மேலும் அரைப்படி சாம்பல் இட்டு அமுக்கி முடாவின் வாய்க்குச் சில் லிட்டு ம. சீ. 7. செ. காய்ந்த பின்பு அடுப்பேற்றி ஆவரை விறகினல் இரண்டு சாமம் எரித்துப் பார்க்கக் கட்டிப் போகும். அதனை நுணுக்கிச் செம்பு உருக்குமுகத்தில் கொடுக்க மாற்றுக் காணும். இங்ஙனம் கட்டிய அரிதாரத்தைத் திருநீற்றுச் சாறு விட்டு நாலு சாமம் ஆட்டி வி. த. கா. மண் மறைவில் புடமிடுக. இங்ஙனம் இரண்டு புடம். மீண்டும் அவ்வில்லைகளைக் குழிக் கல்லில் இட்டு முத்தாரத்தில் யான் சொன்ன செயநீரால் அரைத்து வி. த. கா. சீ. ம. 5செ. 18 பல எருவில் புடமிடுக. இங்ஙனம் நான்கு புடமிடச் சுண்ணமாகும். அரிசி யெடை அளவு நெய்யிலுண்க. 5, 7, 9 நாள் உண்ண காசம்8, மேகம், குன்மம் நீங்கும். புளி போகம் புலால் நீக்குக. இதனல் பல வித்தைகள் பலிதமாகும்.

## அமிர்த சஞ்சீவிக் குழம்பு

மெத்த அமிர்தசஞ் சீவிக் குழம்பொன்று காணே
மேதினி யிற்பல பிணிகள்நீங் கிடச்சொல்வேனே
சித்தம் உயர்வீரம் பூரம்ரசலிங்கம் தானே
சிறந்தகெந்திவெடி யுஞ்சாரம் சிலைதாரம் கேளே
சுத்தசங்குப் பாஷாணம் ரசசெந் தூரமென்றேனே
பெருங்காயம் ஓமம் சணல்விரை குரோசானி
நல்நத்திடும் வாய்விளங்கம் கலப்பை வேர்வித்து பூணே
அரிசித் திப்பிலி மகிழம்வித்துசித்திரமூலம் ஊணே.

ஊனேமுதல் பூவரசின் வித்தோடெல்லாம் மிண்டு
ஓங்குயர் சரக்குகளையும் இரண்டுபத் திரண்டு
போனகமாய் வகைக்கொரு விராகனெடை கொண்டு
புகழ்சரக்கின்படி வாளம் சுத்திசேர்க்க
தானமுடன் வேர்கள்வித்தை ரவியுலர்த்திக் கொண்டு
தவருமலே யிடித்துவடி கட்டித்துணை மிண்டு
ஈனமற வுயர்சரக்கை ஆட்டுநீருள் விண்டு
தோளாந்திர மிட்டெரித்துச் சுத்திசெய்து நேர்கண்டு.

கண்டுரிய வாளந்தனக் கொருபாதி கொள்நேராய்
கனத்த கோழிமுட்டை மஞ்சட் கருவாதேற்பாய்
சிரும்வென்றிடவே யுயிர்ச்சரக் கிரண்டு சாமம்
பாராய்விளையமற அரைத்திட்டுப் பின்னிரண்டுதினம் தீராய்
அண்டிடநேர் அண்டமஞ்சள் கருவதிட்டுப் பூராய்
அரைத்தெடுத்துச் சிமிழில் வைத்து அடக்கஞ்செய்து காராய்.

கார்ப்பதற்காய் முட்டைமஞ்சள் கருவும்பச்சை யாச்சே
களதுரிய சித்தர்இதை மறைத்துவைத்தார் பேச்சே
நேர்பெரிய அகத்தியர்சொல் பச்சைஇது வாச்சே
நிலைமையுடன் பரிபாஷையாய் விரைத்துவைத்தார் பூச்சே
ஆர்கவிதீர் குழம்புமெழுகில் அண்டமிட்டுப் பாய்ச்சே
அரியபச்சை முட்டைக்கரு தெரியசந்தேகம் போச்சே
பார்பதினெட்டு மக்கள்சொன்ன நுட்பமதறியாத தேச்சே
பலவிதமாய் எண்ணங்கொண்டு பாரோர் திரியலாச்சே.

ஆட்சியுடன் நானுரைத்த குழம்பையரைத் தெடுத்து
அம்பிகையாம் தேவிதாயின் பூசைதனைத் தெரிந்து
தாழ்ச்சியுற ஓம் ஸ்ரீம், ஹரிம் எனத்திரிநாள் செபிக்கத்
தட்டலின்றிக் குன்றியெடை அனுப்பானத்தி லெடுத்து
சாட்சியுடன் ஓதிவைத்தேன் கனமுறவே யடுத்து-நவ
தசாமிர்த மெழுகனுப்பானம் போலறியக் கொடுத்து
மீட்சியுடன் மேதினியில் நோய்தனக்கிட் டெடுத்து
மேன்மைபெறச் சஞ்சலங்கள் தீரச்சொல்வேன் மருந்து.

சொல்பலவாம் எட்டுப்பத்து நால்வாதமும் பேதம் —நீங்கும்
இருபத்தோர் மேகம்பாண்டு சோகைவிரை வாதம்
புல்லிவரும் கிரந்திசூலை அட்டகுன்ம சூதம்
பெருமலடி காந்தல்சுரம் பிசாசு மூர்ச்சைஓதம்
அல்லல்செய்யும் அட்டநாக சில்விடத்தின் குரோதம்
நாலாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டுநோய் பேதம்
தொல்லையறத் தீர்ந்தவனி தன்னிலேதன் னீதம்
ஓதிடுவேன் வகாரவித்தை சூட்சமறநற் போதம். (67)

67-உரை

வீரம் பூரம் இரசம் இலிங்கம் கெந்தி வெடியுப்பு சாரம் மனேசிலை தாரம் சங்குப்பாடாணம் ரசசெந்தூரம் பெருங்காயம் ஓமம் சணல்விரை குரோசானியோமம் வாய்விளங்கம் கலப்பை வேர் கலப்பைவித்து (கலப்பைக்கிழங்கும் அதன்விதையும். கலப்பைக்கிழங்கு உண்டாவது காந்தளில் என்பது காண்க. காந்தட்பூவைக் கண்வலிப்பூ என்று இப்போது வழங்குகின்றனர்.) அரிசித்திப்பிலி மகிழம்வித்து சித்திரமூலம் பூவரசின்வித்துத் தோடு ஆகிய இருபத்திரண்டு பொருட்களையும் வகைக்கு ஒரு விராகனெடை எடுத்துக் கொள்க. இந்த அளவுக்கு நேர்வாளம் சுத்திசெய்து எடுத்துக்கொள்க. வேர்வித்து ஆகியவற்றைக் காய வைத்து இடித்துத் தூள்செய்து கொள்க. உயிர்ப்பொருளான வீரம் பூரம் முதலியவற்றை ஆட்டுநீருள் தோளாந்திரம் கட்டித் தொங்கவிட்டு எரித்துத்தூயனவாக்குக. இவைகளை அரைப்பதற்கு வேண்டிய அளவு முட்டையின் மஞ்சட்கருவை எடுத்துக் கொள்க. உயிர்ப்பொருளைக் கல்வத்திலிட்டு மஞ்சட்கருவால் இரண்டுசாமம் அரைக்க. பின்பு மற்றமருந்து எல்லாம் சேர்த்து இரண்டுநாள் நன்றாய் மெழுகுத்தன்மை வரும்வரை யரைத்துச் சிமிழில் அடக்கம் செய்க.

முட்டை மஞ்சட்கருவுக்குப் பச்சை என்பது பெயர். கள்ளத் துரிய நிலையடைந்த சித்தர் இதனைமறைத்து வைத்தனர். பெரிய அகத்தியர் (அகத்தியர் குழம்பில்) சொல்லிய பச்சை என்பதுவும் இதுவே தான். குழூஉக் குறியாகக் கூறிப் பூசி விதைத்து வைத்தனர். கலிதீர்க்கும் குழம்பு மெழுகு இவற்றில் முட்டை மஞ்சட்கருச் சேர்ப்பாயாக. இதனல் ஐயம் நீங்கிப் போயிற்று. இதனையறியாமல் உலகோர் பலவகை எண்ணங்கொண்டு திரிய

லாச்சு. இறைவியை வணங்கிக் கவியிற் கூறிய மந்திரத்தை மூன்றுநாள் ஓதி நவதசாமிர்த மெழுகுக்குக் கூறிய அனுப்பானத்தில் குன்றிபெடை வழங்குக. (நோயின் வன்மை, உடல்வன்மை வயது, காலத்தின் வெட்பதட்பநிலை இவையறிந்தும் ஆராய்வுடன் வழங்குக) வாதம் எண்பத்துநாலு, மேகம் இருபத்தொன்று, பாண்டு, சோகை, விரைவாதம், கிரந்தி, சூலை, அட்டகுன்மம், மலடு, காந்தல், காய்ச்சல், பிசாசு, மூர்ச்சை, ஓதம், எட்டு வகை நாகத்தின் நஞ்சு இவை முதலாக நாலாயிரத்துநானூற்று நாற்பத்தெட்டு நோய்வகையும் நீங்கும். தொல்லை இல்லை என்றுரையே. இனி வகாரவித்தை கூறுவேன்.

## செம்பு சுத்தி

நற்றுறையாம் குழம்பெடுத்துச் செம்புக் காசிற்பூசி
நாட்டிமுட்டை மஞ்சட்கருவுள் துட்டுவைத்து நேசி
பற்றுதலாய் அதனைச்சில்லில் தாக்கிநிறை பாய்ச்சி
பருவமாய்ச்சீலை மண்ணைந்து செய்துலர்த்தி மூசி
குற்றளட் டெருவில்புடம் இட்டதேசி
செம்பினூறல் அற்றுமாத்து நிறைபெருங் காட்சி
பொற்றனமும் பூதனமும் பெருகியோங்கும் வாசி
பூதலத்தில் செயக்கொடிபோட் டாள்வாயோ கைவீசி.

கையடக்கம் செய்திடுவாய் மெழுகைவைத்துக் கொண்டு
கருதியேநீ பண்டிதங்கள் செய்யப் பெருமையுண்டு
ஐயமின்றி மூன்றேழு ஒன்பதுநாள் கண்டு
அரியமெழு கீயப்பேதி மிகுதியானல் பண்டு
துய்யமோர் அன்னமுண்ண நின்றிடும்பார் விண்டு
துயரமறும் பலதோஷம் நீங்கிவிடுந் தொண்டு
மெய்மையும்இம் மெழுகுகளால் சரக்குகட்டும் நின்று
உமையாளினைத் தான்தினமும் போற்றிச் சொன்னேன் நன்று.

## சகல நோய்களுக்கும் எண்ணெய்.

திங்களரன் கங்கைமதி சூழ்பதி தினகரன்
திகழ்பதி தேவியுமை இருநாள் போற்றி
சங்கையற எண்பத்து நால்வாதமும்—சூலை
பதினெட்டுந் தீரஎண்ணெய் சாற்று வேனிங்கு

இங்கிதப்பெண் கோழியறுத்துக் குடல் மயிர்
நீக்கித்தலை சுக்கும்பெருங் காயமும் பூண்டு
பங்கமிலாப் பரங்கிப்பட்டை — வகைக்கொரு
பலமாகக் கோழியுடன் சேர்த்திடித்தே

இடித்ததெல்லாம் பாண்டத்தில் வாரிப் — போட்டுடனே
சுத்தசலம் பத்துப்படி யளந்து ஊற்றி
சிறுதீயாய் அடுப்பிலேற்றிக் கிருபையுடன்
சுண்டவைத்தே முக்காற்படி பிசைந்திறுத்தே
இருந்திடவே கியாழந்தனக்குச் சரக்கெண்ணெய்
இயம்புவேன் அகநலம் பெற்றுமே வாழ
தருகிநிம்பத் தெண்ணெய் நல்லெண்ணெய் -- முத்தெண்ணெய்
கடுகெண்ணெய் புன்குபுன்னை இலுப்பை எண்ணெய்.

எண்ணெய் யெல்லாம் வகைக்கரைப்படி
சேர்த்துமுன் முக்காற்படி கியாழமுங் கூட்டி
தீரமுடன் வீரம்பூரம் வெங்காரம் —திகழ்
வகைக்கு அரைப்பலம் கல்வத் தாட்டி
ஆட்டியெண்ணெய் யுடன்கலந்து .அத்தோடு சேர்க்கக்
கருதும்வேர் வகைக்குக்கடை மருந்துரைப்பேன்
நாட்டுநல்வ சம்புமிளகு வெள்ளைப் பூண்டு
சதகுப்பை சுக்குஓமம் அரிசித்திப்பிலி.

அரியசித்திர மூலம்கிராம்பு வாய்விளங்கம்
கடுகு ரோகணி கருங்காக் கணத்தின்வேர்
தெரியவகைக் கரைபலமாய்ச் -செயநீர்விட்டுச்
சிதருமல் வேர்ச்சரக்கை யரைத்தெடுத்தே
எடுத்தெண்ணெய்க் கியாழத்திட்டுக் —குழப்பியே
மூன்றுநாள் ரவியுலர்த்தி அடுப்பேற்றி
கடுகுபத மாயெரித்தே —வடித் தெண்ணெய்யைக்
கருதியுள்ள அனுப்பானம் நிறையுஞ் சொல்வேன் (68)

உரை.

வாதம் 84 சூலை 18 நீங்க எண்ணெய் கூறுவேன். ஒரு பெட்டைக் கோழியை யறுத்துக் குடலும் மயிறும் நீக்கித் தலையும் சுக்கும் பெருங்காயமும் பூண்டும் பரங்கிப் பட்டையும் வகைக்

கொருபலமாகக் கோழியுடன் சேர்த்திடித்துப் பாணியில் வாரிப் போட்டுப் பத்துப்படி தண்ணீருற்றிச் சிறுதீயாய் எரித்து முக்காற் படியாக வற்றியவுடன் பிசைந்து இறுத்து எடுத்துக் கொள்க. அதனுடன் வேம்பு, எள், ஆமணக்கு, கடுகு, புன்கு, புன்னை, இலுப் பை ஆகிய ஏழுவகை எண்ணெய்யும் வகைக்கு அரைப்படி சேர்க்க எல்லாம் நாலரைப்படியாகும். அதனுள் வீரம் பூரம் வெங்காரம் வகைக்கு அரைப்பலம் கல்வத்திலிட்டு அரைத்துக்கலந்துகொள்க. பின்னர் வசம்பும் மிளகும் வெள்ளைப் பூண்டும் சதகுப்பையும் சுக்கும் ஓமமும் அரிசித்திப்பிலியும் கொடிவேலிவேர்ப்பட்டையும் கிராம்பும் வாய்விளங்கமும் கடுகுரோகணியும் கருங்காக்கணத்தின் வேரும் வகைக்கு அரைப்பலம் செயநீர் விட்டு அரைத்து எண்ணெய்க் கியாழம் விட்டுக் குழப்பி அடுப்பேற்றி எரித்துக் கடுகுபதம் கண்டு வடித்து நோய்களுக்கு அனுப்பானத்தில் வழங்குக. எல்லா நோயும் நீங்கும்.

## முப்பூரம்

சங்கர சம்போ சதாசிவமே சிவசங்கரசம்போ சதாசிவமே.

சங்கை யறப்பர மானந்தமே —நாளும்
சத்துசித் தானந்த வேதாந்தமே
மங்கல மேவும் பரம்போதமே —உயிர்
மாதவ பூஷண நன்னீதமே
நீதமாய் முப்பூர பற்பமொன்று —நின்ற
நீள்புவி யோங்கிடச் சொல்வே னின்று
பேதக வாதகப் பிணிகளுண்டு —தீரப்
பேசுவேன் உண்மைச்ச ரக்குநன்று
நன்றுகல் லுப்பு வளையலுப்பு —நல்ல
சும்பி பாறை இந்து மூங்கிலுப்பு
வன்ன யவாச்சாரம் பொட்டிலுப்பு —மேவும்
சாரம்வெங் காரமும் பூநீறும் —செய்யச்
செப்பு சரக்கு பதினொன்றுக் கும்வகைக்
கொருபலம் தூக்கி நிறுத்துநிற்க
ஒப்பவே எல்லாம் நுணுக்கிப் புக்க
வேருய்வைத் துச்சிறு தோண்டிஇரண்டு
தோண்டிஇர ண்டுதாக்கி த்தக்கவே —தூள்செய்த
மருந்து அதனைப் பேர்பாதியும்

தோண்டியுள் வைத்து நன்னே
மிக்கவீரம் பூரம் ரசமுங் கண்ணே
மேவிக் கொள்வாய் அரைப்பலம் பின்னே
பின்னமில் உப்பிடத் தோண்டிக்குள்ளே
வீரம்பூரம் ரசம் தன்னைவைத்து மெள்ள
முன்னம்செய் தூளுப்புப் பாதிவிள்ளக் —கொட்டித்
தோண்டிமேல் தோண்டி கவிழ்த்துத்துள்ள
துள்ளாது சீலமண் ஏழும்செய்து
உதயத்தி லேயடுப் பேற்றி உய்து
தள்ளமா தூபமிட்டுப் பெய்து
கமலாக் கினியாய்த் தீயெரித்து —எய்து
எய்து அத்தமன மானதுற்று ஏற்கும்
தீயவித்துச்சூ டாரவிட்டு
மெய்யாய்த் தோண்டி தன்னையேந் தியுற்றுப் —பின்னும்
ஒருக்கினைவைத்து ஆறமுற்றும் முற்றுங் கவசம்பிரித்து —மேலே
உற்ற தோண்டியினுள்ளே பதங்கம் —சாலே
வெற்றிபெற ஏறிநிற்கும் கண்ணே —அதைச்
சுரண்டி யெடுத்ததின் பின்னுங்கேளே
அடுத்தபற்பம் தன்னை இன்பாகவே —கல்வ
மிட்டு அண்டவெள்ளைச்சாறு சாரவே
தொடுத்துச் சாமம் நெகிழ்த்துய் வாகவே —கொண்டு
வில்லைசெய் ரவிவை விஷம் போகவே
போகவே வில்லையும் வெண்கலம் போல்காய்ந்து
எடுத்துக் கொதிநீரி லிட்டதன்மேல்
பாகமுடன் அந்தவில்லையைச் சால —ரவி
தன்னிலுலர்த்தியே பின்னுமொருகால்
உலர்த்துவாய் நுணுக்கி மருந்தெடுத்துக் குப்பிக்
குள்ளே பற்பத்தை யடைத் தெடுத்து
அயர்வாதம் எண்பத்து நாலுக்கும்
கடுத்து இருஅரிசிஎடை சுக்குவிழுதுள்வைத்து
வைத்துமே இருவேளை காலை மாலை
ஐந்தேழு ஒன்பதுநாளுண்ணா வாலை
மெய்பதம் போற்றியருளும் வேலை —ஈன்ற
ஈசனடி ஏற்றுங்காலை காய்கை திமிர்த்து

தனுர்வாதம் போகும்பொல்லாக் கண்டமாலை
எட்டுக்குன்மம் போகும் அண்ட
சதுர்பேத அண்டசுரம் ஏகும்
கெட்ட நளிர்சுரம் சன்னிவிட்டு அருளாகும்
ஆகும்கடு கெண்ணெய்மஞ்சள் தள்ளு
ஆவின்பாலுடன் கத்தரி முருங்கை கொள்ளு
பாகுடனே எரித்ததோர் உப்பை அள்ளு —அதைப்
பதருமல் பார்த்துப் பாங்குடன்வைத்துக் கொள்ளு. (69)

69 - உரை.

முப்பூரபற்பம் கூறுவேன். கல்லுப்பு, வளையலுப்பு, கம்பியுப்பு, பாறையுப்பு, இந்துப்பு, மூங்கிலுப்பு, யவாச்சாரம், பொட்டிலுப்பு, சாரம், வெங்காரம், பூநீறு ஆகிய பதினொன்றும் வகைக்கு ஒரு பலம் நிறுத்து எடுத்துத்தூள் செய்து ஒரு சிறு தோண்டிக்குள் பாதித்தூள் இட்டு அதன் மேல் வீரம், பூரம், இரசம் வகைக்கு அரைப்பலம் வைத்து மிச்சப்பாதித் தூளையும் மேலிட்டு மூடி அத் தோண்டியின் மேல் வேறு ஒரு தோண்டி கவிழ்த்து மூடி ஏழுசீலை மண் செய்து காய்ந்த பின் காலையில் அடுப்பேற்றித் தாமரைப் பூவினளவாக எரிக்க வேண்டும். மாலையில் எரிபிரித்து ஆர விட்டுத் தோண்டியை ஏந்தி எடுத்துக் கவசம் பிரித்து ஒருச் சாய்த்து மேலே ஏறி நிற்கும் பதங்கத்தை முட்டை வெள்ளைக் கருவிட்டு அரைத்து வில்லையாக்கி வெயிலில் காயவைத்து வெண் கலம் போல் காய்ந்தபின் கொதித்த தண்ணீரில் வில்லையைப் போட்டுப் பின் எடுத்து மீண்டும் வெயிலில் உலர்த்தி நுணுக்கிக் குப்பிக்குள்ளே அடைப்பாய். இது முப்பூர பற்பம்.

சுக்கினை மேல் தோல் சீவி யரைத்த விழுதுக்குள் அரிசி எடை வைத்துக் காலை மாலை 5, 7, 9 நாள் உண்ண முடங்கிய கால் கை நிமிரும். வில் வாதம் போகும். கண்டமாலை, எட்டுக் குன்மம், நாலுவகை அண்ட சுரம் போகும், நளிர் சுரம், சன்னி இவைகள் நீங்கும். கடுகு எண்ணெய் மஞ்சள் தள்ளு. ஆவின் பால் கத்தரி முருங்கை கொள்ளு. எரித்த உப்பையும் அள்ளு. அதனைப் பதருமல் பாங்குடன் வைத்துக் கொள்ளு. (பதங்கமே யன்றி அந்த உப்பும் பலவகை நோய் தீர்க்கும்.)

## உப்புச் செந்தூரம்.

கொள்ளுமந்த வுப்பைச் சட்டியிட்டு
அடுப்பு ஏற்றியே அகத்தியிலைச் சாறுவிட்டு
மெள்ளவே யிருசாமம் தீயிட்டு
வறுத்தெடுத்திட உப்பதுவும் ஊறலற்று
ஊறலற்றே கட்டிவிடும் அதைக்
குழிக்கல்லி லிட்டுமே அதீத மிடும்
தப்பிதமில்லாது அன்புபடும் அகத்திலைச் சாறு
விட்டிரண்டு நாளரைத்து - எடும்
எடுத்துவில்லை காய்ந்தெடுத்துச் சில்வில் வைத்து
சீலைசெய்து ஐந்தெரு வடுத்துக் கடுத்து
இவ்வாறைந்து புடம் தொடுத்துப்—பின்னும்
கருதிய உப்புஊறல் போயடுத்து
அடுத்திட வில்லையைக் கல்வமிட்டு
முத்தாரத்தில் சொல்லிய செயநீர்விட்டு
தொடுத்தரை மிகவதாய் இரண்டுநாள் தொட்டுப்
பின்புவில்லை தட்டிக் காய்ந்து சில்லிட்டு
இட்டுடன் சீலைமண் செய்து—உகந்து
ஐந்தெருவில் ஐந்துபுட மிகுந்து தட்டாமல்
இட்டிடவே சிவந்து நல்ல—தங்க நிறம்
சோதிபோலுகந்து உகந்திடச் செந்
தூரங்காந்தி நிறம்பத் தோர்உப்புச் செந்
தூரமிது வேதிறம் அகமகிழாக—அதீத
பரமநிறை அண்டபிண்ட மதிசரா சாரம்
சராசரமெல் லாமுப்பாலாகும்—இதைச்
சார்ந்தறிந்தால்பல தொல்லை போகும்
பராபரிதாயின் அருளுண்டாகும்—மெத்தப்
பாதக வினைபவ மற்றுமே யேகும்—ஏறும்படிக்கொரு
மண்டலந்தான் நெய்யிலுண்ண நரைதிரைபோகும்
பாகுறவே கோடிநோய்களறும்—வீண்வாத
மிட்டுச்சுட்டுத் திரிவதுஏன்—ஏனென்று கேட்பாருலகில்
இல்லைஇந்தச் செந்தூரம்குரு முடிப்பான தெல்லை.
தான்பெருமேதினியில் சொன்னேன் சொல்லை
தாரணியில் கொடுமுடி யோகந் தொல்லை
தொல்லைவிட் டோடிவிடும் சரக்கு மிட்டுக்

குருசெந்தூரம் ஒருபலம் மிகவதிலிட்டு
வல்லரசம் அரைப்பலமும் கொட்டு—அதை
வகையரைத்துச் செயநீரிட்டு இட்டுக்குழப்பி
வில்லைவைத்து — அதை சூரியனில் நாக்கிக்
காயவைத்துத் திடமாய்க் கௌதாரிப் புடம
துய்த்துப் பார்க்கத் திடமுற்ற செந்தூரமாகும்—முப்பத்
துய்த்தோடுஞ் சரக்கிலிவ் வாறுதாக்குக்
குருசெந்தூரமிட்டுச் செய்துரிமையாக
ஐயமெல்லாந் தீரும் வறுமை ஏக
ஆதியம்பிகை சங்கரன் அருளுண்டாக. (70)

70—உரை.

இதற்கு முன் சொன்ன முப்பூரப்பதங்கப்பற்பம் எரித்து எடுத்தவுடன், பாணைக்குள் எஞ்சியிருக்கும் உப்பினை அள்ளிச் சட்டியிலிட்டு அகத்தியிலைச் சாறுவிட்டு மெல்ல இரு சாமம் வறுத்து எடுத்திட உப்பின் ஊறலறும், ஊறலற்றுக் கட்டி விடும். அதனைக் குழிக்கல்லிட்டு அன்புபடும் அகத்திச்சாறுவிட்டு இரண்டு நாள் அரைத்து எடுத்து வி.த.கா.சீ.ம.செ ஐந்தெருவிற் புடமிடுக. இங்ஙனம் ஐந்து புடமிட்டுப்பின்னர் கல்வத் திலிட்டு முத்தாரத்தில் சொல்லிய செயநீர் விட்டு இரண்டு நாள் தொடர்ந்து அரைத்து வி.த.கா. சில்லிட்டுச் சீ.ம.செ ஐந்தெருவிற் புடமிடுக. இங்ஙனம் ஐந்து புடமிட்டெடுக்கச் சிவந்து தங்கநிறச் சோதி போலிருக்கும். இது உப்புச் செந்தூரம். இதுவே திறம். ஒரு மண்டலம் நெய்யிலுண்ண நரை திரை நீங்கும். கோடி நோய் போகும். இந்தச் செந்தூரம் குருமுடிப்பதற்கு எல்லை. தொல்லை விட்டுப் போகும். இந்தச் சரக்கினை மீண்டுங் கல்வத்திலிட்டுக் குருச் செந்தூரம் ஒருபலம் அதிலிட்டு இரசம் அரைப் பலமும் விட்டு அரைத்துச் செயநீரிட்டுக் குழப்பி வி.த.கா.சீ..ம.செ. கௌதாரிப் புடமிட்டுப் பார்க்கத்திடமுற்ற செந்தூரமாகும். ஓடுஞ் சரக்கு முப்பதிலும் இங்ஙனம் குருச் செந்தூரமிட்டு உரிமையாகச் செய்து பார்க்க ஐயம் நீங்கும். வறுமை போகும். அருளுண்டாகும்.

## தாமிரச் சுண்ணம்

தண்டமிழ்சூழ் தாம்பரத்தின் பற்பம் ஒன்று
தவறின்றி யுரைத்திடுவேன் தரையி னோர்க்கே
மண்டிடவே செம்புக்காசு பலமோ இரண்டு
மகிழாகிக் கெந்தகமும் பலமோ நான்கு

கண்டிதமாய் இரண்டையுந்தான் குடுவை யிட்டுக்
கனமாகச் சீலைசெய்து எருவோ பத்தில்
மிண்டியறப் புடமிடவே வெட்டை யாகி
மேவுமந்தத் தாம்பூரம் மடிந்தே போகும். (71)

போகுமந்தத் தாம்பூர வெட்டை தன்னைத்
தேசிச்சாறு தனில்திரிநாள் ஊறப்போட்டுப்
பாகுபெற இருந்தெடுத்து ரவியு லர்த்திப்
பதறுமல் வைத்திடுபின் இனியுள் ளாக
வாகுடனே வழுத்திடுவேன் வலிமை கொள்ள
வாதில்லாப் பலமைந்து சிற்றண்டத் தோல்
மீகுணத்தில் உள்ளனவாய்க் குழிக்கல் லிட்டு
வேலைச்சா றிட்டு இருநா ளாட்டி (72)

ஆட்டிநய வில்லைதட்டி ரவியு லர்த்தி
அகலிலிட்டுச் சீலைசெய்து ஐந்தெருவில்
தாட்டிகமாய்ப் புடமிடவும் கொடிய சுண்ணம்
தகராமல் அதையெடுத்து இருப லந்தான்
மேட்டிமையாய் நிறுத்துக்குழிக் கல்வ மிட்டு
மேவியேமுன் வெட்டை செய்த தாம்பூ ரத்துள்
நாட்டியொரு பலங்கூட்டி யிரண்டு மொன்ருய்
நன்மைபெறத் தாக்கிநன்ருய் நிகழ்த்திக்கொண்டு (73)

கொண்டெடுபின் திருநீற்றுச் சாறு விட்டுக்
குணமாகத் திரிநாளும் ஆட்டி வில்லை
கொண்டியல் தட்டிரவி யுலர்த்திச் சில்லிட்
டினிமையுறச் சீலைமண் செய்து ஐந்து
வண்மையுட எருவதனில் புடமும் இவ்வா
றைந்துபுடம் போட்டெடுக்கத் திறமுள் ளாகிக்
கன்னியமாய்ச் சுண்ணமது ஆகும் வேகம்
கனகமதின் நிறம்போலாம் கருதிப் பாரே. (74)

பாரேறு மேகமுடன் குட்டம் பாண்டு
பாதகமாய்க் கொடியவினை ரோகம் தீரச்
சீரேறு சுண்ணமது அரிசியெடைதான்
சிதருமல் நெய்யில்ஐந்து ஏழுநாள் உண்ண

வாரேறுஞ் சிவனருளால் பலநோய் ஏகி
வாதையறும் புலால் புளியும் பழஞ்சோ ருகா
காரேறு கனகபற்பம் தாம்பி ரம்போல்
அண்டச்சுண்ணம் சேர்த்துச்செய் திடமுள்ளாமே. (75)

71முதல் 75-உரை

இரண்டுபலம் செம்புக்காசு எடுத்து ஒரு குடுவையினுள் ளிட்டு அதனெடு நான்குபலம் கந்தகமும் போட்டுச் சீ.ம.செ.10 எருவிற் புடமிடத் தாம்பிரம் மடிந்து வெட்டையாகும். அதனை எலுமிச்சம்பழச் சாற்றினுள் மூன்றுநாள் ஊறப்போட்டு எடுத்து வெயிலில் வைத்து உலர்த்திக் கொள்க. பின்னர் சிற்றண்டத் தோல் ஐந்துபலம் குழிக்கல்விட்டு வேலைச்சாறுவிட்டு இரண்டு நாளாட்டி வி.த.கா. அகலிலிட்டுச் சீ.ம.செ. ஐந்தெருவிற் புடமிடுக. கொடியசுண்ணம். இதனை இரண்டுபலம் எடுத்து முன் கூறிய தாம்பிர வெட்டை ஒருபலத்துடன் சேர்த்துக்கல்வத்தி லிட்டுத் திருநீற்றுச் சாறுவிட்டு மூன்றுநாளாட்டி வி.த.கா. சீ.ம.செ. ஐந்தெருவிற் புடமிடுக. இங்ஙனம் ஐந்துபுடமிட வேகமான சுண்ணமாகும். பொன்னிறமாக இருக்கும். மேகம், பாண்டு, குட்டம் முதலிய கொடுநோய்கள் போகும். அரிசி யெடை நெய்யில் ஐந்து ஏழுநாள் உண்க. புலால் புளி பழஞ் சோறு ஆகா. கனகபற்பமும் இதுபோல் அண்டச்சுண்ணம் சேர்த்துச் செய்ய நலமாகும்.

## தங்கச் சுண்ணம்

திடம்பெறவே சுருள்தங்கம் விராகன் இரண்டு
சிறுதூளாய்க் கத்தரித்துக் குழிக்கல் லிட்டுத்
திடம்புகழ் அண்டச்சுண்ணம் விராகனெடை மூன்று
தாக்கித்திரு நீற்றிலையும் சாறும் விட்டு
மடமையறத் திரிநாளும் ஆட்டி வில்லை
தட்டிரவி யுலர்த்திச்சில் வைத்துச்சீலை
நடமிடவே வலுக்கச் செய் ஐந்தெருவில்
நன்மையுடன் புடமிட்டு எடுக்கச் சுண்ணம். (76)

எடுத்தசுண்ணம் அரிசியெடை ஆவின் நெய்யில்
இனிமையுறக் காலைமாலை மூன்று நாள்தான்
அடுத்துமே உண்டுவர ஆண்மை யோகம்
அதிகரித்துத் தேகபலம் வலுத்தே யோங்கும்

கடுத்திடாது மங்கையர்க்குக் கருப்பம் உண்டாம்
　　கருஉருவாய் நிலைத்துப்பல ரோகம் தீரும்
தொடுத்துவரும் தங்கச்சுண்ண மகிமை தன்னால்
　　போகதயம் இயல்புற் றுய்வார். (77)

76,77-உரை

தங்கச்சுருள் இரண்டு விகாரனெடை எடுத்துச் சிறு தூளாகக்கத்தரித்துக் குழிக்கல்லிலிட்டு அண்டச்சுண்ணம் மூன்று விராகனெடை சேர்த்துச் திருநீற்றுச் சாறுவிட்டு மூன்று நாள ரைத்து வி.த.கா. சீ.ம.செ. ஐந்தெருவிற் புடமிடச்சுண்ணம். அரிசியெடை ஆவின் நெய்யில் உண்க. காலை மாலை மூன்று நாள் உண்டுவர ஆண்மை மிகும். உடல் வலுத்து ஓங்கும். மங்கையர்க்குக் கருப்பம் உண்டாகும். நோய் தீரும். தங்கச் சுண்ணமகிமையால் போக பலம் பெற்றுய்வார்.

## துரிசுச் சுண்ணம்

வார்சடைத்தாய் அருள்தன்னால் துரிசுச்சுண்ணம்
　　வயங்கிடுவேன் வையகத்தில் வாதை தீர
சீர்பெரிய துரிசுபலம் நான்கெடுத்துத்
　　தேசிச்சாறு தனிற்குழப்பிப்
பார்புகழும் ரவியிலொருதினமே நன்றாய்ப்
　　பதருமல் காய்ந்ததனை யெடுத்துப் பின்னர்
நேர்மையுடன் சட்டியிட் டடுப்பி லேற்றிச்
　　சிப்பியென்ற செயநீரா விருசா மந்தான் (78)

மந்தவர வறுத்தெடுத்துத் துருசு நன்றாய்
　　மதியதுபோல் இறுகிக்கட்டிப் பூத்துப் போகும்
தொந்தமுடன் பூத்தநீற்றைக் குழிக்கல் விட்டுத்
　　திருநீற்றுச் சாறுதன்னால் இருதினந்தான்
பந்தமுற அரைத்தெடுத்து வில்லை தட்டிப்
　　பதருமல் சில்லிட்டுச் சீலைசெய்து
விந்தையுடன் ஐந்தெருவில் புடமும் ஐந்து
　　வினையமறப் போட்டெடுக்கச் சுண்ணம் சோதி. (79)

சோதிக்கப் பத்தரையின் மாத்த தாகும்
　　சொல்பதியில் கண்டவுடன் தருமம் செய்வாய்
வாதிமகன் வைத்தியனுர் மற்ற வர்க்கும்
　　வழுத்திவைத்தேன் சூட்சமின்றிப் பாகந் தன்னை

நீதியில்லா துற்றபல நோய்கட் கெல்லாம்
　　நிலைமையுடன் ஐந்தேழுநாள் நெய்யிற் கொள்ள
பேதிக்கும் பிணியகலும் குட்டம் தீரும்
　　பிரபல்யமாம் ரசம்மடியும் சூட்சம் சொல்வேன். (80)

78,79,80

துரிசு நாலுபலம் எடுத்துத்தேசிச்சாற்றில் குழப்பி ஒரு நாள் வெயிலில் காயவைத்து எடுத்துச்சட்டியிலிட்டு அடுப் பேற்றிச் சிப்பியென்ற செயநீரால் இருசாமம் வறுத்தெடுத்துப் பார்க்கத் துருசு நன்ருய் மதியதுபோல் இறுகிக் கட்டிப் பூத்துப் போகும். பூத்தநீற்றைக் குழிக்கல்லிட்டுத் திருநீற்றுச்சாற்ருல் இரண்டுநாள் அரைத்து வி.த.கா.சீ.ம.செ. ஐந்தெருவிற் புட மிடுக. இங்ஙனம் ஐந்துபுடமிடச் சுண்ணமாகும். ஆராய்ந்து பார்க்கப் பத்தரையாம். கண்டவுடன் அறம் செய்க. நெய்யில் ஐந்தேழுநாள் உண்ணக்குட்டம் முதலிய நோய் போகும். ரசம் கட்டும்.

## இரசச்சுண்ணம்

சொல்பெரிய துரிசுச்சுண்ணம் பலமும் ஒன்று
　　விந்துபலம் அரையுஞ்சேர்த்துக் கல்வத் தாட்டத்
தொல்லையற மடிந்துவிடும் துயரம் தீர
　　நீற்றுச்சாறு சிப்பிநீர் கூட்டி யாட்டி
வில்லைதட்டி ரவியுலர்த்திச் சில்லுள் வைத்துச்
　　சீலைசெய்து கௌதாரிப் புடத்தில் நீறும்
அல்லல்செய்யும் பலபிணிநோய் குட்டம் மேகம்
　　ஐந்தேழு நாளுண்ணப்போம் பத்திய மில்லை. (81)

81-உரை

துரிசுச்சுண்ணம் ஒருபலம் இரசம்பலம் அரை ஆக இவை ஒன்றரைப் பலத்தையும் கல்வத்திலிட்டு அரைக்க மடியும். நீற்றுச்சாறும் சிப்பிநீரும் கூட்டியாட்டி வி.த.கா.சீ.ம.செ கௌ தாரிப் புடமிடுக. நீறும் ஐந்தேழு நாளுண்ணப் பலபிணி நோய் குட்டம் மேகம் நீங்கும். பத்தியமில்லை.

## அமுர்த சஞ்சீவிச் செந்தூரம்

இல்லத்தி லுள்ளபதி நிலையுள் ளாக
இகபரமெய் யண்டபகி ரண்டம் போற்ற
அல்லலற அறைந்திடுவேன் வாதை தீர
அமுர்தமென்னுஞ் சஞ்சீவிச் செந்தூரத்தை
வல்லவீரம் லிங்கம்வகைக் கரைப்ப லம்நேர்
ரசம்கெந்தி கௌரி பூரம்ரசசெந் தூரம்
தொல்லையற வகைக்குக்காற் பலம தாகும்
தூயசங்கு தாளகமும் வகைக்கு அரைக்கால். (82)

கரைபொருத நவசரக்கு எல்லாம் ஒன்ருய்க்
கல்வமிட்டு நான்குசாமம் அரைத்த பின்னர்
திரையகல உத்தாமணிச் சாறதுஊற்றித்
தினமொன்று அரைத்துரவி கல்வத் தாட்டே
குறையறவே காய்ந்தெடுத்துக் குணமா கப்பின்
குக்குடத்தின் முட்டைவெள்ளைக் கருவ திட்டு
நறைபெருக வொருசாமம் ஆட்டி நேராய்
வில்லைதட்டி வெண்கலம்போல் ரவியுலர்த்தி. (83)

உலர்த்திவில்லை தனையெடுத்துக் கொதிநீ ரிட்டுக்
கோப்பையிட்டு வில்லைதனைப் பதன மாக
நலம்பெறவே போடப்பொங்கும் ஆற வைத்து
நண்ணுமந்த நீர்வடித்து வில்லை தன்னை
நலங்காமல் கோப்பையுடன் ரவியில் தாக்கி
நன்மைபெற வெண்கலர்போல் காய்ந்தெ டுத்தே
பலம்பெறவே நுணுக்கிக்குப்பி தனில டைத்து
அரிசியெடை ஈயரோகம் போகச் சொல்வேன். (84)

சொல்பலவாம் குட்டமுடன் குறைநோய் குன்மம்
சுரசன்னி வாதமெட்டுப் பத்து நாலு
அல்லலுறும் யோனிலிங்கப் புற்று மாலை
மகோதரம் நீராம்பல் கிரந்தி வெட்டை
தொல்லையுறும் பெரும்பாடு உதிரச் சிக்கல்
குத்தல்வலி வயிற்றில்வளர் கட்டி பாண்டு
எல்லையிட் டேகும்நவ தசாமிர்த சஞ்சீவி
சீர்மெழுகின் அனுப்பா னம்போல் ஈயச்சித்தே. (85)

82 முதல் 85 முடிய உரை.

வீரம், இலிங்கம், வகைக்கு அரைப்பலம். இரசம், கெந்தி, கௌரி, பூரம், ரசசெந்தூரம் வகைக்குக் காற்பலம். சங்குப் பாடாணமும் தாளகமும் வகைக்கு அரைக்காற்பலம், ஆக ஒன்பது பொருள்களையும் ஒன்ருய்க் கல்வத்திலிட்டு நான்கு யாமநேரம் அரைத்துப் பின்னர்த் திரையகல உத்தாமணிச்சாறு ஊற்றி ஒரு நாள் அரைத்துக் காயவைத்து எடுத்துப்பின்பு முட்டை வெள்ளைக் கரு ஊற்றி ஓர்யாமம் ஆட்டி வில்லைதட்டி வெண்கலம் போல் உலர்த்துக. பின்பு அவ்வில்லைகளைக் கோப்பையிலுள்ள கொதி நீரிலிட்டுப் பார்க்கப் பொங்கும், ஆறவைத்து நீர்வடித்து வில்லை களைக் கோப்பையுடன் காயவைத்து வெண்கலம் போல்காய்ந்த பின் நுணுக்கிக் குப்பியிலடைத்துக் கொள்க. நவதசாமிர்த சஞ்சீவி மெழுகுக்குக் கூறிய அனுப்பானத்தில் அரிசி எடை வழங்கக் குட்டம், குறைநோய், குன்மம், சுரம், சன்னி, வாதம் எண்பத்து நான்கு, யோனிப்புற்று, இலிங்கப்புற்று, கண்டமாலை, மகோதரம், நீராம்பல், கிரந்தி, வெட்டை, பெரும்பாடு, உதிரச் சிக்கல், குத்தல், வலி, வயிற்றில் வளர்கட்டி, பாண்டு முதலிய நோய்கள் எல்லை தாண்டியோடிப் போகும்.

## சித்தர்கள் குடும்ப வாழ்க்கை.

சித்தர்களில் நந்தீசர்க் கெட்டுப் பெண்டிர்
சிறந்தமக்கள் ஈரெட்டே பெண்ணொன்று
நத்திமச் சர்தனக்குப் பத்துப் பெண்டிர் சேய்தான் நூறு
சட்டமுனிவர்க்கிவர்போல் மனைவி மைந்தர்
வித்தகமா அகப்பையர்க்கே மாதர் பத்து
விளங்கிடச்சேய் நூற்றிருபதாகும் ஆகும்
பத்தியுள்ள பாம்பாட்டிக் கீரூர் மங்கை
பாலர்களும் நூற்றுநாற் பத்து நான்கே. (86)

நான்கும்எட்டும் இடைக்காடர்க் காகும் மாதர்
மக்கள்தாண்ணூற் றறுவர்அழு கண்ணிக் கிவ்வாறு
பான்மையுறும் குதம்பைக்கே பத்தும் ஆறும்
பாலர்நூற் ருறுபத்து தன்வந்திரிக் கிவர்போல்
மேன்படுவான் மீகர்க்கைந்து உயர்சேய் நூறு
இராமதேவர்க் கிவரைவிட ரெட்டிப் பொவ்வல்
மாந்தளிர்கொங் கணர்க்காறு அறுபது சேய்
கருவூரார்க் கிவரினிலே யிருபங் குண்டு. (87)

உண்டரிய சுந்தரர்க்கு மாது ஏழ்பேர்
எண்பதின்நால் வர்மக்கள் திறமை ஏற்றும்
திறமுடைய திருமூலர்க் கொன்ப தாகும்
தொண்ணூறு மைந்தர்களும் உதிப்புத் தீர்க்கம்
கண்ணியமாம் போகருக்குப் பெண்டு பிள்ளை
காசினியிற் பலவாகும் கணக்கோ இல்லை
நண்ணுமந்த அகத்தியர்க்குப் பாவை பத்து
நாட்டிடும்சேய் நூற்றறுப தாகும் மேலாய். (88)

ஆய்ந்திடமெய்க் கோரக்கன் என்றனுக்கே
ஐந்துபெண்டு அறுபதுசேய் விளக்கம் உண்மை
மாய்ந்திடாது இவ்விதமாய்ப் பதினெண்பேர்கள்
மனைவிமக் களுடன்வாழ்க்கை பேரன் பேர்த்தி
தோய்ந்திடவே இருந்தேற்றுக் காலன்தானும்
தொடர்ந்திடாது நீடூழிக் காலம் பெற்றேம்
வாய்ந்தஉமை அரன்பாகத் தமுது உண்டே
வயங்குபுலிக் குகைப்பொதிகை யெங்கள் வாழ்வே. (89)

வாழ்வதற்காய் முத்திநிறை அமுத ஊறல்
வாலைசத்தி பெண்ணுருவுள் மங்கைபெண்டே
ஆண்மையிலே அமுதபல குடநீர் ஆட்டம்
வழுத்திச் சித்தர் மறைத்துவைத்தார் விரிவாய்யானும்
ஏழ்மையறச் செப்பிவைத்தேன் இனிமையாக
இகபரத்தின் உண்மைசுகங் கண்டு வாழ
அழிவின்றி மக்கள்பதி தழைத்து ஓங்க
மகிழ்சித்தர் மறைப்பையெல்லாம் வெளியாய்ச்
சொன்னேன். (90(

சொன்னயமாய்ச் சென்மபிணி பவங்கள் தீரச்
சுகிர்தநிறை சித்தர்களின் இருதாள் போற்றி
நன்னயஞ்சேர் நாதமணி முத்தாரத்தில்
நாதாந்தத் தீட்சைவழி முப்பு தீர்க்கம்
வண்ணமுயர் சோதிவட்டம் செயநீ ருண்மை
வாதவித்தை வஸ்துநிலை கற்ப சூட்சம்
கன்னலறக் கழிறிவைத்தேன் சித்தன் யானும்
அரனுமைவேல் இருதாள் சரணம் இந்நூல்முற்றே. (91)

**அருள்மிகு கோரக்கரருளிய முத்தாரம் 91 பேராசிரியர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், டாக்டர் ந. சேதுரகுநாதன் உரையுடன் முற்றிற்று.**

# கோரக்கரருளிய நாத பேதம்

மார்க்கமுடன் மூலமுத லாரு தாரம்
வகையுடனே யறிந்தந்தச் சுழியில் நின்ருல்
ஏர்க்கையுடன் நினைத்தவண்ணம் முடிக்க லாகும்
எட்டிரண்டும் ஒன்ருன இன்பத் தாலே
பார்க்கமணி கண்ணுலே நன்ருய்ப் பார்த்துப்
பத்திகொண்டு தேகமதைச் சித்தி பண்ணிச்
சேர்க்கையுள்ள தேகமடா தேவ ரூபம்
சிவவிந்து நாதமொன்ருய்ச் சேர்ந்து சித்தே. (1)

சித்தியுள்ள வகையேது என்ருல் மைந்தா
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் மார்க்க மாக
முத்திகொண்ட அகாரமடா விந்து விந்து
முதலான விந்துவடா தண்ணீ ரப்பா
புத்திகொண்டு தண்ணீரை யொன்றில் வாங்கிப்
புகலாதே வால்மிளகுப் பொடியைத் தூவிப்
பத்தியுடன் உதயாதி தன்னிற் கொண்டால்
பாலகனே தேகமது வாலை யாமே. (2)

ஆமப்பா வாலேவய தாகுந் தேகம்
அந்தரங்க மானதொரு அமிர்தந் தன்னுல்
தாமப்பா தன்னிலேயை யறிந்து கொண்டால்
சதாகாலம் பூரணத்தில் மனத்தை வைத்து
காமப்பால் கானற்பால் ரெண்டுங் கொண்டு
கைலாச தேகமடா கால னேது
ஓமப்பா சத்தியமாய்ச் சொன்ன வார்த்தை
உறுதிவைத்துச் சத்திய மாக வுற்று. (3)

உற்றமொழி சத்திய மாகச் சொல்ல
உறுதியுடன் மனதுறுதி யாக நின்று
பத்தியுடன் ஓம்நம சிவய வென்றே
பார்மகனே உருவேற்றப் பலிக்குஞ் சித்தி

சுத்தமுடன் தேகம்வச்சிர காயமாகும்
சுருதியனல் மூலமடா முக்கோ ணத்தில்
புத்தியுடன் சதாகாலம் உருவே செய்யப்
பூரணத்தில் நின்றுகொதி காண லாமே. (4)

காணவே வாமப்பால் தண்ணீ ராகும்
கருணையுள்ள கானற்பாலே நாதம் நாதம்
பேணவே நாதமென்று லறிவா ரில்லை
பெண்குழந்தை அமுரியடா குமரி கற்பம்
தோணவே அந்தநீர் ஒன்றில் வாங்கிச்
சுகமாக வால்மிளகு ஊறப் போட்டுப்
பூணவே ஊறியபின் னெடுத்துக் கொண்டு
புத்தியுடன் பின்னுமந்த நீரிற் போடே. (5)

போடப்பா பத்துமுறை நன்றாய் நீயும்
புண்ணியனே தானெடுத்து வைத்துக் கொண்டு
நாடப்பா வதை யெடுத்துப் பதனம் பண்ணி
நடுவான பூரணத்தைத் தியானம் செய்து
வீடப்பா பெலப்பதற்கு மைந்தா நீயும்
விவரமுட னந்திசந்தி உச்சிமூன் றுச்சு
தேடப்பா அய்யஞ்சாய்க் கொண்டு தேர்ந்தால்
தேகத்தில் நின்றதொரு நோய்கள் போமே. (6)

நோயான தின்னமொன்று அமிர்தம்
நுண்மையுடன் சொல்லுகி றேன்மைந்தா
தாயான ஆனந்த மூலிச் சாற்றில்
தயவான சாதிக்காய் ஊறப் போடே
வாயாரக் காயிலோ ரெட்டுப் பங்கு
வரிசையுட னேநறுக்கித் தானுமதை
காயான சாதிக்காய் ஊறிற் றுனல்
கணக்கு ஐந்துமுறை செய்து லர்த்தி. (7)

கொள்ளப்பா உதயாதி தன்னி லேதான்
குணமாக ஒருதுண்டு வாயிற் போடே
மெல்லப்பா மென்று ரசம் கொண்டால்
வேதாந்த வாசியது சித்தி யாகும்

செல்லப்பா வாசியிற்சென் றேறி யங்கே
திருவான நடுமணையாஞ் சிகார வீடு
நில்லப்பா நின்று நிலை கொண்டால்
நிலமான மூலமது நிலைக்கும் பாரே. (8)

நிலையான சிவகலை வலுவாய் நிற்கும்
நிசபூசை விதி தீட்சை விதியாந் தன்னை
கலையாத மனதாகப் பூசை செய்தால்
கருவான தேகமது முத்தி யாகும்
சிலையான தேகமது முத்தி யானல்
சிவ சிவா சிவயோகம் இதுதான் பாரு
அலையாதே வெறும்வீணர் பேச்சை நம்பி
ஆசைகொண்டு திரியாதே அண்டத் தேறே. (9)

அண்டபகி ரண்டமெலாம் நொடியிற் சுற்ற
அவையடக்க மாகவொரு குளிகை சொல்வோம்
கண்டபடி சொல்லுகிறேன் மைந்தா கேளு
காயான சாதிக்காய் விதைகள் பத்து
கொண்டபடி கிராம்பதுவும் விராக னைந்து
குணமான ஏலமது விராக னைந்து
விண்டபடி மதுரமது மூன்றுங் கூட்டி
விரைவாகக் கல்வத்தில் பொடித்துக் கொள்ளே. (10)

கேளப்பா ஆனந்த மூலிச் சாற்றில்
கிருபையுடன் நன்ருக அரைத்து
கேளப்பா ரவிதனிலே உலர்த்திப் பின்னும்
கெணிதமுடன் பின்னுமந்தச் சாறு விட்டுக்
கேளப்பா இப்படியே பத்துமுறை செய்ய
கிருபையுடன் கல்வத்தில் நன்ருய். (11)
(1 வரி குறை)

ஆட்டப்பா மைபோலே வழித்தெ டுத்து
அப்பனே மிளகதுபோ லுருட்டினதை
நீட்டப்பா ரவிதனிலே காயப் போட்டு
நீமகனே தங்கம தாற்சிமிழ்

போட்டப்பா பத்திரமாய் வைத்துக் கேளே
பூரணமாய் ஒருகுளிகை வாயில்
நாட்டப்பா வாசிதனைச் சுழினைக் கேற்றி
நாதாந்த அமிர்தமது கொண்டு தேறே. (12)

தேறுவது ஏதெனவே மைந்தா கேளு
சிவசிவா பிராணயஞ் செய்து கொண்டு
ஏறுவது வாசியினால் மூலங் கண்டு
ஏகாந்தச் சற்குருவைத் தியானம் பண்ணி
மாறுவித மறிந்தஉரு வேறினுக்கால்
மகத்தான பிராணயஞ் சித்தி யாகும்
தூறுவமாய் நின்றதொரு ஆரு தாரம்
பொருந்திநின்ற சீவகலை அமுத மாமே. (13)

அமுதரச கற்பமுடன் குளிகை கொண்டு
அந்தரங்க மாகவேநீ கொண்டால் மைந்தா
அமுதரசந் தேகமதாய் இருக்கும் பாரே
ஆதியந்த நாதவிந்தைச் சொல்லக் கேளு
அமுதரச மானதுவுங் குய்யி லாகும்
அப்பனே நாதமது தேனு மாகும்
அமுதரச குய்யிலுந் தேனுங் கூட்டி
அப்பனே ஆண்டொன்று இருபோ துண்ணே. (14)

உண்ணையிலே கபமகலும் வாசி யேறும்
உறக்கமதும் அசதியதும் ஓடிப் போகும்
கண்ணுமனக் கண்ணதுவும் ஒன்றுய்ச் சேரு
காலான வாசியது கண்டு தேற
விண்ணுன சுழிணையிலே நடனங் கொண்டு
மெய்யான கற்பூர வீட்டிற் செல்லே
ஒண்ணுன சுடரதுதான் வாசி யோடே
ஒடுங்கி நின்ற இடமதுதான் சுழிணையாமே. (15)

சுழியறிய வகையோடே செல்லு செல்லு
சுகாசன மாயிருந்துமன தறிவால் நில்லு
வழியோடே போம்வாய்வு சிவம தாக
மார்க்கமுடன் உட்புகுதல் சத்தியாமே

நெளியாமல் கண்டமதில் அங்கென் றானு
நேசமுடன் சத்தி சிவமொன் ருச்சு
அழியாத பேரின்ப வீட்டிற் சென்று
அவ்விடந்தான் சிகாரமடா சுழினை பாரே. (16)

பாரப்பா ரவிவீடு மூலா தாரம்
பதிவான மதிவீடு புருவ மத்தி
நேரப்பா சுடரதுதான் சிகரத் தந்தம்
நிசமான முச்சுடரும் இதுதான் பாரு
பேரப்பா முச்சுடரே மும்மூல மாகும்
பேரண்ட மிதுவாகும் கண்டு கொள்ளு
காரப்பா இதையறிந்து நடுவில் நின்ருல்
கருவான சிலம்பொலிதான் நாத மாமே. (17)

நாதமென்ற நாதமடா அண்டத் தங்கம்
நடுவான சூட்சமடா விந்துப் பிள்ளை
சூதமென்ற விந்தோடே நாதஞ் சேர்க்கச்
சொல்லுகிறேன் கருமானஞ் சுருக்கி நன்ருய்
நீதமென்ற வமுதமதில் விந்து சேர்த்து
நிசமான விந்துரெட்டி யொன்ருய்க் கூட்டிப்
போதமுடன் வெந்தெடுக்க வாலை யாச்சு
புத்தியுடன் வாலையது சுத்தி பண்ணே. (18)

சுத்திசெய்து வாலைதனை வைத்துக் கேளே
சுருதியுள்ள நாதமதைச் சரியாய்க் கொண்டு
பத்தியுடன் கற்பத்தில் மத்தித் தாக்காற்
பாலகனே நாதமதும் விந்தும் ஒன்ருய்ச்
சித்தியுள்ள மெழுகது போலி ருக்கும்
சிறுமணியாய்ப் பதினறு மணியைச் சேரே
முத்திபெற்ற தமர்செய்து பழத்தி னிலே
மூடிவைக்க மணியதுவும் இறுகிப் போமே. (19)

இறுகிநின்ற மணியெடுத்துச் சுகம தாக
இன்பமுடன் சுத்தியது செய்தெ டுத்து
உறுதியுடன் கோவை செய்து வைத்து
உத்தமனே முகமணி யதுதான் தங்கம்

பருதியென்ற தங்கமணி முகப்பில் வைத்தே
பக்குவமாய்ச் சற்குருவைத் தியானம் செய்து
சுருதியுடன் மந்திரங்கள் செபித்தா யானல்
சொல்லவொண்ணு அட்சரங்கள். (20)

(இவ்வளவுதான் கிடைத்தது)

# கோரக்கரருளிய தனிநூல் தொகுப்பு

சித்தர்கள்என் னூல்வாங்கிச் சென்ற பின்பு
சிதருமல் சந்திரரேகை இருநூற தாகும்
வித்தகமாய் ரவிமேகலை எழுபத்தைந்து
விகற்பமிலா நமனுசத் திறவுகோல் நூறும்
பத்தியுடன் நாதபேதம் இருபத் தைந்து
புகலரிய கனகபிந்து எண்பத் தைந்து
நத்திவரும் கரிசல் இருநூற் றென்று
நவில்ஞானம் ஆயிரத்து நூற்று ஒன்றே (1)

ஒன்றுகும் சீவரத்தினம் தொண்ணூற் றைந்து
ஓதரிய மூலிமர்மம் எண்ணூ றுகும்
நன்றெனமுச் சோதிநாதம் எண்பத் தாறு
நயவாத காண்டமோ ரிருநூ றுகும்
கன்மகாண்ட நிகண்டுமுந் நூறு செந்தூரம்
கனமதி முத்தாரம் தொண்ணூற் றென்று
பின்னுமுப்புக் காண்டநிகண் டதுமுந் நூறு
மேதினியில் சித்தர்வாதம் அறுபத் தாறு (2)

ஆறுதலாய் அம்சதீபம் அறுபத்தேழு
ஆயிரத்து நூறுமெய்ஞ் ஞானமாகும்
சிறுரிய சித்தர்மறைப் புண்மை நூறு
செகசாலம் சித்தர்சம் வாதம் நூறு
கூறுதலாய்க் கூடுவிட்டுக் கூடு பாய்தல்
கொள்கையுடன் இருநூறும் ஆகும் ஆகும்
மாறுதலாய் மறைப்புச் சூட்சம் ஐம்பத் தைந்து
மந்திரலீலை மூன்றுநூற் றைந்து மாகும் (3)

ஆகிடஇந் நூல்களைச் சித்தன் யானும்
அறிந்தமட்டும் காவிரியின் நதிபாங் குற்று
மோகிதமாய்ச் சோழநாட்டின் கொள்ளி டப்பால்
முத்தரநதி தீரம்பரூர்ப் பட்டிச் சிற்றூர்

ஏகிநிறை சமாதியுற்றேன் அதுமுன் னுக
இயற்றுமிந் நூல்வழுத்த வினிஉற் றேனல்
பாகிதமாய்ப் பாடியபின் பலதே சம்போய்
பரிவாய்முன் னுற்றபொய்கை யூரில் வந்தேன் (4)

வந்தவுடன் சடையப்பக் கவுண்டன் என்னை
வாகுடனே அனுசரித்து வாழ்த்தி நின்றான்
அந்தமுடன் பரிவிருத்தி நானூற் றெட்டு
ஐப்பசிநேர் தசமிதிதி பரணி திங்கள்
சிந்தையுறச் சமாதிநிலை யான டைந்து
சிதருமல் சீருலகில் வாழ்ந்து சித்தாய்க்
கந்தமணம் வீசிடவும் காட்சி யாகக்
காசினியில் சாவுஇவனுக் கில்லை யாமே (5,

ஆமே கேளிது நிலையுற்ற வாணி புக்கி
ஆன பதிபொய்கை பூங்கா சொன்னேன்
தேமேவு பரிவிருத்தி ஆயி ரத்துத்
திகழ்நூற் றிருபது ஆற தாண்டில்
பாமேவு சித்தர்களும் வெளியாய் வந்து
பட்சமுடன் மனுக்களையும் ஆள்வார் மண்ணில்
பூ மேவும் பொக்கிஷங்கள் பூர ணிக்கும்
பூரணியாள் பதமறியச் சொன்னேன் சித்தே (6)

சித்தர்பதி னெண்மரோதும் நூல்கட் கெல்லாம்
சிதருமல் அவையடக்கம் கொண்டு பாய்ச்சி
உத்தமமாய் நமனுசத் திறவு கோலில்
உரைத்திட்டேன் வெளியாகச் சூட்சா சூட்சம்
நத்தியந்த நமனுசத் திறவு கோல்பார்
நாதாந்தம் வேதாந்தம் ஞான சித்து
முத்திபதி வாமபோதம் சித்தர் உண்மை
முத்தியுமை தெரிசனமும் தெளிவாய்ச் சொன்னேன் (7)

சொல்லிவைத்த தெதற்காகத் தானென் ருக்கால்
சூதாகச் சித்தர் கள்முன் பாடி வைத்த
நல்லதொரு நூல்களதின் முடிவைக் காட்டி
நானிலத்தில் கெடிகாரப் பறைய டித்து

வல்லவியாம் வாலைத்தாய் அருளி னாலே
வாட்டமிலா நமனுசத் திறவு கோலால்
வெல்லமதி சித்தர்களின் ஒளிப்பை நேராய்
விவரித்தேன் நமனுசத் திறவு கோலில் (8)

திறவுகோல் கொண்டரனும் உமையும் போற்றித்
தீர்க்கவரம் தந்திட்டார் கண்டேன்என் போல்வார்
மறம்பூண்டு மறித்தென்னை வாத மிட்டார்
மதியோடு கலந்துமதி யாக நின்றேன்
புறம்பாகி ஏகிவிட்டார் சித்த னுர்கள்
புவியிறங்கிப் பொய்கைநல்லூர் அடங்கி நின்றேன்
வரம்பெறவே இவ்வொன்பதும் தனித் தொகுப்பு
வழங்குமுன்னூல் களில்வழுத்த வில்லை முற்றே (9)

கோரக்க ரருளிய தனித் தொகுப்பு முற்றிற்று

# போகநாதர் அருளிச் செய்த
# கற்ப சூத்திரம் 18.

ஆதியந்தம் சிவகாமி அகண்டா கார
அகரமுத லண்டபிண்ட அணுவுள் ளாகிச்
சோதியொளி சூட்சநிலை சூட்சா தீதம்
சொல்லரிய சொரூபசித்தி தேகஞ் சித்தி
நீதியுயர் நிருவிகற்ப சூதர் சூதம்
நெறியுடனே நிகழ்த்துதற்குச் சிறுபெண் ணுத்தாள்
தீதிலா மெய்ஞ்ஞானத் திருத்தாள் போற்றித்
தெள்ளிதமாய் ஓதுதற்கு உமைதாள் காப்பே. (1)

காப்பதற்குக் கருஉருவாங் காய கற்பம்
கருத் தறிந்து கொள்ளாமல் கலங்கி மாந்தர்
கூற்றுவனின் கைக்குள்ளாய்க் கோச பீசம்
குறிப்பதனை உணராமல் குறைகள் பேசி
மாற்சல்லிய மாகமனம் தடுமா றித்தான்
மதிரவியும் இன்னதென்று அறிந்தி டாது
பாற்பசுவாம் பாவைபரஞ் சோதி மூலம்
பக்குவங்கண் டுணரவில்லை பாரில் தானே. (2)

தானேதான் தன்மயமாந் தலங்க ளாட்டம்
தந்திரத்தால் மறலிதனைத் தவிர்க்க வேண்டும்
கானேகித் திரிந்தாலங்குக் கற்ப மேது
காரசாரம் உன்னுக்குட் கனிந்து பாரு
ஊனேஉன் உற்பனத்தின் உண்மைப் பெண்ணும்
ஓகோகோ அதுமெத்தச் சூட்சம் சூட்சம்
தேனேநல் லமுதரசச் சூதந் தன்னைத்
தெரியாமல் மறைத்துரைத்தார் சித்தர் தாமே. (3)

தாமேதக் காதிகனந் தழைத்து ஓங்கத்
தரணிதனில் தத்துவமாம் பயிர்கள் தோட்டம்
பூமேவு பொக்கிஷத்தின் பொருளீ தென்று
புகலாது பலவாறுய் ஒளித்துப் பேசி

ஆமேஓம் அம்உம்நம் அன்பான தேவி
அம்பிகையின் அருள்தன்னல் அறிந்தேன் சித்தன்
தூமேதூய்த் தூமையதின் உண்மை காணூர்
தொகுத்துரைப்பேன் தூமைமதிப் பெரிய வாழ்வே (4)

வாழ்ந்துலகில் வசிப்பதற்கு வாகா கத்தான்
வசனிப்பேன் வஞ்சமற வையத் தோற்குத்
தாழ்வின்றித் தாரணியில் தகர்ந்தி டாது
தக்கபொருள் கைகூடும் தரித்தி ரம்போம்
ஊழ்விணைகெட் டுடலுடனே உயிர்வ லுக்கும்
உகந்ததொரு மாற்ருனும் உன்னைக் கிட்டான்
சூழ்ந்திடுமே சுத்தசுக சைதன் யங்கள்
சூட்சமுடன் சுந்தரியின் இருதாள் போற்றே. (5)

போற்றுதற்கு என்தாயாம் தேவி பூசை
புகன்றிடுவேன் பூரணத்தின் நிலைகண் டோங்க
நாற்றிசையும் நாடிடவே நாதாந் தத்தின்
நவரசங்கொள் நலங்களை ஓம்அம்அம் சிங்வங்
கேற்றுமதி ரவியதுவுங் குறையா வண்ணம்
கேசரத்தில் மனதுவைத்துக் கீழ்மேல் நோக்கச்
சாற்றிடவே சங்கரியாள் சரிந்தி டாமல்
சந்ததமும் தரிசனங்கள் தருவாள் காணே. (6)

காணவே கலந்தாடும் கமல பீடம்
கமல மணியொளி கதிர்போ லோங்கும்
நாணவே நடுவணையில் நகார மேடே
நந்திகொலு வாசலது நடன கோஷ்டம்
பூணவே பொங்கிவளர் பிறைதான் வட்டம்
பூரணமாய்ப் பரியடங்கிப் பொருந்தி நிற்கும்
தோணவே தத்துவங்கள் தொண்ணூற் ருறும்
துரிதமுட னடங்கிவீணை முழக்கம் பாரே. (7)

பாரேயுன் முகமதுவும் பளிங்கு போலாம்
பரஞ்சோதி பார்வதியும் பக்கல் வந்து
நேரேநின் றினியவரம் நியதி சொல்வார்
நிருவிகற்ப சமாதிவகை விபரம் விள்வேன்

தேரேதெள் ளமுதரசம் தித்திக் கத்தான்
திங்களொடு தினகரனும் தேய்ந்தி டாமல்
சீரேகொண் டுயர்சமமாய்ச் சிறந்து ஊதச்
சிந்தாமல் சமாது நிலைக்கும் பூவே. (8)

பூவேதான் பூத்திடுமே பூவை நாதம்
பொருத்தமுடன் இல்லநாள் விலக்கங் கண்டு
தாவேநன் னயமாக நங்கையரின்
தரமினிய குருதிதனைத் தக்க வாங்கி
நாவேற ஆண்டுஒன்று நயந்து உண்ண
நமனற்று வயதுமெத்த வளர்ந்து ஓங்கும்
சாவேதும் இல்லைஇந்தச் சகங்கள் போற்றச்
சத்தியொடு சங்கரனுஞ் சாற்றி னரே. (9)

சாற்றினதோர் சத்ததனைச் சருவி டாமல்
சஞ்சலங்க ளில்லாது சாதித் தேதான்
நாற்றிசைகள் மயங்கிடவே ஞான சித்து
நாரணியி னருளதனல் ஆடி நின்றேன்
போற்றிடவே நாதமது கிடைக்கா விட்டால்
பொருந்துதற்குக் கற்பமின்ன மொன்று சொல்வேன்
வேற்றுமைகள் இல்லாமல் பெண்ணே டாணும்
விரும்பிரதி கேளிக்கைகள் செய்தற் பின்னே. (10)

பின்பாக யோனிவழி விந்து சேர்க்கை
பெருகிவழி வழிந்திடுமே பிதற்றி டாமல்
இன்பமுடன் எடுத்துஓம் சிவய வென்றே
இரண்டுபத்து ஐந்துதரம் செப்பி உண்பாய்
துன்பமற மண்டலந்தான் கொண்ட பேர்க்குத்
தொலைந்திடுவான் கூற்றுவனுந் தொடர மாட்டான்
புன்மலங்கள் அற்றுவிடும் பிறவி நீங்கும்
புரிவட்ட மீதிலொளி தெளிவுண் டாச்சே. (11)

ஆச்சென்ற அட்டசித்து ஞான சித்து
ஆடினேன் இந்தவிதக் கற்ப முண்டே
மூச்சென்ற மூச்சதுவும் முனைநின் ருடும்
முப்பழமோ டமுதூறல் முறையே பொங்கும்

விச்சில்லை நாட்குநாள் மூப்புப் போகும்
விளங்கிடவே ரசந்திரளும் நாதத் தாலே
பாய்ச்சலது பாயாது பரிதான் துள்ளா
பரஞ்சோதி பரப்பிரமம் தெளிவாய் நீயே. (12)

நீயேமுன் சாதனையாம் யோகம் செய்து
நிரதிசய நாதிசெயம் பெற்ற பின்னர்
தாயேயென் றனுஷ்டித்துத் தவத்துள் ளாகித்
தக்கதொரு நாதவிந்து கற்ப முண்டால்
தீயேது மண்டாது வியாதி காணு
திரவியங்கள் கிட்டிடுமே திரேகம் போகா
ஆயேமுன் முதற்பழக்கம் அய்யா சிப்போர்
அருந்தினுல் சேட்டைகளும் அநேகம் உண்டே. (13)

உண்டிட்டால் உணவுதள்ளும் ஊனீர் கொட்டும்
ஓய்ந்துவரும் கால்கையும் வீக்கம் காணும்
அண்டிவெடி சோகையைப்போல் மயக்க முண்டு
அயர்வுற்று இவ்விதமாய் மனந்தள் ளாடும்
மண்டியிந்த விதங்காணும் அறண்டி டாது
பாலித்துக் கடுமையெனத் தள்ளா மற்றுன்
கண்டிப்பாய்க் கருதிவரக் கலக்கம் நீங்கிக்
கருணைகொண்டு காலந்தனை வெல்ல லாமே. (14)

வெல்வதற்கு ஆகாது எவர்தன் னுலும்
விந்துவென்ற வொளிகாணும் விவேகம் தோனும்
சொல்லரிய கற்பமதைச் சொன்னேன் பத்தியம்
சுத்தமிலாப் புலால்பழைய சோறு மாகா
அல்லல்தரும் புளியுறைப்பு அதிகம் கூடா
அம்புவி இந்தவித மாத ரோடு
சல்லாபங் கற்பமிதைச் சாதித் தேன்யான்
சாவெனக்கு இல்லையுண்மை சகத்தி னேரே. (15)

சகமதனில் வித்தில்லா மரந்தா னுண்டோ
சஞ்சலத்தால் இந்தவகை யறிந்தி டாமல்
புகலாமல் சித்தரெல்லாம் பேத மாகப்
பூத்தான மாய்ச்சரக்குச் சுண்ணாங் கற்பம்

தகமையுறத் தழைகாம்புத் தங்கஞ் செய்யத்
தட்டழிந்து போயிடவே தரணி யோர்க்குச்
சுகமுடனே ஓதிவைத்தார் சூதர் கூடிச்
சூட்சமெல்லாம் நாதவிந்து சோதி நேரே. (16)

நேராக அறியாமல் என்போல் சித்தர்
நிலைகெட்டு மலையேறித் திரிந்து ஏங்கிக்
கூராமல் கூறிவைத்தார் குறிப்பில் லாமல்
கோரக்கர் சந்திரரேகை இருநூறு தன்னில்
பூராகப் போதித்தார் பொய்யில் லாமல்
புத்தமிர்த போகமிவ்வா றென்போ லுண்டார்
சீராகச் செகத்தோர்கள் செழித்து ஓங்கச்
செயமுடனே செப்பிவைத்தேன் சித்தன்யானே. (17)

சித்தான ஞானசித்து செல்வீ கங்கள்
சீரோங்கிப் பார்வளரச் சூத கற்பம்
சத்தான நாதவிந்துச் சரக்கே யல்லால்
சாசுவித மானபொருள் சகத்தி லில்லை
வித்தான வித்துதான் நாதவிந்து
விளக்கமித னுலாகும் சித்தி முத்தி
அத்துவிதந் தோற்றிடுமே ஆத்தா ளாலே
அறைந்திட்டே னருட்பெருக்கக் கற்பம் முற்றே. (18)

போகநாதர் அருளிச் செய்த கற்பசூத்திரம் பதினெட்டு
முற்றிற்று.